2873

# T.N.L.A. Debates

## Official Report

Vol XI No 2

2nd July 1985

D
V211,311'N85
N85.11.2;1
136410

வெளியீடு 21-3-1986 Issued 21-3-1986

600/86

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

2873

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை, ஜூலை 2, 1985 - தொகுதி XI எண் 2
Tuesday, the 2nd July 1985 - Volume XI No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை : ரூ. 3-00 காசுகள்] [Price Rs. 3-00 paise

D
Y211,31 N85
N85-11-231
136410
சென்னை-600 008

# உள்ளடக்கம்

**2—7—1985**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் — விடைகள் : | 205—244 |
| 2. உரிமைப் பிரச்சினை : | |
| "தினகரன்", "முரசொலி" நாளிதழ்கள் மீது. | 245—247 |
| 3. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் தமிழகத்து மாணவர்களுக்கு தமிழக மருத்துவக் கல்லூரிகளில் சேருவதில் ஏற்பட்டுள்ள நிலை. | 247—252 |
| (ஆ) தேவகோட்டை பகுதியில் மஞ்சள் காமாலை நோய் பரவி வருவது. | 252—256 |
| 4. வரவு-செலவுத் திட்டம், 1985—86, வாக்கெடுப்பு: | 256—327 |
| (அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை. | |
| (ஆ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 256 |
| திரு. ஆர். தியாகராசன் | 258—268 |
| * திரு. என். சண்முகம் | 268—272 |
| திரு. எஸ். என். இராமசாமி | 272—273 |
| * திரு. பொன் முத்துராமலிங்கம் | 273—283 |
| * திரு. மு. பாண்டுரங்கன் | 283—290 |
| * திரு. கு. சுப்பராயன் | 290—297 |
| திரு. ஜி. கே. ஜெ. பாரதி | 297—304 |
| திரு. ஏ. தங்கராசு | 304—310 |
| * திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 310—315 |
| டாக்டர் கே. சமரசம் | 315—323 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் | 323—327 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 327 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூலை 2, செவ்வாய்க்கிழமை

ஆனி 18, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு ''

அஞ்சாமையும், குடிப்பிறப்பும், காக்கும் திறனும், கற்றறிந்த அறிவும், முயற்சியும் ஆகிய இவ்வைந்தும் திருந்தப் பெற்றவன் அமைச்சன்.

## 1. வினாக்கள்— விடைகள்

### *உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின்வாரியத்திற்கு தொழிற்சாலைகள் செலுத்தவேண்டிய பாக்கி.

454—(*வினா எண். 1628) திரு. டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர் அழுத்த மின் சக்தியால் இயங்கும் தொழிற்சாலைகள் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1985-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய ரூ. 24.69 கோடி மின் கட்டணம் நிலுவையில் உள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்சப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏறக்குறைய 25 கோடி ரூபாய் பாக்கியிருப்பதாகச் சொன்னார்கள். இந்த நிலுவை எவ்வளவு காலமாக இருந்து கொண்டிருக்கிறது? இந்த நிலுவையை வசூல் செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? நீண்டகாலமாக இருந்தால், ஏன் அவர்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சுமார் 25 கோடி ரூபாயில் 24 கோடி ரூபாயை மால்கோ நிறுவனம் மட்டும் பாக்கி வைத்திருக்கிறது. இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தவண்ணம் உள்ளோம். மற்றவை எல்லாம் சக்தி பைப் லிமிடெட் 16 லட்சம் பாக்கி வைத்திருக்கிறது. அதேபோல் கலைப்பில் உள்ள தொழிற்சாலைகளில் 8.91 லட்சம், நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வாரியத்திற்கு அனுகூலமாக தீர்ப்பு வழங்கப் பட்ட தொழிற்சாலைகள் மூலம் வரவேண்டியது 2.74 லட்சம், நீதிமன்ற வழக்குகள் முடியாமல் உள்ள தொழிற்சாலைகள் 14.77 லட்சம். தள்ளுபடி கோரப்பட்ட தொழிற்சாலைகள் 8.12 லட்சம். வருவாய் வசூல் சட்டப்படி தாக்கீது பிறப்பிக்கப்பட்ட தொழிற் சாலைகள் 18.42 லட்சம். மின்சாரம் துண்டிக்கப்பட்ட தொழிற் சாலைகள் 23.12 லட்சம். இந்த பாக்கிகள் எல்லாம் கடந்த காலத்தில் ஏற்பட்டது. அண்மைக் காலமாக, குறிப்பிட்ட 4, 5 ஆண்டுக்காலமாக இத்தகைய பாக்கி பெருமளவு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மால்கோ கம்பெனி மட்டும் 20 கோடிக்கு மேல் பாக்கி வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. முன்பு 9 கோடி ரூபாய்தான் பாக்கியிருந்தது. அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். சமீபத்திலே இந்த அரசுக்குப் பாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது என்கிறார்கள். இன்றைக்கு அது 20 கோடிக்கு மேல் ஆகியிருக்கிறது. விவசாயிகள் குறைந்த தொகையை கட்டவில்லையென்றால், மின்வாரியம் மின்சாரத்தை துண்டிக்க முன்வருகிறபோது, இப்படி பெரிய தொழிற்சாலையில் வசூலிக்காமல் தொடர்ந்து அவர்களுக்கு மின் சப்ளை கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதிலே இரண்டு விதமான பாக்கிகள் மால்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில் எழுந்துள்ளது. ஒன்று, 1974-75-ஆம் ஆண்டில் மின்வெட்டு அமுலில் இருந்தபோது, அவர்களுக்கு ஒதுக்கிய கோட்டா போக அதிகமாக அவர்கள் பயன்படுத்தினார்கள் என்ற வகையில் விதிக்கப்பட்ட சட்டணம், அதற்கு மேல் விதிக்கப்பட்ட மேல் கட்டணம், மேலும், மேலும் விதிக்கப் பட்ட மேல் கட்டணம், பிறகு மின்சார வரி, அபராதம் எல்லாம் சேர்ந்து 9.42 கோடி ரூபாய் பாக்கி. இதிலே பெனல்டி மட்டும் 7.28 கோடி ரூபாய். அவர்கள் கரன்ட் சார்ஜ் 2.14 கோடி ரூபாய்தான்,



2873



அதற்குப் பிறகு மால்கோவிற்கு மிகவும் குறைந்த விலையில் மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று எல்லோரும், இங்கே சட்ட மன்றத்திலேயும், வெளியிலேயும் குறிப்பிட்டார்கள். அதாவது முதலிலே 3½ பைசா இருந்தது, 1—1—78-ல். இதை 1—5—82-ல் 33 பைசா யூனிட்டுக்கு என்று நாம் ஆக்கினோம். 1—5—82 முதல் 33 பைசா ஒரு யூனிட்டுக்குக் கட்ட முடியாது என்றும். மத்திய அரசாங்கம் சாதாரணமாக இதைப்போல மின் கட்டணத்தை உயர்த்துகிறபோது அவர்களுக்கு ஈடு செய்வார்கள் அங்கேயுள்ள நிதியிலிருந்து. அப்படி அவர்கள் ஈடு செய்தால்தான் இந்த உயர்ந்த கட்டணத்தைக் கட்ட முடியும் என்று மனு போட்டு, அந்த வகையில் கிட்டத்தட்ட 2 ஆண்டுக்காலம். 1-5—82-லேயிருந்து, 10—5—84 வரை அவர்களால் கட்ட முடியவில்லை. மத்திய அரசாங்கமும் ஈடு செய்யவில்லை.

10—5—1984-லிலிருந்து தான் மத்திய அரசாங்கம் அதை ஈடு செய்ய ஒத்துக்கொண்டது. ஆகவே, 1—5—1982 முதல் 30—9—1984 வரை அந்த இரண்டு ஆண்டுகளில் பாக்கி 10.88 கோடி ரூபாய். ஆக அது இரண்டையும் கட்டவேண்டும் என்ற வகையிலே தான் நாம் வழக்குத் தொடர்ந்தோம். ஆனால், அவர்கள் உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவென்றால், மின் வாரியம் இப்படியெல்லாம் கட்டணத்தை அதிகப்படுத்தியது தவறு. இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் கட்டணம் பற்றி ஒப்பந்தத்தின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினையும், அந்தத் தொழில் நிறுவனத்தையும் கலந்துதான் முடிவெடுக்க வேண்டும், தன்னிச்சையாக மின் வாரியம் எடுத்த முடிவு தவறானது என்று திர்ப்பளித்து, அதன் அடிப்படையில் மால்கோ நிறுவனம் மின்சார வாரியமே 42 கோடி ரூபாய் இப்போது பாக்கி என்றும் அவர்கள் அதனைத் தர வேண்டும் என்றும் கேட்டு இருக்கிறார்கள்.

அதை எதிர்த்து நாம் உச்சநீதிமன்றத்திற்கு இப்போது சென்றிருக்கிறோம். உச்சநீதிமன்றத்தின் பரிசீலனையில் அந்த வழக்கு இருக்கின்றது. அதற்கிடையிலே மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கின்ற யூனிட் ஒன்றுக்கு 44.4 பைசா வீதம் மால்கோ நிறுவனத்திடம் இப்போது உள்ள பில்களைக் கட்டச் சொல்லி வருகிறார்கள். அவர்கள் கட்டிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில், 1974—75-ஆம் ஆண்டிலே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மின்சாரத்தை விட அதிகமாகப் பயன்படுத்திய காரணத்தினாலே 9.42 கோடி ரூபாயும் அபராதமாக 7.28 கோடி ரூபாயும் அளிக்கவேண்டும் என்று சொன்னார்கள். சாதாரணமாக, சிறிய விவசாயிகள், சிறிய ஆலைகள் வைத்து இருப்பவர்களை

மெத்த உன்னிப்பாகக் கண்காணிந்து, 10, 15 யூனிட்
அதிகமாக ஓட்டினாலே டிஸ்கனெக்ட் செய்யும் நிலையிலே,
பெரிய ஆலைக்கு ஏன் இவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துவதை
அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்? உச்ச நீதிமன்றத்
திலே, சுப்ரீம் கோர்ட்டில் அந்த வழக்கினை விரைவாக முடிக்க
அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?
மின்சாரக் கட்டணத்தை அதிகமாக உயர்த்திய நேரத்திலே, ஆலை
சம்பந்தப்பட்டவர்களைக் கலந்துகொண்டு ஏன் கட்டணத்தை
உயர்த்தவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 9.42 கோடி ரூபாய் என்பது 1974-75-ம்
ஆண்டில் கோட்டா-வை அதிகமாகப் பயன்படுத்தியதற்காக
அபராத கட்டணமும் சேர்த்து என்று சொன்னேன். 9.42
கோடி ரூபாயில் 7.28 கோடி ரூபாய் அபராதம் ஆகும். அதன்
உள்ளேயே அடங்கிவிடுகிறது. இது வேறு, அது வேறு அல்ல.
ஏன் அப்போதே மின் துண்டிப்பு செய்யவில்லை என்று கேட்
டார்கள். அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.
ஆனால், மின் துண்டிப்பு செய்யவில்லை என்பது மட்டும் உண்மை.
இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மின்
துண்டிப்பு செய்ய வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்தோம்.
அந்த நோட்டீசை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்
றார்கள். 20—3—1978 அன்று உயர்நீதிமன்றம் மின் துண்டிப்பு
செய்யக்கூடாது என்று உத்தரவு இட்டுவிட்டது. ஆகவே, மின்
துண்டிப்பு செய்ய முடியவில்லை. உச்சநீதிமன்றத்தில் இருக்கின்ற
வழக்கை விரைவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :
(பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்படி மின்சார வாரியத்திற்கு மின்சாரக் கட்டணம்
பாக்கி வைத்து இருப்பவர்களுக்கு, கட்டாத காலங்களுக்கு, மின்சார
வாரியம் வட்டி ஏதும் விதிக்கின்றதா? அப்படியென்றால், விவ
சாயிகளுக்கு அப்படி கட்டாத காலங்களுக்கு விதிக்சப்படுகிற வட்டி
விகிதம் என்ன? அதைக் குறைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள்
பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பிலேடட் பேமென்ட் சர்சார்ஜ் என்று ஒன்று
உண்டு. அதைக் குறைக்க வழி இருக்கிறதா என்பதைப் பற்றி
அரசு ஆராயும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே,
முதலாளிகளிடமிருந்து அரசுக்கு வரவேண்டிய பணத்தை வசூலிப்
பதிலே காலதாமதம் காட்டுகிற அரசு, விவசாயிகளிடம் மட்டும்
நெருக்கி வசூலிக்கிறது. எனவே, வரவேண்டிய பாக்கிகளை



முதலாளிகளிடமிருந்து வசூலிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்படுமா? இதுவரையில் அதற்கு என்ன நடவடிக்
கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
முதலாளிகள் அடிக்கடி கோர்ட்டுக்குப் போய் விடுகிறார்கள்.
ஆகவே, வசூல் செய்வதில் ரொம்ப சங்கடமாக இருக்கிறது. விவ
சாயிகளுக்கு அந்த உரிமை வேண்டுமென்று கேட்டால், யூனிட்டுக்கு
44 பைசா தர விவசாயிகள் தயாராக உள்ளார்களா?

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மின் வாரியத்திற்கு வரவேண்டிய பாக்கிகளைப் பற்றி
அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். அந்தப் பாக்கிகளி
னாலே மின் வாரியம். மின் உற்பத்தி நிறுவனங்களுக்குப் பணம்
செலுத்தமுடியாத, பாக்கியைச் செலுத்தமுடியாத நிலை இருக்
கிறது. அப்படி மின் உற்பத்தி நிறுவனங்களான, நேஷனல்
தெர்மல் பவர் கார்ப்பரேஷன், நெய்வேலி தெர்மல் பவர் கார்ப்ப
ரேஷன் போன்ற நிறுவனங்களுக்கு நம்முடைய மின் வாரியம்
எவ்வளவு பாக்கியைச் செலுத்த வேண்டியிருக்கிறது என்கின்ற
அந்த விவரத்தையும், அதற்கு ஏதேனும் வட்டிகள் செலுத்த
வேண்டிய சூழ்நிலைக்கு நம்முடைய மின்சார வாரியம் தள்ளப்
பட்டிருக்கிறதா என்கின்ற அந்த விவரத்தையும் அமைச்சரவர்கள்
அறிவிப்பார்களா?

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
மின் வாரியம் மற்ற அரசு நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டிய
பாக்கி பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால்
அப்படிச் செலுத்துகின்ற பாக்கிகளுக்கு வட்டி கட்டுகின்ற வழக்கம்
இல்லை. இந்தப் பெரும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை
யில், மற்ற தொழிற்சாலைகளில் எந்தப் பிரச்னையும் இல்லை.
ஆனால் மால்கோவைப் பொறுத்த மட்டும்தான் இந்தப் பிரச்னை.
ஆகவே, தொழிலதிபர்கள் யாருமே மின் கட்டணம் கட்டவில்லை
என்ற கருத்துக்கு நாம் வந்துவிடக் கூடாது. இந்த ஒரு தொழிற்
சாலையைப் பொறுத்தவரையிலேயும், இருக்கின்ற விசித்திரமான
ஒரு நிலை என்னவென்றால், பெருமளவிற்கு மூலப் பொருட்களை
அவர்கள் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் அலுமினியத்
தின் விலையை இந்திய அரசு நிர்ணயிக்கிறது. ஆகவே, மின்சாரக்
கட்டணத்தைக் கூட்டும்பொழுதும் விலையை அதிகப்படுத்தி
மால்கோ நிறுவனம் விற்க முடியாது. மின்சாரக் கட்டணத்
திற்கு மத்திய அரசு ஓரளவிற்கு ஈடு செய்கிறது. அதில் கால
தாமதம் ஏற்படுவதால் இத்தகைய இழப்பு ஏற்படுகிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை பெரிய பெரிய தொழிற்சாலைகளிலிருந்து செலுத்தப் படாமல் இருக்கிறது. அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெறுவதும், தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தைக் காட்டியும் அவர்கள் தப்பித்துக் கொள்ளுகின்ற மனப்பான்மை இருப்பதால் சாதாரண விவசாயிகளும், வீட்டிற்கு மின்சாரத் தைப் பயன்படுத்துகின்றவர்களும் மின் கட்டணம் செலுத்தாத நேரத்தில் எப்படிப் பாதிக்கப்படுகிறார்களோ, அதுபோன்ற நிலைமைகள் இவர்கள் விஷயத்திலேயும் உருவாக்கப்படுமா ? மேலும் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைவில் முடிக்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ? இந்த வழக்குகளை விரைவில் முடித்து தொடர்ந்து அந்தத் தடையை உடைத்தெறியவும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கடந்த ஆறேழு ஆண்டுகளாக எவ்வித தயவுதாட்சண்யமும் இன்றி மின் துண்டிப்பை மேற்கொண்டு வருகிறோம். ஆனால் இந்த பாக்கிகளைப் பொறுத்தவரையில் பழைய பாக்கிகள், அதிலும் இந்தத் தொழிற்சாலையில் நான் ஏற்கனவே சொன்னதைப் போன்று ஒரு விசித்திரமான சூழ்நிலை இருக்கிறது. பொருள்களின் விலையையும் அவர்கள் உயர்த்த முடியவில்லை, மின் கட்டணத் தையும் கட்ட முடியவில்லை. மின் கட்டணத்திற்காக ஓரளவிற்குப் பெற வேண்டிய அந்தத் தொகையை மத்திய அரசிடமிருந்து பெறுவதிலேயும் அவர்களுக்குச் சென்ற முறை சிரமம் ஏற்பட்டது. ஆகவே, எல்லாமே சேர்ந்து இந்தச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவேதான் அவர்களும் நீதிமன்றத் திற்குச் செல்கிறார்கள், நாமும் நீதிமன்றத்திற்குச் செல் கிறோம். இந்த ஒரு தொழிற்சாலையில்தான் நான் ஏற்கனவே சொன்னபடி அந்த நிலைமையின் காரணமாக இருக்கிறது. மற்றபடி இந்த 25 கோடி அல்லது 24 கோடி ரூபாயில் ஆயிரம், ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில், அங்குமிங்குமாக பழைய பாக்கிகள்— அதுவும் பெரும்பாலும் டெக்ஸ்டைல் மில்களைப் பொறுத்த வரையில்—ஏற்பட்டதே தவிர வேறொன்றுமல்ல. ஆகவே, விவசாயிகளிடத்திலேயும், வீடுகளுக்கும் காட்டப்படும் கண்டிப்பு இங்கே காட்டப்படவில்லை என்ற கருத்து தேவையில்லை.



### ஆலந்தூர் நகராட்சிப் பகுதிகளில் மின்சக்தி வழங்கல்.

455—(*வினா எண். 1918) திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் நகராட்சிப் பகுதியில் மின்சாரம் வழங்குவதில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுவது உண்மையா ?

(ஆ) இக் குறைபாட்டை போக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) ஆலந்தூர் பகுதியில் கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங் களில் மின் நுகர்வோர் சிலரைப் பாதிக்கும் வகையில் தடைகள் ஏற்பட்டன.

(ஆ) இக் குறைபாட்டைக் களைய புதிய உயர் அழுத்த புதைவடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 4 கூடுதல் மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

### கொப்பம்பட்டி மின் நிலையம்.

456—(*வினா எண். 19?6) திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொப்பம்பட்டியில் உள்ள 33 கே. வி. மின் நிலையத்தை 110 கே. வி. யாக மாற்ற சர்வே செய்யப்பட்டும் வேலை துவக்கப்படுவதில் காலதாமதமாவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இதன் வேலை துவங்கப்பட உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கொப்பம்பட்டியிலுள்ள துணை மின் நிலையத்தை 33 கே. வி. யிலிருந்து 110 கே. வி. நிலையமாக மாற்றும் பணியை 1987–88 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் இந்த ஆண்டே மாற்றித் தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்பொழுது அங்குள்ள தேவை 8 எம். வி. ஏ., ஆனால் நமக்கு அங்கே வைக்கப்பட்டிருக்கின்ற மின் மாற்றிகள் 10 எம். வி. ஏ., ஆகவே, போதுமான சக்தி இருக்கிறது. 1990-ஆம் ஆண்டு வாக்கில் 11 எம். வி. ஏ., ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, 90.3 இலட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆகவே, 1987—88-ஆம் ஆண்டு தொடங்கி நிறைவேற்றினால் போதும் என்று அரசு கருதுகிறது.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரத்தில் மின்னிணைப்பு கொடுக்கப்படாத நிலையில் பல விண்ணப்பங்கள் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, படிப்படியாக முன்வரும்.

### தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டம்.

457—(*வினா எண். 719) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பிப்ரவரி 1985 முடிய எத்தனை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) கால்நடை பராமரிப்புத் துறை சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியார் பண்ணைகள் எத்தனை அமைக்கப்பட்டு உள்ளன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) 26 சங்கங்கள்.

(ஆ) ஏதுமில்லை.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழித் தீவனத்தினுடைய விலை அதிகமாகி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்தும் வகையில் இதற்கு மானியம் ஏதாவது அளிப்பதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வருகிற 5-ஆம் தேதி மானிய விவாதம் நடைபெற இருப்பதால் அப்பொழுது முழு விவரம் அளிக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோழி வளர்ப்பிற்காக சிறு விவசாயிகளுக்கு அரசு ஏதும் நிதி உதவி அளிக்கிறதா ? அதில் மானியத் தொகை ஏதும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே உறுப்பினர் அவர்களுக்குச் சொன்னது போல் 5-ஆம் தேதி முழு விவர அறிக்கை இது சம்பந்தமாக அவையில் வைக்க இருக்கிறோம்.

### வேட்டவலம் பேரூராட்சி கால்நடை மருத்துவமனை.

458—(* வினா எண். 1855) திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேட்டவலம் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனை செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### பத்திரிகைகளுக்குத் தரப்படும் விளம்பரங்கள்.

459—(* வினா எண். 1738) திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பத்திரிகைகளுக்குத் தரும் விளம்பரங்களை அரசாங்கம் நேரடியாகத் தராமல் தனியார் விளம்பர நிறுவனம் மூலம் தருவதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தனியார் விளம்பர நிறுவனங்களின் தொழில் நுட்ப ஆலோசனை களையும், பணிகளையும் பயன்படுத்தி அரசின் விளம்பரங்கள் சிறப்பாக அமைய, தகுதியுடைய தனியார் விளம்பர நிறுவனங்கள் மூலம் அரசு விளம்பரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் அரசுக்குத் தனியாகச் செலவு ஏதும் இல்லை.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதற்கு என்ன வரை யறைகளைக் கடைப்பிடிக்கிறது? சர்க்குலேஷன் தான் வரையறை யாகக் கடைப்பிடிக்கிறது என்றால், அவர்கள் கொடுக்கிற கணக்கு முறைப்படி 'செக்' செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு விளம்பரங்கள் வழங்குவதற்கு சர்க்குலேஷன் மாத்திரம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. சர்க்குலேஷனும் ஒரு காரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்த சர்க்குலேஷன் பற்றி சரியாகக் கணக்கு தருகிறார்களா என்பதும் கணக்கிடப்படுகிறது. மற்றும் அந்தப் பத்திரிகை யினாலே மக்களுக்கு, சமுதாயத்திற்கு என்ன பயன் விளைகிறது என்பதையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொள்கிறது.

திரு. எஸ் என் இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படும் விளம்பரம் நேரடி யாகக் கொடுக்கப்படாமல் ஏஜெண்டுகள் மூலம் கொடுக்கப்படுவதால் எற்படும் அதிகச் செலவைத் தவிர்க்க செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை மூலம் விளம்பரங்கள் பத்திரிகைகளுக்கு அளிக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் மிகுந்த கஷ்டப்பட்டு விடைகளைத் தயாரித்து, பதில்களை வழங்குகிறோம். அதைக் கொஞ்சம் கூர்ந்து கவனித் தால் நமக்குப் பயன் உள்ள வகையிலே அமையும். நான் அளித்த பதிலிலேயே தெளிவாகத் தெரிவித்து இருக்கிறேன், 'இதனால் அரசுக்குத் தனியாகச் செலவு ஏதும் இல்லை' என்று.

திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பாகச் செய்திகள் தருகின்ற பத்திரிகைகளுக்கும் நாட்டு ஒற்றுமையைக் குலைக்கின்ற செய்தியை வெளியிடுகின்ற பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரங்கள் தரப் படுவது நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்னாலேயே என்னுடைய பதிலாகத் தெரிவித்தேன். அந்தப் பத்திரிகைகள் எவ்வளவு விற்பனை ஆகின்றன என்பதை மாத்திரம் கவனிப்பதில்லை. அந்தப் பத்திரிகைகளினாலே நாட்டுக்கு, சமுதாயத்திற்கு என்ன பயன் விளைகிறது என்பதும் கவனிக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களின் அடிப்படை யில்தான் அதனுடைய போக்கை நாம் கணக்கிட்டுக் கொண்டிருக் கிறோம். அதற்குத் தேவையான நேரத்திலே, ஊக்கம் அளிக்காத வகையில் அரசினுடைய விளம்பரங்களும் தவிர்க்கப்படுகின்றன.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே, எத்தனை பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன என்பதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்தப் பத்திரிகைகளால் நாட்டுக்கும் சமுதாயத்திற்கு என்ன பயன் விளைகிறது என்பதைக் கருத்தில் கொண்டு அரசு விளம்பரம் கொடுக்கிறது என்று சொன்னார்கள். நான் உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்வது, அப்படி யானால் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் எந்தெந்தப் பத்திரிகை களுக்கு எவ்வளவு விளம்பரம் கொடுத்திருக்கிறது என்ற விவரம் இருக்குமானால் தெரிவிக்கவும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரத்தைத் தெரிந்து கொள்ள தனியாகக் கேள்வி போட்டால் நான் விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

### கொடைக்கானல் ஏரி.

460—(* வினா எண் 1235) திரு மு இராமநாதன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஏரியை மேலும் அழகுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, கொடைக்கானல் ஏரியை ஆழப்படுத்த நிபுணர் குழு ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா? அந்தக் குழு இதுவரையில் பரிந்துரை ஏதாவது அளித்துள்ளதா? அந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கி இருக்கிறது? மத்திய அரசு ஏதாவது அந்தத் திட்டத்திற்கு உதவி செய்ய இருக்கிறதா? மாநில அரசு மத்திய அரசின் உதவியைக் கோரியிருக்கிறதா என்ற விவரங்களை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கொடைக்கானல் ஏரியை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது மூலக்கேள்வி. அது மாத்திரம் அரசின் செயற்குறிப்பாக இல்லை. பொதுவாக கொடைக்கானல் பகுதி முழுவதையும் மேம்படுத்த வேண்டுமென்ற ஒரு திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டிருந்தோம். மாவட்ட ஆட்சித் தலைவர், சுற்றுலாத் துறை அதிகாரிகள் மூலம் பல்வேறு துறைகளினுடைய கருத்துக்களைப் பெற்று சுமார் 20 கோடி ரூபாய்க்கு ஒரு மாஸ்டர் பிளானை அளித்திருக்கிறார். அந்த 20 கோடி ரூபாய் அளவிலான திட்டத்தில் எப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பது பற்றி வழக்கமாக சுற்றுலாத்துறை அதற்குரிய 'அர்க்கி டெக்ட்' என்று சொல்லக்கூடிய நிபுணர்களை, வல்லுநர்களை வைத்து ஆலோசித்து, அவர்களிடம் இந்தத் திட்டத்தைக் கொடுத்து, இதை மேலும் எப்படி சீர்படுத்த முடியும் அல்லது சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்பது பற்றி அறிந்துகொள்ள முயற்சி செய்யும். அந்தவகையில் சுற்றுலாத்துறை ஒரு வல்லுநரிடம் இதைக் கொடுக்க இருக்கிறது. அதன் பிறகுதான் இதை நிறைவேற்றுவதற்கான தன்மைகளை மாநில அரசு ஆராயும். இத்திட்டத்தை குறிப்பிட்ட சில ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டுமென்பது மாநில அரசின் நோக்கம். மத்திய அரசு இதற்கு எந்தவித உதவியும் அளிக்கவில்லை. இருந்தாலும் மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தில் கொடைக்கானல் மலை மேம்பாட்டுத் திட்டத்தையும் இணைக்கவேண்டுமென்ற கருத்தை மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். இந்த ஏரியைப் பொறுத்தவரையில், தனியாக சீர்திருத்தும் முயற்சியை நாம் எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது, காரணம், ஏரி நிர்வாகம் ஒரு தனியார் குழுவிடம் நீண்ட காலமாக, வெள்ளைக்காரன் காலம் முதல் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகம் நம்மிடம் ஒப்படைக்க மறுக்கிறது. அந்த நிர்வாகம் டவுன்ஷிப்பிடமும் இல்லை; சுற்றுலாத் துறையிடமும் இல்லை. நீலகிரியைப் பொறுத்தவரையில் நம்முடைய சுற்றுலாத் துறையில் அந்த ஏரி இருக்கிற காரணத்தால் பல இலட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து, நீலகிரி ஏரியை ஆழப்படுத்தியிருக்கிறோம்; மேலும் அழகுபடுத்தியிருக்கிறோம். ஆனால் இந்த கொடைக்கானல்



ஏரி தனியார் குழுவிடம் இருக்கிறது, நம்மிடம் தர மறுக்கிறார்கள். அந்த நிர்வாகத்தை மாற்றுவதற்கும், அதன் பிறகு அரசு அதிலே கவனம் செலுத்தி, முதலீடு செய்து, ஆழப்படுத்தும் முயற்சிகளை எடுக்கலாம் என்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. இராமநாதன் , தலைவரவர்களே, இந்த கொடைக்கானல் ஏரித் தண்ணீர் சீசன் காலத்தில் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்துவதற்கு மட்டுமல்ல. பெரியகுளம், பழனி பகுதிகளுக்கு உட்பட்ட கீழ்ப்பகுதியில் இருக்கிற மக்களுக்கு குடிநீருக்கும் பயன்படுத்துகிற ஒரு பிரதான குடிநீர் ஏரியும் ஆகும். ஆகையால் கொடைக்கானல் ஏரியை ஆழப்படுத்துவது என்று பார்த்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பல காரியங்களை உள்ளடக்கி மேலும் இதை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் ஏற்பாடுகளைச் செய்து சுற்றுலாப் பயணிகளைக் கவருவது ஒன்று. அதே நேரத்தில் அந்த ஏரித் தண்ணீரை நம்பி, குடிதண்ணீருக்குப் பயன்படுத்துகிற அந்த மக்களுக்கு பாதகம் ஏற்படாமல் அதைப் பராமரிப்பது என்பது மற்றொன்று. ஆகவே, இவற்றையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கான திட்டங்கள். இந்த அழகுப்படுத்தும் அல்லது ஆழப்படுத்தும் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறதா என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மான்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த கொடைக்கானல் ஏரி என்பது இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிற மலைவாழ் தலங்களில் மிகச்சிறந்த ஏரியாக, அழகான ஏரியாக இருக்கிறது என்று உலகத்தின் பல பாகங்களிலிருந்து வருகின்றவர்கள் சொல்கிறார்கள். சமீபத்தில் கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு ஹெக்டே அவர்கள் அங்கே தங்கியிருந்தபோது கூட இந்தியாவில் இருக்கிற மலைவாழ் தலங்களில் கொடைக்கானல்தான் அழகு குறையாமல் மலைவாழிடம் என்னும் அந்தத் தகுதி குறையாமல் இருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அவ்வளவு இயற்கை அழகு நிறைந்த ஏரியாக அந்த ஏரி இருக்கிறது: மக்களுடைய குடிதண்ணீருக்கும் அந்த ஏரி பயன்படுகிறது. ஆனால் அந்த ஏரி நம்முடைய சுற்றுலாத்துறை நிர்வாகத்தில் இல்லாத காரணத்தால், அதனுடைய நலனை யார் கவனிப்பது அதனுடைய பாதுகாப்பை யார் கவனிப்பது என்ற நிலையில் ஒரு பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறது. சமீபத்தில் அதற்குப் பக்கத்தில் உணவு விடுதிகளை நடத்துகிறவர்கள், அவர்களுடைய கழிவு நீரை அந்த ஏரியில் தெளித்ததைக் கண்டுபிடித்து, அதிகாரிகள் தலையிட்டு, அதை நிறுத்த முயற்சி செய்திருக்கிறார்கள். இந்த ஏரியை ஆழப்படுத்தவும், சீர்படுத்தவும் 20 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ள திட்டத்தில் 136 இலட்சம் ரூபாய்க்கான திட்டத்தைத்

தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப் படவேண்டுமென்றால் முதலிலே அந்த நிர்வாக உரிமை அரசுக்கு வந்தாக வேண்டும். அந்த அடிப்படையிலேதான் அரசு இதிலே தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஏரியை அழகுபடுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கக் கூடிய மரங்களை வெட்டுவதற்கான முயற்சி நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா? அப்படியிருந்தால், அதைத் தடுத்து நிறுத்த அரசு முயற்சியை மேற்கொள்ளுமா? மேலும், கொடைக்கானல் ஏரியிலே நிறைந்த பாசி அதாவது வாட்டர் ஹைசின்ஸ் என்று சொல்லக்கூடிய அந்தச் செடிகளின் மூலம் அந்த ஏரியே தூர்ந்து போகக்கூடிய அபாயம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதைத் தடுத்து நிறுத்தி, அழகுபட செய்வதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஏரியை அழகுபடுத்துவது மாத்திரமல்ல. கொடைக்கானல் நகரத்தையே அழகுபடுத்தி, அழகுள்ள நகரமாக ஆக்குவதற்கு ஏற்றுக்கொண்டிருப்பதற்குக் காரணம், அங்கே இருக்கின்ற மரங்கள்தான். ஆகவே, அழகுபடுத்துவது என்ற பெயராலே ஒரு மரத்தைக்கூட வெட்டுவதற்கு அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மரங்கள் அங்கே இருப்பதால்தான் அழகு வருகிறது. மரங்களை வெட்டிவிட்டால் அழகு வராது. எப்படி முடியிருந்தால் தலைக்கும், முகத்திற்கும் அழகு இருக்குமோ, அதைப்போலத் தான் மரங்கள் இருந்தாலும், மொட்டை அடித்துவிட்டால் அழகு இருக்காது என்பது தெரியும். ஆகவே, மரங்களை வெட்டுகின்ற பிரச்னை அங்கே எழவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப்போல அந்த நீரை அசுத்தப்படுத்திக் கொண்டிருப்பது மாத்திரமல்ல. அதற்குள்ளே செடி கொடிகள் முளைத்து, அந்த ஏரியை தூர்த்துக் கொண்டிருக்கிறது என்பது நாம் கண்டு கொண்டிருக்கின்ற நிலைமை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதையெல்லாம் கவனிப்பதற்காகத்தான் சுமார் 136 இலட்சம் செலவில் இங்கே ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ளுகிறபோது, அந்த ஏரியின் நிர்வாக உரிமை அரசுக்கு வரவேண்டுமென்பது தான் அதனுடைய அடிப்படை நிலையாகும்.

**டாக்டர் து. முகம்மது சலீம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு விளக்கத்தை கூறியுள்ளார்கள். ஆனால், அந்த ஏரியைச் சுற்றியுள்ள தங்கும் விடுதி, அல்லது தனியார் ஆக்கிரமித்துள்ள பங்களாக்களிலும்



சரி, அங்கே கழிவு நீர் செல்வது அல்லாமல், அந்த ஏரியிலிருந்து மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து அந்த விடுதிகளுக்கும், அந்த பங்களாக்களுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால், அந்த டவுன்ஷிப் சரியான முறையில் அதை கவனிப்பதில்லை; அதைக் கண்டிப்பதும் இல்லை. பலமுறை பார்த்து கூறியும்கூட கேட்பதில்லை. ஆகவே, அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதே அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். குற்றாலத்தில், மைசூரில் பிருந்தாவன் கார்டனில் இருப்பதுபோல் வாட்டர் மியூசிகல் டான்ஸ் என்ற அமைப்பை, சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையிலுள்ள அந்த அமைப்பை இந்த அரசு பயன்படுத்துமா என்று. அதற்கு அமைச்சர் அவர்கள் இயலாது என்று சொன்னார்கள். கொடைக்கானல் நகரம் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க இடமாக இருப்பதால், கோடைத்தலமாக இருப்பதினால், அதுவும் அற்புதமாக ஏரி இருக்கின்ற காரணத்தினால், அந்த ஏரியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையில், ஓய்வான நேரங்களில், ஞாயிற்றுக்கிழமைகளில் பிருந்தாவன் கார்டனில் எப்படி அந்த வாட்டர் மியூசிகல் டான்ஸ் அமைப்பு ஏற்படுத்தி, சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ, அதே முறையை இங்கு இந்த புதிய திட்டத்தின் மூலமாக, ஏரியை அழகு படுத்துகின்ற திட்டத்தில், இந்தத் திட்டத்தையும் சேர்த்து செயல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் இப்போது அந்தக் கொடைக்கானல் ஏரியை, இயற்கை தந்திருக்கின்ற அந்தச் செல்வத்தை, சுத்தமாக வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்படி சுத்தமாக வைத்துக் கொள்ள கற்றுக்கொண்டு, அதை பாதுகாத்த பிறகுதான், அதை அழகுபடுத்துவதற்கும் நவீனப்படுத்துவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்படிப்பட்ட திட்டமும் அதிலே இருக்கிறது. சுமார் 100 இலட்சம் செலவிலே குழந்தைகள், மற்றும் பயணிகள் பார்த்து மகிழ்ச்சி அடையக்கூடிய பல்வேறு திட்டங்களையும் வைத்திருக்கிறோம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி விரும்புகிற, அந்த இசை நடனத்திற்கு ஏற்றவாறு நம் அந்தத் தண்ணீரை இயக்குகின்ற காரியமும், அதிலே ஈடுபட்டு செய்ய முடியும்.

காரைக்குடி நகரில் சுற்றுலா விடுதி.

461—(*வினா எண். 1501)—திரு. எஸ். பி. துரைராசு : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி நகரில் தமிழ்நாடு சுற்றுலா வாரியம் மூலம் பயணிகள் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கட்டுமானப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, (அ) தற்சமயம் இல்லை. (ஆ) எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

ஆண்டிப்பட்டி-குன்னூர் குடிநீர்த் திட்டம்.

462—(*வினா எண். 1840)—திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி—குன்னூர் குடி நீர்த் திட்டத்தில் இடையில் உள்ள 11 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) இப்பணி 7 கிராமங்களுக்கு முடிவுற்று, 11—6—85 முதல் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 கிராமங்களிலும் திட்டப்பணிகள் முடிவுறும் நிலையிலுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்த 11 கிராமங்களிலே மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டும், குழாய்கள் அமைக்கப்பட்டும் இவ்வளவு காலதாமதமானதற்கு ஏதாவது பிரத்தியேகக் காரணங்கள் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தது தான் காரணம்.



புள்ளம்பாடி-கல்லக்குடி நகரங்களுக்குக் கொள்ளிடத்திலிருந்து நீர் வழங்கல்.

463—(*வினா எண். 1654)—திரு. இ. வெங்கடாசலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புள்ளம்பாடி—கல்லக்குடி நகரங்களுக்கு கொள்ளிடத்திலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அத் திட்டம் எவ்வளவு நாளில் செயல்முறைப் படுத்தி முடிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) புள்ளம்பாடி-கல்லக்குடி நகரங்களுக்கு கொள்ளிடத்திலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் ரூ. 133.48 லட்சம் மதிப்பீட்டில், உலக வங்கி கடன் உதவித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு விரிவான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இத் திட்டம் 1986–87-ல் எடுத்துக்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப் பெறுகிறது.

திரு. இ. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1985-86 இல் எடுத்துக் கொள்ளப்படுமா என்பதையும் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறபோது அந்தப் பகுதியிலே இடையிலே உள்ள கிராமங்களும் இந்தத் திட்டத்தினால் பயன் அடையுமாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1986-87 இல் தான் அது தொடங்கப்பட இருக்கிறது. நத்தம், மாங்குடி ஆலம்பாக்கம், கோதண்டக்குறிச்சி, புதூர்பாளையம், பளிங்கநத்தம் ஆகிய ஊர்கள் அதிலே சேர்க்கப்பட இருக்கின்றன.

திரு. இ. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, புள்ளம்பாடி ஒன்றியத்தில் பல கிராமங்கள் குடிநீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நான் முன்பே ஒரு துணைக் கேள்வி கேட்டபோது சுட்டிக்காட்டியுள்ள பல்வேறு கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படுமா என்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தில் அவை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள்.

தற்போது அந்தக் கிராமங்கள் குடிநீர்ப் பிரச்சினையால் சடுமை யாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்தக் கிராமங்களி லுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கும்.

**வேளாண் துறையில் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்.**

*464—(*வினாஎண். 1727)*—**திரு, குமரி அனந்தன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

*பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின் மூலம் கிடைத்துள்ள பலன் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா ?*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஆம். ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திரு. எஸ். என். இராமசாமி :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் பகுதியில் உதவி வேளாண்மை அதிகாரிகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் வருகிற நேரம், நாள் முதலியவற்றைக் குறித்து போர்டுகள் மாட்டப்படுகின்றன. ஆனால் குறிப்பிட்ட நாட்களில் அங்கு அவர்கள் வருவதில்லை. குறிப்பிட்ட நாட்களில் வந்து விவசாய மக்களிடம் பயிற்சி வழித்தொடர்புத் திட்டத்தை விளக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட நாளில் எங்கே வரவில்லை என்று குறிப்பிட்டுக் கூறினால் அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.

குறிஞ்சிப்பாடி மார்க்கெட்டிங் சொசைட்டியில்
நெல் கொள்முதல்.

*465—(*வினா எண். 1814)*—**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் உள்ள மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு விவசாயிகள் நெல் கொண்டு செல்வதை வழியிலேயே தடுத்து சில தனிவியாபாரிகள் இலாபம் அடைவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, (அ) குறிஞ்சிப்பாடி சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளிடமிருந்து இத்தகைய புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு ஏ. தங்கராசு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறபோது கிராமப் பகுதியிலிருந்து குறைபாடுகள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே விவசாயிகள் எடுத்துவருகிற நெல்லை அல்லது விவ சாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களை இடையிலே இருக்கிற லைசென்ஸ் இல்லாதவர்கள் மறித்து நெல் கொள்முதல் செய்து கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய மார்க் கெட்டிங் சொசைடி சரியான முறையில் கண்காணிக்காததால் அங்கே விவசாயிகள் கொண்டு செல்வதில்லை. உடனடியாக அரசாங்கம் தலையிட்டு அந்த நிலையைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தனிப்பட்ட வியாபாரிகளிடம் நெல்லை அல்லது அவர்கள் உற் பத்தி செய்கிற விளைபொருட்களை விற்று பழக்சப்பட்டவர்கள் அந்த வியாபாரிகளிடமே விற்கக்கூடிய சூழ்நிலையை விவசாயப் பெருமக்கள் தவிர்த்து, வேளாண்மை விற்பனைக் குழுக்களிடம் தரவேண்டுமென்ற உணர்வைப் பெறவேண்டுமென்ற முறையிலே தான் நாம் அந்த உணர்வை அவர்கள் பெறுகின்ற வகையிலே பிரச்சாரம் செய்து வருகிறோம். இதிலே சட்டவிதிப்படி நட வடிக்கை எடுக்க இயலாது.

**திரு ஏ. தங்கராசு :** தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் எங்களைப் போன்றவர்கள் தொடர்பு கொள்கிறபோது அங்கே இருக்கிற மார்க்கெட்டிங் சொசைடியின் நிலைமை சரியாக இல்லை என்றும் 14, 15 ஏக்கர் நிலம் அரசாங்கத்தில் வழங்கப்பட்டும்கூட அங்கே போதுமான கட்டண வசதிகள், களவசதிகள் நல்ல முறையில் செய்துதரப்படவில்லை என்றும் அதனால் அங்கே எடுத்துச்செல்ல வில்லை என்றும் சொல்கிறார்கள். அந்த வகையிலே மார்க்கெட்டிங் சொசைடிகளின் கட்டணங்களைப் புதுப்பித்தும் களங்களை அமைத்துக்கொடுத்தும் வேண்டிய வசதிகளை செய்தால் விவசாயிகள் அங்கே கொடுக்க வசதியாக இருக்கும். அந்தவகையில் அமைச்சர் அவர்கள் வருகிற ஆண்டிலே ஏற்பாடுகளைச் செய் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வசதிகள் செய்து தருவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் அப்படி இருக்கின்ற சூழ்நிலையின் காரண மாக நெல் வரவில்லை என்ற புகார் எதுவும் இல்லை. ஏன்

என்றால் பிப்ரவரி, மார்ச் 1985-ல் 132 டன் நெல் வந்து இருக்கிறது. 1 லட்சத்து 89 ஆயிரத்து 125 ரூபாய் பெறுமான அளவுக்கு நெல் நம்முடைய விற்பனைக் குழுக்கள் மூலமாக வந்து இருக்கிறது.

திரு எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் விழுப்புரத்தில் மார்க்கெட் கமிட்டிக்கு இடம் இல்லாததன் காரணத்தால் ரோடுகளில் வண்டிகளை நிறுத்து வைக்கிறார்கள். இதனால் ஆர்ட்டிபிசியலாக, செயற்கையாக அதற்கு டிமாண்டு இருப்பது போல் நிலை ஏற்படுவதன் காரணத்தால் அங்கே மார்க்கெட் கமிட்டி விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆராயும்.

திரு செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்கெட் கமிட்டிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கு, விவசாயிகள் விளை பொருட்களை மார்க்கெட் கமிட்டி வாங்குவதற்கு இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் செய்து கொண்டு இருக்கிறோம்.

### சோவியத் நாட்டுடன் உழவர் பரிவர்த்தனைத் திட்டம்.

466—(*வினா எண். 1810)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கும் சோவியத் நாட்டிற்கும் இடையில் உழவர் பரிவர்த்தனையின்கீழ் பயிற்சித் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பொது உடைமைப் பூங்காவான சோவியத் திருநாட்டுக்கும் நம்முடைய தமிழக அரசுக்கும் இடையில் இரண்டு பேர் செல்வதற்காக இங்கே நேர்முகத் தேர்வு நடைபெற்று,



அரசுக்கு அந்த கோப்புகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அடுத்த ஆண்டு சோவியத் திருநாட்டுக்கும் நமக்கும் உழவர் பரிவர்த்தனை பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்படுமா ? அதற்கான செயற் குறிப்புகள் அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தனி நாடு அல்ல. நாம் நேரடியாக சோவியத் நாட்டோடு தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது. மத்திய அரசின் மூலமாகத்தான் அந்தத் தொடர்பு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு 8 விவசாயிகளை உழவர் பரிவரித்தனைத் திட்டத்தின் கீழ் அனுப்பவேண்டும் என்ற வகையில் மத்திய அரசு ஏற்பாடு செய்து அதிலே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் இடம் பெறவேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். நாம் செங்கற்பட்டு மாவட்டம் தாமோதரன் என்பவரை பரிந்துரை செய்து இருக்கிறோம். மத்திய அரசிலிருந்து இன்னும் தகவல் வரவில்லை.

### பவானி மருத்துவமனை.

467 (*வினா எண். 1648)—திரு. பு.கோ. நாராயணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரில் உள்ள அரசு மருத்துவமனையை விஸ்தரிக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நிதிநிலையின் காரணத்தினால் புதிய கட்டிடம் கட்டாமலே படுக்கை வசதி அதிகரிக்கப்படும்.

திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனையை விரிவாக்கும் திட்டத்தில் புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் உண்டா ? எத்தனை புதிய வார்டுகள் ? என்ன என்ன பிரிவுகள் ? இப்போது இருப்பதைவிட எத்தனை படுக்கைகள் அதிகரிக்கப்படும் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும் போது நிதிநிலையின் காரணத்தால் புதிய கட்டிடங்கள் கட்டக்

கூடிய திட்டம் இல்லை என்று தெரிவித்து இருக்கிறேன். 32 படுக்கைகள் கூடுதல் ஆக்குவதற்கு நாம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி கூடுதல் ஆக்குகின்ற நேரத்தில் எந்த எந்தப் பிரிவுக்கு அதைப் பிரித்துக் கொடுக்கலாம் என்பதை நாம் அப்போது முடிவு எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. பு. கோ. நாராயணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி பகுதியில் அடிக்கடி விபத்துகள் நடைபெறுவதால் அங்கே 'Accident Emergency Ward' ஒன்றை புதியதாக அமைக்க திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 32 படுக்கைகளை நாம் கூடுதல் ஆக்குவதன் மூலமாக ஒரு லட்சத்து 60 ரூபாய் செலவு ஆகிறது. அந்த செலவு செய்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த கருத்தை நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை, பெருந்துறை.

468—(*வினா எண். 1787)—திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையிலுள்ள இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை நிதி நெருக்கடியின் காரணமாக சரியாக இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராமலிங்கம் காசநோய் மருத்துவமனையின் பராமரிப்பு மானியத்தை ரூ. 5,00 இலட்சத்திலிருந்து ரூ. 8.00 இலட்சமாக உயர்த்துவதுபற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-40)

**டாக்டர் அ. பொன்னுசாமி:** பெருமை பெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, இலவசப் படுக்கை வசதி அளிக்கப் பெற்றுள்ள நோயாளிகளுக்குக்கூட மருந்துகள் இலவசமாக வழங்கப்படவில்லை என்றும் ஊழியர்களுக்குச் சரியாகச் சம்பளம் தரப்படவில்லை என்றும் அவர்கள் வாங்கிய ஊராட்சி ஒன்றியக் கடன் திருப்பிச் செலுத்தப்படாமல் இருக்கின்றது என்றும் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆமெனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



**The Hon. DR. H. V. HANDE :** Mr. Speaker Sir, now Hospital stoppages from paying patients—Rs. 12 lakhs, சானட்டோரியத்திற்கு வருமானம் வருகிறது. Donation and Contribution from Local Bodies—Rs. 95,000/-; Maintenance Charges of Reserved Beds by E. S. I., Tea Board, etc.; Rs. 3.45 lakhs; Maintenance Grant from Government—Rs. 5,00 lakhs. ஆகவே இந்த மருத்துவமனைக்கு கிட்டத்தட்ட 22 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவாகிக் கொண்டிருக்கின்றது. 22 இலட்சத்து 48,585 ரூபாய் என்ற அளவுக்கு 1982-83 ஆம் ஆண்டுக்கு செலவழிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படக்கூடிய கருத்தாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டால் எந்த அளவுக்கு அரசாங்கம் தாங்கும் என்பதை எல்லாம் யோசித்து ஒரு முடிவுக்கு வரலாம்.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை நிதிப்பற்றாக்குறை காரணமாகச் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்பதால் அரசே அந்தக் காசநோய் மருத்துவமனையை எடுத்துக்கொண்டு சிறப்பாக நடத்துகின்ற திட்டம் ஏதும் அரசினிடத்திலே இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப்பற்றாக்குறை காரணமாக அந்த மருத்துவமனைக்கு ஆண்டுதோறும் 5 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் 3 இலட்சம் ரூபாய் அதாவது மொத்தம் 8 இலட்சம் ரூபாய் கொடுத்தால் அந்த டி. பி. சானட்டோரியம் நல்ல முறையில் செயல்படுமா என்பதைப் பார்த்து அப்படியும் அது சரியாகச் செயல்படவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் அ. பொன்னுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசநோய் மருத்துவமனைக்கு மத்திய அரசு 50 சதவீதம் மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. மீதி 50 சதவீதம் நமது அரசு தான் தரவேண்டியிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற குறிப்பிலே இருந்து பார்க்கின்றபோது அரசு நிறுவனத்திலேயிருந்தும் மற்றும் நோயாளிகளிடத்

திலேயிருந்தும்தான் அந்த மருத்துவமனைக்கு வருமானம் வருகின்றது என்பது தெரிய வருகின்றது. எனவே இதனை அரசாங்கமே எடுத்து நடத்துவதில் எந்தவிதமான அதிகப்படி செலவும் ஏற்பட்டுவிடாது. எனவே அரசாங்கம் இதை எடுத்து நடத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பாதிச் செலவைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் எல்லா சானட்டோரியத்திற்கும் அவ்வாறு மத்திய அரசு கொடுப்பது இல்லை. மத்திய அரசினிடத்திலே இன்னொரு திட்டத்திற்காகக் கேட்டிருக்கிறோம். சென்னை மாநகராட்சியில் ஒரு திட்டத்திற்காகக் கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்குகிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் முடிவாகச் சொல்லவில்லை. அதுபற்றி ஆராய்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்தப் பணத்தை நாம் பெறவேண்டியிருக்கின்றது. அதற்குப் பிறகு தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்தக் கருத்தையும் மனதிலே கொண்டு இதுபற்றியும் மத்திய அரசுக்கு எழுதி இந்தச் செலவையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஒட்டுமொத்தமாக அந்த மருத்துவமனையை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடிய கருத்து நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று இந்த அவையிலே வாக்குறுதி கொடுக்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறையிலே இருக்கின்ற காசநோய் மருத்துவமனை கோவை, பெரியார் மாவட்டத்திற்கு என்று மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டிலேயே ஒரு பிரதானமான மருத்துவமனையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன குறிப்பிலே இருந்து பார்க்கின்றபோது உள்ளாட்சி அமைப்புக்களிடத்திலே இருந்து மிகவும் குறைந்த தொகை அதற்காகக் கொடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட ஒவ்வொரு பஞ்சாயத்தும், நகராட்சி மன்றங்களும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் காசநோய் மருத்துவமனைக்குப் பணம் கட்டுவது என்ற முறை இருந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் அப்படி யாரும் பணம் கட்டவில்லை. எனவே அதனை அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது எங்களுடைய பிரதானமான ஒரு வேண்டுகோள் என்று இருந்தாலும் லோக்கல் பாடிஸ் என்று சொல்லக்கூடிய பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிட்டிகள் ஏற்கெனவே கட்டிக்கொண்டிருந்த தொகையைக் கட்டுவது பயனுடையதாக இருக்கும். அவர்களுக்கு குறிப்பிட்ட இடம்கூட ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எனவே



அதையாவது வற்புறுத்திப் பெறுவதற்கு இந்தத் துறை முயற்சிக்குமா என்றும் அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆர்வம்கொண்டு செயலாற்றுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்தின் அடிப்படையில்தான் நாம் கொஞ்சம் தயக்கத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறோம், அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்று. முனிசிபாலிட்டிஸ், பஞ்சாயத்து, மாநகராட்சி போன்ற லோகல் அத்தாரிட்டிஸ் எல்லாம் இதற்காக கொடுக்கக்கூடிய தொகையை கொடுத்து விட்டால் ஓரளவிற்கு நிதி நிலைமை திருந்திவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்களை வற்புறுத்தி அந்தப் பணத்தைப் பெற நமது இலாகா முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய கருத்துப்படியும் நாம் ஆராய்ந்து நல்ல வகையில் ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### மயிலாடுதுறை மருத்துவமனை.

*469—(*வினா எண். 1893)*— திரு. மு. தங்கமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுகளுக்கு சிறப்பு மருத்துவர்களை நியமிக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இம்மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுகளுக்கு ஏதும் ஒப்பளிப்பு அளிக்கப்படவில்லை. எனினும் இப்பிரிவுகளில் சிறப்புத் தகுதி பெற்ற மருத்துவர் தற்போது பணிபுரிந்து வருகிறார். எலும்பு முறிவு பிரிவில் சிறப்புத் தகுதிபெற்ற மருத்துவர் ஒருவரைப் பணியமர்த்த பரிசீலனை செய்யப்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரமும், ஆயிரத்திற்கு அதிகமாகவும் அவுட் பேஷண்டுகள் வரும் பிரைமரி மருத்துவமனைகளிலே இப்படிப்பட்ட ஸ்பெஷலிஸ்டுகளை — டாக்டர்களை — நியமிக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா அல்லது அவ்வாறு அமைத்துத் தர அரசு முன்வருமா ?

[1985 ஜூலை 2

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனுடைய விவரங்களைத் தனியாக எடுத்துக் கொடுப்பார்களானால் இலாக்காமூலம் ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தனித் தாலூக்காவாகி 4, 5 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே மருத்துவமனை தனியாக இல்லை. ஆகவே பள்ளிப்பட்டில் தாலூக்கா மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் உத்தேசமுண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டில் மருத்துவமனை இருக்கிறது. மதுராந்தகத்தில் வெகு விரைவில் விஸ்தரிக்கக்கூடிய பகுதியும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆத்தூர் வட்டத்தில் குடும்ப அட்டைகள் வழங்கல்.

470— (*வினா எண். 1849)— திரு சி. பழனி முத்து : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டிற்குபின் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் குடும்பக் கார்டுகள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு.எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் விநியோகிக்க ஆசிரியர்கள் மூலம் கணக்கெடுத்து விநியோகம் செய்தார்கள். ஆசிரியர்கள் தனியாக அடையாளச் சீட்டு ஒன்று கொடுத்தார்கள். அந்த அடையாளச் சீட்டை வட்ட விநியோக அதிகாரிகளிடம் கொடுத்தால் 'கணக்கெடுத்த குறிப்பில் இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே கிராமப் பகுதிகளில் வாழ்கிற அந்த ஏழை, எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 2]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1982-ம் ஆண்டிலே ஒவ்வொரு குடும்ப ரீதியாக கணக்கெடுக்கப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாடு முழுவதும் சுமார் ஒரு கோடியே 18 லட்சத்து 88 ஆயிரம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பகுதியில், ஆத்தூர் வட்டாரத்தில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 495 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே 1980-ம் ஆண்டிற்குப் பின்னால் கணக்கெடுக்கப்படவில்லை என்பது தவறான செய்தியாகும். தற்போது ஆத்தூர் வட்டத்தைக் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அங்கே குடும்ப அட்டைகள் கேட்டு வந்த மனுக்கள் எதுவும் தேக்கத்தில் இல்லை என்ற செய்தி கிடைத்திருக்கிறது. அந்த வட்டத்தில் 750 குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்குத் தயாராக இருக்கின்றன. அப்படி யாராவது விடுபட்டு போயிருப்பார்களானால் மீண்டும் அதுகுறித்து மனுச் செய்வார்களானால் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவதில் சரியான முறையில் கணக்கெடுத்து அவற்றை வழங்குவது நம்முடைய கடமையாகும். குடும்பக் கார்டுகள் கோரி விண்ணப்பம் கொடுப்பவர்கள் விண்ணப்பத்துடன் 5 ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டினால்தான் அது வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆகவே 5 ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்டுவது ஏழை எளிய மக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. ஆகவே 5 ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சில விதி முறைகளைப் பின்பற்றித் தான் ஆகவேண்டும் எல்லோரும். இதிலே இப்போது எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கு வழியில்லை.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை வழங்குவதில், பல மாவட்டங்களில் விடுபட்டு இருப்பதாகத் தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படித் தகவல் வந்திருக்கிற எல்லா மாவட்டங்களிலும் குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு, அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? இதைப்போன்று தர்மபுரி மாவட்டத்தில் நிறைய இடங்களில் விடுபட்டுப் போய் இருக்கிறது. எனவே இங்கே எல்லாம் குடும்ப அட்டைகள் வழங்க அரசு எடுத்து இருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கேள்வி ஆத்தூர் வட்டத்தைப் பொறுத்தது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவலுக்காகச்

சொல்கிறேன். தமிழ்நாடு முழுவதும் — நான் ஏற்கனவே சொன்னதைப்போல — 1,18,88,000 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. சராசரியாக ஒரு குடும்ப அட்டைக்கு 4 பேர்கள், 5 பேர்கள் என்று வைத்துக்கொண்டாலும்கூட, தமிழகத்தினுடைய ஜனத்தொகை 7 கோடி இருக்கவேண்டும். வழங்கப்பட்டு இருக்கிற குடும்ப அட்டைகள் அதிகமாக வழங்கப்பட்டு இருக்கின்றன. இதிலே ஏராளமான பேர்கள் அதிகமாக வாங்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டுகூட சுமார் 25 ஆயிரம் குடும்ப அட்டைகள் தவறுதலாக, அதாவது போகசாக வாங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கார்டுகள் எல்லாம் திரும்பப் பெறப்பட்டு உள்ளன. எனவே இது தவிர 1982-லே கணக்கெடுப்பு செய்யப்பட்டு, கார்டுகள் வழங்கப்பட்டு உள்ளன. எந்தப் பகுதியிலேயாவது உண்மையாக விடுபட்டுப் போயிருந்தால், அவர்கள் ஆங்காங்கே உள்ள வட்டாட்சியர் இடத்திலே மனுச் செய்தால், நிச்சயமாக அவைகள் கவனிக்கப்பட்டு, விடுபட்டு இருப்பவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் அதிகமாக வழங்கப்பட்டு உள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தபோதும்கூட பழைய கார்டு கொடுத்தவர்களுக்குத்தான் புதிய கார்டுகளை வினியோகிக்கிறார்கள். குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்கும், தனியாக இருப்பவர்களுக்கும், புதிய கார்டுகள் ஆத்தூர் வட்டாரத்தில் இதுவரையில் வழங்கப்படவில்லை. இப்படிப் பல குடும்பங்கள் இருக்கின்றன. எனவே இவைகளைக் கணக்கெடுத்து, புதிய கார்டுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அத்தோடு, இந்த 5 ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்று சொல்வதினால், தாழ்த்தப்பட்ட, மலைவாழ்ப் பகுதியில இருக்கின்ற மக்களைப் பொறுத்தவரையில், இது மிக அதிகமான தொகையாக இருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறோம். ஆகவே, இதையும் நிவர்த்தி செய்ய, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதை போல் 1,18,88,000 கார்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. சமீபத்திலே கணக்கெடுப்பு நடந்திருக்கிறது. உண்மையிலே எந்தப் பகுதியிலாவது விடுபட்டுப் போயிருந்தால், அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டாட்சியர் இடம் மனுச் செய்தால், அவர்கள் புதிய கார்டுகளைக் கொடுப்பார்கள். ஏற்கனவே பழைய கார்டு இல்லாதவர்களுக்கும் புதிதாகக் கார்டு தேவைப்படுபவர்களுக்கும், அவர்கள் மனுச் செய்தால் கொடுப்பார்கள். அடுத்து, இந்த ஸ்டாம்பைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், பின்னாலே அதைப் பரிசீலித்து, அதை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி யோசித்துப் பின்னாலே பதில் சொல்கிறேன்.



**திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளுக்கு, ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும், ரேசன் சப்ளை என்பது முதலிலே 75 பர்செண்ட் என்றும், பின்னாலே 25 பர்செண்ட் என்றும் சப்ளை செய்கின்ற காரணத்தால், ரேசன் கடைகளில் பல தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே ஒரே சமயத்தில் முழு அளவையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கொடுக்கப்படுகிற அத்தியாவசியப் பண்டங்கள், உதாரணத்திற்கு மண்ணெண்ணெய் என்று எடுத்துக் கொண்டால், நமக்கு 60 ஆயிரம் கிலோ லிட்டர்கள் மாதத்திற்குத் தேவைப்படுகிறது. ஆனால் வழங்குவதோ, 47 ஆயிரம் கிலோ லிட்டர்கள்தான். எனவே இப்படி அத்தியாவசியப் பண்டங்கள் என்று வருகிறபோது மத்திய அரசு எவ்வளவு கொடுக்கிறதோ, அதைப் பரவலாகப் பிரித்து, தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. அதைப் போல அரிசி என்றால் 20 கிலோ வழங்கப்படுகிறது. இதிலே முழுமையான அளவுதான் எல்லாக் கடைகளிலும் வழங்கப்படுகிறது.

**திரு. கு.அ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே, கார்டுகள் கொடுப்பதில் விடுபட்டுப் போயிருக்கிற அனைத்துப் பகுதிகளிலும், ஒரு குறிப்பிட்ட கால வரையறை நிர்ணயித்து, அரசு விளம்பரம் செய்து, விடுபட்டுப் போனவர்கள் அனைவரும் தங்களுடைய கார்டுகளை வாங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு அறிவிப்பை அறிவித்து, அதற்குப் பிறகு கொடுக்கின்ற வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, அவரவர்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அவரவர்கள்தான் முயலவேண்டுமே தவிர, இதற்கு என்று தனியாக விளம்பரம் செய்வது என்பது முடியாத காரியம். இப்போதும் அவரவர்களுக்குத் தேவையானால், அந்தந்த வட்டாட்சியர்களிடம் சென்று மனுக் கொடுத்து, கார்டுகளைப் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். நான் மீண்டும் இந்த மன்றத்தின் மூலமாகச் சொல்வது, உண்மையிலே விடுபட்டுப் போனால், அந்தந்தப் பகுதியில் உள்ள தாலுக்கா வட்டாட்சியரிடம் மனுச் செய்தால், அவர்கள் அதைப் பரிசீலித்து நிச்சயமாக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவை தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் பல பகுதிகளில் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக வருவாய் இருப்பவர்களுக்குக் குடும்பக் கார்டுகள் வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்து இருக்கிறதா? அப்படி ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருவாய் இருப்பவர்களுக்குக் கார்டு வழங்கப்பட வேண்டாம் என்று அரசு ஏதேனும் கொள்கையை உருவாக்கியிருக்கிறதா? இன்று குறிப்பாகச் சொல்லப் போனால், பஞ்சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு அவர்களுடைய மொத்த வருமானம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருகிறது. இதன் காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லாம் குடும்பக் கார்டு வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு ஏதேனும் அரசு கொள்கை வகுத்து இருந்தால் அதிலிருந்து விதிவிலக்கு கொடுத்து இந்தமாதிரி தொழிலாளர்கள் பாதிக்காமல் இருக்கக் கூடிய அளவுக்கு குடும்ப காரடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போடவும்.

திரு. த. புஷ்பராகு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து பல குடும்பங்கள் இன்றைக்குத் தமிழகத்தில் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் குடும்ப அட்டை வழங்குவதில் பல மாதங்கள் கூட ஆகிறது என்று சொல்கிறார்கள். அப்படி அவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்குவதில் எந்தவிதமான அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதையும், விரைவில் அவர்களுக்கும் குடும்ப அட்டை வழங்குவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து வந்து இருப்பவர்களைப் பார்க்கிறபோது 2 வகையாக இருக்கிறார்கள். ஒன்று ஒப்பந்தத்தின்படி இங்கே வந்து நிரந்தரமாகத் தங்குகிறவர்கள். இன்னும் ஒன்று, சமீபத்தில் இப்போது அங்கே பாதிக்கப்பட்டு இங்கே வருபவர்கள். நிரந்தரமாக இங்கே தங்குபவர்களுக்குக் குடும்ப அட்டைகள் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற அகதிகளின் கார்டுகளை அடிப்படையாக வைத்து அந்தந்தப் பகுதிகளில் மனு செய்யும்போது வழங்கப்படுகிறது. சமீபத்தில் இப்போது பாதிக்கப்பட்டு வந்து இருப்பவர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை அவர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் மலிவு விலையில், குறைந்த விலையில் அரசு வழங்கிக் கொண்டு இருக்கிறது.



திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும், அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறுகிற வகையில் நியாய விலைக் கடைகளை நடமாடும் நியாயவிலைக் கடைகளாக ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற திட்டம் எதுவும் இப்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புகுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஒரு கோடியே 18 லட்சத்து 80 ஆயிரம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கடந்த 29ஆம் தேதி அன்று நானும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தங்கதுரை அவர்களும் என்னுடைய தொகுதியில் சுற்றுப்பயணம் செய்தபோது மக்களின் குறைகளைக் கேட்கும்போது பென்னாகரத்தில் உள்ள பள்ளிப்பட்டு நகரத்தில் சுமார் 150 குடும்பங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமத்தில் ஒரு குடும்ப அட்டைகூட இதுவரை வழங்கப்படவில்லை என்று அங்குள்ள மக்கள் கூறினார்கள். இன்னும் என்னுடைய பென்னாகரம் தொகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் அதிகமாக உள்ள பல கிராமங்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து சீக்கிரம் அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் கிடைப்பதற்குச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விட்டுப்போன எல்லாப் பகுதிகளிலேயும் அவர்கள் அந்தந்தப் பகுதி வட்ட ஆட்சியருக்கு மனு செய்தால் உரிய முறையில் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும், குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு அட்டைக்கு மாதம் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. அதை 30 கிலோ அரிசியாக உயர்த்தி மக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 2

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில்தான் 12 கிலோ அரிசி என்று இருந்ததை 20 கிலோ அரிசி என்று உயர்த்திக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். 20 கிலோவை 30 கிலோவாக உயர்த் துகிற திட்டம் இப்போது எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஏன் என்றால் இப்போதே நாம் மானியத் தொகையில் கொடுப்ப தால் சுமார் 100 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. நாம் அரிசியை அதிகமான விலைக்கு வாங்கி குறைந்த விலையில் ஒரு அட்டைக்கு 20 கிலோ அரிசி என்ற முறையில் கொடுப்ப தால் ஆண்டுதோறும் சுமார் 100 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் பொதுமக்களின் நலனைக் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இப்போதுதான் 12 கிலோ அரிசி என்று கொடுத்துக் கொண்டு இருந்ததை 20 கிலோ அரிசி என்ற வகையில் உயர்த்தி தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்பட்டு இருக்கிற அந்த உணவுப் பங்கீட்டு அட்டைக்கு எண்ணெய், அரிசி மற்றும் பல பொருட்களை ஒரே சமயத்தில் கொடுக்கிற காரணத்தால் மக்கள் அதை உபயோ கப்படுத்துகிற நேரத்தில் எண்ணெயை வாங்கும்போது அந்த அட்டைகள் பாழாகிவிடுகிறது. ஆகவே, அட்டையை வழங்கும் போது எண்ணெய் போன்ற பொருட்களுக்குத் தனியாக ஒரு அட்டையும், அரிசி போன்ற பொருட்களுக்குத் தனியாக ஒரு அட்டையும் வழங்குவதற்கும், இப்போது வெள்ளையாக அந்த அட்டைகள் இருக்கிற காரணத்தால் சீக்கிரம் பாழாகி அழியக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை கலர் அட்டையாக வழங்குவதற்கும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, வெள்ளையாகக் கொடுத்தாலும், கலராகக் கொடுத்தாலும் தாளிலே கொடுக்கிறபோது அழுக்குப் படத்தான் செய்யும். பொருள் வாரியாக, ஒரு பொருளுக்கு ஒரு அட்டை என்று கொடுத்தால், அதனால் பொதுமக்களுக்குத்தான் இடையூறு ஏற்படும். ஒவ்வொரு பொருளை வாங்கும்போதும், அதற்குரிய அட்டையை எடுத்துச் செல்வது என்பதில், கிராமப்புறத்திலே இருக்கிற படிக்காத மக்களுக்கு மிகவும் கஷ்டம். அதனாலே பொருட்களை வாங்கிச் செல்வதிலேயும் சிரமம் ஏற்படும். எனவே தான் ஒரே அட்டையிலே எல்லாப் பொருட்களையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் விவசாயக் குடும்பங்களுக்கும் உணவு அட்டைகளை வழங்குகிறது. ஆனால், விவசாயிகளுடைய



1985 ஜூலை 2]

உற்பத்திப் பொருளை உருவாக்குவதற்குத் தண்ணீர் தேவைப் படுகிறது. அந்தத் தண்ணீரை இறைக்க வேண்டுமானால், ஆயில் என்ஜின் தேவைப்படுகிறது. அந்த என்ஜினுக்குத் தேவை யான டீசல் கிடைப்பது இல்லை. உணவுப் பொருள் வழங்கும் அட்டையில் விவசாயி என்று தனியாகப் பிரித்து அரசாங்கமே விவசாயிகளுக்குத் தண்ணீர் எடுப்பதற்கான டீசல் என்ஜினுக்கு டீசல் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இப்போது அது போன்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், அதைப் பற்றி ஆராய்ந்து, பின்னாலே பதில் சொல்லலாம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் குடும்பங்களுக்கு அதிகமாகவே கார்டுகள் வழங்கப்பட்டு இருப்ப தாகச் சொன்னார்கள். ஒரு ரேஷன் கடையிலே 200, 300 என்று போகஸாக கார்டுகள், அங்கே இருக்கின்ற அலுவலர்களாலேயும் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறியுமா? அப்படி யென்றால், இதுவரை அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு சந்தேகம் வந்த காரணத் தினாலேதான் சென்ற ஆண்டு கணக்கு எடுக்கப்பட்டு, சுமார் 25 ஆயிரம் குடும்ப அட்டைகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன என்று முதலிலே நான் சொன்னேன். எங்காவது இந்தப் பிரச்சினை வருமானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்கு சென்று பார்த்து, பினாமியாக, தவறுதலாகப் பெறப்பட்டு உள்ள அட்டைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளைத் தவறுதலாகப் பயன் படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, குடும்ப அட்டைகளில் குடும்பத் தலைவருடைய ஃபோட்டோ ஒட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அநாவசியமாகப் பொதுமக்களைத் தொல்லைக்கு ஆட்டுத்தவேண்டியதில்லை.

திருமதி. டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளை ஏழைகளிடத்திலேயிருந்து அடமானமாசப் பெற்றுக் கொண்டு, மொத்தமாக சர்க்கரை, பாமாலின் போன்ற பொருட்களை அவர்களே வாங்கி, பிறகு அதிகமான விலைக்கு விற்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அதற்கென்று தனியாக இருக்கின்ற காவல்துறை, ஃபுட்செல்-டிபார்ட்மெண்ட் மூலமாகவும், சிவில் சப்ளைஸ் தனியாக இருக்கிற அதற்கான விசேஷ படைகளின் மூலமாகவும், அவை கண்காணிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட எந்தப் பகுதியிலாவது அப்படி நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பென்னாகரம் வட்டத்தில் 'அமுதம்' விற்பனை நிலையங்கள்.

471—(*வினா எண். 2229)—திரு. எச்.ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் வட்டத்தில் உள்ள அமுதம் விற்பனை நிலையங்களில் அத்தியாவசிய பண்டங்கள் அனைத்தும் வழங்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே
(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டத்திலுள்ள பென்னாகரத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினராலும், கூட்டுறவுச் சங்கங்களினாலும் 53 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அக்கடைகள் மூலம் அரிசி, கோதுமை, ரவை, மைதா, சமையல் எண்ணெய், சர்க்கரை, மண்ணெண்ணெய் முதலான அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் எவ்வித இடர்ப்பாடுமின்றி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், பென்னாகரம் வட்டத்தில் 53 அமுதம் விற்பனை நிலையங்கள் கடைகள் இருக்கின்றன என்று இங்கே எடுத்துக் கூறினார்கள். ஆனால் நான் செல்கின்ற நேரத்திலே எல்லாம், அந்தப் பகுதிகள் மலைப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால், வாகனங்கள் அங்கே போகக் கூடிய நிலையிலே



அந்தக் கிராமங்கள் இல்லாத காரணத்தினால், பல கிராமங்கள் வாகனங்கள் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, ஏமனூர் கிராமம், கோட்டூர் மலை, மலையூர் மலை, இப்படிப் பல கிராமங்கள் அப்படி இருக்கின்றன. ஏமனூர் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமானால் மேட்டூரிலிருந்து பரிசிலில்தான் செல்ல வேண்டும். அந்தக் கிராமத்திற்கு அத்யாவசியமான பொருட்கள் செல்வது இல்லை. அங்கே செல்வது அரிசி, பருப்பு போன்றவைதான், மற்றபடி கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை இங்கேயே குடும்பக் கார்டுக்கு விநியோகஸ்தர்கள் விற்று விடுகிறார்கள். அந்தக் கிராமத்திற்குப் போவதில்லை. எனவே, அரசு தக்க நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு, புரட்சித் தலைவருடைய ஆட்சியில், நியாய விலைக் கடைகளின் மூலம் கிடைக்கின்ற அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கிடைக்க வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1984-லே மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை இருக்கும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் நியாய விலைக் கடைகள் பற்றி மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, 2,500 நியாய விலைக் கடைகள் மக்கள் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்களின் பகுதியிலேயும் 53 கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த நியாய விலைக் கடைகளின் மூலமாக எல்லாவிதமான அத்தியாவசியப் பொருட்களும் எல்லாப் பகுதிகளுக்கும் நிச்சயமாகக் கிடைக்கின்ற வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்லியதற்கு நன்றி. ஆனால் அதே நேரத்தில் 53 கடைகள் இருக்கின்றன என்றாலும், மலைவாழ் பகுதி மக்கள் இருக்கின்ற இடத்தில் இன்னும் 15 கடைகளை அதிகமாக ஏற்படுத்தினால் அங்கேயுள்ள ஏழை எளிய மக்களுக்கும், அந்தக் கிராமங்களுக்கும் நன்மை செய்ததாகக் கருதப்படும். எனவே, இதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் ஏதாவது ஒரு நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைகள் இருந்தால்,

அப்படியிருக்கின்ற கடைகள் பிரிக்கப்பட்டு, வேறு அருகில் உள்ள கிராமங்களில் நியாய விலைக் கடைகளை உண்டாக்கலாம். ஆனால், 1,000 குடும்ப அட்டைகளுக்கு உட்பட்டிருக்கின்ற பகுதிகளிலே, 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அதை விரிவுபடுத்துவதற்கு இயலாது.

'டினிப்' திட்டத்தின்கீழ் சுகாதார நிலையங்கள்.

472—(*வினா எண். 328)-திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "T.I.N.I.P." திட்டத்தின் கீழ் புதிதாக கிளை சுகாதார நிலையங்கள் (Sub-Health Centre) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே' (அ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ், புதிதாக சுகாதார துணைநிலையங்கள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட துணை நிலையங்கள் அல்லாமல் வேறு எந்த வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறார்கள் என்ற அந்த விவரத்தையும், இந்தத் திட்டத்திற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் ஏதாவது நிதியுதவி அளித்துள்ளதா என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட திட்ட வடிவமைப்பின்படி, 1,600 துணை சுகாதார நிலையக் கட்டிடங்கள் ஆறு மாவட்டங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் 374-ம், இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரிவினைக்கு முன் 227-ம், புதுக்கோட்டை மாவட்டத்தில் 125-ம், திருநெல்வேலி மாவட்டத்தில் 281-ம், வடாற்காடு மாவட்டத்தில் 367ம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 226ம், ஆக மொத்தம் 1,600 துணை சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் குறிப்பிட்டு,



உலக வங்கியின் நிதி உதவியுடன் இந்தத் துணை சுகாதார நிலையங்கள் நடத்தப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குக் குறிப்பிடக் கடமைப்பட்டிக்கிறேன்.

சிவகாசி, சாத்தூர் ஒன்றியங்களில் "யூனிசெப்" திட்டங்கள்.

473—(*வினா எண். 981)—திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "யூனிசெப்" நிறுவனம் மூலம் சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை ஆகிய ஒன்றியங்களில் அரசு செலவிட்ட பணம் எவ்வளவு ?

(ஆ) "யூனிசெப்" (U.N.I.C.E.F.) மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே (அ) 1984-85-ல் சிவகாசி பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ. 4,66,200 மதிப்புள்ள அரசுத் தலைப்பிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சிவகாசி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் திட்டங்கள் 'யூனிசெப்' உதவியுடன் நிறைவேற்றப் படுகின்றன.

1. 9 சிறு சுகாதார நிலையங்கள் ஆரம்பித்தல்.
2. குழந்தைகள் நலப்பிரிவு—மருத்துவமனைகளில் ஆரம்பித்தல்.
3. மருத்துவ அலுவலர்கள், தாய் மற்றும் பெண் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
4. மருத்துவ உதவி வசதிக்கான இரண்டு ஊர்திகளை வழங்குதல்.
5. சத்துணவு & சத்துணவுக் கல்வி மையங்கள்.
6. நோய்த் தடுப்பு ஊசி மற்றும் நடவடிக்கைகள்.
7. குழந்தைகள் வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சைகள்.
8. சாத்தூர் நகராட்சிப் பகுதியில் குடிநீர்த் திட்ட விஸ்தரிப்பு வேலை.

9. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அருகே கைப்பம்புகள் அமைத்தல்.

10. நிறுவனங்களில் குடிநீர் குழாய்கள் பதித்தல்.

11. பள்ளிகள் & தீப்பெட்டிகள் தொழிற்சாலைகளில் கழிவறைகள் கட்டுதல்.

12. சாக்கடை அமைத்தல், நடைபாதையில் சிமிண்டு பலகைகள் பதித்தல்.

13. கொசு ஒழிப்பு.

14. 100 பள்ளி சாராக் கல்வி மையங்கள் அமைத்தல்.

15. 40 தொழிலாளர் கல்வி மையங்கள் அமைத்தல்.

16. தொழிலாளர் உடல் நலமும் அமைப்பும் ஈடுபட்டுள்ள பணியால் பாதிக்சப்படாமல் பேணுதல்.

17. திட்ட சர்வே & மதிப்பீடு செய்தல்.

### ஹோமியோபதி டாக்டர்கள்.

6—(*கு. கா. வினா எண். 3895)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பதிவு பெற்றுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) ஹோமியோபதி மருத்துவர்கள் அலோபதி முறை ஊசி போட அரசு அனுமதி வழங்கி உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாட்டில் 24—6—85 வரை பதிவு பெற்றுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் எண்ணிக்கை 15,442 ஆகும்.

(ஆ) இல்லை.

ஹோமியோபதி மருத்துவ முறையில் ஊசிபோடும் முறை இல்லாத காரணத்தால் அனுமதி வழங்கும் சூழலானது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].



## 2. உரிமைப்பிரச்சினை

### ''தினகரன்'' ''முரசொலி'' நாளிதழ்கள் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. பேரவையில் 245-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இப் பிரச்னையில் அவையின் தலையீடு அவசியம்தானா என்பதை நிச்சயிக்குமுன் அவையின் தலையீடு ஏன் அவசியம் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 245 (1)-ன்கீழ் 28-6-1985 தேதியிட்ட தினகரன் நாளிதழில் வெளியிட்ட ஒரு செய்தியைக் குறித்தும், அதே செய்தியை 29—6—1985 தேதியிட்ட முரசொலி பத்திரிகை வெளியிட்டது குறித்தும் இச்செய்திகள் மாமன்றத்தினுடைய உறுப்பினர்களையும், மாமன்றத்தையும், அதனுடைய உரிமையையும் மட்டுமல்லாமல், கௌரவத்தையும் குறைப்பதாக இருக்கின்றன என்கிற முறையில் இம்மாமன்றத்தினுடைய தலையீடு இதுகுறித்து வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காக நான் இந்த உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறேன். பிரச்னை குறித்து சொல்வதற்கு முன், மாமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்தச் செய்தியைப் பார்த்திருக்கக் கூடும். 28—6—1985 தேதியிட்ட தினகரன் இதழில், ''எம். ஜி. ஆரிடம் சாராய ஏஜன்ஸீ கேட்டு சட்டசபையில் மனுவா ? '' என்ற கேள்வியைத் தலைப்பாகக் கொண்டு, இதற்குக் கருணாநிதி கண்டனம் என்று அடுத்து அவர்கள் பத்தியோடு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். செய்தியின் உட்பகுதியில் சட்டசபைக்கு வந்த முதல்வரிடம் மனுக்கள் கொடுத்தார்கள் என்று செய்தி போடுகிறார்கள். அவரிடம் கொடுத்த மனுக்கள் சாராயக் கடை ஏஜன்ஸி வேண்டுமென்று கொடுத்ததாகத் தெரிகிறது. இந்த மனுக்களும் சட்டசபையிலேயே கொடுக்க வேண்டியதாகிவிட்டது என்று நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முன்னாள் முதல்வரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் இந்நாள் மேலவை உறுப்பினரும் பேசியதாக அந்தச் செய்தியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் இதிலே ஏதோ மாண்புமிகு முன்னாள் முதல்வரிடம் குறை காண வேண்டுமென்பதற்காக இந்த உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வரவில்லை. சட்டமன்றத்திற்கு நாம் தேர்ந்தெடுக்கப்படுகிறோம். மக்கள் மத்தியிலே நாம் நம்முடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நமது சொந்த சுகங்களைக் கூட பல நேரங்களில் விட்டு விட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதை இந்த மாமன்றம் கவனிக்கத் தவறி விட்ட காரணத்தால் தான் இதுபோன்ற செய்திகள் சாதாரணமாக பத்திரிகைகளில் வருகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய ஆழமான வருத்தமாகும்.

பொதுவாக முதலமைச்சர் அவர்கள் எங்கு வந்தாலும், எந்த இடத்திற்கு வந்தாலும் தொகுதி மக்கள் நலன் கருதி, சட்டமன்ற உறுப்பினர்கள் மனு கொடுக்கிறார்கள். நேரிடையாக பொது மக்களும் மனு கொடுக்கிறார்கள். இது சாதாரணமாக நடை பெற்று வருகிற ஒன்றாகும். அன்று சட்டமன்றத்தில் நாங்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த பெரியவர்கள்—உறுப்பினர்கள் பலரும் மனுக்களைக் கொடுத்தார்கள். ஆகவே, சட்டமன்றத்தில் நாம் அவரிடம் கொடுக்கிற மனுக்களை, அவை என்ன என்று தெரியாமலே ஏதோ சாராய ஏஜன்ஸி வாங்கு வதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் மனு கொடுத்தார்கள் என்று சொல்கிறபொழுது அது எவ்வளவு தூரம் நம்மைக் கேவலப்படுத்து வதாக இருக்கிறது என்ற அந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையைப் பார்க்க வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—20.)

அதேநேரத்தில் இது ஏதோ சில ஆளும்கட்சி உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிப்பது என்று இல்லை. இது சபையில் அங்கம் வகிக்கிற எல்லோருடைய கண்ணியத்தையும் குறைப்பதாக இருக்கிறது. அது மட்டுமல்ல, இதை சாதாரணமான ஒருவர் சொன்னார், ஏதோ வழியிலே போகிற ஒருவர் சொன்னார் என்றால் அவ்வளவுதூரம் நாம் பெரிதாக எடுத்துக்கொள்கிற பிரச்சனையாக இருக்காது. மாண்புமிகு முன்னால் முதலமைச்சர் ஒருவர் சொல்கிற கருத்து மக்கள் மத்தியிலே தவறான ஓர் எண்ணத்தை பரவலாக ஏற்படுத்தக்கூடும் என்பதில் ஐயப்பாடு இல்லை. முன்னாள் முதலமைச்சர் அன்றாடம் என்ன சொல்கிறார் என்பதை தமிழகத்தில் இருக்கிற மக்கள் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கிற காரணத்தால், அவர் வாயால் பேசப்பட்டு, அது செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதால், நான் உட்பட இங்கே இருக்கிற பல உறுப்பினர்களும் வேதனைப்படுகிறோம். தேர்ந் தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திற்கு வந்துவிட்ட காரணத்தால் இத்தகைய அவதூறுகளைத் தாங்க வேண்டுமா என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆக, சட்டமன்றப் பொறுப்புகளை ஏற்று, கடமை யாற்றுகின்றவர்களை கொச்சை படுத்துவது மட்டுமல்ல; தனிப் பட்ட முறையில் ஒவ்வொருவருடைய மனதையும் புண்படுத்துவதாக அமைந்து இருக்கிறது என்ற வகையில் எந்த ஒரு பத்திரிகையும் செய்தி வெளியிடுவது அவை உரிமையை மீறிய செயலாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதோடு, மேலவையில் உறுப்பினராக இருக்கிற ஒருவர் பேசிய காரணத்தால் மேலவை அனுமதியுடன்தான் இங்கே எழுப்ப வேண்டுமென்று எண்ண முடியாது. ஏனென்றால் இது அவையில் பேசிய கருத்து அல்ல. இந்த மன்றத்தின் உறுப்பினர்களைப் பற்றி,





உரிமையைப்பற்றி வெளியே பேசிய கருத்து ஆகவே, இது இந்த அவை உரிமையை மீறிய செயல் என்பதில் சந்தேகமில்லை. தொடர்ந்து இந்தப் பத்திரிகைகள் அவை உறுப்பினர்களைப் பற்றி யும், அவைத் தலைவரைப் பற்றியும் எழுதி விமரிசனம் செய்து கொண்டு வருவது இந்தச் சபையில் கண்ணியத்தைக் குறைப்பதாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் மக்கள் மத்தியிலே கூட இந்த மன்றத்தின் கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையில் இது அமைந் திருக்கிறது. அந்த வகையிலே இந்தப் பிரச்சனையை நாம் அணுக வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்சனையில் அவையின் தலையீடு மட்டுமல்லாமல் இந்தப் பத்திரிகைகளின் நடவடிக்கை அவை உரிமைக்குழுவின் நடவடிக்கைக்கு உட்பட்டிருக்கிற ஒரு பொருள் என்ற வகையில் அவை உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பவேண்டு மென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி சம்பந்தப்பட்டவர் களிடம் விளக்கம் கேட்டு, அதன் பிறகு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்புகள்.

### அ. உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் தமிழக மருத்துவக் கல்லூரிகளில் தமிழக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் குறிப்பிட்ட சதவீத இடங்களுக்கு, அகில இந்திய அடிப்படையில், அகில இந்திய மருத் துவக்குழு நடத்தும் நுழைவுத் தேர்வுமூலம் மாணவர்களைத் தேர்ந் தெடுக்க வேண்டும் என்னும் உச்சநீதிமன்ற தீர்ப்பினால் தமிழகத்து மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான சூழ்நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

டாக்டர் பிரதீப் ஜெயின் என்பவருக்கும் மைய அரசுக்கு மிடையே உச்ச நீதிமன்றத்தில் நடந்த வழக்கொன்றில் சென்ற ஆண்டு ஜுன் மாதத்தில் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கி யுள்ளது. இந்தத் தீர்ப்புப்படி மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் களைச் சேர்ப்பதற்கு முறையாக செய்யப்படும் இடஒதுக்கீடுகள் போக மீதமுள்ள பொதுப்போட்டி இடங்களில் அகில இந்திய

(டாக்டர் எச். வி. ஹண்டே) [1985 ஜூலை 2

ரீதியில் தகுதி அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது:

(அ) எம். பி. பி. எஸ். மற்றும் பி. டி. எஸ். பட்டப்படிப்புகளில் 30% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

(ஆ) பட்ட மேற்படிப்புகளில் 50% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(இ) பட்டமேற் சிறப்புப் படிப்புகள் அனைத்திலும் உள்ள எல்லா இடங்களுக்கும் அகில இந்திய ரீதியில் தகுதி அடிப்படையில் மட்டுமே வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை ஒட்டி 1985 மே மாதம் வழங்கிய மற்றொரு தீர்ப்பில் எம். பி. பி. எஸ்., பி. டி. எஸ். மற்றும் பட்ட மேற்படிப்புகளுக்குப் பொதுப் போட்டியிடங்களில் அகில இந்திய ரீதியில் தகுதி அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இந்திய மருத்துவக் கழகம் மேற்கொள்ளவேண்டும் என்றும் அது சம்பந்தமாக இந்திய மருத்துவக் கழகம் நடைமுறைத் திட்டத்தைத் தயார் செய்து உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பித்து அதன் ஒப்புதலைப் பெற்று பின்னர் செயல்படுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளது. இக்கட்டளைக்கிணங்க இந்திய மருத்துவக் கழகம் நடைமுறைத் திட்டங்களைத் தயாரித்து அதன் மீது மாநில அரசுகளின் கருத்துக்களை அறியும் பொருட்டு அனுப்பியுள்ளது. இதன் மீது இவ்வரசின் கருத்துக்கள் இந்திய மருத்துவக் கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டன. இந்திய மருத்துவக்கழகம் தயாரித்துள்ள நடைமுறைத் திட்டம் வரும் ஜூலை மாதத்தில் உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

அகில இந்திய ரீதியில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளை கால அவகாசமில்லாததால் இந்திய மருத்துவக் கழகம் 1986—87-ல் இருந்து நடைமுறைப்படுத்தும். ஆயினும் இந்த ஆண்டு அதாவது 1985—86-ல் நுழைவுத் தேர்வை மருத்துவக் கல்வி இயக்ககத்திலுள்ள தேர்வு கட்டுப்பாடு அதிகாரி நடத்துவார்.

இவ்வழக்கில் உச்ச நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

*மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவரவர்களே. இந்த விவர அறிக்கையில் உச்சநீதிமன்றம் அகில இந்திய ரீதியில் தகுதி அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இந்திய



1985 ஜூலை 2] (திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

மருத்துவக் கழகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அது சம்பந்தமாக இந்திய மருத்துவக் கழகம் நடைமுறைத் திட்டத்தைத் தயார் செய்து உச்ச நீதி மன்றத்திடம் சமர்ப்பித்து அதன் ஒப்புதலைப் பெற்று பின்னர் செயல்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நமது மாநில அரசு மருத்துவக் குழுவிடம் கருத்து தெரிவிக்கின்றபோது அகில இந்திய மருத்துவக்குழு நுழைவுத் தேர்வு நடத்துகிறபோது தமிழக மாணவர்கள் தமிழ் மொழியிலே நுழைவுத் தேர்வு எழுத வசதி செய்யவேண்டுமென வற்புறுத்தப்பட்டிருக்கிறதா? அதைப்போன்று இந்தத் தீர்ப்பு இந்த மாநில மாணவர்களுக்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறதா?

அதைப்போன்று உச்ச நீதிமன்றத்தில் டாக்டர் பிரதீப் ஜெயின் வழக்கு தொடர்ந்தபோது தமிழ்நாடு அதிலே பிரதிவாதியாகச் சேர்க்கப்படவில்லை என்பது ஒன்று. இந்த மாநில மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அரசியல் சட்டத்திற்கு முரணாகாது என பல்வேறு காலகட்டங்களில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆகவே, 1955 ஆம் ஆண்டு மத்திய பாரத வழக்கிலே இதைவிட கூடுதல் நீதிபதிகள் இருந்து சுப்ரீம்கோர்ட்டில் வழங்கிய தீர்ப்புக்கு முரணாக தற்போதைய உச்ச நீதிமன்ற தீர்ப்பு இருக்கிறதா என்று மாநில அரசு சட்ட நிபுணர்களை நமது துறை கலந்து ஆலோசனை செய்ததா? ஆம் என்றால் டாக்டர் பிரதீப் ஜெயின் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மாநில அரசு உச்ச நீதிமன்றத்தின் கூடுதல் பெஞ்சில் மேல்முறையீடு செய்ய முயற்சிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, எம். சி. ஐ. ஆக்ட், 1956 என்ற அந்தச் சட்டதின் கீழ் இந்த என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷனை மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இன்டியா நடத்துவதற்கான உரிமை வழங்கப்படவில்லை. ஆனால் அதற்குப் பிறகு அந்த கன்கரன்ட் லிஸ்டிலே சொல்லக்கூடிய அந்தப் பகுதியிலே இந்த எஜுகேஷன் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்ற வாதத்தை எழுப்பியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தச் சட்டத்திலே எந்தவிதமான திருத்தமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இன்டியா பரிட்சை நடத்துவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்ற தமிழக அரசின் கருத்தை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம். சட்டமன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் கூட அப்படிப்பட்ட அந்தக் கருத்தை நாம் சொல்லியிருக்கிறோம். அடுத்தபடியாக 5 ஜட்ஜ்கள் போட்டிருக்கக் கூடிய அந்த பெஞ்ச் என்ன தீர்ப்பு கொடுத்திருக்கின்றது என்று சொன்னால் டெரிட்டோரியல் ஜுரிஸ்டிக்ஷனுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற அளவில் அவர்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு 5 பேர் கொண்ட பெஞ்ச் கொடுத்த தீர்ப்பு செல்லாது என்ற வகையிலே வேறு தீர்ப்பு கொடுக்கவேண்டும்

என்றால் 3 பேர் கொண்ட பென்ச் கொடுக்க முடியாது என்ற வகையில் தமிழக அரசு வாதத்தை எடுத்து வைத்திருக்கின்றது. இப்போது பேரவைத் துணைத்தலைவர் அவர்களும் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தமிழக அரசு இம்ப்ளீட் செய்வதற்கு கேட்டுக்கொண்டிருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். இம்ப்ளீட் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வை, வருகின்ற ஆண்டிலே நடத்தவேண்டும் என்று இருக்கின்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் அகில இந்திய மருத்துவக் கழகம் முடிவு செய்து, அதற்கான நெறிமுறைகளைத் தயார் செய்துகொண்டிருக்கின்றது. அதை அமல் படுத்துகின்றபோது மிகப்பெரிய ஒரு பாதகமான சூழ்நிலை ஏற்படும். பல்வேறு வகையிலே, இந்த அரசினுடைய இருமொழிக் கொள்கைக்கு எதிரான வகையிலே நடவடிக்கைகளை அந்த அகில இந்திய மருத்துவக் கழகம் எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். உதாரணமாக மொழிக் கொள்கையில் பெரிய பிரச்சினை ஏற்படும். உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் இங்கே வருகின்றபோது மருத்துவக் கல்லூரியில் நாம் அவர்களுக்கு தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுவர முடியாது.

அதேபோல் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் உத்தரப் பிரதேசக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது இந்தியிலே தான் அவர்கள் அங்கே படிக்கவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும். இதையெல்லாம் விட வழங்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பிலே ஒரு இடத்திலே உச்ச நீதிமன்றம் மாநிலங்களில் இருக்கின்ற அரசுப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது கூட இந்த நடைமுறையை அமல்படுத்தவேண்டும் என்ற கருத்தைச் சொல்லி ஆனால் இது சம்பந்தமாக இப்போது நாங்கள் முடிவு எதுவும் அறிவிக்கவில்லை என்றும் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் கூறுகின்றனர். அரசியல் சட்டத்தின்படி ஒரு மாநிலத்தில் அரசுப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது மற்றைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு எடுக்கப்படவேண்டும். அது தான் அரசியல் சட்டத்திற்குச் சரியானது என்ற வகையில் ஒரு கருத்தை நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய பாதகமான சூழ்நிலை இருப்பதால் மாநில உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில் அந்தந்த மாநிலங்களில் இருப்பவர்களைத்தான் அரசுப் பணியாளர்களாகத் தேர்வு செய்யவேண்டும் என்ற சட்டத்தைப் பாராளுமன்றம், ஆந்திர மாநிலம், திரிபுரா மாநிலம் போன்றவைகளுக்கு மட்டும் அந்த அரசுப் பணியாளர்களை அந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்க விதிவிலக்கு அளித்திருக்கின்றது. அந்த வகையிலே மாநிலத்தில் இருக்கின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மருத்துவக் கல்லூரியில் சேர்கின்ற வகையிலே





To get over consequences of the Supreme Court's latest Judgement in Medical College admission—பாராளுமன்றத்திலே ஒரு சட்டம் இயற்றவேண்டும் என்று நம்முடைய மாநில அரசு மத்திய அரசைக் கோரும் வகையில் இந்த மன்றத்தின் தீர்மானம் வடிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகத்தான் நான் கருதுகிறேன். ஆனால் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் என்று வருகிற நேரத்தில் அந்த ஜட்ஜ்மென்டைப் பற்றி எந்தவிதமான விமர்சனமும் செய்வது, அதுவும் அரசாங்கப் பொறுப்பிலே இருந்துகொண்டு விமர்சனம் செய்தால் பின்னர் அரசியல் காரணமாக விமர்சனம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும் என்று இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பொதுவாகச் சொல்லவேண்டும் என்றால் டாக்டர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றபோது கிராமங்களுக்குப் பெருத்த பாதிப்பு ஏற்படும். கிராமங்களில் நிறைய மருத்துவர்கள் போய் பணியாற்றவேண்டும் என்றெல்லாம் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது மத்திய அரசின் மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இந்தியா சொல்கின்ற கருத்திற்கேற்ப அதாவது சுப்ரீம் கோர்ட் கொடுத்திருக்கின்ற ஆணையை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற வகையில் அந்தக் கருத்துகளின் அடிப்படையில் நாம் தேர்வு செய்வோமேயானால் என்ன நடைபெறும் என்றால் Urban oriented—Metrcpolitan oriented class of Doctors தான் வருவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் அகில இந்தியாவில் 20 பாயிண்ட் ப்ரோகிராம் மற்றும் கி. பி. 2000-வது ஆண்டிற்குள்ளாக அனைவருக்கும் நல்வாழ்வு கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய அந்தக் கருத்துக்களுக்கு "Metropolitan—Urban orientcd students being takcn"—என்பது—it is not a very healthy practice as far as we are concerned. எனவே மத்திய அரசுக்கு நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசில் இருக்கக்கூடிய மத்திய அமைச்சர் கூட கிராமப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றால் மாநிலங்களில் அகில இந்திய ரீதியாகவே பாதிப்பு ஏற்படுகின்றது என்று அச்சம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இதை எல்லாம் நாம் மிக எச்சரிக்கையாக, அந்த சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கு மறுப்பு தெரிவிக்கிறோம் என்று இல்லாமல் மத்திய அரசிடமும் அதே நேரத்தில் மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இந்தியாவிடமும் தொடர்பு கொண்டு இதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்த்து அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றது அரசு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்

(முற்பகல் 10–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட்டை கிரிட்டிஸைஸ் செய்ய முடியாது என்று சொன்னீர்கள். You can criticise; you can debate over a judgment; you cannot impute motives; you can have deliberation over a judgment.

HON. DR. H. V. HANDE : Mr. Speaker Sir, I know that fully well. I know that once a Judgment is given finally it becomes an open document. There have been even editorials in the Hindu, Indian Express, Statesman and The Times of India, criticising the Judgment. But my problem is that again some one has gone to court and it will become subjudice if we say something about it. It has again gone up before the Supreme Court and that is why I have exercised some amount of caution.

(ஆ) தேவகோட்டை பகுதியில் மஞ்சள் காமாலை நோய் பரவிவருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ந. மாசிலாமணி, திருவாளர்கள் கே. கல்லன், ஆ. சந்திரசேகரன், க. பாரமலை, என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு தினமும் புற நோயாளிகளாக வருபவர்களில், பெரும்பாலோர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிக்கும் நிலை" குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரை மாவட்ட மண்டல பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து உதவி இயக்குநர், மாவட்ட மருத்துவ அலுவலர், மாவட்ட சுக தார அலுவலர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகியோர் மேற்கொண்ட விரிவான புலனாய்வில், தேவகோட்டையிலோ, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலோ மஞ்சள் காமாலை நோய் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படவில்லை. இரண்டு பேர்கள் மஞ்சள்காமாலை நோய் கண்டுள்ளதாக சந்தேகித்து





அவர்களுக்கு சிகிச்சை அளித்து கவனிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். 1–1–1985 முதல் 19–6–1985 வரை தேவகோட்டை அரசினர் மருத்துவமனையில் நான்கு பேர்கள் மஞ்சள்காமாலை நோய்க்காக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். தனியாக மருத்துவ சிகிச்சை அளிப்பவர்களையும், நகராட்சி அதிகாரிகளையும் விசாரித்ததில் மஞ்சள்காமாலை நோய் கொள்ளை நோயாக பரவியுள்ளதாக சான்று கிடைக்கவில்லை.

2. காரைக்குடியில் திரு எம். பெரியசாமி என்ற நாட்டு வைத் தியர் மஞ்சள்காமாலை நோய் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிப்ப தாகத் தெரியவந்தது. இவரால் சிகிச்சை அளிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு மஞ்சள்காமாலை நோய் கண்டுள்ளதற்கான அறி குறிகள் எதுவும் காணப்படவில்லை என்று மதுரை மண்டல பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து உதவி இயக்குநருக்கு தெரியவந்துள்ளது. அரசு மருத்துவமனை, தனியார் பேணி வளர்ப் பகங்களில் (Nursing Homes) மேற்கொண்ட விசாரணைகளில், புற நோயாளிகள் உள் நோயாளிகளின் எண்ணிக்கை இந்நோய் காரண மாக அதிகமாகியுள்ளதாகத் தெரியவில்லை. இந்நோய் காரண மாக அதற்கான மருந்துகளின் (LIV-52, B-Complex tablets, Glucose Packets, etc.) விற்பனை அதிகரிக்கவில்லை. இருந்த போதிலும், பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவப்பணியாளர்கள் இது குறித்து கண்காணிப்புத் தடுப்பு நடவடிக்கை எடுக்குமாறும், விழிப்பாக இருக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளனர். பொதுச் சுகா தாரத்துறையிலிருக்கும் நீர் பகுப்பாய்வுக்குழு ஒன்று பாதிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் இப்பகுதிக்குச் சென்று அங்குள்ள குடிநீர் மூலங்களிலிருந்து சோதனைக்காக நீர் மாதிரியை எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பகுதிகளில் பாசிகை யூட்டுதல் (Chlorination) பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துதல், உணவு நலவியல் ஆகியவை பற்றி தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 5 உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆளுக்கு ஒரு கேள்விதான் அனுமதிக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிக்கையைப் பார்த்தேன், படித் தேன், ரசித்தேன். அரசரும் அமைச்சரும் எடுத்த..(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேள்வியாக மட்டும் கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன். விமர்சனங்கள், காமெண்ட்டு கள் வேண்டாம், அறிக்கையைப் பற்றி. பிறகு நானும் ஏதாவது பதிலுக்கு கொடுக்க வேண்டி வரும். அது நம்முடைய அவைக்குப் பொருத்தமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த வார்த்தை ஜாலங்களை

வெளியிலே வைத்துக் கொள்ளலாம். என்ன கேள்வி கேட்க விரும்புகிறார்களோ அதைச் சொன்னால் போதும்.. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இதிலே என்ன இருக்கிறது ?. அவர் தவறாக எதுவும் சொல்லவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் இதிலே என்ன இருக்கிறது....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது ஒன்றும் பிரச்னை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். மாசிலாமணி கேள்வியைத் தொடரட்டும்.

**டாக்டர். ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே வார்த்தை இந்த அவையிலே இதற்கு முன்னாலே பயன்படுத்தப்பட்டிருப்பதை நானே கேட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் அதைச் சொன்னேன். தவறான உள்நோக்கத்தோடு எதையும் நான் சொல்லவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மஞ்சள்காமாலை நோய் சம்பந்தமாக இந்த அரசும் அமைச்சரும் எடுத்த தீவிர நடவடிக்கைகளைப் பார்த்து எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக ஜாண்டீஸ் என்கிற இந்த மஞ்சள் காமாலை நோய் மிகவும் கொடுமையான ஒன்று. உயிர்க்கொல்லி நோயும் கூட. அதைப்பற்றி நாமெல்லோரும் நன்றாக அறிவோம். ஆனால் அதற்கு என்று தனியாக இதுவரையில் ஸ்பெசிபிக்காக மெடிசின் இருந்ததாக, அதுவும் ஆங்கில மருத்துவத்தில், தெரியவில்லை. இதைப் பொறுத்தவரையில் ஆங்கில மருத்துவத்தைவிட நாட்டு மருத்துவம்தான் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. டாக்டர்களுக்கே இந்த நோய் வந்தாலும் கூட, நாட்டு வைத்தியத்தைத் தான் கையளுகிறார்கள். எங்கள் பகுதியிலே புதுக்கோட்டைக்கு அருகிலே உள்ள கழனிவாசல் என்ற இடத்தில் இருக்கிற ஒரு நாட்டு வைத்தியர்தான் இதிலே ஸ்பெஷலிஸ்ட். அவர் கடந்த 20 நாட்களாக, ஒரு நாளைக்கு 40 பேர்கள் விதம் கூட சிகிச்சை அளிக்கிறார். அந்த புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணிபுரிகிற மருந்தாளருக்கும் கூட இந்த நோய் வந்திருக்கிறது.

இந்த நோய் பொதுவாக பொது சுகாதாரக் கேட்டினால். குடிதண்ணீரில் நோய்க்கிருமிகள் இருப்பது, உணவுப் பொருளில் கலப்படம், குடிக்கும் ஆல்கஹாலில் கலப்படம் போன்ற நிலைமைகளினால் வருகிறது. Prevention is better than cure. என்பது போல நோய் வருவதற்கு முன்னாலே அந்த நோயை; தடுப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்தால் சரியாக இருக்கும்.



அந்த வகையில் குடிதண்ணீருக்காக ஆய்வுக்கு ஏற்பாடு செய்திருப்பது சிறந்த நடவடிக்கை ஆகும். அதேபோல உணவுப் பொருள் கலப்படத்தினாலும், சாராயம் மற்றும் குடிக்கும் பொருள்களில் உள்ள கலப்படத்தினாலும்..(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொஞ்சம் சுருக்கமான கேள்வியாகக் கேளுங்கள்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** அந்தப் பகுதியிலே உள்ள பொதுச் சுகாதாரக் கேட்டை மேலும் ஆய்வு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலையைப் பொறுத்தவரையில் இண்டிஜினஸ் மெடிசினைப் பயன்படுத்தக்கூடிய டாக்டர் பெரியசாமி என்ற ஒருவர் காரைக்குடியில இருக்கிறார். நாம் நம்முடைய அதிகாரிகளை அனுப்பி அவர்களிடத்தில் வருகிற நோயாளிகளைப் பார்க்கச் சொன்னோம். The Regional Assistant Director of Public Health and Preventive Medicine found that the individuals did not have any symptoms of jaundice. என்ன நடைபெறுகிறது என்றால் இந்த பிரபலமான மன்றங்கள் மூலம், பத்திரிகை மூலம் விளம்பரம் கொடுப்பதன் மூலமாக எல்லோரும் அங்கே போய் மஞ்சள் காமாலை இருக்கிறதென்று மருந்து சாப்பிடுகிறார்கள். அதை நாம் ஆராய்ந்து பார்த்தபோது சிலருக்கு மஞ்சள் காமாலை இல்லையென்பதைத் தெரிந்து கொண்டோம். ஆகவே மூடநம்பிக்கையிலே மருந்து சாப்பிடுவது என்பது அவ்வளவு சரியல்ல. ஜாண்டிஸ் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு மருந்து சாப்பிடுவதுதான் சரியாக இருக்கும்.

இண்டிஜினஸ் மருந்துகளைப் பொறுத்தவரையில், லிவ்-52 என்றெல்லாம் பல மருந்துகளைப் பவுடராக்கி, மாத்திரைகளாக்கி கொடுக்கக்கூடிய மருந்துகள் இருக்கின்றன. ஆகவே நிறைய மருத்துவமனைகளில் இண்டியன் மெடிசின் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சித்த மருந்துகள் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. விளம்பரம் கொடுக்கிறபோது எல்லோரும் போய் சாப்பிடுகிறார்கள். சில நேரங்களில் கையில் இலையைக் கட்டிக் கொண்டு புண்ணாகி விடுகிறது. அந்தப் புண்காயத்தை ஆற்றுவது பெரிய பிரச்னையாகி, பர்ன்ஸ்களுக்கு நாம் ட்ரீட் பண்ணுகிற நிலைமை இருக்கிறது. சித்த வைத்தியத்தில் விஞ்ஞான ரீதியாக வளர்க்கப்பட்ட மருந்துகள் இருக்கின்றன. ஆகவே அங்கே சித்த வைத்தியப் பிரிவு இருக்கிறது. அங்கே போய் வைத்தியம் செய்து கொள்ளலாம். அதற்கு எந்தவிதமான பிரச்னையும் இப்போது இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு பருவ மழை பொய்த்திருக்கிற காரணத்தால் குடி தண்ணீருக்குக் கடுமையாகத் தட்டுப்பாடு வந்து, மக்கள் கிடைக்கிற தண்ணீரை அருந்துகிற காரணத்தால் இந்த மஞ்சள் காமாலை நோய் அதிகமாகி இருக்கிறது. ஆகவே இந்த நோய் தமிழகம் முழுவதும் பரவலாக இருப்பதால் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் மருத்துவமனைகளில் முன்னெச்சரிக்கையாக என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் சொன்ன ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ள முடியாது. பரவலாக இருப்பது என்று முதலில் பீடிகை ஏற்படுத்தி கேள்வி கேட்டிருக்கிறார்கள். அது இல்லவே இல்லை என்று நான் சொல்கிறேன். இந்தத் தண்ணீரைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் நாம் சொல்வது. தண்ணீரைக்கொதித்த பிறகு பாயில்ட் வாட்டராகச் சாப்பிடுவது நல்லது. உலக சுகாதார நிறுவனமும் அதையே சொல்கிறது. 'தேர்ட் வோர்ல்ட்டில்' இருக்கிற எந்தப் பகுதியாக இருந்தாலும் தண்ணீரைக்கொதிக்க வைத்து குடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே ஹெல்த் எஜுகேஷன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நாம் மக்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறோம். பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் இதனைச் செய்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், எங்கே ஜாண்டிஸ் வந்தாலும், உடனடியாக அங்கே சென்று பார்த்து எந்த சோர்சிலிருந்து நோய் வந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து, உடனடியாக அங்கே இன்ஃபெக்ஷனுக்கு என்ன காரணமென்பதைப் பார்த்து, பிரிவென்டிவ் மெடிசின் தர பப்ளிக் ஹெல்த் அதிகாரிகளை அனுப்பி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். வேறு எந்தப் பகுதியிலாவது நோய் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லையென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் வந்தால் அவர்கள் அதனைத் தாராளமாக இந்த மன்றத்தில் சொல்லலாம். அப்படி அவர்கள் சொல்வார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலவர்—தலைமை.

## 4. வரவு–செலவுத் திட்டம், 1985–86, வாக்கெடுப்பு

### (அ) கோரிக்கை எண்.2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 2 மாநில ஆயத்தீர்வைத் துறை" என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."



Thiru N. S. V. Chittan : To discuss about the need to prohibit the sale of arrack near plaoes of worship, I move—

"That the allotment of Rs. 4,35,27,000 under Demand No. 2—State Excise Department, be reduced by Rs. 100."

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் திருவாரூர் நெடுஞ்சாலையில் புத்தூர் என்ற ஊரில் பேருந்து நிற்கும் இடத்திலும் மற்றும் இதுபோன்று பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள், தண்ணீர்த் தொட்டிகள் முதலியவற்றிற்கு அருகில் சாராயம் மற்றும் கள்ளுக் கடைகள் இருப்பதனால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,35,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,10,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

Thiru N. S. V. Chittan : To disouss about the need to avoid to undertake tours by all the Ministers at one and the same time from Headquarters, I moye—

"That the allotment of Rs. 28,10,41,000 under Demand No. 9—Head of State, Ministers and Headquarters staff, be reduced by Rs. 100."

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை/முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் உள்ள உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை * என்னுடைய முன்னுரையாக எடுத்துக் கொண்டு, அவைகளை நடவடிக்கைக் குறிப்பிலே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு என்னுடைய விடையை அளிக்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டினுடைய மதுவிலக்கு, மாநில நிர்வாகம் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டிலே மதுவிலக்கு வரக்கூடாது என்பதற்கு பல தியாகங்களைச் செய்த காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தாலே சொல்கிறேன், மரியாதைக்குரிய இந்த நாட்டினுடைய முதல் அமைச்சர் அவர்கள் நல்ல உள்ளம் உடையவர், நல்ல பண்புகள் உடையவர், காந்தீயத்திலே அதிக நம்பிக்கை உடையவர், பலராலும் போற்றப்படக்கூடியவர். இன்று பல தடவை அவர்களுக்கு மரணங்கள் வந்தாலும் கூட தன்னுடைய நல்ல எண்ணங்களாலும் நல்ல செயலாலும், மக்களுக்கு நல்ல தொரு தொண்டு செய்த காரணத்தாலும், அவர்களுக்கு வந்த தீமைகளைக் கூட அகற்றிவிட்டு, இன்று அவர்கள் நல்ல நிலைமையிலே வளமோடும், நல்ல நிலைமையோடும், இந்த மன்றத்திலே வந்து உறுப்பினர்களைச் சந்திக்கிற வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது என்று சொன்னால், ''தவத்தளவு ஆகும் தான் பெற்ற செல்வம்'' என்று சொல்லுவதைப் போல தமிழகத்தினுடைய மக்கள் உள்ளத்திலே உள்ள அந்த ஆசையாலே, ஆர்வத்தாலே அவர்கள் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றம் மறந்துவிட முடியாது. ஆகவே மதுவிலக்கு என்பதைப் பற்றி, மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது கூட, மதுவிலக்கை அண்ணா பிறந்த நாள் அன்று நாங்கள் கொண்டு வருவோம் என்று முதல்வர் அவர்கள் முன்னாலே கூறியதை நான் பத்திரிகை வாயிலாகப் பார்த்து இருக்கிறேன். மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் இப்போது காங்கிரஸ் ஆரம்பித்த நூற்றாண்டு விழாவிலே, சுதந்திரம்பெற்று, இந்த நாட்டிலே இன்று நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த நேரத்திலே இந்த மதுவிலக்கைக் கொண்டு வந்தால், என்னைப் போல் உள்ள காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் நண்பர்களும் பெரு மகிழ்ச்சி அடைவோம் என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

*124-159-ம் பக்கங்களிலே இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



ஆனால் இன்று மதுவிலக்கு நாட்டிலே பரவலாக இல்லை என்றாலும் கூட, நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மதுவிலக்கு- இன்றைக்கு ஓர் அளவிற்கு நாம் அதை ஒழித்துவிட்டோம் என்று சொன்னால், கட்டாயம் அது முடியாது. மதுவிலக்கு இருந்த போதும் சரி, மதுவிலக்கு இல்லாதபோதும் சரி, அரசு ஆணையை மீறி, மதுக்களை உண்டாக்குகிறவர்களை, மது உற்பத்தி செய்பவர்களை நாம் குறைக்க முடியவில்லை. அவர்களும் குறையவில்லை. அதனால் இந்த மது வந்தாலே, மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டிலே ஒரு தலைமுறையை, அவர்கள் இந்த மதுவைக் கொண்டுவந்து, கெடுத்தார்கள். அந்த மாணவர்கள் எல்லாம் குடிப்பழக்கத்திலே அதிகமாக ஈடுபட்டு, அதிலே கெட்டுப்போன மாணவர்கள் அதிகமான அளவில் உள்ளனர். இரண்டாவது தலைமுறையாக உள்ள இந்தக் காலத்து மாணவர்களையும், இந்த மதுவைக் கொண்டு இளம் தலைமுறையினரை நீங்கள் பாதிக்க வைத்திருப்பதை இந்த நாடு நன்றாக அறியும். இந்த மதுவினாலே கெட்டுப் போகக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கையைப் பற்றிய விவரம் உங்களுக்குத் தெரியும். மதுவைக் குடித்துவிட்டு இறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். இந்த மதுவினாலே நமக்கு வரக்கூடிய வரவு 198 கோடியே 71 ரூபாய். ஆனால் இந்தப் பணத்தை மற்ற வழியிலே இந்த மாநிலத்திலே வரவு வைக்க முடியாதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சினிமா இருக்கிறது, டிராமா இருக்கிறது, மற்ற சுக போக வாழ்க்கை எல்லாம் பல இடங்களில் நடக்கிறது. இதுபோன்ற காரியங்களுக்கு நீங்கள் வரியை விதித்துவிட்டு, கிட்டத்தட்ட 200 கோடி ரூபாயை நீங்கள் வேறு வழியிலே வருமானத்தைப் பெருக்கி அதை ஈடு செய்து, இந்த மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் மதுவைக் கொண்டு வந்து இருக்கிறோம். அதே நேரத்தில் மாணவர்களுக்கு சத்துணவு போடுகிறோம், உடை வாங்கிக் கொடுக்கிறோம், புத்தகம் வாங்கிக் கொடுக்கிறோம், அவர்கள் படிப்பில் அதிகமாக கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. மாணவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று அரசு எண்ணுகிறது. ஆளும் வளர வேண்டும், மூளையும் வளர வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. ஆனால் அதே நேரத்தில் சாராயக்கடைகளையும் கள்ளுக் கடைகளையும் திறந்து வைத்து இருப்பதால் தந்தை சம்பாதிக்கும் 6 ரூபாய், 7 ரூபாய், 8 ரூபாயை அவன் சாராயக்கடையிலும் கள்ளுக்கடையிலும் கொடுத்து அழித்து விடுவதால்—நாம் ஒரு வேளை சோறு அந்த குழந்தைகளுக்குப் போடுகிறோம்—அவன் அந்த குழந்தைகளுக்கு 2-வது வேளை சோறு போடுவதற்கு இல்லாமல் இருக்கிறான். அவன் மில்லியை 2 ரூபாய், 3 ரூபாய், 4 ரூபாய் என்று விற்பதை வாங்கிக் குடித்துவிட்டு பேசாமல் போய்

படுத்துக்கொள்கிறான். பகல் சோறு ஒன்றை தவிர இரவு சோறு அந்தக் குடும்பத்துற்குக் கிடைக்கவில்லை. இதுபோன்ற எத்தனை குடும்பங்களின் பட்டியல்களை நாம் பத்திரிகையின் வாயிலாகப் பார்க்கிறோம். நான் நேரடியாகவே என்னுடைய பகுதியில் பார்த்து இருக்கிறேன். மதுவால் கெட்ட குடும்பங்கள், கிணற்றில் விழுந்த பெண்கள், கிணற்றில் வீசப்பட்ட குழந்தைகள் இவைகளின் பட்டியல்களை நாம் பத்திரிகையின் வாயிலாக பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய இந்த அரசு இந்த ஒரு விஷயத்தில் மட்டும் இப்படி இருக்கிறது. மதுவால் ஏற்படும் தீமைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியாதது ஒன்று அல்ல. மது ஒன்று தான் இன்றைக்கு எல்லாவற்றிற்கும் தடையாக இருக்கிறது.

முன்பு எல்லாம் சொல்வார்கள் மனிதன் கெடுவதற்கு மது, மங்கை, சூது இந்த மூன்றும் தான் காரணம் என்று. ஆனால் இவற்றில் முதலிடத்தில் இருப்பது மது தான். சூதுவில் இருந்து கூட மனிதன் தப்பித்து விடுவான், மங்கையிலிருந்து கூட மனிதன் தப்பித்துக் கொள்வான். ஆனால் மதுவில் இருந்து அவன் தப்ப முடியாது. காரணம் அவனுடைய சுய நினைவு இழந்துவிட்ட காரணத்தால் அவன் என்ன செய்கிறான் என்பது தெரியாமல் செய்யக்கூடிய பல கொலை, கொள்ளைகளை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

இந்த மதுவால் ஏற்படக்கூடிய பாவங்களை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். எவ்வளவு பாவங்கள் இந்த அரசை வந்து சேரும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே இந்த நேரத்தில் இந்த மதுவைக் கட்டாயமாக இந்த அரசு ரத்து செய்வதற்கு முன்வர வேண்டும் என்று மீண்டும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர்களின் வாழ்வு வளம் அடைவதற்காக எத்தனையோ திட்டங்கள், எத்தனையோ வகையான லோன்கள், அவர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் லோன், இதுபோன்ற வகையில் பல திட்டங்களைத் தீட்டி அவர்கள் வளர்ச்சிக்கு நாம் செய்கிறோம். அந்த வளர்ச்சிக்குக் கொடுக்கக்கூடிய அந்தப் பணங்கள் எல்லாம் சாராயத்திற்கும் பிராந்திக்கும் போய் விடுகிறது.

பொதுவாக விவசாய நண்பர்களை எடுத்துக்கொண்டாலும் கூட, 2 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் ஊராட்சி மன்றங்கள் மூலமாகவோ, மற்றவைகள் மூலமாகவோ கொடுக்கப்படுகிற அந்த பணங்களை எல்லாம் அவர்கள் சாராயத்திற்குச் செலவழித்து விடுகிற நிலைமையைப் பார்க்கிறபோது இந்த கையில் அவர்களுக்கு கொடுத்து அந்தக் கையில் அரசு வாங்கிக் கொள்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



கிராமத்தில் உள்ள ஒரு ஏழை தன்னுடைய குடும்பத்தை நடத்துவதற்கு அவனை வளர்ப்பதற்கு அவன் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் என்று பிரித்து பல திட்டங்களைப் போட்டு நாம் உதவி செய்கிறோம். எவ்வளவுதான் அவனுக்கு உதவி செய்தாலும் கூட அந்த உதவியை அவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய இந்த அரசு ஒரு குழு போட்டு அதன் உதவியால் அவர்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன தீமைகள் என்ன என்பதை பரிசீலித்து பார்த்தால் மிக முக்கியமான தீமையாக இருப்பது இந்த மதுவாகத்தான் இருக்க முடியும் என்பதை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் காலேஜில் இருந்து நேராக சாராயக் கடைக்கு போகிறார்கள். கல்லூரியில் ஏற்படக்கூடிய கலவரங்கள், தகராறுகள், ஊர்வலங்கள் இவற்றிற்கு எல்லாம் முக்கிய காரணமாக இருப்பது மதுதான், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானே எங்கள் ஊரில் உள்ள கல்லூரியில் கலவரம் நடந்தபோது போலீசிடம் போய் இருந்தபோது அங்கே பாதி மாணவர்கள் குடித்துவிட்டு இருந்தார்கள். அவர்கள் வீசிய கற்கள் எல்லாம் எங்கள் மீது விழுந்தன, எல்லாம் உடைக்கப்பட்டன. எனவே இந்தக் கலவரங்கள், இந்த ஊர்வலங்கள், கல்லூரிகளை மூடிவிடுவது என்று சொன்னால்—சில கட்சிக்காரர்கள் கூட ஊர்வலங்கள் போகிறார்கள்—சில மாணவர்கள் இந்த ஊர்வலங்களில் இந்த மதுவை குடித்துவிட்டு பயம் இல்லாமல் மறியல் செய்கிறார்கள்.

நாட்டில் ஏற்படக்கூடிய பல காரியங்கள், பல தகராறுகள், பல கலவரங்களுக்கு இந்த மதுதான் காரணம் என்பதை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம ஒருமைப்பாடு, கிராம ஒருமைப்பாடு என்றால் எப்படி ஒருமைப்பாடு வரும். ஒவ்வொரு ஊரிலும் கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் திறந்து வைத்தால் எப்படி ஒருமைப்பாடு வரும். காலையில் என்ன நினைத்துக்கொண்டு போவானோ தெரியாது மாலையில் வந்தால் ஏதாவது ஒரு தகராறு. கிராமங்களில் 4 தகராறு, 5 தகராறு என்றும் ஆங்காங்கு அடி தடி என்றும் ஏதாவது ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. காலையில் சண்டை எதுவும் கிடையாது. மதுவைக் குடித்தபிறகு தான் தகராறுகள் அங்கே ஆரம்பிக்கின்றன. கள்ளச் சாராயத்தை ஒழித்து விட்டோம் என்று சொல்கிறார்கள்.

(முற்பகல் 10-50)

கள்ளச்சாராயத்தை எங்களாலே ஒழிக்கமுடியவில்லை; அதனாலே தான் அரசே கள்-சாராயக் கடைகளைத் திறந்துவிட்டுவிட்டோம். வேறு யாரோ வாங்கிக் கொண்டு போகும் வருவாய், அரசுக்கு வரட்டுமே என்று அரசே கடைகளைத் திறந்துவிட்டுவிட்டது என்று சொல்கிறீர்கள். தமிழக போலீசார் நினைத்தால், ஒரே மாதத்திலே அந்தக் கள்ளச்சாராயத்தை ஒழிக்கமுடியாதா ?

நமது காவல்துறை நினைத்தால்.... எத்தனையோ காரியங்களை நவீனமயமாக்கப்பட்ட வகையில், துப்பறியும் காரியங்களைச் செய்யக்கூடியவர்கள். எனவே, அவர்கள்.. ஒரே மாதத்தில் கள்ளச்சாராயக் கடைகளை ஒழிக்கவேண்டும் என்று நினைத்தால் ஒழிக்கமுடியாதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அவர்கள் நினைத்தால் ஒழிக்கமுடியும்.

சாராயத்தை உற்பத்தி செய்கிறீர்கள். ஆனால் கடைக்காரர்களுக்குச் சாராயம் கிடைக்கவில்லை. கிடைக்காதபோது, நேராக கள்ளச்சாராயத்தைப் போய் லாரியிலே லோட் ஏற்றிக் கொண்டு வந்து, இலட்சம், இலட்சமாக பாட்டில் பண்ணி, அதிலே கலப்படங்கள் செய்து, இலட்சக்கணக்கில் சம்பாதிக்கிறவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். இதிலே நன்மைகளைவிட தீமைகள்தான் அதிகமாக இருக்கின்றன.

கள்ளச்சாராயத்தைக் குடித்து இறந்து விடுகிறார்கள் என்று அதனாலே பாதுகாப்பான சாராயம் கொடுக்கிறோம், இது நல்ல சாராயம், குடித்தால் உடம்புக்கு வலு உண்டாகும், இதிலே வியாதி தீரும் என்று பிரச்சாரம் செய்தாலும் கூட, நமது நாட்டைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது ஒத்து வராது. தமிழகத்தில் இருந்த தலைவர்கள் பற்றி உங்களுக்குத் தெரியும்.

ராஜாஜி போன்றவர்கள், அந்த மதுப்பிரச்சினையினால் எவ்வளவு அவஸ்தைப்பட்டார்கள் என்று தெரியும். காமராஜ், அண்ணா காலம் வரை அதைக் கொண்டு வரக்கூடாது என்று முன்னோர்கள் பாதை வகுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடமுடியாது. எனவே, இந்த மது என்ற அரக்கனை இந்த நாட்டை விட்டு என்று ஓட்டுகிறோமோ, அன்றே இந்த நாட்டுக்குச் சுதந்திரம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் மனமுவந்து, இந்த ரூ. 200 கோடியை வேறு வகையிலே வருமானமாகச் சேர்த்துக் கொண்டு, தயவு செய்து அவர்கள் காலத்திலேயே, அவர்களே, இந்த மதுவை ரத்து செய்யவேண்டும் என்று அவரை மீண்டும் மீண்டும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



மதுவிலக்கு இந்த நாட்டுக்கு நாம் செய்யக்கூடிய நல்ல காரியமாகும். எத்தனையோ நல்ல காரியம் செய்யும் அவர், இதையும் செய்யவேண்டும். செய்வார் என்ற நம்பிக்கையோடு இந்த மதுவிலக்குப் பிரச்சினையை முடித்துக்கொண்டு....

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவின் கொடுமையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவிரமாகச் சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மதுவிலக்கை, அனைத்திந்திய அளவிலே, காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற மாநிலங்களிலேயும் அதுபோல் அமல்படுத்தி, ஒருவேளை அப்படிச் செய்யமுடியவில்லையென்றால், தமிழகத்திற்கு 200 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னால், அந்த 200 கோடி ரூபாயை மத்திய அரசு ஏதாவது மானியமாகத் தந்து, அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை எடுக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்திந்திய அளவிலே ஒரு ஆலோசனை வழங்குவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே. ஒரு நல்ல காரியம் செய்வதற்கு, அந்த 200 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்கவேண்டும் என்பதில் எங்களால் முடிந்த அளவுக்கு உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு காரியத்திலேயும், அடுத்த மாநிலத்தைப் பார்த்துச் செய்வதில்லை. அடுத்தவர்களைப் பார்த்து நம் குடும்பத்தை நடத்துவதில்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நல்ல காரியத்தை நீங்களே துவக்கிவைக்கலாமே, வழிகாட்டலாமே என்பதற்காகத் தான் நான் சொன்னேன்.

திரு. ஆர். தியாகராசன் : ஒரு சில மாநிலங்களிலே எப்போதோ அது இருந்தது. மொரார்ஜி தேசாய் இருந்ததனால், குஜராத்திலே இல்லை. இங்கே ராஜாஜி, காமராஜ், உங்களுக்கு வழிகாட்டிய அண்ணா காலம் வரை மது கிடையாது. அதற்குப் பிறகுதான் அந்த வழி காட்டப்பட்டது. நாங்கள் ஏற்கனவே இது பற்றி ஆட்சேபணை பண்ணி இருக்கிறோம். இப்போதும் அதையே தான் சொல்கிறோம்.

எங்களுடைய கட்சியின் கொள்கை, திட்டம், எங்களைப் பொறுத்தவரைக்கும் மது கூடாது என்பது தான். எல்லாவற்றையும், சில இடங்களிலே இருக்கிறது என்று பார்த்து நாம் நிர்வாகம் செய்வதில்லை. கர்நாடகத்திலே சரும்புக்கு இப்போதே 220 ரூபாய் சொல்லிவிட்டார்கள். நாம் சொல்லி விட்டோமா ? சில காரியங்களை அவர்கள் செய்வார்கள். நாம் சிலவற்றைச் செய்வோம்.

நல்ல காரியங்களைத் தான் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். கெட்ட காரியங்களை உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். அதனாலே, அமைச்சரவர்கள். இந்த மாநிலத்திலே மதுவிலக்கு கொண்டு வருவதற்கு, அது பெரிய உதவியாக, ஜனங்களுக்கு நன்மையாக இருக்கும் என்று கருதிச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதனால் பலன் அடைகின்றவர்கள் யார் என்று கேட்டால் அதிகாரிகள்தான். கஸ்டம்ஸ் அதிகாரிகள் ஒவ்வொரு ஏரியாவாரியாகச் சென்று கண்காணிக்க வேண்டும். முன்சீப் கோர்ட்டுக்குப் பக்கத்தில், மருத்துவமனைகளுக்குப் பக்கத்தில் கள், சாராயக் கடைகள் இருக்கக்கூடாது என்பது அரசு உத்தரவு. ஆனால் முன்சீப் கோர்ட்டுக்குப் பக்கத்தில்தான் சாராயக்கடை இருக்கிறது. கோயிலுக்குப் போகின்ற வழியில்தான் கள்ளுக்கடை இருக்கிறது. அரசு உத்தரவு இருந்தும் அது அமல் செய்யப்படுவதில்லை. அரசு உத்தரவு போட்டும் அதிகாரிகள் அதை நிறைவேற்றவில்லை.

இதுபற்றி அதிகாரிகளிடத்திலே சொன்னால், அந்த இடத்தை விட்டு கடையை எடுத்தால் வருமானம் வராது, அதனால் பணம் கட்ட மாட்டேன் என்று அந்தக் கடைக்காரர்கள் சொல்வார்கள், இதனால் பணம் போய்விடும் போல் இருக்கிறது என்று சொல்லி இதனால் முன்சீப் கோர்ட்டுக்குப் பக்கத்திலேயே இருக்கட்டும், ஹைஸ்கூலுக்குப் பக்கத்திலேயே இருக்கட்டும் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமைக்கு யார் காரணம்? கஸ்டம்ஸ் அதிகாரிகள் ஒவ்வொரு நாளும் புறப்பட்டுச் செல்கிறார்கள். நாம் கொடுத்திருக்கின்ற வேன், அரசு கொடுத்துள்ள சலுகைகள் ஆகியவைகளை எதற்காக அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை வருமானத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். அந்த வண்டியை எடுத்துக்கொண்டு போய், எவ்வளவு பணம் கொடுக்கிறாய். நீ எவ்வளவு கொடுக்கிறாய், நீ எவ்வளவு கொடுக்கிறாய் என்று வசூலித்துக் கொள்கிறார்களே தவிர, அரசு எந்த நோக்கத்திற்காக அந்த வேன்களைக் கொடுத்ததோ அந்த நோக்கத்திற்காக அவைகளை அவர்கள் பயன்படுத்துவதில்லை. கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களிடமிருந்து ஆயிரக் கணக்கான ரூபாய்களை வாங்குவதற்கு இந்த வேன்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக, அதை அடக்குவதற்காக அந்த வேன்களைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் நினைத்தால் அடக்க முடியும். இந்தப் போலீஸ் நாளைக்கே நினைத்தால் கூட ஒரே மாத காலத்தில் கள்ளச் சாராயத்தை இந்த மாநிலத்திலேயிருந்து ஒழித்துவிட முடியும். அம்மையை ஒழித்தார்கள், நாட்டில் இருந்த காலராவை ஒழித்தோம். நம்முடைய போலீஸ் திறமையான போலீஸ் என்று சொல்கிறோம். தங்கப் பதக்க



மெல்லாம் வாங்கி வந்த போலீஸ் என்று சொல்கிறோம். அவர்
களால் இங்கேயிருக்கின்ற கள்ளச் சாராயக் கடைக்காரர்களைப்
பிடிக்க முடியாதா? பானை பானையாகக் காய்ச்சுகின்ற
பெரிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களே அவர்
களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அதற்காக இந்தப்
போலீசுக்குத் திறமையில்லை என்று சொல்லக் கூடாது. ஏனென்
றால் தமிழ்நாட்டுப் போலீஸ் மிகத் திறமை வாய்ந்த போலீஸ்.
ஆனால் இதை அவர்கள் பயன்படுத்தவில்லை. இதை முடுக்கி
விட்டு மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் இந்தத் திருட்டுச்
சாராயம் காய்ச்சுவதை நிறுத்திவைக்கப் பெருமுயற்சி எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து மாநில நிர்வாகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டு
மென்று நினைக்கிறேன். ஏகப்பட்ட அமைச்சர்களை, நிறைய
அமைச்சர்களை போட்டிருக்கிறார்கள். காரணம், எல்லாப்
பொறுப்புகளையும் முதலமைச்சரே வைத்திருந்தால் ஒவ்வொரு
பகுதியிலேயும் இருக்கின்ற பிரச்சனைகளையும் எல்லாக்
காரியங்களையும் செம்மையாகச் செய்ய முடியாது என்ப
தால்தான் பொறுப்புகளைப் பிரித்துக் கொடுத்து பல பகுதிகளாகப்
பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு அதிகப்படுத்தி,
எல்லாயிடங்களுக்கும் சென்று அந்தந்தப் பிரிவுகளில் உள்ள குறை
களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த
அரசு நல்லெண்ணத்தோடு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறது.

அமைச்சர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் நாங்கள் இந்தந்த
தேதிகளில் இங்கே வருகிறோம், அதிகாரிகளைச் சந்தித்து அங்கே
உள்ள குறைபாடுகளைக் களைவோம் என்று சொல்லி அறிக்கை
கொடுத்துவிட்டு, எங்களுக்கு புரோகிராம் அனுப்பிவிட்டு வருவார்
களேயானால் அங்கேயிருக்கக்கூடிய சிறுசிறு குறைகளை நீக்க
முடியும். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள்
போய்க் கேட்டால் சரியாக பதில் வராது. அமைச்சரவர்கள்
வந்து உட்கார்ந்து கொண்டு ஏன் இந்த ரோட்டைப் போடவில்லை,
ஏன் கிணறு வெட்டவில்லை, ஏன் சுகாதார வசதி இல்லை என்று
கேட்டால் அதன் மூலம் நன்மைகள் பெருகும். மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் ஒரு தடவை வந்தார்கள். அவர்கள் வரு
கிறார்கள் என்றபொழுது கிடுகிடு என்று வேலைகள் நடந்தன, பல
நல்ல காரியங்கள் நடந்தன.

எனவே, அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றவர்கள்,
பாகுபாடு இல்லாமல், சராசரியாக எல்லா அமைச்சர்களும், ஒவ்
வொரு தொகுதி வாரியாக, மாதம் ஒருமுறை என்று தொடர்ச்சி
யாகத் திட்டமிட்டு மாநிலம் பூராவும் எல்லாப் பகுதிகளுக்கும்
சென்று, ஆங்காங்கே அந்தந்தத் துறைகளில் உள்ள குறைகளைக்

களைய வேண்டும். அதை முதலமைச்சரவர்கள் எல்லா அமைச்சர்களுக்கும் கட்டாயமாக ஆணையிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், ஐ. பி. எஸ். அதிகாரிகள் போன்ற பெரிய அதிகாரிகள் சென்னையில்தான் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். அந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும், ஐ. பி. எஸ். அதிகாரிகளும் பெரிய அதிகாரங்களைக் கைகளிலே வைத்திருக்கின்றவர்கள். அவர்கள் இந்தச் சென்னை மாநகரத்திலேயேதான் இருக்கின்றார்களே தவிர அதைத் தாண்டி மற்ற இடங்களுக்கு வருவதில்லை. அவர்களும் மற்ற இடங்களுக்கு வர வேண்டும். ஆனால் அங்கே எஸ்.பி., ஏ.எஸ்.பி., என்றுதான் இருக்கிறார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு பெரிய அதிகாரியாக இருப்பவர், மாவட்ட லெவலில் உள்ள இடங்களுக்குச் சென்று அங்கேயுள்ள குறைகளைக் களைய வேண்டும். போலீஸ் அதிகாரிகளும், ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் சென்னையிலேயே உட்கார்ந்திருக்கக்கூடாது. மாவட்டங்களில் உள்ள குறைகளை நேரடியாகச் சென்று விசாரித்து, அங்குள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். அவர்கள் அங்கே சென்று தங்களுக்குக் கீழ் உள்ள அதிகாரிகளைக் கேட்க வேண்டும், இங்கே கொள்ளையடிக்கப்பட்டு வருடம் மூன்றாகிறதே, ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று கேட்க வேண்டும்.

(முற்பகல் 11-00)

இந்தக் கொள்ளை ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை, இந்த இடத்திலே சாராயம் தொடர்ந்து காய்ச்சுகிறார்களாமே, அதை ஏன் பிடிக்கவில்லை என்று கேட்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் முகாம் இட வேண்டும். தாலுக்காவாரியாக அல்லது ஜில்லாவாரியாக முகாமிட்டு பணிகள் செய்ய வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லோருமே சென்னையிலே இருக்கும்போது. கிராமப் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் குறைகள் களையப்படவில்லை, கிராமப்புறங்களில் துன்பங்கள் தீர்க்கப்படவில்லையென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த மாவட்ட விவசாயக் கூட்டங்கள் அல்லது வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் போன்றவற்றை உறுப்பினர்கள் இல்லாதபொழுது நடத்தக் கூடாது. நாங்களும் இருந்து சேர்ந்து நடத்துவதுதான் நல்லது. வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் கூடுமான வரைக்கும் நடப்பது இல்லை. உறுப்பினர்கள் வரவில்லை, ஆகவே, வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடப்பதில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார்.

அந்தக் கூட்டங்கள் நடப்பதால் எவ்வளவு பலன்கள் இருக்கும் என்பதை மதிப்பிற்குரிய அமைச்சர்கள் கொஞ்சம் கவனித்துப் பார்க்கவேண்டும். எங்களுக்கு இருக்கிற சின்ன, சின்ன குறை களைச் சொல்லக் கூடிய ஒரே வாய்ப்பு வளர்ச்சிமன்றக் கூட்டம் தான். நாங்கள் குறைகளைப் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது வளர்ச்சி மன்றக் கூட்டம்தான். இப்பொழுது நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வளவு நாள் ஆகிறது. ஆனால் மாவட்டத்திலே வளர்ச்சிமன்றக் கூட்டம் நடத்துவதே கிடையாது.

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை ஒவ்வொரு மாதமும் தாலுக்கா வாரியாக நடத்த வேண்டும். அப்பொழுது தான் அங்கே இருக்கிற கிராமப் பகுதியிலே இருக்கிற ஏழை எளியவர்கள் குறைகளை நிவர்த்தி செய்ய வழி ஏற்படும். முன் பெல்லாம் குறை தீர்க்கும் நாள் என்று வைத்து, அந்த நாளிலே மாவட்ட ஆட்சித் தலைவரோ, ஆர். டி. ஓ. வோ, தாசில்தாரோ கூட்டத்திற்கு வந்து நடத்துவார்கள். அது கூட இப்பொழுது நடப்பதில்லை. என்ன காரணத்தாலோ நடத்தப்படுவதில்லை. ஆகவே, மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தை ஒவ்வொரு தாலுக்காவாரியாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விருத்தாசலம் தொகுதியைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு வறட்சி அதிகமாக இருக்கிறது. பருவ மழை துவங்கி விட்டாலும் கூட தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இன் றைக்கு வறட்சி அதிகமாக இருக்கிறது. பெரும்பாலும் சிதம்பரம் தாலுக்கா மட்டும் தஞ்சாவூருக்குப் பக்கத்தில் இருக்கிற காரணத் தால் பாசன வசதி இருக்கிறது. மற்ற தாலுக்காக்கள் பூராவும் வறட்சிப் பகுதி. 300 அடி, 400 அடி ஆழத்திற்கு ஆழ்குழாய் கிணறுகளைப் போட்டு, தண்ணீர் எடுத்து பயிர் செய்கிறோம். ஆனால், கரண்ட் கட் இருந்தது, அல்லது குறைவாக வந்தது. இப்பொழுது நிறைய கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். குடிநீர் கொடுக்க, எங்கள் பகுதியிலே 300 அடி, 400 அடி ஆழம் இருப்பதாலே, ஜப்பானிலே இருந்து 16,000 அடி ஆழ் கை பம்ப் வருகிறதாம். ஆகவே, பவர் பம்பாவது போட்டு, எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசன வசதியைப் பொறுத்த வரை, எங்கள் பகுதி வறட்சிப்பகுதி. வானம் பார்த்த பூமி. ஒரு தடவை நீர் தேங்கினால் நாற்று நட்டு, வளர்ந்து, அறுவடை செய்கிற வரைக்கும் தண்ணீர் தங்கி இருக்கவேண்டும். அந்த அளவுக்குத் தண்ணீர் தேங்க, அங்கே குளங்களை ஆழப்படுத்து வதும் கிடையாது வாய்க்கால்களைச் சீர்படுத்துவதும் இல்லை. ஆகவே, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் நிறைய பணம் கொடுத்து உதவ வேண்டும். இந்த நேரத்திலே, அந்தக் குட்டைகளை எல்லாம் ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுதுகூட கண்மாய்களைச் சீர்படுத்த, தன்னிறைவுத் திட்டத்திலே ரூபாய் 2 இலட்சம் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது மிகமிகக் குறைவு. அங்கு 60 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, பணம் அதிகமாகக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளைப் பற்றி. நான் உள்ளதைச் சொல்கிறேன், தவறாக நினைக்கக்கூடாது. 1 கிலோ அரிசி தருகிறோம் என்று சொன்னீர்கள். எங்கள் பகுதியில் பெரும்பாலும் இல்லவே இல்லை. ஒரு மூட்டைக்கு 4 கிலோ, 5 கிலோ குறைகிறது. வருவதே அப்படித்தான். கடையிலே வேலை செய்பவன் என்ன செய்கிறான்? அவனே 5 கிலோ எடுத்துக் கொண்டு அனுப்புகிறான், நாமும் 5 கிலோ எடுத்துக் கொள்ளலாம் என்று சேர்த்து எடுத்துக் கொள்கிறான். எல்லா பகுதிகளிலும் இப்படிச் செய்கிற நிலைமைகள்தானிருக்கின்றன. அதைக் கவனிக்க வேண்டும். மொத்தமாகக் கொடுத்திருக்கிறோம். அந்தப் பொருள்கள் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று அந்தந்தத் துறையிலே இருப்பவர்கள் கவனிக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒருவரே போய் பார்க்க முடியாது. அந்தந்தத் துறையிலே இருப்பவர்கள் போய் கொடுத்த பொருள்கள் சரியாக விநியோகிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். எத்தனை கார்டுகளை, ரூ. 20, ரூ. 10 வாங்கிக் கொண்டு கொடுத்து விடுகிறார்கள். சில இடங்களிலே நிறைய செய்கிறார்கள். சில இடங்களிலே சஸ்பெண்ட் செய்கிறார்கள்; சிலபேர்களிடம், அதிகாரிகளிடம் சொன்னால், சரிதான் போய்யா, எந்த ஊரில் நடக்கவில்லை, எல்லா ஊரிலும்தான் நடக்கிறது, போய்யா, என்று சொல்கிறார்கள். அரசு கொடுக்கக் கூடிய திட்டங்களின் பலன்கள். அரசு நடைமுறைப் படுத்துகின்ற திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு முறையாகப் போய்ச் சேருகிறதா இல்லையா என்பதை அனைத்து அமைச்சர்களும், அதிகாரிகளும் நல்லமுறையில் கவனித்தால் இந்த நாட்டிலே பிரச்சனை இருக்க முடியாது என்று சொல்லி, பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. என். சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களினால் இன்று சபையில் வைக்கப்பட்டிருக்கிற மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக குறுகிய காலத்திலே கள்ளச்சாராயத்தால் பணம் சம்பாதிப்பதை இன்றைக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுத்தும் கூட பெரும் பணக்காரர்கள் தப்பித்துக் கொண்டு, அவர்களிடம்





வேலை செய்பவர்கள் சிறை செல்வதைத் தடுக்க வேண்டுமென்ற காரணத்தாலும், குடிக்கின்றவர்களுக்கு நியாயமான விலையில் சாராயம் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் சாராயக் கடைகள் திறக்கப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் கள்ளச் சாராயம் முழுமையாக ஒழிக்கப்பட்டது.

இன்று கூட பல வட மாநிலங்களில் கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. ஆனால் இங்கே பூரணமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. பக்கத்திலே இருக்கிற பெங்களூரில் லைசென்ஸ் பெற்று சாராயக் கடைகள் இருக்கும்போது 300 பேர்களுக்குமேல் கள்ளச் சாராயத்திற்குப் பலியான சம்பவத்தை நாம் பார்த்தோம். நம்முடைய மாநிலத்தில் சாராயக்கடைகளை ஏலம் விட்டு, கடந்த 4 ஆண்டு காலத்தில் இங்கே எப்படிப்பட்ட தவறும் நடக்கவில்லை. குற்றமும் நடக்கவில்லை, ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

தமிழ்நாட்டில் சாராயத்தை விற்றுக் கொண்டிருக்கிறவர்கள் கள்ளச்சாராயம் விற்கக்கூடாது, நியாய விலைக்கு விற்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு பல சட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் சாராயக் கடை வந்த பிறகு முதலாண்டு கள்ளச்சாராயத்தை ஒழிப்பதிலே கடுமையாகப் பணியாற்ற வேண்டியிருந்தது. அடுத்த ஆண்டு சாராய விற்பனையை ஒழுங்குபடுத்த 75 சதவீதம் சாராயத்தை எடுக்கவேண்டுமென்று ஆணையிடப்பட்டதால், அப்படி எடுக்கப் படவில்லை என்றால் ஒரு விட்டருக்கு 4 ரூபாய் 45 காசு அபராதம் கட்ட வேண்டுமென்று விதிக்கப்பட்டதால் கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஏனென்றால் கடை எடுப்பவர்கள், அந்தத் தொழிலை நடத்துபவர்களுக்கு ஒரு ரிஸ்க் இருக்க வேண்டும். அந்த பொறுப்பு இல்லை என்றால் கள்ளச்சாராயத்தைக் கொண்டுதான் இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும். அந்த நிலையை மாற்றத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே அரசாங்க சாராயத்தைத் தவிர வேறு எதையும் தமிழ்நாட்டில் விற்கமுடியாத ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இதனால் சாராயத்தின் விற்பனை ஆண்டுக்காண்டு உயர்ந்திருக்கிறது. அரசினுடைய ஆணித்தரமான உத்தரவுகளும் அரசினுடைய சிறப்பான நடவடிக்கைகளும், அதிகாரிகள் சிறப்பாகச் செயல்பட்டதும்தான் கள்ளச்சாராயம் ஒழிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தன.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உடல் நலம் குன்றி இருந்தபோது தமிழ்நாட்டில் சாராயம் சரியாகக் கொடுக்கமுடியாத சூழ்நிலை இருந்தது. அதனால் கடைக்காரர்கள் எல்லாம் உயர்

நீதிமன்றத்திற்குச் சென்று சாராயம் சரியாக கிடைக்கவில்லை. அதனால் கிஸ்தியைக் குறைக்க வேண்டும். கட்ட முடியவில்லை என்று வழக்குப் போட்டார்கள். சென்ற ஜூலை 15-லிருந்து ஆகஸ்ட் 15 வரையில் வடார்க்காடு மாவட்டத்தில் எந்த சாராயக் கடையிலும் 62 சதவீதம், 65 சதவீதத்திற்குமேல் சாராயம் எடுக்கப்படவில்லை. ஆனால் 100 சதவீதம் கிஸ்தி கட்டியிருக்கிறார்கள். அதைப்போன்று, ஆகஸ்ட், செப்டம்பர், அதற்கு அடுத்த மாதம் வரையில் 70 சதவீதத்திற்குமேல் யாராலும் சாராயம் எடுக்கப்படவில்லை; ஆனால் 100 சதவீதம் கிஸ்தி கட்டியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதற்குப் பின்னாலே கோர்ட்டுக்குப் போய், 30 சதவீதம், 40 சதவீதம் சாராயம் கிடைக்கவில்லை, அதனால் கிஸ்தி கட்ட முடியவில்லை, ரத்து செய்ய வேண்டும் என்று வழக்குப்போட்டு, அதனால் அரசின் வருமானம் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 60 சதவீதம் சாராயத்தை எடுத்துக்கொண்டு, 100 சதவீதம் கிஸ்தி கட்டியவர்கள், கட்டத் தயாராக இருந்தவர்கள் இப்போது 30 சதவீதம் கிஸ்திதான் கட்டுவேன், 60 சதவீதம் கிஸ்திதான் கட்டுவேன் என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இதனால் ஏழை எளிய மக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவி, ஏழைக் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற சத்துணவு, வறுமைக் கோட்டிற்குகீழே இருக்கிற மக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவி பாதிக்கப்படும். இப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படுகிற போது கடை முதலாளிகள் கொள்ளை இலாபம் அடிப்பது என்ன நியாயம்? இது சம்பந்தமாக அரசு அதிகாரிகள் அரசின் வருவாய் குறையாத அளவுக்கு, ஆணித்தரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தற்போது ஏலம் விடுகிற முறையில் பல இடங்களில் வன்முறை ஏற்படுகிறது. பல கொடுமைகள் நடைபெறுகின்றன. அதன் வாயிலாக ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படுகின்ற உதவியை, சக்தியை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள் என்பது உண்மை.

(முற்பகல் 11-10)

அது அரசுக்குப் பொருந்தாததன் விளைவாகத்தான் இன்று அரசு ஏஜென்ட்ஸ் மூலமாக விடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதை முழுமையாக வரவேற்கிற நாம் இவ்வாறு ஏஜென்சி முறை இருந்தாலும் கூட அந்த ஏஜென்சியை நடத்தக்கூடியவர்களுக்கு ஒரு ரிஸ்க் இருக்கவேண்டும். ஒரு சாராயக் கடைக்கு 25 ஆயிரம் ஏலம் போலாம்என்று இருக்குமே



யானால் அந்த இடத்தில் 10 சதவீதம் 15 சதவீதம் என்ற அளவுக்கு கடைகளை வைத்து கிட்டதட்ட ஒரு 30 ஆயிரம் ரூபாய் என்ற வகையிலே ஒரு தொகையை நிர்ணயித்து அவர்களுக்கு லைசன்ஸ் வழங்கவேண்டும். இப்படிப்பட்ட முறையில் லைசன்ஸ் வழங்க வேண்டும். மூன்று மாதத்தொகை டெப்பாசிட் கட்ட வேண்டும். சால்வன்சி கொடுக்கவேண்டும் என்ற வகையிலே ஒரு நிலைமையை ஏற்படுத்தினால்தான், அந்த வகையிலே ஏஜென்சி விட்டால்தான் அது திருப்திகரமாக அமையும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அந்தவகையிலே மேற்கொண்டும் சிறப்பாக இதனை நடத்த இயலும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிதியாதாரம் எந்தக் காரணத்தைக் கொண்டும் நஷ்டம் அடையாமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உயர்நீதி மன்றங்கள் மிகச் சாதாரண விஷயங்களுக்காகக்கூட தடைகளைக் கண்லனை மூடிக்கொண்டு கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மதுவிலக்கு என்பது பெரிய அளவுக்கு ஆதாயத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாத வகையில், அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலை இல்லாத வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கினைப் பொறுத்தவரையில் வடார்க்காடு மாவட்டத்தில் காவல் துறையினர் மிகச்சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். மதுவிலக்குத் துறைக்கென்று இன்ஸ்பெக்டர்கள், உதவியாளர்கள், காவலர்கள் ஆகியோர் 5 இடங்களிலே இருந் தாலும் கூட இனிமேல் அப்படிப்பட்ட பணி தேவையில்லை என்பதால் எக்ஸைஸ் அன்ட் ப்ரஹிபிஷனில் இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளை போலீஸ் நிலையங்களில் வைத்துவிடவேண்டும். இப்போது அரக்கோணம் தாலுக்காவில் லா அண்ட் ஆர்டருக்காக ஒரு போலீஸ் துறையும், மற்றும் கிரைம் போலீஸ் துறையும் இருப்பதுபோல் எக்ஸைஸுக்கு என்று ஒரு இன்ஸ்பெக்டரை காவல் நிலையத்திற்குக் கொடுத்து விட்டால் போலீஸ் நிலையங்கள் இவற்றைச் சரிபார்த்துக்கொள்ளுமேயானால் மேற்கொண்டு கடையை நடத்தக்கூடியவர்களுக்குச் சாதகமாகவும், அவர்களுக்கு நியாயமாகவும் இருக்கும் என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் இன்றைக்கு ஒரு இன்ஸ்பெக்டரைப் பார்க்கவேண்டும் என்றால் 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் போகவேண்டிய சூழ்நிலை எல்லாம் இருக்கின்றது. நான் சொல்வது போன்று ஏற்படுத்திவிட்டால் அவ்வாறு போகவேண்டிய சூழ் நிலைகள் மாற்றப்பட்டு ஒழுங்குப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையிலே இனிமேல் கள்ளச்சாராயத்தைத் தடுக்கின்ற பணி அவர்களுக்கு இல்லை என்ற காரணத்தால் சட்டம், ஒழுங்கை மட்டும்தான் கட்டுப்படுத்தவேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு இருப்பதாலும், மற்றைய சாராயம் இருக்கின்ற நாட்களில் எல்லாம் அவர்கள் 75 சதவீதம் சாராயத்தைக் கட்டாயமாக எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்ற அந்தப் பணி இருப்பதன் காரணத்தால் அவர்களுடைய பணியை எளிதாக ஆக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த மசோதாவை ஏலம் விடுகின்ற முறையில் கூட்டாகச் சேர்ந்துகொண்டு கொள்ளை அடிக்கக் கூடிய முயற்சிகளைத் தடுப்பதற்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தை நான் முழுமையாக வரவேற்று இந்த மசோதாவிற்கு ஆதரவு தெரிவிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை இரண்டின் கீழ் நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தற்போது கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. ஆனால் நெல்லை மாவட்டத்தில் கள்ளச் சாராயம் எல்லா இடங்களிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. குறிப்பாக நாலுர்க்கிணறு, கண்ணம்பாறை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டு பல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதனைத் தடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் பறக்கும் படை சோதனைக்கு வரும்போது, அவ்வாறு அது வருகிறது என்ற தகவல் முன் கூட்டியே அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. அந்த அளவில் சாராய சாம்ராஜ்யம் வலுவுள்ளதாக இருந்து வருகிறது. இப்போது எல்லாக் கடைகளிலும் சாராயம் தட்டுப்பாடின்றி கிடைத்து வருகிறது.

அடுத்து அரிஸ்டம் என்ற ஒரு போதைப் பொருள் எல்லா இடங்களிலும் கடைகளில் வைத்து விற்கிறார்கள். அதனை எந்தப் பறக்கும் படையும் சோதனை செய்து கண்டுபிடித்ததாக தகவல் இல்லை. சுத்தமான அரிஸ்டம் தயாரிக்க ஒரு பாட்டிலுக்கு சுமார் 80 ரூபாய் செலவு ஆகும் என்று சித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள். ஆனால் சில்லரைக் கடைகளில் 1½ ரூபாய் விலையில் கூட அது கிடைக்கிறது. குடித்துவிட்டு கடை வாசலிலேயே மயங்கி கிடக்கிறவர்கள் பலர். இதை பல கிராமங்களிலும், பல நகரங்களிலும் நேரிடையாக நாம் அன்றாடம் பார்த்து வருகிறோம்.

அதேபோல ஜிஞ்சர் பெர்ரி என்ற போதைப் பொருள் பகிரங்கமாக மருந்துக் கடைகளிலே போட்டு போட்டுக் கூட பல இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. அப்படி நூற்றுக் கணக்கான மெடிக்கல் ஷாப்புகள் சந்து பொந்துகளில் தோன்றி உள்ளன.





அதனை யாராவது புகார் செய்து போலீஸ் அதிகாரிகள் சோதனை இடச் சென்றால், அந்தக் கடைகளில் 6 குளுகோஸ் பாட்டில்களும் 2 ஹார்லிக்ஸ் பாட்டில்களும், ஒரு சில காலி அட்டைப் பெட்டிகளும் தான் இருப்பதைப் பார்க்கிறார்கள். அதைத்தவிர அங்கே ஜிஞ்சர் என்பது இருக்காது. அவ்வளவு விரைவாக அவர்களுக்கு தகவல்கள் கிடைக்கின்றன. எனவே அவர்கள் அதனை மறைத்து விடுகிறார்கள். ஆகவே, இதனை நன்றாக ஆராய்ந்து இந்த ஜிஞ்சர் பெர்ரியின் விற்பனையைத் தடுக்க வேண்டும். அதன் காரணமாக அந்தப் பகுதிகளிலே சுமார் 1 கோடி ரூபாய் அளவிலே ஆயத் தீர்வை நஷ்டம் ஏற்படுகிறது என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது. மேலும் தற்போது அரசிலே சாராய சில்லரை வணிகத்தையும் எடுத்துக் கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே படித்த வேலையில்லாத இளைஞர்களை சேர்ப்பது என்று முடிவு எடுத்திருப்பது, அவ்வளவு தகுந்த வேலையாக அவர்களுக்கு இருக்காது என்று நான் கருதுகிறேன்.

ஏனென்றால் இன்னும் சில காலத்திற்குப் பின்னர் அரசின் மதுவிலக்குக் கொள்கைகள் மாறக்கூடும், அதன் பின்னர் அவர்கள் வேலையை இழப்பார்கள். வேலை இழந்த அவர்களுக்கு வேறு யாரும் வேலை கொடுக்க மாட்டார்கள். காரணம் சாராயக் கடைகளில் வேலை பார்த்தவர்கள் என்று குறைவாகவே மதிப்பார்கள். அரசும் அவர்கள் அனைவருக்கும் கொடுத்துவிட இயலாது. எனவே சாராயக் கடைகளை இப்போது இருப்பது போல ஏலம் மூலமாக நடத்துவதே சிறப்பாக இருக்கும், அதுதான் நல்லது என்று கூறவிரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியில் எல்லாச் சாராயக் கடைகளுக்கும் கிளைக் கடைகளை திறந்து அனுமதியின்றி நடத்தி வருகிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து தவிர்க்க வேண்டும். அதேபோல சாராயக் கடைகளை வைக்கக் கூடிய இடங்கள் பொதுமக்கள் அதிகமாக வரக்கூடிய இடமாகவும், பெண்கள் தண்ணீர் எடுக்க வரக்கூடிய பகுதிகளாகவும், சர்ச்சுகள், கோவில்களுக்கும் பக்கத்திலே அமையக் கூடிய இடங்களாகவும் இருக்கின்றன. இது போன்று மக்கள் அதிகமாக புழங்கும் இடங்களில் சாராயக் கடைகளை வைப்பதன் காரணமாக, அங்கே அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுவதனால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. அதையும் அரசாங்கம் கவனித்து தனிப்பட்ட இடங்களிலே ஒதுக்குப்புறமாக கடைகளை வைக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

*திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆயத் தீர்வை என்கிற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துரைகளையும், சில நிலைமைகளையும் இந்த மன்றத்தின் முன்னாலே சமர்ப்

பிக்க விரும்புகிறேன். இன்றையதினம் தமிழ்நாட்டில் ஆயத் தீர்வைக்கு ஆதாரமான 23 சர்க்கரை ஆலைகளும், 9 சாராயக் கலவைத் தொழிற்சாலைகளும், 8 வடிசாலைகளும், 5 இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்ற வெளிநாட்டு மதுபானத் தொழிற்சாலைகளும், ஒரு மாஸ் வொயின் தொழிற்சாலையும், ஒரு பீர் தொழிற்சாலையும் தமிழகத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

(முற்பகல் 11—20)

அதோடு 1984—85-க்கு ரூ. 220.82 கோடியும், 1985—86-ல் பட்ஜெட் மதிப்பீடாக ரூ. 222.23 கோடியும் ஆயத்தீர்வையாக வருவாய் வருமென்று நிதிநிலை அறிக்கை நமக்கு தெரிவிக்கிறது. ஆனால் இந்த ஆயத்தீர்வை மானியத்தின் மீது ஆக்கப்பூர்வமாக எப்படி நாம் இந்த வருவாயை அதிகரிக்கலாமென்று யோசனைகளைத் தெரிவிப்பதற்கு முன்பாக இந்த மதுவிலக்குக் கொள்கை என்பதில் அறிவுபூர்வமாக அரசு இருக்கிறதா இல்லையா என்பதற்கான கருத்துக்களை ஒரு சில நிமிடங்கள் இந்த மன்றத்தில் எடுத்து வைப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

இந்த அரசின் சார்பாக இந்த மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில் முதலில் கள்ளச் சாராயம் தயாரிப்போர், விற்பனை செய்வோர் ஆகியோர் பிடியில் குடிப்பழக்கம் உள்ளோர் சிக்கித் தமது உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதைத் தவிர்ப்பது என்பது இத்திட்டத்தில் முக்கியமான நோக்கமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நோக்கத்தைப் பொறுத்தவரையில் கள்ளச்சாராயக்காரர்களின் பிடியிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்காக இந்த அரசு நல்ல சாராயம் கொடுக்க இருக்கிறது என்றுதான் பொருள்படும். ஒரு அரசாங்கம் மக்களுக்கு கள்ளச் சாராயத்தை கொடுத்தாலும், நல்ல சாராயத்தைக் கொடுத்தாலும் விளைவுகள் ஒன்று தான் என்பதை இந்த அரசாங்கம் நன்றாக அறியும் என்று நம்புகிறேன்.

ஆனால் அரசாங்கம் ஏதோ வணிக நிறுவனத்தைப் போல, "இதுதான் ஆதிகாலத்து ஒரிஜினல் நெய் மிட்டாய் கடை" என்று விளம்பரப்படுத்துவதைப் போல, நல்ல சாராயம் கொடுக்கிறோம், கள்ளச் சாராயத்தைக் குடிக்க வேண்டாம் என்று சொல்வது வேடிக்கையான நோக்கம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு அரசாங்கத்தின் நோக்கங்கள் புனிதமாக இருந்திடல் வேண்டும். நக்சல்பாரிகள் என்று சொல்லப்படுபவர்களின் நோக்கங்கள் புனிதமானவை என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களின் நடைமுறைதான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை அரசியல் விற்பன்னர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் ஒரு அரசாங்கம் கள்ளச் சாராயத்தின் பிடியிலிருந்து மக்களை தப்புவிப்பதற்காக





நல்ல சாராயத்தை வழங்குவோம் என்று சொல்வது, இனிப்புக்கு விஷம் தருகிறேன், சாப்பிடு என்று சொல்வதற்கு ஒப்பாகுமென்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதுவிலக்குக் கொள்கை பற்றி பேசுகிற நேரத்தில் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று, 1971-ம் ஆண்டிலிருந்து 1977-ம் ஆண்டு முடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலம். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருந்த காலம். மதுவிலக்கு பற்றி பேசிய காலம் 1977 முடிவுவரையிலும். 1977-லிருந்து இன்றுவரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்காலம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கு பற்றி சொல்லிய கருத்துக்கள், அரசாங்கத்தினுடைய நிலைகள். இவைகள் எல்லாம் இரண்டாவது நிலையாகும். இந்த அரசைப் பொறுத்தவரையில் 1977-லிருந்து இன்று வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தின் சார்பாக எடுத்துச் சொல்லிய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைப்பதன் மூலமாக எந்த அளவிற்கு இந்த அரசாங்கம் கொள்கைக் குழப்பம் அடைந்திருக்கிறது என்பது இந்த மன்றத்திற்குத் தெரிய வரும்; நாட்டு மக்களும் உணர்வார்கள். 1977-ம் ஆண்டிலிருந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிபீடம் ஏறிய நாளிலிருந்து, மரியாதைக்குரிய முதலமைச்சர் இந்த மதுவிலக்குக் கொள்கை பற்றி சொல்லிய கருத்துக்களை மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

29—9—1978-ம் நாளன்று மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அண்ணா பத்திரிகையில் அறிவிப்பு கொடுக்கிறார்கள். காந்தி அவர்கள் பிறந்த அக்டோபர் இரண்டாம் தேதியிருந்து நான் ஒரு புதிய சட்டத்தை அமல் நடத்த இருக்கிறேன். அந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் எப்படி இருக்குமென்றால், "எந்த ஜாதிக்காரனாக இருந்தாலும் குடித்தால் அவனுக்கு ஆறு மாத காலம் கடும் சிறைத் தண்டனை விதிக்கப்படும். அதிகாரிகளோ, அமைச்சர்களோ, என்னையும் உள்ளடக்கி, குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டால் ஒரு ஆண்டுக் காலம் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று 29—9—1978 ஆம் நாளன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பீடம் ஏறியதற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

அதைத் தொடர்ந்து 2—12—1979-ஆம் நாள் அன்று எம். ஜி. ஆர். அவர்கள் தெரிவிக்கிறார்கள். என்னுடைய உயிர் மூச்சு இருக்கும்வரை, என்னுடைய சத்தியத் தாயின் மீதாகச் சொல்கிறேன், நான் மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றி, நிச்சயமாக நாட்டிலே மது

விலக்கைத் தளர்ந்திவிட்டு, மீண்டும் மதுக் கொடுமைகளுக்கு மக்கள் ஆளாகின்ற வகையில் கிஞ்சிற்றும் இடம் கொடுக்க மாட்டேன் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதற்குப் பின்னாலே 1973-ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் ராஜாஜி அவர்கள் நினைவு நாள் கூட்டத்தில் திருவல்லிக்கேணியில் பேசுகிறபோது தெரிவிக்கிறார்கள். மது விலக்குக் கொள்கை என்பது ராஜாஜி அவர்களாலே போற்றப்பட்ட கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்களாலே போற்றப்பட்ட கொள்கை. எனவே அந்தக் கொள்கைக்கு ஊறு விளைவிக்க கிஞ்சிற்றும் நான் விரும்பமாட்டேன் என்று தெரிவிக்கிறார்கள்.

அதற்குப் பின்னாலே 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மது விலக்கு மீண்டும் ரத்து செய்யப்பட்டு, மதுக் கடைகள் திறக்கப் படுகின்றன. அதற்குப் பின்னாலே 9–4–1984 அன்று நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மதுவிலக்கை நான் நிச்சயமாக அமுல் செய்ய இருக்கிறேன், 1981-லே மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, மதுக் கடைகளை திறந்துவிட்டு, 9–4–1984 அன்று சட்டப்பேரவையிலே உரையாற்றுகின்ற நேரத்திலே நான் மது விலக்கை மீண்டும் அமுல்படுத்த இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அதற்குப் பின்னாலே 22–6–1984 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் ஒரு அறிக்கையை வைக்கிறார்கள். என்ன அறிக்கை ? அரசாங்கத்தின் சார்பாக காலையில் பத்திரிகை நிருபர்களைக் கூட்டி, சாராயக் கடைகள் மாலை 6 மணி வரையில்தான் இருக்கும், அதற்கு மேல் வியாபாரம் செய்யக்கூடாது என்று உத்தரவிடுகிறார்கள். ஆனால் அன்றையதினமே மாலையில் அரசாங்கத்தின் சார்பாக ஒரு அறிக்கை கொடுக்கப்படுகிறது. என்ன அறிக்கை ? அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு, மீண்டும் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டபடி 6 மணிக்கு மேலே அவர்கள் வியாபாரம் செய்யலாம் என்ற உத்தரவை அரசாங்கத்தின் சார்பாக வழங்கப்படுகிறது.

இதற்குப் பின்னாலே, தினமணி இதழில் 23–7–1984 அன்று நம்முடைய மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். என்ன அந்த அறிவிப்பு ? அண்ணா பிறந்த செப்டம்பர் திங்களில் மீண்டும் மதுவிலக்கு தமிழ்நாட்டிலே அமுல் படுத்தப்படும் என்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதற்கு அடுத்து, இந்த மதுவிலக்குக் கொள்கையில் எவ்வளவு குழப்பங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதற்கு இன்னும் பல சாட்சியங்கள் உண்டு. 3–5–1981-ல் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றவர்கள் தான் குடிக்கலாம் என்று ஒரு உத்தரவைப் போடுகிறார்கள். அதற்குப் பின்னாலே அனுமதி பெற்றுத்தான் இந்த நாட்டிலே குடிப்பழக்கத்திற்கு எல்லோரும் ஆளானார்களா என்பதைப் பற்றி நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.



அந்தக் காலகட்டத்தில் வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் அதைத் தொடர்ந்து 18-7-1981-லே வெளிவந்த ஹிந்து பத்திரிகையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறை நல்ல முறையல்ல, ஏற்கனவே பெர்மிட் மூலம் குடிக்கலாம் என்ற முறையை மீறி இன்றைக்கு எல்லோருமே குடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த கண்டிசனை, இந்த நிபந்தனையை யாரும் இன்று கடைப்பிடிப்பதாக அனுசரிப்பதாக இல்லை என்பதை மொத்த வருத்தத்தோடு அந்தப் பத்திரிகைகள் எழுதியிருக்கிறார்கள்.

அதைத் தொடர்ந்து 23-5-1981-ல் அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப் படுகிறது. அதன் மூலமாக பீர், விஸ்கி, பிராந்தி போன்ற வியாபாரங்களை 2 மாதம் வரையிலும் நடத்தலாம், அதற்குப் பின்னாலே நடத்த அனுமதி இல்லை என்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அதற்குப் பின்னாலே அதைத் தொடர்ந்து 20-7-1981-ல் அதை ரத்து செய்து 31-8-1981 வரை அவர்கள் நடத்தலாம் என்று மீண்டும் ஒரு உத்தரவை அரசாங்கம் போடுகிறது.

அதோடு இந்தச் சாராயக் கலவைத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அந்த விண்ணப்பங்கள் கோரப்படுகிறபோது, அரசின் கூட்டுறவுத் துறையின் சார்பாக அன்றையதினம் விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

(முற்பகல் 11—30)

இவற்றை எல்லாம் நான் சொல்வதற்கு காரணம் 1981-லிருந்து இன்று வரையில் இந்த மது விலக்குக் கொள்கையில் இந்த அரசு நிரந்தரமான கொள்கையை பின்பற்றி வந்து இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. நிரந்தரம் இல்லாத கொள்கை, நேரத்திற்கு ஒரு உத்திரவு, நேரத்திற்கு ஒரு அறிக்கை என்ற அளவில்தான் இந்த அரசு கடந்த காலத்தில் மது விலக்கு கொள்கையை பொருத்த வரையில் பின்பற்றி வந்த கொள்கை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேடிக்கையாக ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் ஏதாவது ஒரு நடனம்; இது பரத நாட்டியமா; அல்லது கதகளியா ; அல்லது குச்சிப்பிடியா ; என்று கேட்டால் இந்தக் காலத்தில் சொல்வார்கள். மூன்றும் இல்லை ; இது ஒரு டிஸ்கோ நடனம் என்று சொல்வார்கள். அதேபோல் இது என்ன நிறம் என்று கேட்டால் விளங்காத நிறத்திற்கு எல்லாம் டிஸ்கோ கலர் என்று சொல்கிறார்கள். அதுபோல தான் இந்த மது விலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் அரசு ஒரு டிஸ்கோ

கொள்கையை பின்பற்றுகிறது என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதுதான் இன்றைக்கு இந்த அரசினுடைய மது விலக்குக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள நிலைமை ஆகும்.

அடுத்து, 1-7-1985-ல் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். யாரையும் புண்படுத்தவேண்டும் என்பதற்காக அதை நான் சொல்லவில்லை மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் அதுவும் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவர் அதுவும் இந்தத் துறையை அவர் கவனித்து வந்தவர் எனவே அவர் சார்பாக இந்த கருத்தை தெரிவித்து இருப்பதன் மூலமாக மன்றம் மேலும் சில விளக்கங்களை விளங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக இதை தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். ரே கமிஷன் உருவானதற்குக் காரணம் அல்லது ரே கமிஷன் போடப்பட்டதற்குக் காரணம் நான் ஊரில் இல்லாத நேரத்தில் நான் இல்லாத நேரத்தைப் பயன்படுத்தி அந்த கோப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டார்கள். அதன் காரணமாகத்தான் இந்த, ரே கமிஷன் போடப்பட்டது என்று 1-7-1985-ல் பேசி பல்வேறு பத்திரிகையில் இன்றைக்கு பிரசுரம் ஆகியிருக்கிறது. எனவே இந்த மதுவிலக்குக் கொள்கையில் முன்னுக்குப்பின் முரணான கொள்கையை அரசு மீண்டும் மீண்டும் கடைப்பிடிக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிப்பது என்னுடைய கடமை ஆகும்.

இன்னும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் திங்களில் இந்த அரசு மது விலக்குக் கொள்கையை அமுல் படுத்த இருக்கிறதா என்று மக்களும் இந்த மன்றமும் இந்த அரசிடமிருந்து பதில் உரையிலே எதிர்பார்க்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் இந்த ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ ரூபாய் 220.23 கோடி இந்த அரசுக்கு இந்த ஆண்டு 1985-86-ல் வரும் என்று உங்களுடைய கொள்கைக் குறிப்பும் நிதிநிலை அறிக்கையும் தெரிவிக்கிறது. ஆனால் இதற்காக சமீபத்தில் கூட ஒரு திருத்தச் சட்டத்தை இந்த அரசு இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்தது. அதன் மூலமாக தமிழ் நாட்டில் உள்ள வாணிபக் கழகம் என்ற ஒரு அமைப்பின் மூலமாகத்தான் 1983-ல் மொத்த வியாபாரம் ஆரம்பித்தது. கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்த வாணிபக் கழகம் 1983ல் இருந்து மொத்த வியாபாரம் செய்து கொண்டு இருந்தது. ஆனால் மொத்தவியாபாரத்தோடு இன்றைக்கு சில்லரை வியாபாரத்



தையும் அந்த வாணிபக் கழகம் செய்யும் என்று இன்றைக்கு ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள். அரசாங்கமே ஏற்று இந்த வாணிபக் கழகத்தின் மூலம் சில்லரை வியாபாரம் செய்வதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

ஆனால் அதற்குப் பின்னால்தான் பிரச்சினை வருகிறது. வாணிபக் கழகம் ஏஜெண்டுகளை நியமிக்கலாம், முகவர்களை நியமிக்கலாம் என்று வருகிறபோது எங்களுக்கு இந்த அரசின் மீது ஐயப்பாடு வருகிறது. இந்த முகவர்கள் யார்? அவர்களை எப்படி நியமிக்கப்போகிறீர்கள்? அவர்களுக்கு என்ன தகுதிகள் தேவை என்பதை எல்லாம் இந்த அரசு இதுவரையில் நாட்டு மக்களுக்கோ இந்த மாமன்றத்திற்கோ தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். எனவே எங்களுக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் இது இந்த அரசினுடைய வாணிபக் கழகம், இவர்கள் இந்த ஏஜெண்டுகளை, முகவர்களை நியமிப்பதன் மூலமாக அரசியல் செல்வாக்கு கலந்து விடும். அரசியல் செல்வாக்கு காரணமாக முகவர்களை நியமிக்கக்கூடிய அதிகப்பட்ச வாய்ப்பு உங்களுடைய திருத்தச் சட்டத்திலே இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை நான் தெளிவுப்படுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு ஏஜெண்டுகள் மூலமாக நீங்கள் வியாபாரம் செய்யலாம் அல்லது வாணிபக் கழகம் மூலம் சில்லரை வியாபாரம் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எப்படி ஏஜெண்டுகளை நியமிக்க இருக்கிறீர்கள். எந்த எந்தப் பகுதிகளுக்கு எத்தனை ஏஜெண்டுகளை நியமிக்கப்போகிறீர்கள் இவர்களுக்கும் வாணிபக் கழகத்திற்கும் தகராறு வந்தால் நீதி மன்றத்திற்குச் செல்லக்கூடாது என்று வேறு சொல்லியிருக்கிறீர்கள்.

எனவே, நீதிமன்றத்திற்கு செல்லக்கூடாது என்று சொன்னால் முழுக்க, முழுக்க, அரசியல் செல்வாக்குப் பெற்றவர் தான் முகவராக, ஏஜெண்டாக இருக்கமுடியுமே அல்லாமல் நியாயத்தின் பால், நியாயத்தின் அடிப்படையில் தொழில் செய்யக்கூடிய முகவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ், இந்தச் சட்டத்தின் கீழ், முகவர்களாக, ஏஜெண்டுகளாக இருந்து சாராய வியாபாரத்தைச் செய்யமுடியாது என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நமது அரசாங்கத்தின் சார்பாக, ஆயத் தீர்வையை அதிகரிக்க வேண்டும், வருவாயை அதிகரிக்க வேண்டும், அந்த வருவாயை சத்துணவுத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், அதே நேரத்தில், வருவாயை எப்படி அதிகரிக்கலாம் என்பதில் நீங்கள் பார்க்கின்ற பார்வை வேறு விதமாக இருக்கிறது. இப்போது 9 கலவைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த 9 கலவைத் தொழிற்சாலைகள் தனிப்பட்ட 9 நபர்களுக்குச் சொந்தமாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலே கூட, எங்களுக்கு கிடைத்திருக்கிற தகவல்படி, சில பேர் தமிழ்நாட்டுக்காரர்களாகவும், சில பேர் வெளி மாநிலத்தைத் சேர்ந்தவர்களாகவும் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றைக்கு இலாபமாக ஆண்டுதோறும் எடுத்துக் கொண்டுச் செல்கிறார்கள்.

250 மில்லி கொண்ட ஒரு பாட்டில் 7 ரூபாய் 41 காசு என்று சொல்கிறார்கள். அதிலே செலவு நீக்கி, எல்லவற்றையும் நீக்கினாலும், 1 ரூபாய் 50 காசு இலாபமாக, நிச்சயம் வரும்-என்று கணக்குச் சொல்கிறார்கள். இது தோராயமான கணக்குத் தான். வேறுபாடு இருக்குமானால், அமைச்சர் தன் பதிலுரையில் தெரிவிக்கலாம். திருத்திக் கொள்ள தயாராக இருக்கிறேன்.

இரண்டு கோடி பாட்டில் ஒரு மாதத்திற்கு விற்பனை ஆகிறது என்று சொல்கிறார்கள். 2 கோடி பாட்டில் ½ ரூபாய் மாதத்திற்கு என்று சொன்னால் 3 கோடி ரூபாய்; ஒரு வருடத்திற்கு 36 கோடி ரூபாய். எனவே, 36 கோடி ரூபாய் தோராயமாக வருமானம் வரக்கூடிய ஒரு தொழிலை இன்றைக்கு ஏன் என்ன காரணம் கருதி, என்ன உங்களுக்கு டெக்னிக்கல் அசிஸ்டென்ஸ் (Technical Assistance) தேவை என்று கருதி, எதற்காக, என்ன உண்மையான காரணத்தின் அடிப்படையில் தனிப்பட்ட நபர்கள் அந்த இலாபத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே இந்த அரசாங்கம் தெளிவாக்கவேண்டும்.

இந்த பிளெண்டிங், பாட்டிலிங் யூனிட்—சாராயம் (Blending and Bottling) கலக்குகின்ற அந்தத் தொழில்சாலைக்கு-டெக்னிக்கல் நோ-ஹௌ—பிரத்யேகமாக (Technical Knowhow) வெளிநாடுகளிலேயிருந்து அறிந்து வரவேண்டும் என்ற அவசியம் இல்லை. எரி சாராயத்தையும், தண்ணீரையும் அளவோடு கலந்து சில நாள் வைத்தால், எடுப்பது குடி சாராயமாக மாறிவிடும். எனவே, அதற்கு டெக்னிக்கல்-நோ-ஹௌ (Technical Knowhow) தேவை இல்லை.

அப்படி இருந்தும் கூட, எதற்காக ஒரு தனி மனிதன் எந்த விதமான சிரமும் இல்லாமல், அதற்காக பிரத்யேகமாக தொழிற் பயிற்சி கல்வி கூடப் பெறாமல், ஒரு சாதாரண மனிதர்கள் தான் அந்த 9 பேர் இந்த கோடிக்கணக்கான ரூபாயை கொள்ளையடித்து கொண்டிருக்கிறார்களே, அரசாங்கத்தின் கவனத்திற்கு இது எட்டவில்லையா ? எட்டியிருக்குமானால், பதிலுரை என்ன என்பதை மன்றமும், மக்களும் வெகுவாக எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



எனவே, இன்றைக்கு இந்த பாட்டிலிங்-பிளெண்டிங் யூனிட்டுகளைப் பொறுத்தவரையில், நாட்டுடைமையாக்கப்படுவதன் மூலமாக, அரசாங்கம் ஏற்றுக் கொள்வதன் மூலமாக ஏறத்தாழ 30 கோடியிலிருந்து 40 கோடி ரூபாய் இந்த ஆயத் தீர்வை கூட இருக்கிறது.

அதுமட்டும் அல்ல, இங்கே ஏற்கனவே இருந்த முன்னாள் தொழிற் துறை அமைச்சர் அவர்கள் ராணிப்பேட்டையிலே ஒரு தொழிற்சாலையை திறந்து வைத்துக் பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். என்ன கருத்து? உற்பத்தி செய்கின்ற அந்த வீரியம் நிறைந்த (Power Alcohol) சாராயத்தில் 50 சதவீதத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதாக அறிவித்திருந்தார். அசிட்டிக் ஆசிட், இந்த விரியம் உள்ள சாராயத்தை தொழிற்சாலைகள் மூலம் உருவாக்குகின்ற பொருட்களுக்கு வழங்குகிறோம் என்று அமைச்சரவர்கள் ஏற்கனவே ஒத்துக் கொண்டிக்கிறார்கள். அப்படி வழங்கினால் தான் அதையே நம்பி இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், அந்தச் சாதாரண தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படமுடியும். இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை, முன்னாள் தொழில் அமைச்சர் ராணிப்பேட்டையில் கொடுத்த வாக்குறுதியை இன்றைக்கு கடைப்பிடிக்கவில்லை.

அவர்களுக்கு அந்த 50 சதவீதம் விரியம் நிறைந்த சாராயம் இதுவரையிலே வழங்கப்படாத காரணத்தினாலே அந்தத் தொழிற்சாலையிலே உற்பத்திச் செய்யக்கூடிய பொருட்கள் எல்லாம் இன்றைக்குப் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்று அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து எங்களுக்கு தகவல் வருகிறது.

எனவே, இதுபோன்ற எண்ணற்ற குறைபாடுகள் இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் மறைப்பதற்காக அரசாங்கத்தின் சார்பாக என்ன சொல்கிறார்கள்? அழகாகச் சொல்கிறார்கள். இந்தப் பணம் எல்லாமே சத்துணவு போடுவதற்குத் தானே செலவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன்.

கிராமப் பொருளாதாரம் என்பது இன்றைக்கு முழுக்க முழுக்க சீரழிந்து விட்டது. சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும், மதுபானக் கடைகளும் எங்கு பார்த்தாலும் இருக்கின்ற காரணத்தினாலே, கிராமப் பொருளாதாரம் என்பது அடியோடு பாழ்பட்டு விட்டது.

20 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய ஒரு தொழிலாளி, ஆரம்பத்தில் 5 ரூபாய்க்குக் குடிக்கப் பழக்கப்பட்டு, பின்னர் 5, 10 ஆகி, 10, 15 ஆகி, 15, 20 ஆகி, இன்றைக்கு வாங்குகிற சம்பளம் முழுவதையும் குடித்தே தீர்த்துவிட்டு, வேறு வழியில்லாது,

[திரு. பொன் முத்துராமலிங்கம்]

மனைவி மக்களுடைய சங்கிலி, பண்ட பாத்திரங்களை அடகு வைக்கக்கூடிய சூழ்நிலை, ஏன்? அவல நிலை இன்றைக்கு கிராமத்திலே வளர்ந்து கொண்டிருக்கிறது. அனைத்து உறுப்பினர்களுக்கும் இது மிகவும் நன்றாகத் தெரியும். ஆனால் கவர்ச்சிகரமாகச் சொல்லுகின்றீர்கள், சத்துணவுக்காகச் செலவழிக்கிறோம் என்று. அப்பனிடம் 20 ரூபாயைச் சாராயத்தின் மூலமாக வாங்கிக்கொண்டு, 20 பைசாவுக்கும், 30 பைசாவுக்கும் சத்துணவு போடுகிறோம் என்று சொல்கிறீர்கள். அப்பனைக் குடிக்க வைத்துவிட்டு, அப்பன் குடிப்பதற்கான வாய்ப்பினை உண்டாக்கிக் கொடுத்துவிட்டு, அவன் குடித்து அழிந்து கொண்டிருக்கின்றபொழுது, பார் பார், அரசாங்கத்தின் சமூக நலத் திட்டத்தைப் பார் என்று சொல்லுகிறீர்கள்.

(முற்பகல் 11-40)

அழிந்து கொண்டிருக்கும் தகப்பனுடைய பிள்ளைக்கு 20 பைசாவில், 30 பைசாவில் சோறு போடுகிறேன், சத்துணவு போடுகிறேன் என்று சொல்லுகின்ற அந்த வாதம் பொருத்தமான வாதம்தானா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையை மனத்திற்கொண்டு, மதுவிலக்கு சம்பந்தமாக நீங்கள் கொடுத்திருக்கின்ற வாக்குறுதியை, என்னுடைய வாக்குறுதி என்று முதலமைச்சரவர்கள் நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்களே, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது ஒரு நியாயமான அரசினுடைய தார்மீகக் கடமை. அந்தக் கடமையை இந்த அரசு உறுதியாகச் செய்யும் என்று மனதார நம்புகிறேன் என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**திரு. ஆர். தியாகராாசன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, சாராய விலை ஐந்து, பத்து என்று சொன்னார்கள். ஐந்து என்பது எந்தக் காலம், பத்து என்பது எந்தக் காலம் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பொன் முத்துராமலிங்கம் ;** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இருபது ரூபாய் சம்பளம் வாங்குகின்ற ஒரு கிராமத் தொழிலாளி சாராயக் கடைகளும் கள்ளுக் கடைகளும் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் ஐந்து ரூபாய்க்குக் குடிக்கப் பழக்கப்பட்டான். பிறகு குடிப் பழக்கம் அதிகமாக ஆகி, உணர்வினால் உந்தப்பட்டு ஐந்து பத்தாக ஆகி பத்து பதினைந்தாக ஆகி, இன்னும் அளவிலே சொல்ல வேண்டுமென்றால், 50 மில்லி 100 மில்லியாகி, 100 மில்லி 150

மில்லியாக ஆகி, 150 என்பது 200 மில்லியாக ஆகி இறுதியில் வாங்குகின்ற சம்பளம் முழுவதையுமே செலவிடுகின்ற காலம் இந்தக் காலம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. பெரியசாமி ; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. ஐந்து ரூபாய்க்கு அன்றைக்குச் சம்பளம் வாங்கியவன் இன்றைக்கு எவ்வளவு சம்பளம் வாங்குகிறான் ? அன்றைக்கு 5 ரூபாய் வாங்கியதும், இன்றைக்கு 10 ரூபாய் வாங்குவதும் ஆகிய இரண்டும் ஒன்றுதான். அதைத்தான் சொல்ல வந்தேன்.

*திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு, ஆயத்துறை மானியத்தில் கலந்து கொண்டு என்னுடைய சில கருத்துக்களை இம்மாமன்றத்தில் கூறுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய உளம் கனிந்த நன்றியினைக் கூறித் தொடங்குகின்றேன்.

மாற்றுக் கட்சி நண்பர், மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபொழுது, பல நேரங்களில் குடித்தால் தண்டனை கொடுப்போம் என்றும், அதுவும் பொறுப்பு உள்ளவர்கள் குடித்தால் அதிக தண்டனை கொடுப்போம் என்றும், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல நேரங்களில் கூறி இருக்கிறார்கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைதான். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய உள்ளக்கிடக்கையும் கூட அதுதான். யாரும் குடிக்கக் கூடாது அவ்வாறு குடித்தால் உள்ளபடியே அவர்கள் தண்டனைக்கு உரியவர்கள்தான் என்பதை உணர்ந்துதான் அவ்வாறு அவர்கள் பலமுறைகளிலே கூறிவந்திருக்கிறார்கள். அவர்களுடைய இன்றைய எண்ணமும்கூட அதே எண்ணம் தான் என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

1937 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மதுவிலக்குச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் சிலகாலம் மதுவிலக்குக் கொள்கை அமலில் இருந்தது, ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் அரசோச்சிய காலத்திலே, அது தமிழ்நாட்டிலும், குஜராத்திலும் தவிர அகில இந்தியாவிலேயும் வேறு மாநிலங்களில் மது விலக்குக் கொள்கை அமலில் இல்லை என்றும், அதனால் சாராயம் சாப்பிடுபவர்கள் அண்டை மாநிலங்களுக்குச் சென்று பணத்தை அங்கே செலவழிக்கிறார்கள் என்றும், அவ்வாறு போக முடியாதவர்கள் ஆங்காங்கே கிடைக்கின்ற கள்ளச் சாராயத்தைக் குடித்து உடல் நலனைக் கெடுத்துக் கொள்கிறார்கள் என்றும், அவ்வாறு கெடுத்துக் கொள்வதன் விளைவாக அவர்களும்

அழிகிறார்கள். நாட்டிலுள்ள பணமும் அண்டை மாநிலங்களுக்குச் செல்கிறது என்றும், எரியும் வளைவான தீப்பந்தங்களுக்கு மத்தியில் எரியாத கற்பூரமாகத் தமிழகம் மட்டும் எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும் என்றும் கேள்விகளைத் தமிழகத்தில் கேட்டது. அதன்காரணமாக மது விலக்குச் சட்டத்தைத் தளர்த்தினார்கள். அவ்வாறு தளர்த்தியதற்குப் பிறகுதான் இங்கே ஒவ்வொரு கிராமங்களிலேயும்கூட குடித்துப் பழக்கம் இல்லாத நபர்களெல்லாம்கூட குடிக்கக் கற்றுக் கொண்டார்கள். அதனால்தான் காமராஜர் படிக்க வைத்தார், கலைஞர் குடிக்க வைத்தார் என்ற சுலோகங்கள் கூட நாட்டிலே சொல்லப்பட்டன. அவ்வாறு அவர்கள் சாராயம் நடமாடுவதற்கு உதவியாக, உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால், வள்ளுவர் பெருந்தகை.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"

என்று மிக அழுத்தமாகவும் வலிவாகவும் சொல்லியிருக்கிறார்கள். இருமனப் பெண்டிர் தொடர்பும், கள்ளின் தொடர்பும், சூதின் தொடர்பும் தங்களிடம் இருக்கும் செல்வத்தை நீக்கிவிடும் தொடர்பாக அமைந்துவிடும் என்ற பொருள்படச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு நீங்கும் பொருள் எங்கே போய்ச் சேர்கிறது என்று பார்ப்போமானால் கள்ளால் நீங்கும் பொருள் எல்லாம் கயவர்கள் கையிலே சேர்கிறது. அவ்வாறு கயவர்கள் கையிலே சேருமானால் அந்தப் பணம் நாட்டுக்காகப் பயன் படுவதில்லை. அந்தப் பணம் எங்கோ போய்ச் சேருகிறது. அந்தப் பணத்தை அரசுக்காக, அரசு செலவிடுவதற்காக, அரசுப் பணிகளைச் செய்வதற்காகச் செலவிடப்பட வேண்டுமென்றுதான் கலைஞர் அவர்கள் இந்த நாட்டிற்குச் செல்வம் சேர வேண்டுமென்று கருதி, இந்த மது விலக்குக் கொள்கையைத் தளர்த்தினார்கள். அதன் விளைவாக, நாடே அமளி, துமளியாகி எல்லோரும் குடிக்கக் கற்றுக் கொண்டார்கள்.

அதன்பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு மது விலக்குக் கொள்கையைப் பூரணமாகக் கொண்டு வரவேண்டுமென்று கருதினார்கள். அவ்வாறு பூரணமாகக் கொண்டு வந்தால், நாட்டிலே என்ன நிலைமை ஏற்படும் என்று கருதி, பூரணமாகக் கொண்டு வந்தால் நாட்டிலே இருக்கும் நிலைமை மோசமாகிவிடும் என்று கருதி, தமிழ் நாட்டில் உள்ள மத்தியதர வகுப்பினரும், வசதியுள்ளவர்களும் மது அருந்த அண்டை மாநிலங்களுக்குச் சென்று விடுவார்கள். அவ்வாறு சென்றுவிட்டால் கள் துறையிலேயிருந்து வரும் பணமெல்லாம் எங்கோ அண்டை மாநிலத்திற்குச் சென்று



விடப்போகிறது. அது தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்படப் போவதில்லை என்று கருதித்தான் இந்த மது விலக்குக் கொள்கையைச் சிறிது தளர்த்தி உள்ளார்கள். அவ்வாறு தளர்த்தியதன் விளைவாகத்தான் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் தமிழகத்திற்கு வருகின்றன.

அவ்வாறு தமிழகத்திற்கு வரும் கோடிக்கணக்கான ரூபாய்களை எப்படியாவது தடுத்தி நிறுத்தி விடலாம் என்று கருதித்தான் திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படியாவது அண்ணா பிறந்த நாளிலிருந்தாவது இந்தக் கொள்கையை அமுலில் இருந்து நீக்கி விட வேண்டாமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நீக்கி விட்டால் உடனே மத்தியதர வகுப்பினரும் வசதியுள்ளவர்களும் மது அருந்த அண்டை மாநிலங்களுக்குச் செல்ல மாட்டார்களா? தமிழ் நாட்டின் பணம் அண்டை மாநிலங்களுக்குப் போய் விடாதா? ஏழை, எளிய மக்கள் கள்ளச் சாராயம் அருந்தத் தலைப்பட மாட்டார்களா? அவ்வாறு ஏழை, எளிய மக்கள் கள்ளச் சாராயம் சாப்பிட ஆரம்பித்தால், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் தொகையும், அதைக் கடத்திச் செல்பவர்கள் தொகையும், அதை விற்பவர்கள் தொகையும் அதிகமாகி விடாதா என்பதை இந்த மன்றத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

நவாச்சாரம், பாட்டரி செல் போன்றவற்றைப் போட்டுச் சாராயம் காய்ச்சினால் சாராயம் எந்த அளவுக்கு உடலுக்கு ஊறு விளைவிக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ் நாட்டில் கள்ளச் சாராயத்தின் மூலம் தனிப்பட்ட குண்டர்களுக்குப் போய்ச் சேருகிற பணம், தமிழக அரசுக்கு வந்தால் என்ன தவறு? வெளிமாநிலத்திற்குச் செல்லும் பணம் நம் அரசுக்கு வந்தால் என்ன தவறு? அரசுக்கு வரும் வருமானம் தடைப்படாதா? அதன் மூலம் அ.இ.அ.தி.மு.க. அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படாதா? அதில் நாம் குளிர் காய முடியுமா என்று மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நினைப்பது பகல் கனவு தானே தவிர, நடைமுறைக்கு ஒவ்வாதது. அதை மக்களே விரும்ப மாட்டார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் முதல்தான் பூரண மது விலக்கு அமுலுக்கு வரும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் சொன்னது உண்மை. நான் ஒரு கருத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த பொழுது ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று சொன்னார்கள். நாட்டிலே உள்ள மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க மாட்டோமா? கொடுத்தால், ஏழை மக்கள் பிழைக்க மாட்டார்களா என்றுதான் அறிவுறுத்தினார்கள். ஆனால் அரசு

கட்டிலில் ஏறியபொழுது, இருக்கிற நிதிநிலைமையைப் பொறுத்து ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குவது சாத்தியமாவது அல்ல என்பதை அறிந்து, கோயம்புத்தூரிலும் சென்னையிலும் கொள்கை அளவிலே ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசியைப் போட்டுவிட்டு பிறகு முடியாமல் போய்விட்ட நிலைமையை நாமெல்லாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா?

(முற்பகல் 11-50)

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய உள்ளக் கிடக்கை கூட அதுதான். இங்கே பூரணமாக மதுவிலக்கு அமுலில் இருக்க வேண்டும். குடிப்பவர்கள் பாழ்படுகிறார்கள், அவர்களுடைய வாழ்க்கை சுடுகாடாகிறது. ஆகையால் குடிப் பழக்கத்தை நீக்கவேண்டும் என்பதுதான் தமிழக அரசின் கொள்கை என்று சொல்ல விரும்புகிறேன். ஆனால் இந்த நாட்டிலே குடிப்பதை தடை செய்தால், பூரண மதுவிலக்கை அமுல்படுத்தினால் இந்த நாடு நாடாக இருக்காது. ஆகவே மதுவிலக்கை தளர்த்தியாக வேண்டும். அதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற பணம் தமிழ்நாட்டிலேயே இருக்கும் என்று கருதி இந்த சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்,

ஒரு சட்டத்தை இயற்றும்போது தனிப்பட்டவர்களுக்காக இயற்ற முடியாது. தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்க முடியுமோ அதைக் கருதிதான் சட்டம் இயற்ற வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குடிப்பதை கூடாது என்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் சாதாரண நிலையில் உள்ளவர்கள், நடுத்தர வர்க்கத் தினர், ஏழை எளிய மக்கள் எல்லாம் பெரும்பாலும் குடித்து சீரழிகிறார்கள். அவர்களுடைய பணம் எல்லாம் எங்கோ போய்விடக் கூடாது என்ற காரணத்தால் இதுபோன்ற சட்டத்தை இயற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

மதுவிலக்கை அமுல்படுத்தினால் இந்த நாட்டு மக்கள் எல்லாம் திருந்திவிடுவார்கள், நாளை முதல் குடிக்கமாட்டார்கள் என்ற நிலை ஏற்படுமானால் அந்தச் செய்யலாம். ஆனால் இங்கே இல்லை என்றால் உடனே அவர்கள் பாண்டிக்கும், பெங்களூருக்கும், சூளூருக்கும் போய் அன்றாடம் சம்பாதிக்கும் பணத்தை இதிலே பாழ்படுத்துவார்கள் அல்லது வாரந்தோறுமாவது போகாமல் இருக்கமாட்டார்கள், சம்பாதித்த பணத்தை செலவிடாமல் இருக்கமாட்டார்கள். இதை எல்லாம் நாம் கண்கூடாகக் கண்டோம். ஆகவே, இதிலே மேலும் மேலும் வெற்று வாதங்களை ஏன் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். தமிழக அரசு ஒரு பெரிய முனிசிபாலிடிக்கு சமம் என்று சொன்னார்கள். காரணம் அன்றாடம் வரும் பணம் அன்றாடச் செலவுக்குத்தான் சரியாக இருக்கிறது. பெரிய அளவில் ஆலைகளை நிறுவ, திட்டங்களைப் போட நம்மால் முடியாத சூழ்நிலை இருக்கிறது. மத்திய சர்க்கார் கண் திறந்து பார்த்தால்தான் எந்த ஒரு பெரிய திட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டிற்கு பணம் வரும் வழிவகைகளை ஆராய்ந்து, அதற்கான காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தால்தான் இங்கே இதைப்போன்ற சட்டங்களைத் தளர்த்தி தமிழக மக்களுக்கு நல்ல திட்டங்களைச் செயல் படுத்துவதில் இந்த அரசு முனைந்து வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் இங்கே வீண் வாதம் செய்வது அவருக்கோ இந்த நாட்டு மக்களுக்கோ பயன்படப் போவதில்லை. முன்பு சாராயக் கடைகளை ஏலம் விட்டபோது திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பல இடங்களில் ஏலம் எடுத்து பினாமியாகவும் அவர்கள் பெயரிலும் கடைகள் நடத்திவந்ததை நாடு அறியும். இப்போது கூட ஏலம் விட்டால் அவர்களுக்கு சம்மதமாகத்தான் இருக்கும். காரணம் அவர்கள் எல்லாம் வசதிபடைத்தவர்கள். ஆகையால் அவர்களே கடைகளை ஏலம் எடுத்து கடைகளை நடத்தி கொள்ளை இலாபம் அடிக்கிற முயற்சிகளைச் செய்வார்கள். ஆனால் இப்போது லைசென்ஸ் முறையைப் பின்பற்றவிருப்பதால், அவர்களுக்கு கொள்ளை இலாபம் அடிக்க வழிவகை இல்லாததால் இதை எதிர்க்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

உண்மையிலே ஏலம் விடுவதாக இருந்தால் அரசுக்கு எந்த எந்த வகையிலே எவ்வளவு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லோரும் கூட்டாகப் போய், கூட்டு சேர்ந்து கொண்டு, உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன், நீ ஏலம் கேட்கக்கூடாது. உனக்கு 2,000 ரூபாய் தருகிறேன், நீ ஏலம் கேட்கக் கூடாது, வீட்டுக்குப் போங்கள் என்று சொல்லி, ஏலத்தொகையைக் குறைத்து, கடைகளை எடுத்து கொள்ளை இலாபம் அடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை உணர்ந்துதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் புதிய முறையை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் புதிய முறையின் மூலம், இந்தத் துறையின் மூலமாக அரசுக்கு கூடுதல் வருவாய் வரும் என்பதை உணர்ந்துதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் 10-வது பாராவில் "சாராயக் கடைகளை ஏலம்-ஒப்பந்தப்புள்ளி முறையில் விடுவது

சம்பந்தமாக அனுபவ ரீதியில் குறைகளும், அதன் விளைவாக வருவாய் இழப்புக்கான வாய்ப்புகளும் காணப்பட்டுள்ளன; எனவே 1985—86 ஆயத்தீர்வை ஆண்டு முதல் சாராயத்தை சில்லரையில் விற்பதற்கான உரிமையையும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கே அளிப்பதென அரசு முடிவு செய்துள்ளது" என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள்.

பட்ட அறிவின் காரணமாக, அனுபவத்தின் காரணமாக மேற்கண்டவாறு எடுக்கப்பட்ட முடிவு எவ்வளவு சிறந்த முடிவு என்பதை இந்த அரசு ஒளிவு மறைவு இல்லாமல் எதையும் வெளிப் படையாகக் கூறுவதிலிருந்தே இந்த அரசு நல்ல அரசு என்பதைத் தமிழக மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். தமிழ்நாடு வாணிபக் கழகம் லைசன்ஸ் முறையிலே ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்ய இருக்கிறார்கள். அவர்களும் விற்பனை செய்யலாம். ஏஜெண்டுகள் மூலமும் விற்பனை செய்யலாம் என்ற வகையில் அந்தச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. அந்த வாணிபக் கழகத்தை நிர்வாகம் செய்கின்ற அதிகாரி ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. அந்த அதிகாரி அவரது எண்ணத்திற்கேற்ப என்னென்ன விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த விதிமுறைகளுக்கு ஏற்ப லைசன்ஸ் கொடுப்பார்கள். அவ்வாறு விதிமுறைகளுக்கு உட்பட்டுத் தான் லைசன்ஸ் முறையில் அந்தச் சாராயத்தை எடுத்துக்கொண்டு போய் விற்க முடியும். அவ்வாறு இருக்கும்போது ஐ.ஏ.எஸ். படித்த ஒரு அதிகாரி தவறாக நடப்பார் என்ற பொருளா? அல்லது அரசு சொல்லும் செய்தியைக் கேட்டு அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி நடப்பார் என்று அர்த்தமா? எனவே தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஆண்ட காலத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம் அவர்கள் சொன்ன வார்த்தை களை நம்பித் தான் நடந்தார்களா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே துறை தனியாக இருக்கின்றது. அந்தத் துறைக்கு என்று அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்-படி நடக்கப் போகிறார்கள். எனவே உங்களுக்கு அரசின் மீது சந்தேகம் வரக் காரணமே கிடையாது. அவ்வாறு மீண்டும் நீங்கள் சந்தேகப்படுவீர்களேயானால் நீங்கள் சந்தேகப் பிராணிகள் என்றுதான் நாட்டு மக்கள் புரிந்துகொள்வார் களே தவிர நாட்டு மக்கள் எங்கள் மீது சந்தேகப்படப்போவ தில்லை. இதனைத் திட்டவட்டமாக நான் இந்த அவையிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த லைசன்ஸ் முறையின் மூலம் அரசாங்கத்திற்கு முழுத் தொகையும் வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. மேலும் வம்பு இருக்காது, வழக்கு இருக்காது. ஏதாவது ஒரு சிறிய குறையாக



இருந்தாலும் கூட அதைக் காரணமாக வைத்து ஹைகோர்ட்டுக்குச் சென்று ரிட் மனு தாக்கல் செய்வது, அந்த சிறிய காரணத்திற்காக ஏதாவது ஸ்டே வாங்குவதும், பிறகு கடைகளை நடத்தவிடாமல் தடுப்பதும், ஆனால் பணத்தைக் கட்டாமல் கடைகளை நடத்திக் கொண்டு கொள்ளை இலாபம் அடிப்பதும் என்பது போன்ற செய்திகள் இனிமேல் இருக்காது. இனிமேல் அவ்வாறு இருக்காது என்ற காரணத்தால் யாரும் ஐயப்பட வேண்டியதில்லை.

காவல் துறையைச் சேர்ந்த போலீஸ் நண்பர்களுக்கு இந்த நேரத்தில் எங்களுடைய நன்றியைச் சொல்லித்தான் ஆகவேண்டும், தமிழகத்திலே எந்த இடத்திலும் கள்ளச்சாராயமே இல்லை என்று சொல்லும் அளவுக்குச் செய்து விட்டார்கள். இன்றைக்கு கோர்ட்களில் சாராய வழக்குகள் குறைந்துவிட்டன. ஃபர்ஸ்ட் க்ளாஸ் கோர்ட்டிலே சென்று பார்த்தால் சாராய வழக்குகள் இன்று இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக் கின்றது. கொள்கை விளக்கக் குறிப்பின் 25, 26-வது பக்கங்களில் பார்த்தால் அந்த உண்மை தெள்ளத் தெளிவாக விளங்கும். 1982-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலே கள்ளச் சாராயக் காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரம் செய்பவர்கள் சட்டவிரோதமாக பிறர் நிலங்களில் குடிசைப் போடுபவர்கள் ஆகியோரைக் கட்டுப்படுத்த தடுப்புக் காவல் சட்டம் இயற்றி 287 கள்ளச்சாராயக்காரர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதன் விளைவாக 1981—82-ல் 52 இலட்சம் லிட்டர் சாராயமும் 1982—83 ஆம் ஆண்டில் 84 இலட்சம் லிட்டர் சாராயமும் 1983—84-ம் ஆண்டு 308 லட்சம் லிட்டர் சாராயமும் 1984—85 ஆம் ஆண்டில் மார்ச் முடிய 1,146 இலட்சம் லிட்டர் சாராயமும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவைகளிலிருந்து வருகின்ற வருமானத்தை என்னச் செய்யப் போகிறோம்? எல்லாம் அண்டை மாநிலத்திற்கா கொடுத்துவிடப்போகிறோம்? அல்லது அண்டை நாட்டிற்கா கொடுத்துவிடப் போகிறோம்? இவை எல்லாம் தமிழக மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு உதவ வில்லையா? இன்று கூட புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பல திட்டங்களை எல்லாம் அறிவித்து ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களை எல்லாம் தீட்டவில்லையா? இந்தப் பணம் எல்லாம் எங்கே போகப் போகிறது? வீணாகப் போகக்கூடிய பணத்தை திசை திருப்பி நல்ல முறையில் செலவிட புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஆயத்தம் செய்திருக்கின்றது என்பதைத்தான் இந்த மன்றத்தின் மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். கள்ளச்சாராயம் ஒழிந்து விட்டது என்பதை மக்கள் தெரிந்துகொள்வார்கள். லைசன்ஸ் முறையிலே சாராயம் வியாபாரம் செய்பவர்களின் எண்ணிக்கை கூடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

1981 ஆம் ஆண்டில் 812 இலட்சம் லிட்டர் சாராயம் தயாரிக்கப்பட்டு பல்க்கில் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4 வீதம் மொத்தம் 32.49 கோடி அளவுக்கு ஆயத்தீர்வை கிடைத்திருக்கின்றது. அது தவிர லிட்டர் ஒன்றுக்கு 56 பைசா வீதம் விற்பனை வரியும் கிடைத்திருக்கின்றது. கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 6-ல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு சாராயத்தை அனுப்புவதற்கு முன்னால் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய்6 வீதத்தில் ஆயத்தீர்வை விதிக்கப்படுகின்றது என்பதை எண்ணிப்பார்க்கும்போது வளர்ந்து வரும் தமிழகத்தில் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்த இந்தத் தொகை உதவும் என்பதைப் பொறுத்தவரையில் எள்ளளவும் ஐயமில்லை என்பதை இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

பீர், பிராந்தி, மாஸ் வொயின் என்று சொல்லக் கூடிய மது வகையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அதன் மூலம் வரும் வருமானம், இந்த அரசுதான் பெறப்போகிறது. ஆகவே இந்த அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ அந்த அளவுக்கு நல்ல பல சிறப்பான திட்டங்களுக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செலவிடப் போகிறது என்பதை நான் இங்கே இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மது விலக்குக் கொள்கையைப் பின்பற்றும் அரசுதான் இன்றைக்கு இங்கே இருக்கிறது. நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணம் மதுவிலக்குக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம்தான். அகில இந்தியாவிலேயும் மது விலக்குக் கொள்கை பின்பற்றப்படுமேயானால், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் முதலிலே அதைப் பின்பற்றும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தியா பூராவும் அந்தக் கொள்கை அமல்படுத்தாத நிலையில், தமிழகம் மட்டும் அதைப் பின்பற்றினால், நாடு என்ன ஆகும் என்பதை நினைத்துப் பாருங்கள். அந்த வகையிலேதான் மதுவிலக்கு கொள்கையைத் தளர்த்தி, அதிலிருந்து வரும் வருமானத்தை நல்ல பல திட்டங்களுக்குச் செலவிட வழி வகுத்துக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்று குறிப்பிட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டிருக்கிற மதுவிலக்கு ஆயத்தீர்வைக் குறித்த கொள்கை குறிப்புகளின் மீதும், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மானியக் கோரிக்கையின் கொள்கை குறிப்புகளின் மீதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். இங்கே ஆயத்தீர்வைத்





துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது குடிப்பழக்கம் உள்ளோர் உடல் நலம் பேணிக் காப்பதற்கும், சமூக விரோதிகளிடம் பணம் செல்லாமல், அவற்றை அரசு மேற்கொள்ளுவதற்கான முறையிலும், காலப் போக்கிலே குடிப் பழக்கத்தை இந்த மாநிலத்திலே இருந்து ஒழிப்பதோடு, கள்ளச் சாராயத்தையும் ஒழித்து விடவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமாக அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டுள்ள குறிப்புச் சொல்கிறது.

அரசின் நோக்கம் அப்படி இருந்தாலும் கூட, நடைமுறையில் கள்ளச் சாராயம் தமிழ்நாட்டில் குறையாது பெருகிக் கொண்டேதான் இருக்கிறது என்பதும், சாராயத் துறையிலே புகுந்து பல்வேறு சமுதாய விரோதிகள் மிகப் பெரிய சமூக அந்தஸ்தைப் பெற்று வலுவடைந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் மிகத் தெளிவாக புரிகிறது. அந்த அடிப்படையிலேதான் இந்தத் துறையிலே நான் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புவது இது ஒரு ஒழுக்கநெறி சம்பந்தப்பட்ட விஷயமாகும். மது விலக்கு என்பதும் சட்டத்தால் மட்டுமே ஒருவனைக் குடிக்காமல் செய்து விடுவது என்பதும் நடைமுறையில் காரிய சாத்தியம் அல்ல.

குடிப் பழக்கத்திற்கு இரையானவர்கள் குடிக்காமல் தடுக்கப்பட வேண்டுமானால், இடைவிடாத, பொருத்தமான தொடர்ச்சியான பிரச்சாரத்தை நடத்துவதை இந்த மாநில அரசு அந்த துறையினாலே மேற்கொள்ள வேண்டும். ''குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும் என்று'' வெறும் பிரச்சாரத்திற்காக, நாங்களும் குடி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்கிறோம் என்று சொல்லி பெயர் பண்ணுவதற்கான முறையிலே சாராயக்கடை போர்டுகளில் எழுதப்பட்டிருக்கிறதே தவிர குடிக்கிற பழக்கம் உள்ளவர்களை குடிக்காமல் தடுப்பதற்குரிய பிரச்சாரத்தை போதுமான அளவுக்கு, முறையாக அரசால் நடத்தப்பட இல்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அதற்குரிய நடைமுறைகளை இந்த மாநில அரசு மேற்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக இந்த சாராயத் துறையிலே என்ன வந்திருக்கிறது தெரியுமா? சமுதாய விரோதிகளைப் பற்றி மிகவும் அக்கரையோடு இந்தக் கொள்கைக் குறிப்பு குறிப்பிடுகிறது. இந்த மாநிலத்திலே கள்ளச் சாராயத்திலேயும் சரி, அல்லது அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள சாராயக்கடை எடுத்த சாராய வியாபாரிகளானாலும் சரி, மிகப் பெரிய சமூக அந்தஸ்தோடு தமிழ்நாட்டிலே உலவிக் கொண்டிருக்கிறார்கள்.

சமூகத்திலேயிருந்து ஒழிக்கப்பட வேண்டிய கடைந்து எடுத்த சமூக விரோதிகளுக்கு சமூகத்திலே பெரிய அந்தஸ்தைக் கொடுத்திருப்பது, இந்த மாநில அரசின் இந்த மதுவிலக்குத் துறையும் அதன் கொள்கையும் தான். யார் என்பது அல்ல, அவர் எந்தப் போர்வையிலே புகுந்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதும்

அல்ல. ஆனாலும் அவர்கள் வசதியான பாதுகாப்பான விதத்திலே, பெரிய அந்தஸ்தில் இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்களுக்குத் தகுதி வருவதற்குக் காரணம், இந்த மாநில அரசு இந்தத் துறையிலே கடைப்பிடிக்கிற நடைமுறைக் கொள்கைதான். இந்த அரசு முன்னால் என்ன சொல்லிற்று, அது இப்போது எப்படி நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் நான் விரிவாக விவாதிக்க விரும்பவில்லை.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த அரசு இந்த மதுவிலக்குக் கொள்கையில் உறுதியான நிலையை மேற்கொள்ளவில்லை என்று கூறினார்கள். அது பொதுவாக இந்த அரசுக்கே இருக்கிற இயல்பு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் இயல்பே நிலை தடுமாறுகிற தஞ்சாவூர் பொம்மை போன்று நிலையில்லாமல் ஆடிக் கொண்டே இருப்பது தானே தவிர, ஒரு ஸ்டேண்டர்டான கொள்கை என்பது எந்தத் துறையிலேயும் இல்லை என்பதை என்னால் பல உதாரணங்கள் மூலமாக எடுத்துக் காட்ட முடியும். இந்த மதுவிலக்குத் துறையைப் பொறுத்தவரையில் என்ன நடந்திருக்கிறது ? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடிப்பதை ஒழிக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்கிறார்கள். அப்படி சொல்லப்படுகிற கொள்கை கொண்ட கட்சி ஆளுகிற இதே நாட்டில் என்ன நடக்கிறது ? தடுக்கி விழுந்தால் சாராயக்கடை. தடைச் சட்டம் போட்டு யாரும் குடிக்காமல் செய்துவிடுவதன் மூலமாக யாரும் குடிக்காமல் இருக்கப் போவதில்லை. கடைகளை திறந்து விடுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் திறந்துவிடப்பட்டிருக்கிற இந்த நிலையில் யாரும் குடிக்கக் கூடாது என்று விரும்புவதை கொள்கையாகக் கொண்டுள்ள அரசு யாரும் குடிக்காமல் இருப்பதற்கான பிரச்சாரத்தை நடைமுறையில் முறைப்படி மேற்கொள்ளவில்லை. தெருவிற்குத் தெரு ஏழு கடைகள். அதைக் குறைக்கக் கூடாதா ? கடைகளின் எண்ணிக்கையை கட்டாயம் குறைக்க வேண்டும். நகரங்களில் ஒதுக்குப்புறங்களில் தான் சாராயக் கடைகள் திறக்கப்பட வேண்டும். நகரத்திற்குள்ளே திறக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். இது சமூகவிரோதிகள் பொதுமக்களை தாக்குவதற்கும், வேறு பல சமூகக் குற்றங்களைச் செய்வதற்கும் உரிய புதர்களாக, பாதுகாப்பு இடங்களாக சாராயக்கடைகள் விளங்குகின்றன. எனவே அவற்றை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து, விலக்கி வைக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு [illegible]னர் அவர்கள் சாராயக் கடைகளை எடுத்துவிட வேண்டு[illegible]காமல் இருப்பது தான் ஆரோக்கியம் என்றும் [illegible] அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள





விரும்புவது, வலது கம்யூனிஸ்ட் கட்சி மதுவிலக்கு கொள்கையை ஆதரிக்கிறதா ? இல்லையா ? இதில் உங்களுடைய கட்சியின் நிலை என்ன என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் எந்தக் கட்சியில் இருக்கிறேன் என்பதைக் கூட புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். வலது கம்யூனிஸ்ட் கட்சியென்று ஒன்று இந்தியாவில் இல்லை. நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை நிலை என்னவென்பதை மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. கடைகள் திறக்கப்படுவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. நான் இதை முன்னரே சொல்லி இருக்கிறேன். சட்டத்தால் நெட்டித்தள்ளி ஒரு நல்ல கருத்தை யாரிடமும் ஓட்டிவைக்க முடியாது. தடை செய்து ஒருவனை குடிக்காமல் செய்து விட முடியாது. தடை செய்வதன் மூலமாக கள்ளச் சாராயம்தான் பெருக்கெடுத்து ஓடும். கடைகள் திறக்க வேண்டுமென்று கூறியவர்கள்தான் நாங்கள். அதை இன்றைக்கும் மறுக்கவில்லை. ஆனால் அதை முறைப்படுத்தி ஒழுங்கமைக்க வேண்டும் என்றுதான் கூறினேன். அதனை கொஞ்சம் உஷாராகக் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மது உற்பத்தியைப் பற்றி, இன்றைக்கு மாநில அரசினர் என்ன முடிவெடுத்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. விநியோகப் பொறுப்பை மாநில அரசு மேற்கொண்டு விட்டதாம். ஒன்பது சாராய ஆலைகளின் உற்பத்தியை மாநில அரசு மேற்கொள்ளவில்லை. உற்பத்தியை மேற்கொள்ளாமல் விநியோகத்தை மட்டும் அரசு மேற்கொண்டதற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாக பதில் அளிக்கிற போது குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உற்பத்தி செய்கிற 9 சாராய ஆலைகளின் அதிபர்கள் ஒரு வேளை மாநில அரசுக்கு மிக வேண்டியவர்களாக இருக்கக் கூடுமா? அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக விடப்பட்டிருக்கிறதா ? மது உற்பத்தியை மேற்கொள்ளாமல் விநியோகத்தை மேற்கொள்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. அதற்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள் என்று இறுதியாக சொல்ல, வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 1981-ல் போடப்பட்ட சட்டத்தில் 9 மணியிலிருந்து 9 மணிவரை தான் சாராயம் விற்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது என்ன நடந்திருக்கிறது ? 9 மணியிலிருந்து 10 மணி வரை. ஏனென்றால் மாநில அரசு எல்லோரும்

அல்ல. ஆனாலும் அவர்கள் வசதியான பாதுகாப்பான விதத்திலே, பெரிய அந்தஸ்தில் இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்களுக்குத் தகுதி வருவதற்குக் காரணம், இந்த மாநில அரசு இந்தத் துறையிலே கடைப்பிடிக்கிற நடைமுறைக் கொள்கைதான். இந்த அரசு முன்வால் என்ன சொல்லிற்று, அது இப்போது எப்படி நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் நான் விரிவாக விவாதிக்க விரும்பவில்லை.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த அரசு இந்த மதுவிலக்குக் கொள்கையில் உறுதியான நிலையை மேற்கொள்ளவில்லை என்று கூறினார்கள். அது பொதுவாக இந்த அரசுக்கே இருக்கிற இயல்பு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் இயல்பே நிலை தடுமாறுகிற தஞ்சாவூர் பொம்மை போன்று நிலையில்லாமல் ஆடிக் கொண்டே இருப்பது தானே தவிர, ஒரு ஸ்டேண்டர்டான கொள்கை என்பது எந்தத் துறையிலேயும் இல்லை என்பதை என்னால் பல உதாரணங்கள் மூலமாக எடுத்துக் காட்ட முடியும். இந்த மதுவிலக்குத் துறையைப் பொறுத்தவரையில் என்ன நடந்திருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடிப்பதை ஒழிக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்கிறார்கள். அப்படி சொல்லப்படுகிற கொள்கை கொண்ட கட்சி ஆளுகிற இதே நாட்டில் என்ன நடக்கிறது? தடுக்கி விழுந்தால் சாராயக்கடை. தடைச் சட்டம் போட்டு யாரும் குடிக்காமல் செய்துவிடுவதன் மூலமாக யாரும் குடிக்காமல் இருக்கப் போவதில்லை. கடைகளை திறந்து விடுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் திறந்துவிடப்பட்டிருக்கிற இந்த நிலையில் யாரும் குடிக்கக் கூடாது என்று விரும்புவதை கொள்கையாகக் கொண்டுள்ள அரசு யாரும் குடிக்காமல் இருப்பதற்கான பிரச்சாரத்தை நடைமுறையில் முறைப்படி மேற்கொள்ளவில்லை. தெருவிற்குத் தெரு ஏழு கடைகள். அதைக் குறைக்கக் கூடாதா? கடைகளின் எண்ணிக்கையை கட்டாயம் குறைக்க வேண்டும். நகரங்களில் ஒதுக்குப்புறங்களில் தான் சாராயக் கடைகள் திறக்கப்பட வேண்டும். நகரத்திற்குள்ளே திறக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். இது சமூகவிரோதிகள் பொதுமக்களை தாக்குவதற்கும், வேறு பல சமூகக் குற்றங்களைச் செய்வதற்கும் உரிய புதர்களாக, பாதுகாப்பு இடங்களாக சாராயக்கடைகள் விளங்குகின்றன. எனவே அவற்றை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து, விலக்கி வைக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாராயக் கடைகளை எடுத்துவிட வேண்டுமென்றும், குடிக்காமல் இருப்பது தான் ஆரோக்கியம் என்றும் சொல்கிறார்கள். நான் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள





விரும்புவது, வலது கம்யூனிஸ்ட் கட்சி மதுவிலக்கு கொள்கையை ஆதரிக்கிறதா? இல்லையா? இதில் உங்களுடைய கட்சியின் நிலை என்ன என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் எந்தக் கட்சியில் இருக்கிறேன் என்பதைக் கூட புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். வலது கம்யூனிஸ்ட் கட்சியென்று ஒன்று இந்தியாவில் இல்லை. நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை நிலை என்னவென்பதை மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. கடைகள் திறக்கப்படுவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. நான் இதை முன்னரே சொல்லி இருக்கிறேன். சட்டத்தால் நெட்டித்தள்ளி ஒரு நல்ல கருத்தை யாரிடமும் ஒட்டிவைக்க முடியாது. தடை செய்து ஒருவனை குடிக்காமல் செய்து விட முடியாது. தடை செய்வதன் மூலமாக கள்ளச் சாராயம்தான் பெருக்கெடுத்து ஓடும். கடைகள் திறக்க வேண்டுமென்று கூறியவர்கள்தான் நாங்கள். அதை இன்றைக்கும் மறுக்கவில்லை. ஆனால் அதை முறைப்படுத்தி ஒழுங்கமைக்க வேண்டும் என்றுதான் கூறினேன். அதனை கொஞ்சம் உஷாராகக் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மது உற்பத்தியைப் பற்றி, இன்றைக்கு மாநில அரசினர் என்ன முடிவெடுத்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. விநியோகப் பொறுப்பை மாநில அரசு மேற்கொண்டு விட்டதாம். ஒன்பது சாராய ஆலைகளின் உற்பத்தியை மாநில அரசு மேற்கொள்ளவில்லை. உற்பத்தியை மேற்கொள்ளாமல் விநியோகத்தை மட்டும் அரசு மேற்கொண்டதற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாக பதில் அளிக்கிற போது குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உற்பத்தி செய்கிற 9 சாராய ஆலைகளின் அதிபர்கள் ஒருவேளை மாநில அரசுக்கு மிக வேண்டியவர்களாக இருக்கக் கூடுமா? அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக விடப்பட்டிருக்கிறதா? மது உற்பத்தியை மேற்கொள்ளாமல் விநியோகத்தை மேற்கொள்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. அதற்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள் என்று இறுதியாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 1981-ல் போடப்பட்ட சட்டத்தில் 9 மணியிலிருந்து 9 மணிவரை தான் சாராயம் விற்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது என்ன நடந்திருக்கிறது? 9 மணியிலிருந்து 10 மணி வரை. ஏனென்றால் மாநில அரசு எல்லோரும்

குடிப்பதைக் குறைப்பதற்காக நேரத்தைக் கூட்டியிருக்கிறது. யாரும் குடிக்காமல் தடுக்கப்பட வேண்டும். யாரும் குடிப்பதை இந்த மாநில அரசு அங்கீகரிக்கவில்லை அல்லவா? 9 மணியிலிருந்து 9 மணிவரை குடிப்பதைக் காட்டிலும், 9 மணியிலிருந்து 10 மணி வரையில் குடிக்கச் சொல்லி சட்டத்தைத் திருத்தியுள்ளது ஏன்?

அதேபோல 1981-ம் ஆண்டு சட்டத்தில் சாராய விற்பனைக் கடைகளில் இளம் வயதினர், அதாவது பாலகர்கள், பெண்கள் இருக்கக் கூடாது, விற்பனையில் ஈடுபடக் கூடாது என்று இருந்தது. இப்போது பெண்களை மட்டும் விட்டுவிட்டு மற்றவர்கள், அதாவது பையன்கள் யார் வேண்டுமானாலும் விற்பனைக் கடையில் இருக்கலாம் என்று செய்திருக்கிறார்கள். அந்தப் பையன்கள் கடைகளில் குடித்துக் கெட்டுப் போக மாட்டார்களா? அரசாங்கம் ஏன் அத்தகைய திருத்தத்தைக் கொண்டு வந்ததென்பது புரியவில்லை. ஏன் என்று தெரிந்து கொள்வதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து முகவர்கள் நியமிப்பது பற்றி முன்னரே உறுப்பினர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அண்ணா தி.மு.க. ஆட்சி இந்த விஷயத்திலே ரொம்ப புத்திசாலித்தனமான ஆட்சி. தனக்கு வேண்டியவர்களை நியமித்துக் கொள்வதற்குரிய வாய்ப்புகளை ஒவ்வொரு துறையிலேயும் உருவாக்கிக் கொள்வது மாதிரி, இந்தத் துறையிலேயும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. பினாமிகளாக சில பல பேர்களை உருவாக்கிவிட்டு, தங்களுடைய ஆட்களை உள்ளே புகுத்திக்கொள்வதற்கு உரிய முறையிலேதான் இந்த முகவர் பிரச்சனையிலேயும் இந்த அண்ணா தி.மு.க. ஆட்சி நடந்துகொள்ளும் என்று நான் அச்சப்படுகிறேன்.

அதேபோல் அயல்நாட்டு மதுவகைகள் உரிமங்கள் பெறுவதற்கு அவர்கள் மனு போடுகிற காலங்களில் என்ன நிலையை இந்த மாநில அரசு அதிகாரிகள் மேற்கொள்ள இருக்கிறார்கள்? ஆயத் தீர்வை ஆணையாளர் திருப்தி அடைந்தால் அயல் நாட்டு மதுவகை விற்பனை உரிமம் வழங்கலாம்; உள்ளூர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறதா? பொது நலன் பாதுகாக்கப்பட்டதா? முறைகேடாக உரிமை பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து, ஆயத் தீர்வை ஆணையாளர் திருப்தி அடைந்தால், பொதுவாக எந்த அதிகாரிகளுடைய திருப்தியும் கொள்கைகளிலே இல்லை. பொதுவாக மாநில அரசின் கீழே இயங்கிக் கொண்டு இருக்கிற அதிகாரிகள் இதிலே திருப்தி அடைவதில்லை. கோட்பாடுகளிலே திருப்தி அடைவதில்லை, கொள்கைகளிலே திருப்தி அடைவதில்லை. அவர்கள் திருப்தி அடைகிற ஒன்றே ஒன்று, இதுதான், அது செலுத்தப்





படுகிறபோது, அதிகாரம் தவறாக நிச்சயமாகப் பயன்படுத்தப்படும். அவர்களின் திருப்தி ஊழலுக்கும் முறைகேடுக்கும் வழி வகுக்கும். அதன்படி வழி வகுக்கக்கூடிய இடம் தான் அவர்கள் திருப்தி அடைந்தால் வழங்கலாம் என்று சொல்லியிருக்கிற இடம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், அபினி, கஞ்சா போன்ற போதைப் பொருட்களை கடத்துகிற குற்றங்கள் பெருகிக் கொண்டுதான் இருக்கின்றன. இத்தகைய கடத்துகிற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. கள்ளச்சாராயம் தடைபடவில்லை கஞ்சா கடத்தல், அபினி கடத்தல் தடைபடவில்லை, இவைகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன. அவற்றை எல்லாம் கட்டுப்படுத்தி தடை செய்ய மாட்டார்கள். இந்த மாநில அரசு இவற்றைத் தடை செய்வதற்கு அதிகாரிகள் அக்கறை செலுத்தாதது மட்டுமல்ல, இந்த **

இத்தகைய போக்குதான் நிலவுகிறது. ஆகவே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இன்னும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, உரிய அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களைப் பற்றிச் சொல்கிறபோது, அவர்கள், இன்றைக்கும் தற்காலிக ஊழியர்களாகத்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். 4 ரூபாய், 6 ரூபாய், 8 ரூபாய்க்கு அவர்களுடைய நீண்டநேர உழைப்பு இந்த மாநில அரசால் சுரண்டப்படுகிறது. ஏன் இத்தகைய அநியாயத்தை நீங்கள் மேற்கொள்கிறீர்கள்? ஆகவே அவர்கள் உழைக்கின்ற தொழிலாளர்கள் அல்லவா? இந்தத் தலைமைச் செயலகத்திலே பல்லாண்டுகளாக தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றுகிற அந்த ஊழியர்களை நிரந்தரமாக்கினால் என்ன? மாநில அரசாங்கத்தின் கஜானா காலியாகிவிடுமா? அவர்களுக்கு என்ன கோடிக்கணக்கிலே கொடுக்கப்போகிறீர்களா? ஏன் இன்றைக்கு வரையிலும் காலதாமதம் செய்கிறீர்கள்? ஒரு சின்ன விஷயம், சாதாரண விஷயம், தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும். அதுவும் தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள். அந்த ஊழியர்களை கூட நீங்கள் நிரந்தரமாக்கவில்லை என்றால், உங்கள் ஆட்சியிலே நியாயம் கிடைக்கும் என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. உண்மையிலே நீங்கள் தலைமைச் செயலகத்திலே.....

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிட்டுப் பேசுவதற்காக அவர்கள் மன்னிக்கவேண்டும். அதிகாரிகளைப் பற்றி சற்று நேரத்திற்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

முன்னாலே அவர்கள் பேசுகிறபோது, ஒரு காரியத்தைச் செய்வதற்கு அவர்கள் ஏதோ** என்ற பொருள்பட ஒட்டுமொத்தமாக அதிகாரிகள்** என்ற பொருள்பட பேசியிருக்கிறார்கள். இப்போது அதிகாரிகள், ஊழியர்களைப் பற்றி பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு குற்றச்சாட்டை,** என்ற குற்றச்சாட்டு தேவையில்லை. அதை அவர்கள் மறுப்பதற்கு இங்கே இடம் உண்டு. ஆகவே அதிகாரிகள் தவறு செய்வதற்கு இடம் அளிக்கும் என்று வேண்டுமானால் சொல்லட்டும்.** செய்வார்கள் என்ற பொருள்பட அரசு அதிகாரிகளைப் பற்றி ஒட்டுமொத்தமாக சொல்வது அவர்களுக்கு உரிய பாதுகாப்பை நாம் மறுப்பதாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிகாரிகளைப் பற்றி ஒட்டு மொத்தமாகச் சொன்ன வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

திரு. கு. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதற்கு என்னுடைய விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சமுதாயத்திலே நிரூபிக்கப்படவில்லை என்பதாலே, குற்றங்கள் நியாயங்களாகிவிடாது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்கு பல துறைகளில் உள்ள அதிகாரிகளின் வாழ்க்கையில் மினுமினுப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை விசாரணைக் கமிஷன் முன்னால் நிறுத்தினால் உண்மையிலேயே அவர்களுக்கு இவ்வளவு வருமானம் எப்படி வந்தது என்பதைப்பற்றி விருப்பு, வெறுப்பு அற்ற முறையில் விசாரிக்கப்படுமானால் அதைப்பற்றி அறிந்து கொள்ள இயலும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லப்போகிற குற்றச்சாட்டை முன்பாகவே எழுதி கொடுத்துவிட்டுச் சொன்னால் அதைப்பற்றி விசாரித்துப் பதில் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஸ்வீபிங்காக எல்லா அதிகாரிகள் மீதும் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் அல்லது அலுவலர்கள் மற்றவர்கள் இந்த மாதிரி கையூட்டு போன்ற லஞ்ச குற்றங்களில், வேறு பல ஊழல்களில் ஈடுபடுகிறபோது புகார் செய்கிறார்கள். அதைப்பற்றி விசாரிப்பதற்கு லஞ்ச ஒழிப்புத்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டன.



துறை இருக்கிறது. அவர்கள் தீவிரமாக விசாரிக்கிறார்கள். பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆக அவர்கள் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் வழக்கு மன்றங்களுக்குக் கூட செல்கிறது. பல அதிகாரிகள், அலுவலர்கள் வேலையைவிட்டு நீக்கப்படுகிறார்கள். தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அவர்களுடைய இன்கிரிமெண்டு குறைக்கப்படுகிறது. மற்றும் பல்வேறு தண்டனைகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் எல்லோரும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டார்கள் என்று நான் சொல்லவரவில்லை. கண்டுபிடிக்கப்படமுடியாமல் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை சட்டத்திற்குக் கீழ் கொண்டு வரவேண்டுமே தவிர சட்டத்திற்குக் கீழ் கொண்டு வந்து லஞ்ச ஊழல் குற்றச்சாட்டை சுமத்தும் நிலையில் கூட பல பேர்களுடைய வழக்குகள் நிரூபிக்க முடியாத அளவுக்கு தப்பித்துக் கொள்கிறார்கள். வழக்கு மன்றங்களுக்குச் சென்றாலும்கூட தப்பித்துக் கொள்கிறார்கள். அப்படி தப்பித்துக்கொள்ள முடியாத அளவுக்கு அவற்றை எல்லாம் நிரூபிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் பெரும் உதவி புரிவார்களானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும். நடவடிக்கை எடுத்துக்கொண்டும் வருகிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிய கருத்துக்கு ஆதரவான முறையில் விளக்கம் கொடுத்த மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இறுதியாக குறிப்பிட விரும்புவது, இங்கே தலைமையிட பணியாளர்களை மீண்டும் உடனடியாக நிரந்தரம் ஆக்கவேண்டும் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொல்வதை கவனத்தோடு கேட்பார்கள் என்ற நம்பிக்கையோடு இங்கே நீண்டகாலம் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்ற அந்த தற்காலிக ஊழியர்களின் நலன்கள் உடனடியாக கவனிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் நிரந்தரம் ஆக்கப்படவேண்டும் என்ற அறிவிப்பை தன்னுடைய இறுதி உரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மது விலக்கு, ஆயத்தீர்வை துறை மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றதற்காக நான் மகிழ்வு அடைகிறேன் என்று சொல்லவில்லை. மதுவிலக்கை தமிழகம் முழுவதும் அமல் ஆக்கவேண்டும் என்பது தான் எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய கொள்கை ஆகும். இந்தியா முழுவதும் இந்த மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் பேரியக்கத்தின் எண்ணம்.

ஆகவே, இந்தப் பிரச்சினையை முதன் முதலாக தந்தவர் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் என்பதை நான் வேதனையோடு தெரிவிக்கிறேன். இளைய சமுதாயத்தைக் கெடுத்து, இளைய தலைமுறையினரை எப்படி எல்லாம் கெடுக்க வேண்டுமோ அப்படி எல்லாம் கெடுத்து, இன்றையதினம் தமிழகத்து மக்கள் வேதனை உறுகின்ற வாய்ப்பினை பெற்று இருக்கிறார்கள். அன்றையதினம் இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூட அவர்களுடைய வீட்டிற்குச் சென்று இந்த பழக்கத்தைத் தரவேண்டாம் என்று உணர்வோடு கேட்டார்கள் என்பதை கூட நாம் அறிவோம். ஆகவே, இந்த தலைமுறையில் வாழ்கின்ற இளைஞர்கள் குடிபழக்கத்தால் எவ்வளவு இடைஞ்சல்கள், அல்லல்கள் அனுபவிக்கிறார்கள் என்பதைப் பற்றி பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள்.

மதுவினால் மட்டும் அவர்கள் இன்னல் அடையவில்லை. மதுப் பழக்கத்தை மீறி அவர்களுடைய உணர்வு விழுந்து விட்ட பிறகு போதை மாத்திரைகள், பீடாக்கள், அபின்கள், கஞ்சாக்கள் இவைகளைப் பயன்படுத்தி இன்றையதினம் கல்லூரியில் படிக்கின்ற, ஏன் பள்ளியில் படிக்கினற மாணவர்கள் கூட அதை உண்டு களித்து அங்கே ஓரமாக ஒதுங்குகின்ற சூழ்நிலை எல்லாம் இன்றைக்கு தமிழகத்தில் நிறைந்து இருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி ஒரு சிறப்புடைய ஆட்சியினை நடத்துகிறார்கள்? ஆனால் இந்த ஆட்சியில் ஒரு களங்கமாக இருக்கிற இந்த மதுவை விலக்கி வைத்தால், மது இல்லாமல் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், காங்கிரஸ் ஆளுகின்ற ஆட்சியிலே. நடுவண் அரசு ஆளுகின்ற ஆட்சிக்குட்பட்ட பல மாநிலங்களில் குஜராத் தவிர, மற்ற மாநிலங்களில் மதுவிலக்கு இல்லையே என்று எல்லாம் குறிப்பிடுவார்கள். அது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால், தமிழன் என்ற தனி இனம், உலக வரலாற்றிலே சிறப்பானவன், தொன்மையானவன், பழமையானவன், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற அளவுக்குத் தன்மைப் பெற்றவன். அந்தத் தமிழன் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு, தன்மானத்தோடு, இந்த நாட்டில் நிலை பெற்ற தொன்மையோடு இருக்கின்ற அளவுக்கு தனி சிறப்பை எல்லோரையும் விட பெற்று இருக்க வேண்டும்.

அந்தத் தனிச் சிறப்போடு, மது குடிக்கும் பழக்கத்தை நீக்குகின்ற காரியத்தை இந்தப் பேரரசு மேற்கொண்டால், நாங்கள் எல்லை இல்லாத மகிழ்ச்சி அடைவோம். காரணம் ஒரு தேசியக் கட்சியின் நூற்றாண்டு விழாவினை சீரும் சிறப்போடு,





பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளிலே கொண்டாடக்கூடிய வாய்ப்பினைப் பெற்று இருக்கின்ற இந்த மாபெரும் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையில் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

நான் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். ஒரு சாராயக் கடையினாலே, காங்கிரஸ் இயக்கத்திலே புதிதாகச் சேர்ந்தவர், அவர் ஒரு பெரிய சாராய வியாபாரியாக இருந்தார். ஒரு மாதத்திற்கு முன்பாக கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு காரணம் சாராயக் கடை. அந்த சாராயக் கடைக்காரருக்கும், இன்னொரு கள்ளச் சாராயக் கடைக்காரருக்கும் இடையில்தான் கொலையை விளைவிக்கின்ற அந்த நிலைமை உருவாகி இருக்கிறது.

இன்றைய தினம் சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்படுவதற்கு உண்மையான காரணங்களில், இந்த சாராயக் கடை கூட ஒரு காரணமாக இருக்கிறது என்பதை பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

3, 4 தினங்களுக்கு முன்பாகக்கூட மாதவரத்திலே சாராயம் விற்றுக் கொண்டிருந்த ஒருவரைக் கூட அடித்துக் கொலை செய்து விட்டார்கள். குறிப்பாக, திருவொற்றியூர் தொகுதியிலே ஏராளமாகக் கொலைகள், இந்தச் சாராயக் கடைகளின் காரணமாக நடந்து கொண்டிக்கின்றன என்பதை மனப்பூர்வமாக, தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த சாராயத்தினாலும் கள்ளாலும் மனிதனுடைய உணர்வுகள் பாதிக்கப்படுகின்றன. இரண்டொரு தினங்களுக்கு முன்பாகக்கூட, ஒரு செய்தியில் ஒரு தந்தை மகளை கற்பழிக்கின்ற சூழ்நிலைக்கு சாராயத்தால் மதி மயங்கி விட்டேன் என்று சொல்கிற அளவுக்கு இழிவுக்கு உள்ளாக்கப்படுகின்ற சூழ்நிலையைப் பார்த்தோம். அதனை மாற்றி ஆகவேண்டும்.

இன்றையதினம் சாராயத்தினுடைய ஒரு கொடிய அரக்கத் தன்மையினை ஒட்டி நம்முடைய அரசும் ‘குடி குடியைக் கெடுக்கும்’ என்ற ஸ்டேச்சுட்டரி வார்னிங் வைத்திருக்கிறோம். அதைச் சொல்லிச் சொல்லியும்கூட மக்கள் பார்த்து திருந்தவில்லை.

ஒருவர் மருந்து சாப்பிடுகிறபோது, குரங்கை மட்டும் எண்ணி விடாதீர்கள் என்று சொல்வார்கள். ஆனால். மருந்து பாட்டில் எடுக்கின்றபோது எல்லாம் குரங்கு நினைவு வரும்.

குடி குடியைக் கெடுக்கும் என்ற சூழ்நிலையை உருவாக்கி, அதற்காகப் பல்வேறு திரைப்படங்களைத் தொகுத்துக் காட்டி, குடிக்கிறவர்கள் தீய நிலவை அடைகிறார்கள் என்றெல்லாம்

வீணாக ஏற்படுத்தியிருப்பதை விட அந்தக் குடியை தமிழகத்திலிருந்து அறவே ஒழித்து விடுகின்ற வாய்ப்பை நாம் பெற வேண்டும். அப்படிப் பெறுகின்ற வாய்ப்பை இந்த பேரரசு உருவாக்கித் தரும் என்று நான் எண்ணுகிறேன்.

காரணம் என்னவென்றால், நம்முடைய தமிழகத்திலுண்டான முதல்வர் அவர்கள் ஏழை எளியவர்கள்மீது கருணையும், அன்பும் பொழிகின்ற ஒரு நல்ல கருணை சீலர் என்ற காரணத்தாலே அவர்கள் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்.

மேலும், இந்தக் குடியினாலே ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னாலும் அந்தப் பெர்மிட் வழங்குகின்ற, உரிமங்கள் வழங்குகின்ற கடைகளிலே இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தீர்களானால், யாரும் பெர்மிட் வாங்கிக்கொண்டு அந்தப் பிராந்திக் கடைகளிலே பிராந்தி வாங்குவதாக தெரியவில்லை. கடைக்காரர்கள் மொத்தமாக 1000, 500 என்று வாங்கி வைத்திருக்கிறார்கள்.

குடிக்கிறவர்கள் யாரும் வாங்கி வைத்திருப்பதில்லை. ஆகவே, உரிமங்கள் என்ற முறையில் இருப்பது தவிட, அது இல்லாமலே யாருக்கும் கிடைக்கும் என்ற சூழ்நிலையை உருவாக்கலாம்.

மேலும், இந்தக் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்றவர்களைப் பிடிப்பதற்காக, ஒரு தனி காவல் படையினை வைத்திருக்கிறோம். அந்தக் காவல் படையினர் சாராயம் காய்ச்சுகின்றவர்களை கண்காணித்து வந்து, பிடித்து தண்டிக்கிறார்கள். சில நேரங்களில் சாராயம் காய்ச்சுகின்றவர்கள் கொடுக்கின்ற கையூட்டினாலே மீண்டும் காய்ச்சுங்கள் என்று சொல்கிற நிலையையும் என்னுடைய தொகுதியிலே பார்க்கிறேன்.

ஆகவே, ஒரு பக்கம் காவல் துறை தடுப்பது போன்று காட்டி இன்னொரு பக்கம் காய்ச்சுங்கள் என்ற சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். அரசினுடைய நேரடி கவனத்திற்கு இதனை நான் கொண்டு வருகிறேன் ஆகவே கள்ளச்சாராயம் ஒழிக்கப்படவேண்டும் என்ற சூழ்நிலை இருந்தாலும், இந்தக் கள்ளச் சாராயத்தினாலே, ஒவ்வொரு ஊரிலேயும், ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து, அவர்கள் ஒரு 'ரௌடியிசம்' என்ற உணர்வை அந்தப் பகுதியிலே உருவாக்கி வருகிறார்கள்.

எனவே இந்த மதுவினால் ஏற்படுகின்ற கொடிய நச்சுத் தன்மை, அறிவை மயக்குகின்ற அந்த நச்சுத் தன்மை முறியடிக்கப்படவேண்டும்.



ஆவணக்காப்பகம் சென்னை-600 009
13640

ஆனால், மிகப் பெரிய செல்வங்களைத் தருகின்ற, அரசாங்கத்திற்கு மிகப் பெரிய லாபத்தை உருவாக்குகின்ற சிறப்புடையதாக இருக்கிறதே என்று கூறலாம். அதைக் கைவிடலாமா என்று எண்ணுவீர்கள். அதைக் கைவிடுவதால் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. வேண்டுமென்றால், வசதி படைத்தவர்களிடமிருந்து அதிகமான அளவிற்கு வரியைப் பெறுகின்ற வாய்ப்பினை அதிகமாக்கி பணத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் ஏழை எளிய சாதாரண மக்கள், உழைக்கின்ற தொழிலாளிகள், விவசாயம் செய்கின்ற தொழிலாளர்கள், சாதாரண பெண்கள் ஆகிய இவர்களெல்லாம் உழைத்து விட்டு இல்லத்திற்கு வருகிறார்கள். அப்படி வருகின்றபொழுது அவர்களால் நிம்மதியாக இருக்க முடிகிறதா என்றால் முடியவில்லை. சில கணவன்மார்கள், மாலை நேரம் வந்து விட்டால், அந்த நல்ல நேரத்தில் குடிப்பழக்கத்தின் தன்மையால் குடிக்க வேண்டுமென்ற ஆசையினால் ஓடோடி வந்து மனைவியிடம் இருக்கின்ற பணத்தைக் கேட்கின்றபொழுது அவள் இருப்பதைக் கொடுக்கிறாள். இல்லையென்று சொன்னால், கழுத்திலேயோ, காதிலேயோ இருக்கின்ற பொருட்களை வாங்கிச் சென்று மார்வாடிக் கடையில் அடகு வைத்துவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டு சென்று குடித்துவிட்டு, உறங்குகின்ற மனையாளை அடிக்கின்ற கொடுமைகள் பல்வேறு இடங்களில் நடப்பதை நாம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம். ஏழை எளிய மக்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள், உழைக்கும் வர்க்கத்திலே உள்ள அந்த மக்கள் வளமான வாழ்க்கையை, செம்மையான வாழ்க்கையை, சேமிக்கின்ற பழக்கமுள்ள வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. அப்படி உருவாக்கிக் கொள்ளுகின்ற வாய்ப்பினைப் பெற முடியவில்லை. சேமிக்கின்ற பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று அரசு ஒரு பக்கத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆனால் சேமிக்கின்ற உணர்வினை இழக்கக்கூடிய நிலைமையைத்தான் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம்.

இந்தக் கள், சாராயக் கடைகளின் மூலமாகத் தனிப்பட்ட ஒரு சிலர் வேண்டுமென்றால் அதிகப் பணத்தைப் பெற்று அந்தப் பகுதியிலே ஒரு பெரிய நிலைமையில் இருக்கிறார்கள். பெரிய பெரிய இராஜாக்களையெல்லாம் ஒழித்துவிட்டோம் என்று சொல்கிறோம். ஆனால் இராஜாக்களைவிட வலிமை பொருந்தியவர்களாக அந்தப் பகுதிகளில் உள்ள அதிகமான ரௌடிகளைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு செய்யக் கூடாத செயல்களைச் செய்கிறார்கள் என்பதை காவல் துறையின் மூலமாக இந்தப் பேரரசு அறிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். அது இந்த கள், சாராயக் கடைக்காரர்களின் இயல்பாக இருக்கிறது. எனவே, இதிலிருந்து கிடைக்கின்ற இலாபத்தை மட்டும் எண்ணிப் பார்க்காமல், இதன் விளைவுகளை, இதனால்

ஏற்படுகின்ற இன்னல்களைத் தொடர்ச்சியாக உணர்ந்து, இந்த மதுவின் கொடுமைகளைத் தமிழகத்திலேயிருந்து நல்லமுறையிலே களைவதற்கு எல்லாக் கட்சிகளையும் சார்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த உணர்வினை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நான் கேட்டுக்கொள்வதற்குக் காரணம், நம்முடைய தமிழகத்தின் இழிவுபடுத்துகின்ற நிலைமை 1971-ஆம் ஆண்டில் வந்தது, அதை மீண்டும் புதுப்பித்துக் கொண்டே போகக்கூடாது. 1971ஆம் ஆண்டிலே கலைஞர் அவர்கள் அதைத் தந்து விட்டார்கள் என்றாலும் அதை நாம் மாற்ற வேண்டும். அவர்கள்தான் வழிவகைகளைத் தந்துவிட்டார்களே, எனவே அதிலேயிருந்து சற்றும் மாறுபாடு கொள்ளாமல் நாமும் செல்லலாம் என்ற உணர்வை நீங்கள் கொள்ளக்கூடாது. காரணம் என்னவென்றால், இராஜாஜி அவர்களும், காமராஜ் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கண்ட கனவை இந்தத் தமிழகம் நனவாகப் பெற வேண்டும். நாங்கள் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இந்தத் தேர்தல் களத்தைச் சந்திக்கின்றபொழுது, பேரறிஞர் அண்ணா அவர்களின் உணர்வுகளையும், அருமை அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் எண்ணத்தையும், புரட்சித் தலைவரவர்களின் உணர்வுகளையும் சொல்லித்தான் வாக்குகளைப் பெற்றிருக்கிறோம்.

அண்ணா அவர்களின் பெயரையும், காமராஜ் அவர்களின் பெயரையும், இராஜாஜி அவர்களின் பெயரையும் நினைவுபடுத்திக்கொண்டு. இந்த சாராய சாம்ராஜ்யத்தை ஒழிக்க வேண்டும். சாராயத்தில் எவ்வளவு இலாபம் கிடைத்தாலும் கூட அந்த இலாபத்தை ஒருபுறத்தில் நிறுத்துப் பாருங்கள்; ஏழை எளிய மக்கள், தொழிலாளர் நண்பர்கள் ஆகியவர்கள் வடிக்கின்ற வேதனைக் கண்ணீர் வடிக்கின்ற சூழ்நிலையை இன்னொரு புறத்தில் வைத்து நிறுத்துப் பாருங்கள் அப்பொழுது உங்களுக்குத் தெரியும். சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைகளையும், பல்வேறு இடங்களில் கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும் நடப்பதற்குக் காரணமாகவும் இருக்கின்ற சாராய சாம்ராஜ்யத்தை அகற்றுவதற்கு இந்தப் பேரவை துணைபுரிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், பல்வேறு மாவட்ட ஆட்சியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிகிறார்கள். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள்





கோரிக்கைகளை தொகுதியின் சார்பாகக் கடிதம் மூலமாகத் தெரிவித்து, அதுபற்றி அவர்கள் கவனித்து நாம் நன்மையடைந்து மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், ஈரோட்டைச் சார்ந்திருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள், டி. டி. சி. கூட்டம் நடத்து கொண்டிருக்கின்றபொழுதே, அங்கேயுள்ள மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் அங்கே பேசுகின்றபொழுது, அப்படிப் பேசினாலே அவர்கள்மீது அவர் கோபப்பட்டு, சிறிய பிரச்னைகளைச் சொன்னாலும்கூட, அந்தத் தூக்கியெறிந்துவிட்டு அந்த டி டி.சி. கூட்டத்திலிருந்தே வெளியேறுகின்ற பாங்கினைப் பற்றி எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர்கள் கூறுகிறார்களாம், பல்வேறு இடங்களில் சொல்கிறார்களாம், நாங்கள் தொடர்ந்து இருப்போம், நீங்கள் எப்பொழுதும் வந்து போகின்றவர்கள்தானே. ஐந்தாண்டுகள் இருப்பீர்கள், இல்லையென்றால் பத்தாண்டுகள் இருப்பீர்கள், இல்லையென்றால் 15 ஆண்டுகள் இருப்பீர்கள், ஆனால் நாங்கள் முப்பதாண்டுக் காலம் இருப்போம் என்று சொல்லக்கூடிய அவலமான சூழ்நிலை இருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

(பிற்பகல் 12-30)

மக்களுடைய பிரதிநிதிகளாக இன்றைய ஜனநாயக மரபிலே வருபவர்கள் கூறுகின்ற பிரச்னைகள் தனி நபர்கள் பிரச்னை அல்ல; அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரச்னையாக இருக்கலாம்; தமிழகத்தைச் சேர்ந்த பிரச்னையாக இருக்கலாம். இந்தப் பிரச்னைகளைப் பற்றி விளக்கச் சொல்லி, அவற்றைத் தீர்க்க வழிவகை காண வேண்டும். அந்தப் பிரச்னைகளைத் தீர்த்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற, அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கிற மக்கள் நலம் பெறுவார்கள் என்ற எண்ணத்தோடு தான் அதைச் சொல்கின்ற வாய்ப்பினைப் பெறுகிறார்கள். அந்த வாய்ப்பினைக் கொடுக்கின்ற மனோபாவம் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒருசில இடங்களிலே வாய்ப்பினைக் கொடுக்காத, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களைத் திருத்துவதற்கு இந்தப் பேரவையில் உள்ள அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

கடந்த 6 மாதங்களில் தென்னாற்காடு மாவட்டத்தில் இதுவரை ஒரு டி.டி.சி. மீட்டிங்கைக்கூட கூட்டவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். மாவட்ட வளர்ச்சி மன்ற அதிகாரிகள் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. பலமுறை வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டுங்கள் என்று நம்முடைய

செஞ்சி தொகுதி உறுப்பினர் திரு. முருகானந்தம் கேட்டபொழுது கூட அதிகாரிகள் கூட்டுகிறோம் கூட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்திலே இரண்டு மூன்று முறை கூட்டி விட்டார்கள். ஆனால் சில மாவட்டங்களில் கூட்டுகின்ற தன்மை இல்லை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த அந்த மாவட்டங்களிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களை அழைத்து, வளர்ச்சிக்கான பிரச்னைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றவேண்டும், செயலாற்றுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இந்தப் பேரவை மூலம் அத்தகையதொரு சிந்தனையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாராயத்தால், விளைகின்ற இலாபத்தை எண்ணாமல், அதனால் ஏற்படுகின்ற இன்னல்களை, இடையூறுகளை உணர்ந்து இந்த நாட்டு மக்களுக்கு நன்மையை உருவாக்க வேண்டுமென்று இந்தப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு, நிறைவோடு என்று சொல்ல மாட்டேன், இந்த வாய்ப்பை எண்ணுகின்ற அளவு தாண்டிவிட்ட தன்மையை எண்ணி, நான் விடைபெறுகிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்கள் பேசுகின்றபொழுது மது விலக்குக் கொள்கையை ரத்து செய்வது எங்கள் கொள்கை என்று குறிப்பிட்டார்கள், உள்ளபடியே மது விலக்கை அமுல் படுத்துவது அவர்கள் கொள்கையா அல்லது ரத்து செய்வது அவர்கள் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. கே. ஜே. பாரதி: அமுல் செய்வதுதான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை எண் 2 மாநில ஆயத் தீர்வைத் துறை, எண் 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய இரண்டையும் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1977-க்குப் பிறகு இந்த அரசாங்கத்தின் பொறுப்பேற்றது முதல் இந்த ஆயத் தீர்வை துறையில் நல்ல முடிவோடும் நல்ல நம்பிக்கையோடும் தான் இந்த அரசாங்கத்தை நடத்தி வருகிறார்கள். இங்கே பேசுகிற பொழுது எதிர்க்கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு நல்ல முடிவும் கொள்கையும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்கள் இந்த மானியத்தைப் பற்றி ஏதோ அறிவுரை எல்லாம்





கூறப் போகிறார்கள். நல்ல ஆலோசனை எடுத்துச் சொல்லவிருக்கிறார்கள். அவர்கள் ஆண்ட காலத்தில் தவறுகள் நடந்ததைச் சுட்டிக்காட்டி நடைபெறவிருக்கிற நிர்வாகத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் இதுவரை தின ஏடுகளில் வந்த குறிப்புகள் சிலவற்றை எடுத்துக் காட்டினார்கள்.

அது மட்டுமல்ல, புரட்சித் தலைவர் இந்த மதுவிலக்குக் கொள்கையில் என்ன நம்பிக்கையோடு செயலாற்றுகிறார்கள், தினம் ஒன்று சொல்கிறார்கள் என்ற அடிப்படையில் எடுத்துக் கூறினார்கள். இந்த மது விலக்குக் கொள்கையில் அப்பொழுது நல்ல நம்பிக்கையோடு முடிவோடு இருந்தார்கள். இதே மாமன்றத்தில்தான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் இந்த மதுவிலக்குக் கொள்கையில் தோல்வி அடைந்துவிட்டோம். மதுவிலக்குக் கொள்கையால் கள்ளச் சாராயம் பெருகிவிட்டது, என்று பேசிய வரலாறு உண்டு.

ஆகவே, அந்தப் பண்பிலிருந்து இந்த மாமன்றத்தில் பேசியதன் வாயிலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதை எண்ணிப் பார்த்து. அரசாங்கம் ஒரு கொள்கையை வகுத்திருந்தாலும் அதில் வெற்றிபெறவில்லை. நமக்கு வர வேண்டிய வருமானம் எல்லாம் வேறு எங்கோ போகிறது. அந்தப் பணம் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று அடிப்படையில் ஒரு திட்டத்தை தீட்டி, அதைச் செயல் படுத்தினார்கள். அது வெற்றிகரமாகச் செயல்படுகிறதா இல்லையா என்பது ஒருபுறம் இருந்தாலும் இன்னொரு கருத்தையும் இங்கே சொன்னார்கள் நாங்கள் ஆரம்பித்து வைத்தபோது 5 ரூபாய்க்கு குடித்தார்கள்; 5 ரூபாய்க்கு குடித்தவர்களை இன்றைக்கு 25 ரூபாய்க்கு குடிக்க வைத்துவிட்டீர்களே என்று கவலையோடு எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டியா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, நலிந்த சமுதாயம் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தக் குடிப்பழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒருபுறம் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இருந்தாலும் மக்கள் சமுதாயம்—இன்றையதினம் கிராமங்களில் இருக்கிறவர்கள் அரிஷ்டம் என்ற பெயரால், கள்ளச்சாராயம் என்ற பெயரால் குடிக்கிறார்கள். இப்படி குடிப் பழக்கத்திற்கு ஆட்படுத்தி விட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு ஆயத்தீர்வை, மதுவிலக்கைப் பற்றி பேசியது வேடிக்கையாக இருக்கிறது, விந்தையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நாட்டு மக்கள் பணம் வேறு எங்கும் போகாமல் இருக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கைத் தளர்த்தி, கள்ளுக்கடைகளைத் திறக்க ஒரு குறியீட்டை நிர்ணயித்து, 9124 கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டுமென்று நிர்ணயித்தார்கள். ஏலம் விடுகிறபோது 8478 கடைகள்தான் ஏலம் போயின. 646 கள்ளுக்கடைகள் ஏலம் போகவில்லை. அந்த அடிப்படையில் 1982-83 ஆம் ஆண்டில் அரசுக்கு 27.13 கோடி ரூபாய் இலாபம் வருகிறது. அதற்குப் பின்னால் 1983-84 ஆம் ஆண்டில் 23.81 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதற்குப் பின்னால் 1984-85 ஆம் ஆண்டில் மார்ச் முடிய 22 கோடி ரூபாய் வருமானம் வருகிறது கள்ளுக்கடைகள் மூலம்.

அதற்குப் பின்னாலே சாராயக் கடைகள் பற்றிய விவரத்திற்கு வருகிறேன். நல்லமுறையில் சில்லரை சாராயத்தை விற்பனைச் செய்வதற்காக 6872 கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்படுகிறது. அதிலே ஏலம் போனவை 6481 சாராயக் கடைகள். ஏலம் போகாத சாராயக் கடைகள் 391. மொத்தத்தில் கள்ளுக்கடைகளும் சாராயக் கடைகளுமாக ஏலம் போகாதவை 1,037 கடைகள் என்றால் என்ன நடக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். இங்கே சட்டமன்றத்தில் எளிதாகப் பேசிவிடுகிறார்கள். உண்மையிலே என்ன நடக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்கு கட்சியில் வேறுபாடு இருக்கவேண்டிய அவசியம் இல்லை. மாநில அரசுக்கு வருமானம் வரவேண்டும்; அதன் மூலம் வளர்ச்சிப் பணிகள் நடக்க வேண்டும். ஏலத்தின் கள்ளுக்கடைகளை எடுக்காதவர்களாக இருந்தாலும் சரி, சாராயக் கடைகளை எடுக்காதவர்களாக இருந்தாலும் சரி, 1,037 கடைகள் ஏலம் போகாமல் இருந்தாலும், அந்தக் கடைகளிலும் கள்ளையும் சாராயத்தையும் விற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஓரே ஒரு சாராயக் கடை 50,000 ரூபாய்க்கு ஏலம் போகிறது என்றால் அந்தக் கடைக்கு அரசாங்கம் நிர்ணயித்த தொகை 50,000 ரூபாய். ஏலம் எடுப்பவர்கள் அதற்குமேலே கேட்க வேண்டும். ஆனால் யாரும் அந்த 50,000 ரூபாய்க்குமேலே கேட்கக் கூடாது என்று கட்டுப்பாடு வைக்கிறார்கள். யாரும் 50,000 ரூபாய்க்குமேல் ஏலம் கேட்கவில்லை. அதனால் அதிகாரிகள் நிர்ணயித்த குறியீட்டிற்குமேல் ஏலம் போகாத காரணத்தால் அதை யாருக்கும் உரிமை செய்ய முடியவில்லை. அரசாங்க இடையிலே பல மாதங்கள் ஆகின்றன. இறுதியில் அரசாங்கத்திற்கு எழுதுகிறார்கள். ஆனால் ஏலம் எடுக்காதவர்கள் தொடர்ந்து சாராயத்தை விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12—40)

ஆகவே ஒவ்வொரு மாதமும் 50 ஆயிரம் ரூபாய் யார், யாருக்கோ இலாபம் கிடைக்கின்றது. அரசாங்கத்திற்கு வரக்கூடிய பணம் கிடைக்காமல் போகின்றது, இப்படி மாதத்திற்கு





50 ஆயிரம் ரூபாய் என்றால் 7 மாதங்களுக்கு 3½ இலட்சம் ரூபாய் அரசாங்கத்தின் பணம்கொள்ளை அடிக்கப்பட்டுவிடுகின்றது. யார் சாராயம் விற்கிறார்களோ அவர்களுக்குக் கிடைக்கின்றது. அரசாங்கத்திற்கு தருவதில்லை. இவ்வாறு 1,037 கடைகளில் நடந்திருக்கிறது. இதன் காரணத்தால் தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் பார்க்கிறபோது பாராட்டி, மகிழ்ச்சி அடைகிறேன். சாராயத்திலிருந்து வருகின்ற வருமானத்தைப் பொறுத்தவரையில் முதல் ஆண்டிலே அதாவது 1982—83 ஆம் ஆண்டு 27 13 கோடி, அதற்குப் பிறகு 23.81 கோடி, அதற்குப் பிறகு 22 கோடி என்று படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகின்றது என்றால் அதற்குக் காரணம் கள்ளச் சாராயக்காரர்கள் கொள்ளை அடித்துக்கொண்டிருப்பதுதான். எனவே கள்ளுக்கடைகளையும், சாராயக் கடைகளையும் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் இருக்கின்ற வாணிபக் கழகத்தின் மூலம் எடுத்துக்கொண்டு செய்வது பொருத்தமான காரியம்தான்.

அடுத்து, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளைப் பொறுத்தவரையில் 5 நிறுவனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த 5 நிறுவனங்களிலிருந்து அளிக்கப்படுகின்ற மது வகைகளை தமிழ்நாடு வாணிபக் கழகம் கொள்முதல் செய்கிறார்கள். இந்தக் கொள்கையை நான் பாராட்டி மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகளின் விற்பனை மூலம் முதல் ஆண்டில் 4,526 லட்சம் விற்பனை ஆகியது. பின்னர் மாதாமாதம் அதிகரித்து 1985 மார்ச் மாதம் முடிய 9,170 லட்சம் விற்பனை ஆகியது. இதிலேயிருந்து அரசாங்கம் நடத்துகின்ற கடைகள் எவ்வளவு இலாபத்தில் வருகின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அடிப்படையில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளைப் புட்டியில் அடைத்துச் சில்லரையாக விற்பனை செய்ய விண்ணப்பம் மூலம் வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையில 1981-82 ஆம் ஆண்டு 1,213 உரிமங்களை வழங்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1984-85 ஆம் ஆண்டு 860 கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் பணம் கட்டியவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். உரிமங்கள் கேட்டு பலர் மனுச்செய்திருககிறார்கள். அவ்வாறு உரிமம் கேட்டவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் வழங்கினால் நிறைய இலாபம் கிடைக்கும். அந்த வகையில் இதை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அண்டை மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படும் சாராயத்தையும், தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை மது வகைகளையும் பொறுத்தவரையில் முறையாகக்

கண்காணித்து நல்ல முறையில் 1983-ஆம் ஆண்டு 64 கார்களை பொருட்களோடு பிடித்திருக்கிறார்கள். 1984-ல் 104 வாகனங்களைப் பொருட்களோடு கைப்பற்றியிருக்கிறார்கள். 1985-ல் 54 வாகனங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்தப் பணியில் ஈடுபட்ட அதிகாரிகளைப் பாராட்டுகிறேன். அதிகாரிகள் பணி புரிகின்றபோது தங்களுடைய உயிரைத் துச்சமாக மதித்துத்தான் கள்ளக் கடத்தல் செய்பவர்களைப் பிடிக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் இந்த அதிகாரிகளை நான் பாராட்டுகிறேன்.

கள்ளச்சாராயத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கள்ளச்சாராயத்தை ஒழிப்பதாக இன்றையதினம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அந்த வகையில் கோடிட்டுக் காட்டியிருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். கள்ளச்சாராயத்தைக் கள்ளக் கடத்தல் செய்பவர்கள் 237 பேர்களும். மருத்துவக் கலப்பு செய்தவர்கள் 3 பேர்களும். குண்டர்கள் 802 பேர்களும் பிடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டிருப்பது குறித்து பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டுவதே இல்லை. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் ஒருவர் கூட இதை எடுத்துச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டுவதே இல்லை என்று. அப்படி வளர்ச்சி மன்றத்தைக் கூட்ட வேண்டுமானால் அதற்கு கோரம் வேண்டும் என்று சொல்லி, கோரம் இல்லாத காரணத்தினால் கூட்ட வழி இல்லை என்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் யார் வந்தாலும். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டினால் தான், அந்த அதிகாரிகளோடு சேர்ந்து பொது மக்கள் மத்தியிலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அந்த வகையில் அதை கட்டாயம் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, இங்கே இருக்கிற மாநில அதிகாரிகள். மாநில அதிகாரிகள் என்கிறபோது ஒரு விஷயம் குறிப்பிட விரும்பு கிறேன். நாம் 7-வது 5 ஆண்டு திட்டத்திற்கு இப்போது வந்திருக் கிறோம். அப்படி 7 ஐந்தாண்டுகள் திட்டம் வந்திருந்தாலும், சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆகியும், ஏழை எளிய மக்கள், அந்த திட்டங்களினால் ஏதாவது நன்மை அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால் என்னைப் பொறுத்த வரையில், எந்த நன்மையும் அவர்களைச் சென்று அடையவில்லை என்பது தான். இதற்கு எல்லாம் என்ன காரணம் என்றால், இங்கேயிருக்கிற அதிகாரிகளிடமிருந்து, திட்டம் தயாரித்து போவதற்குள், அந்த நிதி ஆண்டே முடிந்துவிடுகிறது. அதுதான் காரணம்.



இந்த ஆண்டு இறுதிக்குள் நாம் ஒதுக்குகிற பணத்தை எந்தத் துறையாக இருந்தாலும் செலவு செய்தாக வேண்டும். இப்போது 7-வது மாதம். இன்னும் 5 மாதங்கள் தான் இருக்கின்றன. இந்த 5 மாதங்களுக்குள் இங்கே பேசி ஒதுக்கி முடிவு செய்தபிறகு, அதிகாரிகள் கையிலே போய் அவர்கள் திட்டம் தீட்டுவதற்குள் 12-வது மாதம் வந்து சேர்ந்துவிடும். அதற்குப் பின்னர் அவர்கள் இந்த இந்த இனத்திற்கு இவ்வளவு என்று மதிப்பீடு செய்து, அந்தச் செலவுகளை அந்தத் துறை செலவு செய்ய தொடங்குகிற போது, காலம் போதாமல், அந்தப்பணம் எங்கெங்கோ போகிறது, எப்படி எப்படியோ வீணாகிறது. ஆனால் மக்களுக்கு அதனால் முழுப்பயன் இல்லாமல் போகிறது.

ஆகவே அந்த வகையில் அந்த அதிகாரிகளை நாம் கவனமாகச் செயல்படச் செய்ய வேண்டும். எந்த திட்டத்தைப் போட்டாலும் அது மக்களுக்குப் பயன் உள்ளதாக, அவர்களைப் போய்ச் சேருகிற வகையிலே திட்டி, அதற்கான நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்தாக வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றை மட்டும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணி என்று வருகிறபோது, இங்கேயிருந்து அதிகாரிகள் தொலைபேசியில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கிறார்கள். அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் யூனியனில் இருக்கிற அதிகாரிகளுக்கு அது போலவே தொலை பேசியில் சொல்கிறார்கள். இவர்கள் தொலைபேசியில் பேசும்போது அந்த யூனியனில் சம்பந்தப்பட்ட அதிகாரி இல்லாமல் போனால். அவருக்கு ஒன்றுமே தெரிவதில்லை. எந்தப் பகுதியில் எந்த வேலையைச் செய்வது என்பது அந்த அதிகாரிக்குத் தெரியாமல் இருக்கிறது. அதனால் என்ன செய்கிறார்கள். ஒரு லிஸ்ட் தயாரித்து வைத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு யூனியனிலும் அப்படி ஒரு லிஸ்ட் இருக்கிறது. அது ரோடாக இருந்தாலும், பாலம் அமைப்பதாக இருந்தாலும், எந்த வேலையாக இருந்தாலும், அவைகளுக்கு லிஸ்ட் வைத்திருக்கிறார் கள். அதிலிருந்து 10 இடங்களை தேர்ந்து எடுத்து அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். ஆனால் கடைசியில் பார்க்கிற போது, அந்தப் பத்து இடங்களும் ஏற்கெனவே அந்த திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலைகள் முடிவு பெற்ற இடமாக இருக்கும். இல்லையென்றால் தேவையில்லாத இடத்தில் வீணான முறையில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். இப்படித் தான் அந்த திட்டங்கள் வீணாகப் போய்விடுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த நிலைமைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இங்கேயிருந்து நேரிடையாகச் சென்று பார்வையிட்டு, அந்த

வேலைகளைக் கண்காணித்து, தேவையான அந்த இடங்களில் அந்தப் பணிகள் விரைவாக நடந்தேறும் வகையில் நிலைமைகளை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்றத் துறையிலேயிருந்து லெட்டர்-பேட் கொடுக்கிறார்கள். இந்த ஆண்டு அப்படித் தந்திருக்கிற லெட்டர் பேட்டின் காகிதங்கள் குப்பைக் காகிதங்கள் போல் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் களுக்கு நல்ல காகிதங்களைக் கொண்ட லெட்டர்-பேட்டை தருவதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா என்று நான் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகக் காலத்தில் 5 ரூபாய்க்கு குடித்துப் பழக்கப் பட்டவன், இப்போது 25 ரூபாய்க்குக் குடிக்கிறான் என்று நான் பேசியதாக சரியாகக் கவனிக்காமல் சொல்லிவிட்டதாகக் கருது கிறேன். அப்படி நான்சொல்லவில்லை. ஒரு பொதுவான கருத்தாக, குடிப்பழக்கத்திற்கு ஆளாகுபவர்கள் 5 ரூபாய்க்கு ஆரம்பித்து குடித்து குடித்து, அதைப் பழகிப் பழகி, 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் என்று வளர்ந்து 25 ரூபாய் வரையில் இப்போது குடிக்கிறான் என்றுதான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு: நானும் அதைத்தான் குறிப்பிட்டேன், ஆரம்பத்தில் குடிப்பதற்கு கற்றுக் கொடுத்தது, அல்லது கற்றுக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலத்தில் தான். அதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் தான் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர நான் சொல்லவில்லை. அந்தக் காலத்தில் குடிப்பதற்கு கற்றுக்கொண்டார்கள் என்றுதான் குறிப்பிட்டேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில ஆயத் தீர்வை, மாநில ஆட்சித் தலைவர் கள் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச அனுமதித்து வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.



ஆயத் தீர்வைப் பற்றிச் சொல்லும்போது கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகத்தான் இந்த மதுக் கடைகள் திறக்கப் பட்டிருக்கிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது, கள்ளச் சாராயம் ஒழிந்தால் இந்த மதுக் கடைகளை திரும்ப மூடப்பட்டு விடும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் கள்ளச் சாராயம் குடித்தால்தான் மனிதனுடைய உடற் நலத்திற்கு கெடுதல், இந்த நல்ல சாராயத்தைக் குடித்தால் கெடுதல் இல்லை என்று அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மதுக் கடைகளுக்கு முன்பு போர்டு போடச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

குடி குடியைக் கெடுக்கும் என்று போர்டு போட்டிருக் கிறார்கள். அப்படி போர்டு போட்டுவிட்டு இந்தக் குடியை வைத் திருப்பதால் என்ன லாபம்? கள்ளச் சாராயத்தில் இருக்கிற நிலை தான் இந்த நல்ல சாராயத்திலும் இருக்கிறது. ஆகவே நோக்கம் நிறைவேறவில்லை என்பது நான் எங்களுடைய கருத்து. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நல்ல சாராயம் கொடுக்கிறோம் என்று சொல்கிறபோது, அரசாங்கத்திற்கு அதில் வருமானம் வருகிறது என்று சொல்லலாம். வருமானத்தைப் பற்றி சொல்கிறபோது கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில் எட்டு பாராக்கள் இருக்கின்றன. அதிலே மதுவிலக்கு பற்றி தேசப்பிதா காந்தியடிகள் முதல் அண்ணா வரையில் பலர் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில் மிக முக்கியமானது; 'ஆயிரம் குடிகாரர்கள் நம்மிடையே இருப்பதை விட நம் நாடு வறுமை நாடாகவே இருப்பதை விரும்புகிறேன். மதுவிலக்கினால் கல்வி வளர்ச்சிக்கு வருமானம் தடைபடுகிறதென்றால் நம் நாட்டு மக்கள் தற்குறிக ளாகவே இருக்கட்டும் என்று கூறுவேன்' என்று காந்தியடிகள் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து, ஒரு மணி நேரத்திற்கு இந்தியா முழுவதுக்கும் என்னைச் சர்வாதிகாரியாக நியமித்தால், முதல் காரியமாக நான் என்ன செய்வேன் தெரியுமா? இழப்பீடு கொடுக்காமல் எல்லாக் கள்ளுக் கடைகளையும் மூடிவிடுவேன். இவ்வாறு காந்தியடிகள் சொல்லி இருக்கிறார்கள்.

அதேபோல பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருப் பதையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழி லாளர்களுக்கும் விமோசனமே இல்லை.

இவற்றையெல்லாம் எங்களுக்கு கொடுத்திருக்கிற புத்த கத்திலே போட்டுவிட்டு மதுவிலக்கு கொள்கையில் பேசச் சொல்கிற போது இந்த எட்டு பாராக்களையும் எடுத்துவிட்டே கொடுத்தால் நல்லதென்று நினைக்கிறேன்.

ஏனென்றால் இதிலே இருப்பது மதுவிலக்கு கண்டிப்பாக இருக்க வேண்டுமென்பது. ஆனால் மதுக் கடைகளை திறந்திருக்கிறீர்கள். ஆகவே அந்த மதுக்கடைகளை நீங்கள் மூடுவதற்கு எந்தவிதமான காரியங்களையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே மதுக்கடைகளை மூட வேண்டுமென்பது தான் எங்களுடைய ஜனதா கட்சியினுடைய கோரிக்கை.

மதுக்கடைகளைத் திறக்கிற போது 1-7-1981 என்று நினைக்கிறேன். அப்போதே நாங்கள் கண்டனம் தெரிவித்து இருக்கிறோம். கறுப்பு பேட்ஜ் அணிந்து ஊர்வலம் போய் இருக்கிறோம். பல இடங்களில் இதுபற்றி பேசியிருக்கிறோம். ஆனால் தொடர்ந்து மதுவிலக்கைப் பற்றி நீங்கள், வருமானம் இருக்கிறதென்று பல கருத்துக்களைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் மற்றபடி மதுவிலக்குக் கொள்கையில் இந்த அரசுக்கு நிலையான கொள்கை இல்லையென்பதற்கு பலவற்றைச் சொல்ல முடியும். அதற்கு உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், நீங்கள் இதுவரையில் மதுவிலக்கு செயல்முறைப் பிரிவு கண்டறிந்த வழக்குகளின் விவரத்தில், கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் 3 லட்சத்து 51 ஆயிரத்து 553; குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்து 43 ஆயிரத்து 518; தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 393; இந்த விவரங்கள் 1981 முதல் 1985 வரையில் இருக்கின்றன. விடுதலை அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 13,252. இதிலே திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்று 64,904 வழக்குகள் இருக்கிறது. திரும்பப் பெறுவது என்றால் என்ன அர்த்தம்? அதேபோல திரும்பப் பெற்றுக் கொள்வதென்றால் வழக்குகள் முறையாகப் போடப்படவில்லை என்று அர்த்தமா?

அதேபோல நீதிமன்ற விசாரணையிலுள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 54,969. யூ. என். என்று கருதப்பட்டு கைவிடப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,23,010. இன்னும் போலீசாரின் புலன் விசாரணையின்கீழ் உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 85,025 வழக்குகள். 1981-ம் ஆண்டிலிருந்து இன்னும் புலன் விசாரணை முடியாமல் இருக்கிறது. 1981-ல் 1956 வழக்குகள்; 1982-ல் 4,536 வழக்குகள்; 1983-ல் 14,859 வழக்குகள்; 1984-ல் 39,217 வழக்குகள்; 1985 ஏப்ரல் வரை 24,408 வழக்குகள். இவைகள் போலீசாரின் புலன் விசாரணையில் இருப்பதாக சொல்லி இருக்கிறீர்கள். அப்படி என்றால் என்ன அர்த்தம்? எப். ஐ. ஆர். பதிவு செய்யப்படவில்லையா? முன்னுக்குப் பின் முரணாகச் சட்டங்கள் இருக்கிறதா? இவற்றையெல்லாம் பரிசீலத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள் மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு மற்ற அமைச்சர்களும் துணையாக இருப்பார்கள் என்று கருதுகிறேன்.



அதேபோல மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றி சொல்கிற போது, மந்திரி சபையிலே அமைச்சர்களைப் போட வேண்டியது ஆளும் கட்சியின் பொறுப்பு; அது முதலமைச்சர் அவர்களுடைய பொறுப்பு. அது பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஒன்று அமைச்சர்களை குறைத்துக்கொள்ள வேண்டும். அல்லது அமைச்சர்கள் எல்லோருக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இங்கேயே முன் வரிசையில் இருக்கிற அமைச்சர்களுக்கு ஆளுக்கொரு மைக் வசதி இருக்கிறது. பின் வரிசையில் இருக்கிற அமைச்சர்களுக்கு அவ்வாறில்லாமல் இருக்கிறது. ஆகவே எல்லா அமைச்சர்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அமைச்சர்கள் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று அமைச்சர்கள் தொகுதிகளில் நடைபெறுகின்ற விழாக்களுக்கு வருகின்றபோது, நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி நான் ஏற்கனவே அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருந்தாலும், இந்தத் துறை மானியக் கோரிக்கை வரும்போது நான் சொல்ல விரும்புகிறேன். விருதுநகரிலே ஏற்கனவே நடந்த ஒரு மாநாட்டைப் பற்றி நான் சொல்லியிருந்தாலும் கூட, இதிலே உள்ள பல குறைபாடுகளைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அவர்கள் பார்த்து ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகுதியிலே ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு இருக்கிறார்கள். விருதுநகரிலே நடந்த அந்த விழாவிலே அடுத்த மாவட்டத்திலே இருக்கிற உறுப்பினர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு, அதன்பிறகு விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெயரைப் போடுகிறார்கள். நான் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இருந்தாலும், இந்த அரசு விழாக்கள் நடைபெறுகிறபோது, விழா பத்திரிகையைப் பார்ப்பவர்கள், நடுத்தர மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதேபோல் சாத்தூரில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னேன். அந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு அமைச்சர் ப. உ. ச. அவர்கள், சாத்தூர் ராமச்சந்திரன் அவர்கள் வந்து கலந்து கொண்டார்கள். அங்கும் இந்த மாதிரி பிரச்சனை இருந்தது. இதிலேயும் சில உறுப்பினர்களுடைய பெயர் போடவில்லை. அப்படிப் போடாததைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரைப் போடுகிறார்கள். அமைச்சருக்குத் தெரிந்து இவைகள் நடக்கின்றதா? அப்படி என்றால், அங்கே இதை ஆளும் கட்சி செய்கிறதா? என்று தெரியவில்லை. ஏன் என்றால் விருதுநகரிலே உள்ள என்னுடைய பெயரைப் போடவில்லை. விருதுநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருடைய பெயர் போடப்பட்டு இருக்கிறது.

அதைப்போல ராஜபாளையம் தொகுதியிலே கூட, 1980-லே இருந்த உறுப்பினர் அல்ல, 1977-லே இருந்த உறுப்பினருடைய பெயர் போடப்பட்டு இருக்கிறது. இதை எல்லாம் பார்க்கிறபோது இதை யார் ஏற்பாடு செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றித் தெரிந்து இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அப்போதே அவர்கள் இதைச் சரி பார்த்து, இந்தத் தொகுதியிலே உறுப்பினர்கள் இருக்கிறார்களே ஏன் அவர்களுடைய பெயரைப் போடவில்லை என்று கேட்டிருந்தால், சரியாக நடந்து இருப்பார்கள் அவர்கள் என்று நான் நினைக்கிறேன்.

அதேபோல் அமைச்சர்கள் வரும்போது, 5, 6 பக்கம் என்று விளம்பரம் போடுகிறார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. தனியார்கள் போட்டால் நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சொசைட்டிகள் போடும்போது, வரவேற்பு வளைவுகள் போட்டு, 'வருக வருக' என்ற இப்படி பல அடைமொழிகளைப் போட்டுச் செய்கிறார்கள். அதைப் பற்றி கவலையில்லை. இப்படி 5, 6 பக்கம் போடுகிறபோது, அதிலே ஏழைகளுடைய பணம், அவர்களுடைய போனஸ் பணம் போய்விடுகிறது. எனவே அமைச்சர்கள் வரும்போது, அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள இந்தச் சொசைட்டிகள் எல்லாம் இப்படி விளம்பரம் போடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அமைச்சர்கள் எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து, அவர்களுடைய தொகுதியிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்களை அழைத்து அவர்கள் தலைமையில் திறப்பு விழா செய்தால், மிகவும் நன்றாக இருக்கும். அமைச்சர்கள் அந்தப் பகுதியில் உள்ள அரசாங்க திறப்பு விழாக்களுக்கு வரும்போது, அங்குள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கௌரவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்னும் சில வார்த்தைகள். விருதுநகரிலே உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து நிற்கும் இடத்தில் கவுண்டர்கள் இல்லை. விருதுநகர் நகரம் வணிகத்திலே இந்தியாவிலேயே சிறந்த இடம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். அவர்கள் பார்த்து செய்வதாகச் சொல்லியிருந்தாலும், இன்னும் கவுண்டர்கள் திறக்கப்படவில்லை.

அடுத்து விருதுநகரிலேயிருந்து சென்னைக்கு பஸ் கிடையாது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பஸ்களோ, அல்லது பி. ஆர். சி. பஸ்களோ கிடையாது. சின்னச் சின்ன ஊர்களிலிருந்து





எல்லாம் சென்னைக்கு பஸ் விடப்படுகிறது. ஆனால் விருதுநகருக்கு மட்டும் ஏன் வரவில்லை. வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் வரவில்லை.

அதேபோல் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்லும்போது, 30 லட்சம் ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை விருதுநகரிலே அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. எனவே சுகாதார அமைச்சர் அவர்கள் இதைச் சீக்கிரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நீதிமன்றங்கள் வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். நீதிமன்றங்கள் வருவதற்கு தாமதங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. எல்லாத் தலைமை அலுவலகங்களும் காமராஜ் மாவட்டத்திற்கு வந்துவிட்டன. ஆனால் நீதிமன்றம் வந்தால், அது முற்றுப்பெறும் என்ற நிலையில் இருக்கிறது. சின்னச் சின்ன வழக்குகள் 250, 300 ரூபாய் உள்ள பிராமிசரி நோட் வழக்குகள் கூட சாத்தூருக்குச் செல்லவேண்டிய நிலைமையிருக்கிறது. இதையெல்லாம் பார்த்துச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சட்டமன்றம் நடக்கிறபோது, ஐ. ஏ. எஸ் அதிகாரிகள் மற்ற அதிகாரிகளும் இந்தச் சட்டமன்ற அலுவலகத்தில் ஆஜராகி மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அவர்கள் ஆவன செய்யவேண்டும். அதேபோல் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெறுகிறது என்று காரணம் சொல்லாமல் இருக்க வேண்டும். ஏன் என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களுக்கு மக்கள் மத்தியிலிருந்து பல்வேறு கோரிக்கைகள் வருகின்றன. அந்தக் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்கு, மக்களுக்காக என்னென்ன செய்யவேண்டுமோ, அவைகளைச் செய்வதற்கு, சட்டமன்றக் கூட்டம் நடக்கிறபோது, அதிகாரிகள் எல்லாம் அலுவலகம் வந்து, குறைகளைக் களைய ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-00)

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வந்து இருக்கக்கூடிய மாநில ஆயத் தீர்வை துறை, மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிட பணியாளர்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் இங்கே சில கருத்துக்களை இந்தமன்றத்தில் வைக்க முன் வருகிறேன்.

(டாக்டர் கே. சமரசம்) [1985 ஜூலை 2

இன்றையதினம் இந்தியாவினுடைய விடுதலைக்கு பாடுபட்ட மகாத்மா காந்தி அடிகள், எத்தனையோ தியாகிகள், தேச பக்தர்கள் அந்த காங்கிரஸில் இருந்து விலகி தென்னக நல உரிமைச் சங்கம் என்ற ஏற்பாட்டைச் செய்து அதிலே இருந்து மிகப் பெரிய திராவிட பாரம்பரியத்தை உருவாக்கிய தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, வணக்கத்திற்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் இவர்கள் எல்லோரும் இந்த நாட்டிலே மது விலக்கு நிச்சயமாக அமல் ஆக வேண்டும், கள்ளச் சாராயம் கூடாது என்று தான் சொன்னார்கள், சொல்கிறார்கள். அந்த தத்துவம் இந்த நாட்டை விட்டு போய்விடவில்லை. ஆனாலும் கூட கள்ளச் சாராயம் இந்த நாட்டில் ஒரு சிலருக்கு சமுதாய தேவையாகப் போய் விட்ட காரணத்தால் இந்த அரசு அதை நீக்கி விட முடியாத அளவுக்கு ஒரு பிரச்சினை இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிறது என்பதை விவரம் அறிந்தவர்கள், ஆட்சி செய்தவர்கள், ஆட்சி செய்ய எண்ணுகிறவர்கள், அந்த அந்த இடத்தில் பொது நலத்துறையில் ஈடுபடுகிறவர்கள் யாருமே மறந்து விட முடியாது என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படி இருந்தாலும் கூட எதை இந்த நாடு ஏற்றுக்கொண்டாலும் சமுதாயத்திலே ஒரு பிரிவினர் ஏற்றுக்கொண்டாலும் கூட அவர்களுக்கும் சில நன்மைகள் செய்து தான் ஆகவேண்டும். அவர்களை அழித்துவிடமுடியாது. இன்று ஆக்கப்பட்ட பொருட்கள் அத்தனையும் ஆண்டவனுக்குச் சொந்தம் என்பது சமய நெறிகாலம். ஆனால் ஆக்கப்பட்டப் பொருட்கள் அத்தனையும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்பது சட்ட நெறி ஆளுகின்ற இந்த காலம்.

அந்த அடிப்படையில் அப்படி பல்வேறு வகையில் தவறான வழியில் குடித்துக் கெட்டவர்கள் ஓரளவுக்கு திருந்தக்கூடிய வகையில்தான் இது போன்ற சட்டத்திட்டங்கள் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் ஆளுகின்ற இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை அனைவரும் மிக நன்றாக புரிந்துகொள்வார்கள்.

இந்திய துணைக்கண்டத்திலே தமிழ்நாட்டில் தான் பேட்டரி சரக்கு இல்லை. பூஜியா சரக்கு வெளியேறிவிட்டது. சல்பேட்டு சரக்கு தயாரிக்கவில்லை. பட்டை சரக்கு பட்டை நாமம் போட்டுக்கொண்டு அது ஒழிக்கப்பட்டது என்று சொல்லக் கூடிய அளவுக்கு இன்றையதினம் இந்த அரசு எடுத்து இருக்கின்ற முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக இந்த நாட்டில் இவைகள் நடந்து இருக்கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது.



1985 ஜூலை 2] (டாக்டர் கே. சமரசம்)

ஆனால் இங்கே பேசிய பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். சிலர் உபதேசம் செய்தார்கள். சிலர் பழைய விஷயங்களை எண்ணிப்பார்த்தார்கள். சிலர் மேலும் இந்த நிலை நீடிக்கலாமா, இதற்கு ஏற்ற விமோசனம் இல்லையா என்று எல்லாம் கேட்டார்கள். நான் உண்மையிலேயே அப்படிப்பட்ட உணர்வுபடைத்த நல்ல இதயங்களோடு நானும் ஒன்றாக நின்று இருப்பேனே தவிர அதில் எனக்கு மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. அது தான் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கருத்தும் கூட.

ஆனால் நிலைமை என்ன, நிர்வாகத்தினுடைய நிலைமை என்ன என்று பார்க்கவேண்டும். இங்கே ஒருவர் சொன்னார் ஏஜென்சி முறை எதற்கு கட்சிக்காரர்களுக்கு. சாராய கடை அதிலே பல்வேறு விதமான ஊழல்கள் அது பல பல வகையில் செல்கிறது. எங்கெங்கோ போகிறது யார் யாருக்கோ போகிறது, எப்படி எப்படியோ போகிறது என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் 3 ஆண்டு காலமாக மது விலக்கை ரத்து செய்ததன் மூலமாக அந்த ஆட்சியில் வருமானம் அவர்களுடைய மொத்த வருமானம் எவ்வளவு என்றால் 69 கோடி ரூபாய்க்கு மேல் இல்லை. மது விலக்கை ரத்து செய்து இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தி மிகப் பெரிய அளவுக்கு இந்த கள்ளுக்கடை, சாராயக் கடைகளை திறந்து விட்டு 3 ஆண்டுகளாக இந்த அரசாங்க கஜானவுக்கு வரவு 69 கோடி ரூபாய்க்கு மேல் இல்லை. ஆனால் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை தொடர்ந்து வந்த அரசு மிகப்பெரிய மக்கள் தொகை பெருக்கம் இல்லாமல் இருக்கின்ற அந்த மக்கள் இடத்தில் வரியாக இன்றையதினம் 450 கோடி ரூபாய்க்கு மேல் வருகிறது என்று சொன்னால் இங்கேதான் நிர்வாகம் இருக்கிறது. கொள்கை சரியா ? தவறா ? அது வேறு விஷயம்.

ஆனால் அதிலேயும் ஊழல்கள் செய்தவர்கள், ஓட்டைப் போட்டுக் கொண்டவர்கள், யார் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படி இருந்தவர்கள், ஆட்சி செய்தவர்கள் இங்கே உற்பத்தி ஆகக்கூடிய பல்வேறு விதமான சம்பந்தப்பட்ட பொருட்களை ரா-மெட்டீரியல்ஸ்களை எல்லாம் எந்த எந்த மாநிலத்திற்கோ எந்த எந்த கணக்குகளிலோ எந்த எந்த வகையிலோ, எந்த எந்த இனங்களிலோ எப்படி எப்படியோ அனுப்பியவர்கள், அனுப்பியதாக எழுதியவர்கள், பல்வேறு வகையில் தனியாக நிரந்தரமான வருவாயை வைத்துக்கொண்டவர்கள் ஆனால் ஆட்சிக்கு வரவில்லை. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் இந்த நேரத்தில் மிகப் பெரிய அளவில் தனியாருடைய கொள்ளை லாபங்களை தடுத்து, தனியாருக்கு குறைந்த வருமானம் வரக்கூடிய நிலையில், அரசுக்கு நஷ்டம் ஏற்படாமல், வேண்டியவர்களுக்கு லாபம்

என்று சொல்லக்கூடிய நிலைமை எல்லாம் உருவாகாமல் மிகப்பெரிய அளவில் வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய ஒரு வாய்ப்பை இந்த வகையில் பெற்று இருக்கிறது என்பதை யாருமே மறந்து விட முடியாது.

இங்கே குடிப்பதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் குடிப்பது கட்டாயம் என்று சட்டம் கொண்டு வரவில்லை. குடிப்பது கட்டாயம் இல்லை. கடையைத் திறந்தது, குடியுங்கள் என்று சொல்வதற்காக அல்ல. குடிக்கிறவர்கள் நல்லதைக் குடிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

குடிக்கவேண்டும் என்ற கட்டாயச் சட்டத்தை யாரும் போடுவது இல்லை. குடிப்பதை நிறுத்த போடப்பட்ட திட்டங்கள் எல்லாம் பயனற்று போனது. இந்த நாட்டிலே குடித்தால், அவன் ஊரிலேயிருந்து வெளியேற்றப்படுவான். நாடு கடத்தப் படுவான் என்றும், கிராம அதிகாரி, நிர்வாக அலுவலர், அரசு அலுவலர்கள் பதவி நீக்கம் கூட செய்யப்படுவார்கள் என்று எல்லாம் எத்தனையோ திட்டங்களைப் போட்டோம். அனுமதித்தது யார்? ஆமோதித்தது யார்? வரவேற்றது யார்? எந்த எதிர்க்கட்சிகள் அதை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இந்தச் சமுதாயத்திலே உருவாக்கிக் காட்டின? யாரும் எதுவும் செய்யவில்லை. அப்போது சொன்னார்கள், குடிப்பது என்ன பாவமா? அது என்ன கொலைக் குற்றமா? அதற்காக வெளியேற்றமா? அதற்காகத் தண்டனையா, இது எல்லாம் சமுதாயத்திலே இருக்கக் கூடிய ஒன்று, அதற்காக வெளியேற்றுவது, நாடு கடத்துவது எல்லாம் எவ்வளவு மோசமானது என்று இதே சட்டமன்றத்திலே பேசியவர்கள் மீண்டும் இந்தச் சட்டமன்றத்திற்கு கூட தப்பித் தவறி வந்து இருக் கிறார்கள்.

என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது. மறந்துவிடமுடியாது. ஆகவே, கடுமையான சட்டம் என்று சொல்பவர்கள், இதயத்தைப் பிடித்துக் கொண்டு, நிச்சயம் நிறைவேற்றி ஆக வேண்டும். குடிப்பதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்; அந்தப் பாவத்திலிருந்து மக்களை நாம் காப்பாற்றியாக வேண் டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அது இந்த நாட்டிலே அமல் ஆகாமல் போய் விட்டது.

அதற்கு மாறுபாடுஆக அந்த நேரத்திலே சொன்னார்கள். கள்ளச்சாராயம் ஆறாக ஓடுகிறது. ஓடையாக ஓடுகிறது. இந்தக் கள்ளச் சாராயத்தினால் உயிரிழந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். இது தகுமா? நியாயமா? கட்டுப்படுத்த முடியாதா?



ஒழுங்குபடுத்த முடியாதா? அதற்கு வேண்டிய திட்டம் அரசிடத்திலே இல்லையா என்றெல்லாம் பல்வேறு வகையிலே கேள்விக் கணைகளை இதே சட்டமன்றத்திலே, இதே ஆட்சி இருக்கின்ற போதே பல்வேறு நண்பர்கள், எதிர்க்கட்சியிலே வந்தவர்கள் கேட்டார்கள்.

ஆகவே, மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை எண்ணிப் பார்த்து, சமுதாயத்திலே சீர்திருத்தம் செய்வதற்காக எந்த எந்த வழிமுறைகளைக் கையாள முடியுமோ, அதையும் எண்ணிப் பார்த்து, குடிக்கின்றவர்களை முழுமையாக அந்தப் பழக்கத்திலிருந்து நிறுத்த முடியாத நிலையில், அவர்கள் குடித்தார்கள், செத்தார்கள், அழிந்தார்கள் என்ற நிலையிலிருந்து மாற்றக் கூடிய ஒரு சட்டமே தவிர, ஒரு திட்டமே தவிர, மனப்பூர்வமாக நாங்கள் ஏற்றுக்கொண்ட திட்டம் அல்ல, அல்ல, அல்ல என்று நேற்றும் சொன்னோம், இன்னும் சொல்கிறோம், நாளையும் சொல்வோம்.

ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், நிர்வாகத்திற்காக எடுக்கக் கூடிய சில நடவடிக்கைகளே தவிர, இதெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அல்ல. அடிப்படைக் கொள்கை அல்ல. எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக் கொண்டது அல்ல. மக்கள் மத்தியிலிருந்து ஒரு முடியாத நிலை.. அது தான் காரணம். இங்கே பலர் சொன்னார்கள்.

உபதேசம் கூடச் செய்தார்கள். தமிழ்நாடு தனிநாடு அல்ல. தமிழ்நாடு தன்னாட்சிப் பெற்றதே தவிர, தனி ஆட்சிப் பெற்றது அல்ல. தமிழ்நாட்டினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றபோது, அதற்காக எத்தனையோ மாநிலங்களை உதாரணமாகக் காட்டுகிறார்கள். உண்மைதான்.

அதே நேரத்தில், மற்ற மாநிலங்களுக்கும், நமக்கும் இருக்கின்ற பல்வேறு வேறுபாடுகளை எண்ணிப் பார்த்து, பல்வேறு வகைகளிலே நாம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டியாக வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு பகுதியாக இருக்கக்கூடிய இந்த மாநிலத்தில் இதை விட வேறு வழியில்லை என்ற நிலையில்தான் இதைக் கொண்டு வந்தோம்.

இப்படிக் கொண்டு வந்த காரணத்தினால் அரசுக்கும் வருமானம்தான். அந்த வருமானத்தை மக்களுக்கும் பல்வேறு வகையிலே, யாரால் பெறப்படுகிறதோ, யாரால் வாங்க முடியாமல், கொடுக்க முடியாமல் இருக்கும் என்ற சூழ்நிலை இருந்து, அதை அடக்கியவர்கள், ஒடுக்கியவர்கள், எடுத்துக் கொண்டவர்கள் என்று எல்லாம் சொல்லக் கூடியவர்களிடமிருந்து வருவாயை வைத்து யாருக்கு செலவு செய்ய வேண்டுமோ அவர்களுக்குச் செலவு செய்கிறோம்.

(டாக்டர் கே. சமரசம்) [1985 ஜூலை 2

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது கொள்கையே, வரவு எவ்விதம் என்பதைவிட செலவு இவ்விதம் தான் இருக்க வேண்டும். இப்படித்தான் இருக்க வேண்டும். ஏழைகளுக்காக இருக்க வேண்டும். இல்லாதவர்களுக்காக இருக்க வேண்டும் என்ற வகையில் நெறிமுறைப்படுத்தினார். வாழ்க்கை யிலேயும், ஆட்சியிலேயும் அதைதான் ஒழுங்குமுறைப்படுத்தினார்.

முன்பு இங்கே சில விஷயங்களைச் சொன்னார்கள். தனியார் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அரசே நடத்தலாமே, நடத்தக் கூடாதா என்று கேட்டார்கள். இதை ஒரு கார்ப்பரேஷன் இடத்திலே ஒப்படைக்கக் கூடாதா? விநியோக உரிமையை தனி யாருக்கு ஏன் கொடுக்கிறீர்கள், அவர்கள் எத்தனை கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதனால் உங்கள் கையும், பையும் எப்படி நிரம்பியது, இதை ஒரு கார்ப்பரேஷனிடம் கொடுக்கக் கூடாதா கேட்டவர்களே, இங்கே ஒரு சிலர் வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இன்றையத் தினம் சொல்கிறார்கள். தனியாருக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில், அதனால் பலவகைகளிலே இலாபம். ஆட்சிக்கு அல்ல, கட்சிக்கு, அதை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும், கார்ப்பரேஷன் ஒன்று அதற்காக நிறுவ வேண்டும், அதன் மூலம் விநியோகம் செய்ய வேண்டுமென்றெல் லாம் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் இன்றைக்குப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். நிர்வாக வசதியை முன்னிட்டு, நிர்வாகம் எடுத்துள்ள இந்த முறையை எண்ணிப் பார்த்து பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் இப்பொழுதோ கதையையே மாற்றுகிறார்கள், அப்படி மாற்றிக் கொள்வதை அவர்கள் வாடிக்கையாகக் கொண்டவர் களே தவிர நிலையான கோணத்தில் பார்ப்பவர்கள் அல்ல என்பது இதிலேயிருந்து நன்றாகத் தெரிகிறது.

(பிற்பகல் 1–10)

அது மட்டுமல்லாமல் இன்னொன்றையும் இங்கே சொன்னார் கள். கிராமப் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று சொன் னார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே பேசப்பட்ட பல்வேறு விதமான வசனங்களே, பராசக்தி காலத் திலே கொண்டு வரப்பட்ட வாசகங்களே தவிர இன்றைய தினம் கொண்டு வரப்பட்டது அல்ல. அன்றைக்கு நாடு இருந்த நிலைமை வேறு, அன்றைக்கு இருந்த ஆட்சி வேறு, அன்றைக்கு இருந்த நிலை வேறு, அன்றைக்கிருந்த மக்களின் கோரிக்கையே வேறு, அன்றைக்கு இருந்த நடைமுறையே வேறு. இந்த வசனத்தையெல்லாம் மீண்டும் நினைவுபடுத்திச் சில விஷயங்களைச் சொன்னார்கள். கிராமப் பொருளாதார வளர்ச்சி முறையில் மறுமலர்ச்சி மிக்க பெரிய பிரளயமாக உற்பத்தியாகி நாட்டிலே அமுலாகிறது என்று சொன்னால் அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆளுகின்ற ஆட்சியில்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூலை 2] (டாக்டர் கே. சமரசம்)

இந்தத் தமிழ் நாட்டிலே அரிசியைக் கொடுக்கிறோம். பாதி விலைக்குக் கொடுக்கிறோம், இலவசமாகவும் கொடுக்கி றோம், சத்துணவு போடப்படுகிறது, உடல் ஊனமுற்றவர்களுக்கு உணவு, முதியோர்களுக்கு உணவு என்ற முறையில் இவ்வளவும் போட்டும் கூட அரிசிப் பஞ்சம் என்பது இந்தத் தமிழ் நாட்டிலே இன்றைக்கு இல்லை.

அதுமட்டுமல்லாமல், சத்துணவுத் திட்டத்தில் அளிக்கப்படும் உணவில் காய்கறிகள் சேர்க்கப்படுகின்றன. சத்துணவுக் கூடங் களில் சமைக்கப்படும் உணவில் எல்லாக் காய்கறிகளையும் போடு கிறோம். எங்கேயாவது காய்கறி இல்லை என்ற ஆபத்து ஏற்பட்ட வரலாறு தமிழகத்தில் உண்டா?

அசைவ உணவைப் பொறுத்தவரையில் பார்த்தோம் என்றாலும்கூட, முட்டை சாப்பிடாதவர்கள் என்று எடுத்துக் கொண்டால் 5 சதவீதத்திற்கு மேல் இருக்கமாட்டார்கள். கோழி முட்டை இல்லை என்ற நிலைமை தமிழகத்திலே எங்கே யாவது ஏற்பட்டது உண்டா? ஆட்டுக் கறி இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது உண்டா? மக்கள் தொகை பெருகி எவ்வளவு பேர் எப்படியெப்படிச் சாப்பிட்டாலும் மீன் இல்லை என்ற நிலைமை தமிழகத்தில் இல்லாத நிலைமையில் மீன் உற்பத்தி ஆகியிருக்கிறது.

இந்த அளவிற்குத் திட்டமிட்டு மிகப் பெரிய சாதனை புரிந்த ஆட்சி, மறுமலர்ச்சியை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சியை உருவாக்கிய ஆட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ற உண்மையை யாரும் மறந்துவிட முடியாது. அந்த அளவிற்கு நாடு இருக்கிறது என்ப தற்காகத்தான் நான் இந்த நேரத்தில் இந்த நிலைமைகளை எடுத்துக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். ஏஜென்சி முறையை கொண்டு வந்ததன் நோக்கம், வருவாய் பெருக, இடைத் தரகர்கள் ஒழிய, கொள்ளை இலாபம் பெறுவதைத் தவிர்க்கவும், அளவு, விலை, நிர்ணயம், தரம், வினியோகம் ஆகிய இவை களெல்லாம் சீராக அமைய வேண்டும் என்ற இந்த அடிப்படை யிலேதான் கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால் இந்த அடிப்படையிலே இன்றைக்கு இந்த நாடு இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது.

ஆனாலும்கூட ஆலோசனை சொன்னவர்கள் இந்த ஆட்சி மீண்டும் வருவதற்கு முன்பாக, மூன்று முறை பல்வேறு வகை களிலேயும் அவர்கள் திட்டமிட்டு முயற்சி செய்து தோற்றுப் போனவர்கள். பெத்தெடுப்பதற்கு முன்பாகவே தத்தெடுத்துக் கொண்டவர்கள். அந்தப் பிள்ளையும் செத்துப் பிறந்ததால்

இன்றைக்குத் தத்தளிப்பவர்கள் தர்ம உபதேசம் செய்கிறார்கள். அப்படி தர்ம உபதேசம் செய்பவர்களை பார்த்து உண்மையிலே நாங்கள் மிக மிக வேதனைப்படுகிறோம்.

வரிகளாக எழுதாமல் வாக்கியத்தை முடிக்க முடியாது. வரிகள் பேசாமல் அரசு எனும் வண்டியை ஓட்ட முடியாது. வேலிகளின் பலமின்றி விளைச்சலைக் காண முடியாது; தாலி கட்டாத திருமணத்தை தமிழ்நாடு ஏற்காது என்பதையும் நாம் அறிவோம். சாக்கடையில் விழும் சண்டாளக் குடியருக்குப் பூக் கடை வாசம் புரிவது எப்போது? அறிவு அவன் கண்ணை அகலத் திறக்கும்வரை அரசின் சாராயம் அவசியம்தான் என்பதை உணர்ந்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாநில ஆட்சி பற்றியும் சில கருத்துக்களைச் சொல்லவேண்டியதாக இருக்கிறது; மாவட்ட நிர்வாகம் பற்றியும் சொல்லவேண்டியிருக்கிறது. கடலிலே மீன் இருக்கிறது, அது உப்பு நீரில்தான் இருக்கிறது. ஆனால் அந்த மீனைப்பிடித்து உப்பைப் போட்டு பக்குவப்படுத்தியே உண்ணுகிறார்கள். அந்த உப்புங்கூட அந்த உப்புத் தண்ணீரிலேயிருந்து எடுக்கப்பட்டதுதான். தமிழ்ப் பெண்ணுக்கு, குலப் பெண்ணுக்கு அதை எப்படிச் செய்ய வேண்டுமென்ற நிலை தெரியும், சமையல் செய்பவர்களுக்குத் தெரியும். அதைப்போல வருவாயை ஒட்டி விட்டு நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்பது அவர்களுக்குத் தெரியும். அந்தக் கலையை இந்த அரசும் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறது. அப்படித் தெரிந்துதான் இந்த ஆட்சியை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் பங்கேற்பது நல்லது. அப்பொழுதுதான் மாவட்டத்தின் பிரச்னையை நன்றாகத் தெரிந்து கொண்டு செயலாற்ற வசதியாக இருக்கும். நாட்டில் எலக்ட்ரானிக் சிஸ்டம் பெருகியுள்ள இந்த நேரத்தில், கோப்புகள் வேகமாகப் பேசும் வகையில் ஆலோசனைக் குழு என்ற ஒரு நிர்வாகக் குழுவை அமைப்பது மிகவும் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனுபவம் பெற்றவர்கள், ஏற்கனவே ஆட்சியிலே இருந்தவர்கள், அரசியல் வல்லுநர்கள், பொருளாதார மேதைகள் இவர்களையெல்லாம் இணைத்து ஒரு குழு அமைப்போமானால் அப்பொழுது பைல்கள் மேலும் வேகமாக செல்வதற்குரிய வாய்ப்பினை உருவாக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவானால் இப்பொழுது இருக்கிற இந்த ஆட்சிக்கு மேலும் மணி மகுடம் வைத்ததைப் போன்ற நிலை இருக்கும். அதை மாண்புமிகு நிதி





அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்தச் சிறப்பான மானியக் கோரிக்கையினை வரவேற்று அமர்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவை தளநாயகர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் தமிழ்நாடு தனி நாடு அல்ல, தன்னாட்சி நாடு என்றெல்லாம் சொன்னார்கள். நான் தமிழ்நாட்டினுடைய பெருமை இந்தியாவிலே உயர்ந்து விளங்கவேண்டுமென்று தான் குறிப்பிட்டேனே தவிர, இழிவாகச் சொல்லவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மது விலக்கு ஆயத் தீர்வை துறை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்லி இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்; வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றி. என்னைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய வரவு செலவுத் திட்டத்தில் மதுவினுடைய அடிப்படையிலே ஒரு வருமானமே இல்லாத ஒரு காலம் வரவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவன் நான். இந்த மது விலக்கு ஆயத் தீர்வை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி உள்ள குறிப்பில் மதுவிலக்கைச் செயல்படுத்தல் என்ற தலைப்பில் சில பல எழுதியிருக்கிறார்கள். அதிலே மது விலக்கைச் செயல்படுத்துவதற்கான ஒரு வழிவகை கூட, ஒரு வரியிலும் சொல்லப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு உண்டு. அதிலும் குறிப்பாக, இந்த மது விலக்கை அமுல் படுத்துவதிலே, இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களை விட தனித் தன்மை, தனிப் பெருமை நம்முடைய தமிழகத்திற்கு இருந்து வந்திருக்கிறது. மது விலக்கையும் தீண்டாமை ஒழிப்பையும் நாட்டினுடைய தந்தை காந்திஜி அவர்கள் தன்னுடைய அடிப்படைக் கொள்கையாக வைத்து, நாடு விடுதலை பெறுவதற்கு முன்காலத்திலிருந்து அதற்காக அவர்கள் பாடுபட்டு வந்த நிலையில் நம்முடைய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே கூட, தமிழகத்தினுடைய சில பல மாவட்டங்களில் இந்த மது விலக்கை சன்னம் சன்னமாக அமுல்படுத்தி, இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்றபொழுது, காந்திஜி குஜராத்திலும், அண்ணாவும், இராஜாஜியும், காயிதே மில்லத்தும், பெருந்தலைவர் காமராஜரும் பிறந்த தமிழகத்திலேயும்தான் மது விலக்கு அமுல்படுத்தப்பட்டு வருகிறது என்ற பெருமை இருந்து வந்தது.

குடிகெடுத்த குடி ஒழிந்தது,
அடிதடி சண்டை அதுவும் ஒழிந்தது
ஆணும் பெண்ணும் புது வாழ்வு வாழ்ந்ததே

என்று கலைவாணர் அவர்கள் பாடிப் பரவசப்பட்டதும் தமிழகத்தில் தான். அந்தப் பரவசப்பட்ட காலமெல்லாம் இன்று மறைந்திருக்கின்றன என்ற வேதனைதான் என்னைப் போன்றோருக்கு இருக்கிறது.

இன்று இந்த ஆயத் தீர்வையிலிருந்து எத்தனை கோடி வரும் என்று நாம் கணக்குப் போட்டுப் பேசுகிறோம். என்னுடைய கெழுதகை நண்பர் டாக்டர் சமரசம் கூட ரூ. 69 கோடியாக இருந்ததை ரூ. 450 கோடியாகப் பெருக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்தப் பெருக்கம் நமக்குப் பெருமை தரக்கூடிய பெருக்கம் அல்ல. ரூ. 450 கோடி அரசுக்கு வருகிறது என்றால் ரூ. 4,500 கோடி இந்தக் குடிக்காக, குடியைக் கெடுப்பதற்காகப் பயன்படுகிறது என்ற கணக்கையும் நாம் போட்டுப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (குறுக்கீடு).

(பிற்பகல் 1-20)

குடிகாரர்கள் பெருகி இருந்தால் வருமானம் பெருகத் தானே செய்யும். அப்படிச் சொல்லலாம் அல்லவா. ஆனால் நான் அப்படிச் சொல்ல முன்வரவில்லை. காரணம் எல்லாவற்றையும் ஒழிக்க வேண்டும் என்பது எங்கள் கொள்கை. கள்ளச் சாராயத்தை எப்படி ஒழிப்பது என்பதிலே நீங்கள் காட்டக்கூடிய ஆர்வத்தை, கள்ளச் சாராயம், நல்லச் சாராயம் என்று இல்லாமல், சாராயத்தை எப்படி ஒழிப்பது என்பதிலே காட்ட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட்டு நல்லச் சாராயத்தைக் கொண்டுவருவது வரவேற்கக் கூடியது என்று நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

பெருந்தகை அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த முதல் மாதத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்திலே அகில இந்திய மதுவிலக்கு மாநாடு நடைபெற்றது. அன்றைய தினம் மத்திய அரசிலே சுகாதார அமைச்சராக இருந்த மாண்புமிகு சுசிலா நையார் அவர்கள் அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். அந்த மாநாட்டிலே பேசியபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதிகாரிகள் வந்து அவ்வப்போது சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். எத்தனையோ கோடி வரும், வருமானத்தைப் பெருக்கலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே ஒரு தலைமுறை இந்த பண்பாட்டில் வளர்க்கப்பட்டிருக்கிறது. என்னுடைய மகன் சாராயம் குடிப்பவர்களையோ அதன் காரணமாக தன் முன்னால் நடக்கக்கூடிய சண்டை சச்சரவுகளையோ பார்க்கவில்லை. இந்த நிலையை நான் மாற்ற விரும்பவில்லை என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.





அண்ணா சொன்ன அந்த ஆழமான கருத்தையும் இன்று நாட்டிலே நடைபெறுவதையும் எண்ணிப்பார்க்கும்போது மிகுந்த வேதனை அளிப்பதாக இருக்கிறது. இன்று பிறந்த குழந்தை கூட குடிப்பதை தன் முன்னால் கண்டு, அதனால் நடக்கக்கூடிய சச்சரவுகளை தன் முன்னாலே கண்டு, அதுவும் தெருவில் நடப்பதை அல்ல, தன் தந்தையும் தாயும் கூட குடித்து சச்சரவுகளுக்கு ஆட்படுகின்ற காட்சியைக் கண்டுதான் நம்முடைய அடுத்த தலைமுறை இன்று வளர்ந்துகொண்டிருக்கிறது என்று எண்ணும்போது இந்த நிலையை மாற்றியமைக்க நாம் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சருக்கு மதுவிலக்குக் கொள்கையில் தீவிர பிடிப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர் முடிவு எடுத்தால் அதை அமுல்படுத்துகின்ற ஆற்றலும் இருக்கிறது என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அவருடைய பேச்சைக் கேட்டால் ஏதோ நிரந்தரமாக இந்த ஆயத் தீர்வையைப் பெருக்க முடிவு செய்திருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் பேசும்போது இந்த வருமானத்திற்கு ஒரு மாற்றுவழியைக் கண்டுகொண்டு மாற்றியமைக்கலாம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு பின்னாலே நீங்கள் இப்படிச் சொல்வது ஒரு சுருதி பேதத்தைக் காட்டுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இன்று அரசு வாணிபக் கழகத்திற்கு மதுவை விநியோகம் செய்யும் பொறுப்பை வழங்குவது அவ்வளவு நல்லதல்ல. அதற்குக் காரணமாக வியாபாரிகள் இதிலே கிடைக்கக்கூடிய இலாபத்தை மொத்தமாக எடுத்துக்கொள்கிறார்கள், அரசுக்கு செலுத்த வேண்டிய ஆயத்தீர்வையைக்கூட செலுத்துவதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய அச்சமெல்லாம் இன்று அரசு அதிகாரிகள் மூலம் ஒரு பெரும் தொகைக்கான இந்த மதுவை விற்கக்கூடிய அல்லது உரிமை வழங்கக்கூடிய பொறுப்பை வழங்கும் பொழுது என்ன நிலைமை ஏற்படும் என்றால் மதுவை பார்த்தவர்கள் எல்லாம் அதை விட்டதாக இல்லை என்று இருக்கும்போது, இன்னும் அரசு அதிகாரிகளையும் இதிலே விட்டு, அவர்களையும் இந்தப் பழக்கத்திற்கு உட்படுத்த வேண்டுமா என்பதுதான்.

வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரிகளுக்கு இந்த உரிமையைத் தாருங்கள் என்று கேட்டார்கள். தயவுசெய்து அந்தப் பாவத்தைச் செய்துவிடாதீர்கள், இளைஞர்களுக்கோ அல்லது

பட்டதாரிகளுக்கோ இதைக் கொடுத்து, இந்தப் பாவத்திற்கு துணை செய்கிற எந்தச் செயலுக்கும் அவர்களை விட்டு விடாதீர்கள் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே கூட ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த சில்லறை விற்பனையை எல்லாம் அரசு பொறுப்பில் ஏற்றுக் கொள்ளும் போது உற்பத்தி செய்யக்கூடிய மொத்த வியாபாரத்தை மட்டும் ஏன் தனியார் துறையில் விட வேண்டும் என்று கேட்டால் அதற்கு சரியான பதில் சொல்ல வேண்டும். அதுபற்றி சிந்திக்க வேண்டுமென்று ஏன் நான் சொல்லவில்லை என்றால் என்னுடைய கொள்கை இதை அடியோடு மாற்றியாக வேண்டும். அரசும் செய்யக்கூடாது, தனியாரும் செய்யக்கூடாது என்ற காரணத்தால் தான் அதை நான் ஒரு குறையாக குறிப்பிட்டுச் சொல்ல விரும்ப வில்லை.

மதுவிலக்கை அமல்படுத்துவதற்காக ஒரு தொகையை ஒதுக் கினார்கள், அதாவது 1 கோடி ரூபாய். இன்று 409 கோடி ரூபாய் வரும்போது அதிலே 10 சதவீதமாவது அதற்காக ஒதுக்கப் கூடாதா? ஒரு கோடி போதாது. அது டோக்கனாகச் சொல்லப் பட்ட தொகை என்று நினைக்கிறேன். எனவே அதை அதிகப் படுத்துங்கள். இன்று தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கக்கூடிய அறிஞர்கள், நீதிபதிகள், பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்கள் எல்லாம் இந்தத் துறையிலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்த மதுவிலக் கினைக் குறித்து தமிழகத்திலே பிரச்சாரம் செய்வதற்காக அப்படிப் பட்ட நல்லவர்களின் கையிலே அந்தப் பொறுப்பை ஒப்படை யுங்கள். சர்வோதய இயக்கத்தை சார்ந்தவர்கள் மது குடிக்காத வர்கள், அதை நான் நன்றாக அறிவேன். அவர்கள் எல்லாம் இந்த அறப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களை எல்லாம் இந்த மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு முற்றாகப் பயன்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த அளவில் பெரியவர்கள் பிறந்த நாட்களிலாவது, அவற்றைப் பெருமையாகக் கொண்டாடக்கூடிய இந்த அரசு அன்றைய தினமாவது இந்தச் சாராயத்தையும் கள்ளையும் வழங் காத நிலைமையில் அந்தக் கடைகள் மூடப்பட வேண்டும். அந்த வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

தமிழகத்தின் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கக் கூடிய பாடப்புத்தகங்களில் மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய தீமைகளைப் பற்றி கட்டுரைகளாகவும், கதைகளாகவும் சொல்லி அதை விளக்கக்கூடிய வகையில் மதுவிலக்குப் பிரச்சாரத்தின் ஒரு அங்க மாக அது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைப்பற்றி ஓயாமல் சொல்லிக் கொண்டே



இருக்கலாம். அண்ணா அவர்களின் கருத்துக்களை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருக்கலாம். காரணம் அண்ணா அவர் களின் வாழ்க்கையே முழுக்க, முழுக்க அதன் அடிப்படையிலே தான் அமைந்ததாக இருக்கின்றது. அதே இடத்திலே உட்கார்ந்து தான் அண்ணா அவர்கள், அதற்காகக் குரல் கொடுத்த அதிகாரிகள் சொன்னதை எல்லாம் தட்டிவிட்டு எத்தனைக் கோடி வந்தாலும் தமிழ்நாட்டின் பண்பாட்டிற்கு உலை வைக்கக்கூடிய அந்தக் கொள்கைக்கு உடன்படமாட்டேன் என்ற உறுதியை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த உறுதியை வழங்கக்கூடிய நல்ல நாளை இந்தச் சபையிலே நான் எதிர்பார்க்கிறேன். ஆயத் தீர்வை என்ற அடிப்படையில் வருமானம் இல்லாத ஒரு வரவு-செலவுத் திட்டத்தை அடுத்த ஆண்டு உங்கள் சார்பாக நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 3-7-1985 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

236. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 1982—83 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

237. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

143. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

# இணைப்பு I.

(..54..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 2.

## மாநில ஆயத்தீர்வைத் துறை.

## 1985-86.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தைக் கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு செயற்படுத்தி வருகிறது. சில நிபந்தனைகளுக் குட்பட்டு கள், சாராயம் அல்லது மதுவை அருந்த இந்தச் சட்டம் அனுமதிக்கிறது. கள்ளச் சாராயம் தயாரிப்போர், விற்பனை செய்வோர் ஆகியோர் பிடியில் குடிப்பழக்கம் உள்ளோர் சிக்கித் தமது உடல்நலத்தைக் கெடுத்துக்கொள்வதைத் தவிர்ப்பது இத்திட்டத்தின் நோக்கம். தவிர, சமூக விரோத சக்திகளிடம் செல்லும் பணத்தை அரசின் வருமானமாக்க் கொண்டுவருவதே அரசின் நோக்கம் ஆகும். எனவே, முறையாகத் தயாரிக்கப்பட்ட சாராயம் அல்லது கள் அல்லது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டுவகை மது ஆகியவற்றை அருந்த அனுமதி வழங்குவதை முறைப்படுத்தும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைத்த போதிலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவோரையும் விற்பனை செய்வோரையும் கண்டுபிடித்து, மாநிலத்திலிருந்தே கள்ளச் சாராயத்தை ஒழித்து விடுவது அரசின் நோக்கமாகும். 1983-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாள் முதல் குறிப்பிடத்தக்க மாறுதல் ஒன்று இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப் பட்டது. இது, சாராயத்தையும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளையும் மொத்தவிற்பனை மூலம் வழங்கும் பணியினைத் தனியார் வசமிருந்து பொதுத் துறைக்கு எடுத்துக்கொண்டதாகும். இந்த மாறுதலுக்கிணங்க, தமிழ்நாடு அரசுக்கே சொந்தமானதும் அதன் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதுமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC). கம்பெனிகள் சட்டத்தின் கீழ் சட்டப்படி நிறுவப்பட்டு, அக்கழகத்திடம் 1983-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் கடைசி வாரத்திலிருந்து சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் ஆகியவற்றை மொத்த விற்பனை மூலம் வழங்கும் பணி ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த வாணிபக் கழகம் திருப்தி தரும் வகையில் இயங்கி வருகிறது. எனவே, அரசின் வருவாய் கணிசமான அளவு அதிகரிக்க இது உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





**கள் :**

2. சில்லரையில் கள் விற்பனை செய்யும் உரிமை, பொது ஏலத்தின் மூலமும், ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதன் மூலமும் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக்கடை (ஏல விற்பனை) விதித்துறைகளின்படி விற்பனை செய்யப்படுகிறது. ஓர் ஆண்டில் அக்டோபர் முதல் நாள் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளுடன் முடிவடையும் ஓர் ஆயத்தீர்வை ஆண்டுக்கு இந்த முறையில் உரிமம் வழங்கப்படுகிறது. தென்னம் பாளை விடும் பருவம் அக்டோபர் மாதத்தில் தொடங்குவதால் 1984–85 ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளில் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரையிலான ஆயத்தீர்வை ஆண்டுக்கு, கள் விற்பனை உரிமை இந்த முறையில் அனுமதிக்கப்படுகிறது. ஏலத்திலோ, ஒப்பந்தப் புள்ளியிலோ எவர் அதிக விலைக்குக் கேட்டிருந்து அந்த விலை போதுமானது என சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அறிந்த பின்னர் அவருக்கு விற்பனை உரிமை வழங்கப்படுகிறது.

3. 1984–85 ஆம் ஆயத்தீர்வையாண்டில் 9,124 கள்ளுக் கடைகள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள் 8,478 கள்ளுக் கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. ஏலம் கேட்கப்படாத கடைகள் 297 ஆகும். நிர்ணய விலைக்குக் குறைவாக ஏலம் சென்ற கடைகள் 349 ஆகும். 1984–85 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் அறிவிக்கப்பட்ட சில கடைகளுக்கு, ஏலம் கேட்பவர் இல்லாதது அல்லது ஏனைய காரணங்களினால் உரிமம் வழங்க இயலவில்லை. சில இடங்களில் கள்ளுக் கடைகள் விற்பனை யாகாததற்கு வறட்சியினால்/புயலால் கள் உற்பத்தி குறைந்தது முக்கிய காரணமாகும்.

4. 1982–83 ஆம் ஆயத்தீர்வையாண்டில், கள்ளுக்கடைகளைக் குத்தகைக்கு விட்ட வகையில் கிடைத்த தொகை 27.13 கோடி ரூபாய் ஆகும். 1983-84 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் 23.81 கோடி ரூபாய் ஆகும். 1984-85 ஆம் ஆண்டில் 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையில் குத்தகையாகக் கிடைக்கப் பெற்ற தொகை 22.00 கோடி ரூபாய் ஆகும். வறட்சி நிலை காரணமாகவும், சாராய விற்பனை அதிகரித்ததாலும் சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் கள்ளுக்கடைகளை ஏலம்விட்ட வகையில் கிடைத்த மாதாந்திரக் குத்தகைத் தொகை குறைந்துள்ளது.

5. கள் இறக்கப்படும் மரங்கள் மீது மரவரி விதிப்பதில் ஏற்படும் நிருவாக இடையூறுகளைக் கருத்திற் கொண்டும், வருவாய் இழப்பு ஏற்படும் சாத்தியக் கூறினைத் தடுக்கும் பொருட்டும், 1982-83 ஆம் ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து மரவரி விதிப்பதை அரசு நிறுத்திவிட்டது.

சாராயம் :

(i) சாராய சில்லரை விற்பனை :

6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள் (ஏல விற்பனை) விதிகளைச் சேர்ந்த விதித் துறைகளின்படி, சாராயத்தைச் சில்லரையாக விற்பனை செய்யும் உரிமை பொது ஏலத்திலும், ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதன் மூலமாகவும் விற்கப்படுகிறது. ஒவ்வோராண்டும், ஜுலை திங்கள் 16 ஆம் நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் ஜுலைத் திங்கள் 15 ஆம் நாள் முடிய உள்ள ஆயத்தீர்வை ஆண்டுக்கு, உரிமை விற்பனை செய்வது இம்முறையில் அனுமதிக்கப்படுகிறது. விற்பனை செய்தல், உறுதிப் படுத்தல், உரிமம் வழங்குதல் முதலியவை குறித்த விதிகள், கள்-சாராயக் கடைக்குப் பொதுவானவையாகும்.

7. 1984-85 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 6,772 சாராயச் சில்லரை விற்பனைக் கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்க 6,335 கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப் பட்டன. அறிவிக்கப்பட்ட சில கடைகளுக்கு ஏலத்தில் ஏலம் கேட்பவர் இல்லாததால் அல்லது வழக்கு தொடரப்பட்டதால் அல்லது ஏனைய காரணங்களினால் அவற்றிற்கு உரிமம் வழங்க இயலவில்லை. 1983-84 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 6,481 சாராயச் சில்லரை விற்பனை கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப் பட்டன. சென்ற 1983-84 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில், சாராயச் சில்லரை விற்பனைக் கடைகளைக் குத்தகைக்கு விட்டதன்மூலம் கிடைத்த தொகை ரூபாய் 88.92 கோடியாகும். 1984-85 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் வரையில் குத்தகையாக வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் 67.99 கோடியாகும்.

8. 1981-82 ஆம் ஆண்டின் நிலையைக் கருத்திற்கொண்டு கள், சாராயக் கடைகளை ஏலம் விடுவதற்கும், உரிமம் வழங்கு வதற்குமான நடைமுறை 1982-83 ஆம் ஆண்டில் சீரமைக்கப் பட்டது. இந்த நடைமுறை 1983-84 ஆம் ஆண்டிலும், 1984-85 ஆம் ஆயத்தீர்வை ஆண்டிலும் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

9. 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் சாராயக் கடைகளுக்கு மட்டும் கிளைக் கடைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும் 1983-84, 1984-85 ஆகிய ஆண்டுகளில் கள் மற்றும் சாராயக் கடைகளுக்குக் கிளைக் கடைகள் வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படவில்லை. உரிமம் வழங்கப்பட்டுள்ள கடைகளை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.



10. சாராயக் கடைகளை ஏலம்-ஒப்பந்தப்புள்ளி முறையில் விடுவது சம்பந்தமாக அனுபவ ரீதியில் குறைகளும், அதன் விளைவாக வருவாய் இழப்புக்கான வாய்ப்புகளும் காணப் பட்டுள்ளன. எனவே 1985-86 ஆயத்தீர்வை ஆண்டு முதல் சாராயத்தை சில்லறையில் விற்பதற்கான உரிமையையும் தமிழ் நாடு மாநில வாணிபக் கழகத்திற்கே அளிப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

11. இம் மாநிலத்தின் பல பகுதிகளில், கள்ளத்தனமாகச் சாராயத்தை வடித்தெடுத்து அதனை விற்பனை செய்வதைத் தடுக்க தொடர்ந்து துணிந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், புட்டிகள்மீது ஆயத் தீர்வைச் சீட்டுகளை ஒட்டுதலாலும் மாதாந்திர சாராய விற்பனை இவ்வாண்டில் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.

(ii) சாராய மொத்த விற்பனை :

12. சாராயக் கலவை ஆலைகளிலிருந்து புட்டிகளில் நிரப்பப்பட்ட சாராயம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குக் கொடுக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் 28—7—1983 முதல் சாராயத்தை மொத்தமாக விற்பனை செய்ய அதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) சாராயம் தயாரித்தல் :

13. தமிழ்நாட்டில் சென்னை, கடலூர், தஞ்சாவூர், குடியாத்தம், திருச்சிராப்பள்ளி, மதுரை (ஆயுதம் பட்டி), திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய ஒன்பது இடங்களில் சாராயக் கலவை ஆலைகள் உள்ளன. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதித்துறைகளின்படி இந்தக் கலவை ஆலைகள் செயற்படுகின்றன.

14. சாராயக் கலவை ஆலைகளின் உரிமம் அந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, அடுத்த வருடம் மார்ச்சு 31-ந் தேதிவரை உள்ள காலத்திற்கு வழங்கப்படுகிறது. உரிமத்தைப் புதுப்பிக்க விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பக் கட்டணமாக ரூ. 500-ம் உரிமக் கட்டணமாக ரூ. 2,000-ம் உரிமைக் கட்டணமாக ரூ. 1,00,000ம் வசூலிக்கப்படுகிறது. உரிமம் வழங்கப்படும் சமயத்தில் உரிமதாரர், பிணைய வைப்புத் தொகையாக ரூ. 2 இலட்சம் செலுத்தவேண்டும். சாராயம், கலவை ஆலைகளில் கலக்கப்பட்டு, புட்டியில் அடைக்கப்பட்டு, சாராய மொத்த விற்பனையாளரான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் (TASMAC) வழங்கப்படுகிறது. சாராயத்தின் தன்மையும், தரமும் மாவட்டத் தடய அறிவியல் ஆய்வுக் கூடங்களில் பரிசோதிக்கப்பட்ட பின்னரே, கலவை ஆலைகளி லிருந்து புட்டிகளில் நிரப்பப்பட்ட சாராயம், மொத்த விற்பனை யாளருக்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு மாநில வாணிபக்

கழகத்திற்குச் சாராயம் அனுப்பப்படுவதற்கு முன்னர் லிட்டருக்கு ரூ. 6 என்ற வீதத்தில் ஆயத்தீர்வை வசூலிக்கப்படுகிறது. ஆயத் தீர்வை, விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும், வழங்கப் படும் சாராயத்தின் தரத்தை உறுதி செய்வதற்கும், உற்பத்தி யாகும் ஒவ்வொரு சாராய புட்டியின் மீதும் 1-11-1982 லிருந்து ஆயத் தீர்வை வில்லைகள் ஒட்டப்படுகின்றன. ஆயத் தீர்வை வில்லைகளுக்கான செலவு, சாராயக் கலவை ஆலை உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு எல்லா கலவை ஆலைகளிலிருந்தும் 12.68 கோடி லிட்டர் சாராயம் வழங்கப் பட்டது. 1984-85ஆம் ஆண்டில் 1984ஆம் ஆண்டு ஏப்ரலி லிருந்து 1985ஆம் ஆண்டு மார்ச் வரை 11.46 கோடி லிட்டர் சாராயம் கலவை ஆலைகளிலிருந்து தமிழ்நாடு மாநில விற்பனை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

## இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (I.M.F.S.)

(i) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பு (I.M.F.S.).

15. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு மதுவகைகள் (தயாரித்தல்) விதிகள், இம் மதுவகைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப் படுத்துகின்றன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளைத் தயாரிக்க இதுவரை ஐந்து நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து நிறுவனங்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் மதுவகைகளை இம்மாநிலத்தின் மொத்த விற்பனையாளரான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு விற்பனை செய்கின்றன.

16. இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் மதுபுட்டிகள் மீது 1-11-1982-லிருந்து ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப்பட்டு வருகின்றன. இந்த ஐந்து நிறுவனங்களிலும் இந்தப் பணியினை மேற்பார்வையிட மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பணியாளர் மற்றும் ஆயத்தீர்வை வில்லைகளுக்காகும் செலவு உரிமதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

(ii) பீர் தயாரித்தல் :

17. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு புருவரி விதிகள், பீர் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் பீர் தயாரிக்க ஒரு நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப் பட்டுள்ளது.





(iii) 'மாஸ்' ஒயின் தயாரித்தல் :

18. தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு 'மாஸ்' ஒயின் விதிகள் 'மாஸ்' ஒயின் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப்படுத்து கின்றன. தமிழ்நாட்டில் 'மாஸ்' ஒயின் தயாரிக்க ஒரு நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனை :

19. 28-7-1983 முதல் இந்தப் பணியினை 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளின் விதித் துறைகளின்படி தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்று நடத்திக் கொண்டு வருகின்றது.

20. விதிகளின்படி, ஆயத் தீர்வை வில்லைகள் ஒட்டப் படாத மது அடைக்கப்பட்ட பாட்டில் அல்லது கொள்கலன்களை மொத்த விற்பனைக் கிடங்குகளில் வைத்திருக்கவோ அல்லது மொத்த விற்பனைக் கிடங்குகளிலிருந்து விற்பனை செய்யவோ கூடாது. முன்பு வட்ட ஆயத் தீர்வை அலுவலரின் மாதிரிக் கையொப்பம் உள்ள முத்திரை மது அடைக்கப்பட்ட புட்டிகளின் மீது பதிக்கப்பட்டு வந்தது. 1-11-1982-லிருந்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறையால் வழங்கப்படும் ஆயத்தீர்வை வில்லைகளை மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மது அடைக்கப் பட்ட புட்டிகள் அல்லது கொள்கலன்கள்மீது ஒட்டவேண்டுமென்று மொத்த வியாபாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆயத் தீர்வை வில்லைகளைப் புட்டிகளின்மீது பதிப்பிப்பதற்கும் மற்றும் இது சம்பந்தப்பட்ட பணியினை மேற்பார்வை செய்வதற்கும் வட்டாட்சியர் தரத்தில் உள்ள ஆயத் தீர்வை மேற்பார்வை அலுவலர்கள் மொத்த விற்பனைக் கிடங்குகளில் நியமிக்கப் பட்டுள்ளனர். பணியாளர் மற்றும் ஆயத் தீர்வை வில்லைகளுக்கு ஆகும் செலவு, உரிமதாரரிடமிருந்து (அதாவது தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடமிருந்து) வசூலிக்கப்படுகிறது.

(v) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனை :

21. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளைச் சில்லறை விற்பனை செய்ய உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. உரிமம் வழங்குவதனால் உள்ளூரின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்றும், உரிமம் வழங்குவதனால் பொதுநலன் பாதிக்கப்படாது என்றும், வழங்கப்படும் உரிமம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வை ஆணையர் திருப்தி அடைந்தால்,

புட்டியில் அடைக்கப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்
நாட்டு மதுவகைகள் அல்லது அயல்நாட்டு மதுவகைகள் சில்லறை
யாக விற்பதற்கான உரிமத்தை விண்ணப்பம் அளிக்கப்படுவத
பேரில் வழங்குகிறார்.

22. 1981–82-ல் 1,213 உரிமங்கள் வழங்கப்பட்டன.
1984–85ஆம் ஆண்டில் 860 உரிமங்கள் மட்டுமே புதுப்பிக்கப்
பட்டன.

மதுவை எடுத்துச் செல்லுதல் :

23. தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்
படி உரிமம் அல்லது அனுமதி பெறாமல் மதுவை இறக்குமதி
ஏற்றுமதி செய்வதை கொண்டு செல்வதை அல்லது மாநிலம்
வழியாக எடுத்துச்செல்வதைத் தடுக்கும் பொருட்டு 1982இல்
13ஆம் எண் அவசரச் சட்டத்தை அரசு பிறப்பித்தது. பின்னர்
இந்த அவசரச் சட்டம் தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு 2-ம்
சட்டமாக இயற்றப்பட்டது. தமிழ் நாட்டிற்கு வெளியே
யுள்ள ஓரிடத்திலிருந்து தமிழ்நாடு வழியாகத் தமிழ்நாடு மாநிலத்
திற்கு வெளியேயுள்ள மற்றோரிடத்திற்கு மதுவை எடுத்துச்
செல்வதற்கான அனுமதி வழங்கத் தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு
மது (எடுத்துச் செல்லுதல்) விதிகள் வகை செய்கின்றன. மது
எடுத்துச் செல்வதற்குக் காவல் துறை பாதுகாப்பு அளிக்கப்
படுகிறது. ஆனால், உரிமதாரர் காவலர் பாதுகாப்புக்கான செலவை
முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

24. 1982 இல் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் அமுல்
படுத்தப்பட்ட 1982 டிசம்பர் 1ஆம் நாளிலிருந்து 1984 டிசம்பர்
மாதம் 31ஆம் நாள் வரை வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுக்களின்
எண்ணிக்கை 930 ஆகும். பின்னர் தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு
2ஆம் சட்டமாக இயற்றப்பட்ட இந்த அவசரச் சட்டத்தை
எதிர்த்து பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த, இந்தியாவில்
தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த வியாபாரிகள்
சிலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர்.
இந்த வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றம் கீழ்க்கண்ட
இடைக்கால ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

வழக்கு முடியும்வரை, சரக்கை எடுத்துச் செல்ல அனுமதிச்
சீட்டுப் பெறவேண்டும் என மனுதாரர்களைக் கட்டாயப்படுத்தக்
கூடாது. சரக்கு எல்லையைக்கடக்கும் வரை. மாநில அரசு
காவல் பாதுகாப்பு அளிக்கலாம். சரக்கு மாநிலத்திற்குள்
நுழையும் போது லாரி அல்லது டிரக்கு வண்டியினை காவல்
பணியாளர் உள்ள காரணத்தால் மோட்டார் வாகன சட்டத்தின்
கீழ் அவை நிறுத்தப்படக்கூடாது என சான்றிதழ் அளிக்கவேண்டும்.



1982ஆம் ஆண்டு 13ஆம் அவசரச் சட்டத்தின் 32-Aயின்
படி, சரக்கு மாநிலத்தில் நுழையும்போதும் வெளியேறும்போதும்
சோதனைச் செய்ய சோதனைச் சாவடிகள், சாலைத் தடங்கல்
ஆகியவற்றை மாநில அரசு நிறுவலாம். சரக்கு, பாண்டிச்சேரி
மாநிலத்திற்குள் நுழையும்போது குறிப்பிட்ட சோதனைச் சாவடி
மூலம்தான் செல்ல வேண்டும் என்று முன்கூட்டியே மனுதாரர்கள்
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

கருப்பஞ் சாற்றுக் கசண்டு :

25. கருப்பஞ் சாற்றுக் கசண்டு சர்க்கரை ஆலைகளில்,
சர்க்கரை தயாரிப்பதிலிருந்து கிடைக்கும் துணைப் பொருளாகும்.
இது எரிசாராயம் தயாரிப்பதற்குரிய அடிப்படை மூலப்
பொருளாகும். மதுவிலக்கு ஆயத் தீர்வை ஆணையர், கருப்பஞ்
சாற்றுக் கசண்டு மாநில கட்டுப்பாட்டாளர் ஆவார். ஆலைகளி
லிருந்து தயாரிக்கப்பட்ட கருப்பஞ் சாற்றுக் கசண்டைச் சேமித்து
வைத்தல், கொண்டு செல்லுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றை
இவர் கட்டுப்படுத்துகிறார்.

இம் மாநிலத்தில் 23 சர்க்கரை ஆலைகள் உள்ளன. முந்தைய
ஆண்டுகளில் வறட்சி நிலை நிலவியதால் 1983-84 சர்க்கரை
ஆண்டில், கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி குறைந்தது. எனவே
கருப்பஞ்சாற்றுக் கசண்டை அடிப்படையாகக் கொண்ட தொழில்
கள் மிகவும் பாதிக்கப்பட்டன. எனவே எரிசாராய உற்பத்தியும்
பாதிக்கப்பட்டது. உள்ளூர் தேவைகளை நிறைவு செய்வதற்காக
உத்திரப் பிரதேசத்திலிருந்து சுமார் 3,000 டன் கருப்பஞ்சாற்றுக்
கசண்டு இறக்குமதி செய்யப்பட்டது.

26. 1984-85 நடப்பு ஆல்கஹால் ஆண்டில் மொத்தம்
5.26 இலட்சம் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேவைப்பட,
உற்பத்தி சுமார் 2.8 இலட்சம் டன் என்று மதிப்பிடப்பட்டது.
எனவே நடப்பு ஆல்கஹால் ஆண்டில் சுமார் 2.46 இலட்சம் டன்
கருப்பஞ்சாற்றுக் கசண்டு பற்றாக் குறையாக உள்ளது. இக்குறைவு
பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்திக்
குறைவு காரணமாக ஆல்கஹால் ஆண்டு தொடக்கத்திலிருந்தே
கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும்
அவர்களுக்கு வழங்கப்படும் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

சாராயத்தையும், ஆல்கஹாலையும் கள்ளத்தனமாக வடிப்
பதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப்பொருள்களில் ஒன்றான
கருப்பஞ்சாற்றுக் கசண்டு கள்ளச் சந்தைக்குச் செல்வதைத்
தடுக்கும் வகையில் அதன் ஒதுக்கீடு கடுமையாகக் கட்டுப்படுத்தப்
பட்டு வருகிறது. மேலும், முந்தைய ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்
பட்டனவற்றைப் பயன்படுத்தியதற்கான சான்றிதழ்கள் மாவட்ட
அலுவலர்களிடம் பெற்ற பின்னரே எம். எல். 4 உரிமங்கள்
(கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருக்கவும், பயன்படுத்து

வதற்குமான உரிமம்) வைத்திருப்பவர்களுக்குக் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. வடிசாலைகள், கால் நடைத் தீவனம், கோழித் தீவனம் தயாரிப்பவர்கள், நல் லெண்ணெய் தயாரிப்பவர்கள் போன்ற பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுகின்றன. முறைகேடுகளை தடுப் பதற்கு சர்க்கரை ஆலைகளையும், வடிசாலை களையும், ஏனைய உரிமதாரர்களின் வளாகங்களையும் திடீரென்று சோதனையிடுமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எரிசாராயம் (Rectified Spirit) :

27. சாராயம் தயாரிப்பதற்கு எரிசாராயம் அடிப்படை மூலப் பொருளாகும். இது தொழிற்சாலையிலும், மருந்து தயாரித் தல் முதலிய பல்வேறு நோக்கங்களுக்கு தேவைப்படுகிறது. எரிசாராயம் வீரியமற்ற சாராவி (Silent-Spirit) முதலியவற்றைத் தயாரிப்பதற்காக தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின்கீழ் இம் மாநிலத்தில் எட்டு வடிசாலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஆல்கஹால் தயாரிப்பதற்குத் தேவையான கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேவைப்பட்ட அளவு கிடைக்காததால் முந்தைய ஆண்டுகளைப் போலல்லாமல், தற்போது நம் மாநிலத் தில் ஆல்கஹால் கணிசமான அளவு குறைந்துவிட்டது.

28. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின்கீழ் புதிதாக வடிசாலை உரிமம் வழங்குவதற்கும், உரிமத்தைப் புதுப்பிப்பதற்கும் விண்ணப்பக் கட்டணம் ரூ. 200 உம், ஆண் டொன்றுக்கு உரிமக் கட்டணம் ரூ. 2,000-உம் உரிமைக் கட்டணம் ரூ. 1,00,000 உம் வசூலிக்கப்பட்டு வருகிறது. உரிம நிபந்தனையை உரியவாறு பின்பற்றுவதற்காக ஒவ்வொரு வடிசாலை உரிமதாரரும் ரூ. 1,00,000 பிணைவைப்புத் தொகை செலுத்தவேண்டும்.

29. மத்திய அரசின் இரசாயனப் பொருள்-இரசாயன உர அமைச்சகம் அமைத்துள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டு மத்தியக் குழு ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைக்கும், தேவைப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, ஆல்கஹால் அளவை மதிப்பிடவும், இவை உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து பற்றாக் குறையுள்ள மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பொருட்டும் ஆல்கஹால் ஆண்டின் தொடக்கத்தில் கூடுகிறது. 1983-84 ஆல்கஹால் ஆண்டில் (1983 டிசம்பர் முதல் 1984 நவம்பர் வரை) கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியில் குறைவு ஏற்பட்டது. எனவே, எரிசாராய உற்பத்தியும் குறைந்தது. உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து எரிசாராயத்தைப் பெறு வதற்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சியும் வீணாகிவிட்டது. எனவே, அருந்தத்தக்க மது தயாரிக்கும் தொழிற்சாலை உட்பட ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டன. 1984-85 நடப்பு ஆல்கஹால்





ஆண்டிலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு போதிய அளவு வழங்கப் படாததால், எரிசாராய உற்பத்தியில் பெருமளவுக்குக் குறைவு ஏற்பட்டது. கிடைத்துள்ள ஆல்கஹால் சம அளவில் தொழிற் சாலைகள், சாராயக் கலவை ஆலைகள், இந்தியாவில் தயாரிக்கப் படும் வெளிநாட்டு மதுவகைகளைத் தயாரிப்பவர்கள் முதலி யோருக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முழுவதும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, ஆல்கஹால் பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

30. 1982 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உற்பத்தி முறையில் ஆல்கஹால் தேவைப்பட்டு இறுதியில் ஆல்கஹால் இல்லாத பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு எரிசாராயம் மீதான ஆயத் தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.50-லிருந்து ரூ. 0.75 ஆகவும் ரூ. 1.00-லிருந்து ரூ. 0.25 ஆகவும் முறையே குறைக்கப்பட்டது. 15-4-1983-லிருந்து தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஆயத்தீர்வைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 0.10 ஆக மேலும் குறைக்கப்பட்டது. எரிசாராயம், மெதனால் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 0.25 ஆகக் குறைக்கப்பட்டது. ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு இறுதியில் ஆல்கஹால் இல்லாத பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அவை செயல்படும் முதல் ஐந்தாண்டுகளுக்கு, அவற்றுக்கு வழங்கப் படும் எரிசாராயம், வீரியம் குறைந்த சாராவி குறித்து ஆயத் தீர்வை, விற்பனைக் கட்டணங்களிலிருந்து முழுவதும் விலக்கு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

31. தமிழ்நாட்டில் இரசாயனப் பொருள் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு 5-9-1984 முதல் மெதில் ஆல்கஹாலைத் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டம், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் உள்ளீட்டு வரம்பிலிருந்து நீக்குவதற்கு, 4-9-1984 இல் ஆணை பிறப்பித்துள்ளது.

32. இறுதியில் ஆல்கஹால் இல்லாத பொருள்களைத் தயாரிக்கும் தொழில் பிரிவுகளுக்கு மெதிலேட்டட் சாராவிமீதான விற்பனைக் கட்டணத்தை பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.00-லிருந்து ரூ. 0.25 ஆக குறைத்தும் இறுதியில் ஆல்கஹால் இல்லாத பொருள் களைத் தயாரிக்கும் மெதிலேட்டட் சாராவியை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அவை செயல்படும் முதல் ஐந்தாண்டுகளுக்கு வழங்கப்படும் மெதிலேட்டட் சாராவி மீதான விற்பனைக் கட்டணத்திற்கு 15-4-1983-லிருந்து முழு விலக்கு அளித்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

33. தொழில் நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆல்ஹாலை அருந்துவதற்குப் பயன்படுத்துவதைத் திறம்படத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் பிரெஞ்ச் பாலிஷ், வார்னிஷ் முதலியவை தயாரிக்கும் பணி பொதுத் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலுக்கென்று உண்மையாகப் பயன்படுத்துபவர்கள், தங்களுக்குரிய தேவைகளை நியாயமான விலையில் பெற இயலும் வண்ணம் அம்பத்தூரிலுள்ள டான்சி பாலிஷ் தொழிற்பிரிவும், மதுரையில் வனத் துறை நடத்திவரும் அரக்குத் தொழிற்சாலையும் வார்னிஷ், வண்ண இளக்கி (தின்னர்), பிச்சர் வார்னிஷ் கேஸ்கட் ஷெல்லாக் முதலியவற்றைத் தயாரிக்கும் பணியை எடுத்துக் கொண்டுள்ளன. இத்தொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருள்கள் அவற்றைப் பெருமளவு பயன்படுத்துபவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், நேரடியாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**வீரியம் குறைந்த சாராவி (Denatured Spirit) :**

34. (1) வீரியம் குறைந்த சாராவி, மெத்தனால் வார்னிஷ் போன்றவற்றைப் பயன்படுத்தவும், விற்பனை செய்யவும் :

(2) வீரியம் குறைந்த சாராவி மெத்தனால் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிக்கவும் விற்பனை செய்யவும் டி. எல். வகை உரிமங்கள் கொடுக்கப்படுகின்றன.

35. சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களை அதாவது வார்னிஷ், பிரெஞ்ச் பாலிஷ் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு ஏராளமான உரிமதாரர்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட வீரியம் குறைந்த சாராவி கள்ளச் சாராயம் விற்பதற்கு முக்கிய ஆதாரமாக அமைந்துவிட்டது. 20-சி என்ற புதிய பிரிவை சேர்த்துக்கொள்ளும் வகையில், தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தம் செய்ததையடுத்து வீரியம் குறைந்த சாராவி, வார்னிஷ் போன்றவற்றின் மொத்த விற்பனையும், சில்லறை விற்பனையும் 1–10–1978 ஆம் நாள் முதல் கூட்டுறவுச் சங்கங்களிடமும், அரசுத் துறைத் தொழில்பிரிவுகளிடமும் அரசு நிறுவனங்களிடமும் கொடுக்கப்பட்டன. அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட வீரியம் குறைந்த சாராவியை வேறு வகையில் பயன்படுத்தியதாகப் புகார் ஏதுவும் வரவில்லை. இம்முறை நன்கு செயல்படுகிறது.

36. மருத்துவர்கள் போன்ற உண்மையான பயனீட்டாளர்களுக்கு வீரியம் குறைந்த சாராவியையும் வார்னிஷையும் காலதாமதமின்றிப் போதிய அளவு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



37. ஒவ்வொரு கம்பெனிக்கும் அல்லது கம்பெனிகள் தொகுதிக்கும் ஆண்டுப் பங்கீட்டு அளவு 50,000 லிட்டர்களுக்கு அதிகமாக இருக்கும்போது, அவற்றிற்குத் தனியாக ஆயக் கண்காணிப்பு அதிகாரியை நியமித்து அவருடைய விழிப்பான மேற்பார்வையில் சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 50,000 லிட்டர்களுக்குக் குறைவாக ஆண்டுப் பங்கீட்டளவு இருக்கும் ஏனைய இனங்களில் உரிமம் பெற்றவர்களின் கணக்குகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை சரிபார்க்கும்படி வட்ட ஆயத்துறை அதிகாரிகளுக்கும் ஆயத்துறை உதவி ஆணையருக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் சாராவியின் அளவைச் சரிபார்க்கவும், பொருளைச் செய்து முடிப்பதற்குப் பயன்படுத்தும் சாராவியின் வீதாச் சாரத்தைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மறு ஆய்வு செய்யவும் இயன்ற அளவு நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மருந்து—ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பு :

38. மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் ‘L’ வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

39. மத்திய அரசின் சட்டமான 1955-ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி சாராவி வழங்கப்பட்டுள்ள உரிமதாரர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. டிஞ்சர், சிஞ்சர்பெரிஸ் போன்றவற்றைக் கள்ளத்தனமாக இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு மாநில எல்லையோரங்களில் விழிப்புடன் கண்காணிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. இது தொடர்பாக தனியாக குற்ற வழக்குகள் ஏதுமில்லை.

40. அசவம், அரிஷ்டம், கஷாயம் என்ற பெயரில் கள்ளச் சாராயம் விநியோகிக்கப்படுவதாக அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறு செய்வோர்மீது தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் அல்லது 1940-ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்படி அல்லது இவ்விரு சட்டத்தின்படியும் நேர்விற்கேற்றபடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அசவம், அரிஷ்டம், கஷாயம் தயாரிப்பதற்கு எல். 2 உரிமம் பெற்றுள்ளவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1940-ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் IV-A அத்தியாயத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தியதன் விளைவாக, அசவம், அரிஷ்டம் போன்றவற்றைத் தயாரிப்பதில் கண்

காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், இத்தகைய மருந்து—ஒப்பனை பொருள்களை உண்மையாகவே தயாரிப்பவர்கள்மட்டுமே பெறமுடிகிறது. இவ்வகையில் குற்றவழக்குகள் தனியாக ஏதுமில்லை.

41. உள்துறையின் 1—11—1958-ஆம் நாளிட்ட 3031-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்குப் பதிலாக, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு சாராவி தயாரிப்பு (கட்டுப்பாட்டு) விதிகளை அரசு இயற்றியுள்ளது. அசவம், அரிஷ்டம் முதலியவற்றைத் தயாரிப்பதையும் விற்பதையும் திறம்பட கண்காணிப்பதற்காக இவ்விதிகள் இயற்றப்பட்டன.

42. குளோரல் ஹைட்ரேட் என்பது ஊறு விளைவிக்கும் ஓர் வேதியியற் பொருளாகும். இதனைத் தயாரிக்கத் தமிழ்நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்பொருளைப் பயன்படுத்துவது தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு குளோரல் ஹைட்ரேட் விதிகளுக்குப் பதிலாக தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு குளோரல் ஹைட்ரேட் விதிகள் என்ற தனி விதிகளின் கீழ் முறைப்படுத்தப் படுகிறது. நாட்டின் பிற பகுதிகளிலிருந்து இம்மாநிலத்திற்கு குளோரல் ஹைட்ரேட் கள்ளத்தனமாகக் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**போதைப் பொருள் குற்றங்கள்.**

43. தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவு, போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்புப் பிரிவு, 1984-ஆம் ஆண்டில் அபின் சட்டத்தின்படி சுமார் ரூ. 35,326.00 மதிப்புடைய 17,663 கிலோகிராம் அபினைக் கைப்பற்றியது தொடர்பாக 6 வழக்குகளையும், ரூ. 20,28,136.00 மதிப்புடைய 2,535.170 கிலோகிராம் கஞ்சாவைக் கைபற்றியது தொடர்பாக 71 வழக்குகளையும் பதிவு செய்தது.

44. சென்னை, குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவின் போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்புப் பிரிவு, போதைப் பொருள்கள் மற்ற மாநிலங்களிலிருந்து சென்னை வழியாக தமிழ்நாட்டிலுள்ள மற்ற இடங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நடவடிக்கைகள் தொடக்கம்.**

45. தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துகின்ற வகையில், தமிழ்நாடு அரசு, 1983-ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாளன்று அவசரச் சட்டமொன்றை அதிகார முறையில் வெளியிட்டது. சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை இம் மாநிலம் முழுவதும் மொத்த விற்பனை செய்யும் உரிமையை, தமிழ்நாடு



அரசுக்கு முழுதும் சொந்தமான அதன் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு மட்டுமே வழங்க, இந்த அவசரச் சட்டம் வகை செய்தது. இந்த அவசரச் சட்டத்தை, தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமாக (தமிழ்நாடு சட்டம் 33/1983) சட்டமன்றம் நிறைவேற்றியது. தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் 23—5—1983 அன்று பதிவு செய்யப்பட்டது. மேற்படிக் கழகம் 1—6—1983 ஆம் நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் செயல்பட வேண்டியிருந்தது. இக்கழகம் 25—7—1983 முதல் பணியைத் தொடங்கியுள்ளது.

**அமைப்பு :**

46. இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மாநிலம் முழுவதும் சாராயம் மற்றும் இந்தியாவில் தயாராகும் அயல் நாட்டு மதுவகைகளின் மொத்தக் கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகிய பணிகளை இத்தலைமை அலுவலகம் கண்காணித்து வருகிறது. கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்களைக் கொண்ட நிருவாகக் குழு இக்கழகத்தின் பணிகளை நிருவகித்து முறைப்படுத்துகிறது :—

(1) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்.

(2) ஆணையர் மற்றும் அரசுச் செயலர், மது விலக்கு-ஆயத் தீர்வைத் துறை.

(3) ஆணையர் மற்றும் அரசுச் செயலர், நிதித் துறை.

(4) அரசு இணைச் செயலர், மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறை.

47. தலைமை அலுவலகத்தில், தலைவர்-நிர்வாக இயக்குநர் பணிகளை நிர்வகிப்பதில் அவருக்கு பொதுமேலாளர் ஒருவர், முதுநிலை மேலாளர் (வாணிபம்) ஒருவர், நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், கம்பெனி செயலாளர்—நிருவாக அலுவலர் ஒருவர் ஆகியோர் உதவுகின்றனர். மாவட்டத்திற்கு ஒன்று என்னும் வீதத்தில் 16 மண்டல அலுவலகங்கள் உள்ளன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெரிய மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் பதவித் தரத்தில் வட்டார முதுநிலை மேலாளர்கள் உள்ளனர். புதுக்கோட்டை, தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய சிறிய மாவட்டங்களில் உள்ள மண்டல அலுவலகங்கள் வட்டாட்சியர்களாலும், எஞ்சியுள்ள 9 மாவட்டங்களில் உள்ள மண்டல அலுவலங்கள் மாவட்டத் துணை ஆட்சியர்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மொத்த

விற்பனைக் கிடங்கு ஒன்று உள்ளது. இவை அந்தந்த மாவட்டங்
களிலுள்ள சில்லறை விற்பனை உரிமதாரர்களுக்கு இந்தியாவில்
தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை வழங்குகின்றன.
சாராய விநியோகத்தைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு மாவட்டத்
தலைமையிடத்திலும், கோட்டத் தலைமையிடத்திலும் 64
சாராய மொத்த விற்பனைக் கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளன.
ஒவ்வொரு கிடங்கும், அதன்விற்பனை அளவிற்கேற்றவாறு, ஒரு
வட்டாட்சியரால் அல்லது துணை வட்டாட்சியரால் நிர்வகிக்கப்
படுகின்றது. கோயம்புத்தூர் போன்ற அதிக அளவு உரிமங்கள்
உள்ள மாவட்டங்களில் வட்டத் தலைமையிடங்களில் ஒன்று
அல்லது இரண்டு சாராயக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிதியமைப்பு :

48. ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள 50,000 சம
உரிமைப் பங்குகள் கொண்ட ரூ. 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட
மூலதனத்துடன் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பதிவு
செய்யப்பட்டது. இது அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகை
யால், மாநில அரசே இதற்கு நிதி வழங்கும் முக்கிய ஆதார
மாகவுள்ளது. மாநில அரசு இக்கழகத்திடமிருந்து ரூ. 1,000
மதிப்புள்ள 10,000 பங்குகளைப் பெற்று, ரூ. 1 கோடி அளித்
துள்ளது. இது மட்டுமல்லாமல், வழிவகை முன்பணமாக
ரூ. 2.02 கோடி வழங்கியுள்ளது. இந்த முன் பணம்
ஆண்டொன்றுக்கு 12.5 சதவிகித வட்டியுடன் ஆறு சம மாதத்
தவணைகளில் 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி.
ஒவ்வொரு மாதமும் அரசுக்குத் திரும்பச் செலுத்தப்பட
வேண்டும்.

49. அரசு வழங்கிய மொத்தத் தொகை ரூ. 3.02 கோடி
(அதாவது, பங்கு மூலதன உதவித் தொகை ரூ. 1 கோடி
மற்றும் வழிவகை முன்பணம் ரூ. 2.02 கோடி), கழகத்தின்
வாணிப நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குப் பெரிதும்
உறுதுணையாக இருந்தது. இக்கழகத்தின் தொடக்கச்
செலவுகளுக்காகவும் மாநில அரசு ரூ. 2 இலட்சம் முன்பணமாக
வழங்கியது. ''வழிவகை முன் பணம்'' என்பதின்கீழ் பெறப்
பட்ட முன்பணத் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப்
பட்டுள்ளது. உபரி நிதி. அரசின் வைப்பீட்டுக் கணக்கில் வைப்பீடு
செய்யப்பட்டுள்ளது. வணிகப் பணிகள், சென்னையிலுள்ள இந்திய
ஸ்டேட் வங்கி (வணிகக் கிளை) மூலமாகவும், மாவட்ட,
கோட்டத் தலைமையிடங்களில், இந்திய ஸ்டேட் வங்கிக்
கிளைகள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்திய
ஸ்டேட் வங்கியின் வணிகக் கிளை ரூ. 2.75 கோடிக்கு ரொக்கக்
கடனுதவி வழங்கியுள்ளது. இதனை இக்கழகம், 1983-84-ல்
ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தியது.



வாணிப நடவடிக்கைகள் :

50. இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்ற ஒன்பது
சாராயக் கலவை ஆலைகளிலிருந்து, அந்தந்த வட்டார
மேலாளர்கள் சாராயத்தைக் கொள்முதல் செய்கின்றனர்.
இக்கழகம், 1983—84-ல் 908 இலட்சம் லிட்டர் சாராயத்
தையும், 1984—85-ல் (1985 மார்ச் வரை), 1,146 இலட்சம்
லிட்டர் சாராயத்தையும் கொள்முதல் செய்துள்ளது. இக்கழகம்,
1983—84-ல் 900 இலட்சம் லிட்டர் சாராயத்தையும்,
1984—85-ல் (அதாவது, 1985 மார்ச் வரை) 1,151 இலட்சம்
லிட்டர் சாராயத்தையும் சில்லறை விற்பனையாளர்களுக்கு
விற்பனை செய்துள்ளது. இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு
மதுவகைகளைத் தலைமை அலுவலகம், இம்மாநிலத்திலுள்ள
உற்பத்தியாளர்களிடமிருந்தும், பிற மாநிலங்களிலுள்ள உற்பத்தி
யாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்து, வட்டாரக் கிடங்கு
களுக்கு வழங்குகின்றது. 1984ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம்
நாள் முதல் 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரை,
இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள் மொத்தம்
ரூ. 9,170 இலட்சத்துக்கு விற்பனையானது.

51. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தொடங்கப்
பட்டதிலிருந்து சாராய விற்பனை மாதா மாதம் அதிகரித்து
வந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் சாராய
விற்பனை மாதம் ஒன்றுக்கு 104 இலட்சம் லிட்டராக இருந்தது.
இதன் விற்பனையளவு 1984-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில்
135 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. எரிசாராயம்
பற்றாக்குறை காரணமாகவும், சாராயம் கிடைக்காமையாலும்,
அதையடுத்த மாதங்களில் சாராய விற்பனை குறைந்தது.
அதுபோல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தனது
விற்பனையைத் தொடங்கியதிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்
பட்ட அயல்நாட்டு மதுவகையின் விற்பனையும் மாதா மாதம்
சீராக அதிகரித்து வருகிறது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட
அயல்நாட்டு மதுவகைகள் 1983 ஆம் ஆண்டில் மாதமொன்றுக்கு
ரூ. 6.56 கோடிக்கு விற்பனையானது. இதன் விற்பனையளவு
1984 ஆம் ஆண்டில் ரூ. 10 கோடியை எட்டியது.

52. இக் கழகம், 1983—84 ஆம் ஆண்டில் ஆயத் தீர்வை,
விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணம் ஆகிய
வற்றுக்காக முறையே ரூ. 12.52 கோடி, ரூ. 1.30 கோடி,
ரூ. 8.37 கோடி செலுத்தியது. நடப்பு நிதியாண்டில், 1985
ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை, ஆயத் தீர்வை, விற்பனைக்
கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணம் ஆகியவற்றுக்காக
முறையே ரூ. 20.94 கோடி, ரூ. 2.50 கோடி, ரூ. 14.52 கோடி
இக்கழகம் செலுத்தியுள்ளது.

மதுவிலக்கை செயற்படுத்தல் :

53. தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் விதித்துறைகள், இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட தொடர்புடைய விதிகள், ஒழுங்கு முறை விதிகள் ஆகியவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பு மாநிலத்திலுள்ள மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பிரிவு 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் இப்பணியைக் கவனித்து வருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கள்ளச் சாராயத்தை கடத்தி விற்பனை செய்தல், கள்ளத்தனமாக கள் இறக்கி விற்பனை செய்தல், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் என்ற பெயரில் போலி மதுவகைகளைத் தயாரித்தல், பக்கத்து மாநிலங்களிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளைக் கடத்திக் கொண்டு வருதல் போன்றவற்றிற்கெதிராக எல்லா மாவட்டங்களிலும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மாநிலத்தில் மேற்கண்ட குற்றங்கள் நடைபெறுகின்ற இடங்களில் தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டன. முறையாகத் திட்டமிட்டபடி தொடர்ந்து இக்கண்காணிப்பு ஊக்கமளிப்பதாக இருந்தன. இத்தகைய நடவடிக்கைகளினால், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தமிழ்நாடு முழுவதும் உள்ள உரிமம் பெற்ற சாராயக் கடைகளுக்கு விற்பனை செய்த சாராயத்தின் அளவு கணிசமாக உயர்ந்துள்ளது. மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல், சட்ட விரோதமாக சாராயத்தை இம்மாநிலத்திற்குக் கொண்டு வருதல் ஆகியவற்றுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டதே இதற்குக் காரணமமாகும். இருப்பினும், கருப்பஞ்சாற்றுக் கசண்டு மிகக் குறைந்த அளவு விநியோகம் செய்ததன் விளைவாக எரிசாராய உற்பத்தி நலிந்தது. இதனால், ஆண்டின் கடைசிக் காலாண்டில் அரசின் சாராய இருப்பு பெருமளவு குறைந்தது. இது சில மாவட்டங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் நடவடிக்கை மீண்டும் தீவிரமடைய வழி வகுத்தது. எனவே அண்டை மாநிலங்களிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படும் கள்ளச் சாராயம், இம்மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் ஆகியவற்றிற்கெதிராக மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனவே, மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவை கண்டிப்பான முறையில் கண்காணித்துக் கட்டுப்பாடு வகிக்கத் திட்டம் உருவாக்கப்பட்டு, கள்ளத்தனமாகச் சாராயத்தைக் கடத்தல், கள்ளச் சாராயம் காய்ச்சுதல் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் விரைவான முன்னேற்றம் காணப்படுகிறது. மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தியதால் 1984 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரை இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை ரூ. 4,526 இலட்சமாக இருந்த விற்பனையளவு மாதா மாதம் வளர்ந்து



1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை ரூ. 9,170 இலட்சத்தை எட்டியது. அரசு அனுப்பும் சாராயத்தின் அளவு குறைவாக இருந்தபோதிலும் சாராய வழங்குநிலை இதனால் ஓரளவு சரிக்கட்டப்பட்டது.

54. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுமிடங்கள், மதுவிலக்கு-தகவல் சேகரிப்பு தலைமையகம், மாநகர் திடீர்ச் சோதனைப் பிரிவுகள், செங்கற்பட்டு (கிழக்கு) மதுவிலக்குச் செயற்படுத்தும் பிரிவு ஆகியவற்றால் அடிக்கடி திடீர்ச் சோதனையிடப்பட்டன. இத் திடீர்ச் சோதனைகளால் இப்பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் நடவடிக்கை பெருமளவு குறைந்துள்ளது. மாநிலத்தின் இதர பகுதிகளில் உள்ள கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் பெயர்பெற்ற இடங்களில் இதுபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் மாநிலத்தில் உள்ள கிட்டத்தட்ட 857 கிராமங்களில் மதுவிலக்குக் குற்றங்கள் ஒழிக்கப்பட்டன.

55. அண்டை மாநிலங்களிலிருந்து சட்டப்படி கள்ளத்தனமாக கொண்டுவரப்படும் சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் ஆகியவை குறித்து கடுமையான கண்காணிப்பு மேற்கொண்டதால், 1984 ஆம் ஆண்டில் கடத்தல் பொருட்களுடன் 104 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. 1983 ஆம் ஆண்டின் 64 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. 1985 ஆம் ஆண்டில் (எப்ரல் 1985 வரை) 55 வாகனங்கள் கடத்தல் பொருட்களுடன் கைப்பற்றப்பட்டன.

56. 1983–84 ஆம் தீர்வை ஆண்டு சாராயக் கடைகள், கள்ளுக் கடைகளின் ஏலத் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்தியதன் காரணமாக, 1984–85 ஆம் தீர்வையாண்டில் சாராயக் கடைகள்/கள்ளுக் கடைகளின் ஏலத் தொகை பெருமளவு உயர்ந்துள்ளது. ஏலம் விடுவதும் சுமுகமாக நடைபெற்றது. விதிகள் மீறப்படுவதைத் தடுக்க, மதுவிலக்கை செயற்படுத்தும் பிரிவுப் பணியாளர்களால் உரிமம் பெற்ற சாராயக்கடை/கள்ளுக் கடை, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைக் கடைகள் ஆகியவை முறையாகச் சோதனையிடப்பட்டன. விதிகள் மீறப்படும் இடங்களிலெல்லாம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

81: 1982, 1983, 1984 மற்றும் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ஆம் நாள்வரை உள்ள நிலவரப்படி கண்டறியப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள், கைப்பற்றப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட கள்ளக் கடத்தல் பொருட்களின் அளவு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு :—

| | 1982 | 1983 | 1984 | 1985 (ஏப்ரல் வரை) |
|---|---|---|---|---|
| (அ) கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 76,735 | 93,645 | 71,260 | 29,775 |
| (ஆ) கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயத்தின் அளவு (லிட்டரில்) | 6,10,507 | 3,90,700 | 5,44,058 | 2,50,368 |
| (இ) விணடிக்கப்பட்ட புளிக்க வைத்த வாஷின் அளவு (லிட்டர்களில்) | 91,38,518 | 83,83,423 | 53,43,488 | 30,85,876 |
| (ஈ) கைப்பற்றப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகளின் அளவு (புட்டிகளில்) | 36,053 (முழு புட்டிகள்) | 5,852 (முழு புட்டிகள்) | 2,425 (முழு புட்டிகள்) | 518 (முழு புட்டிகள்) |
| | 18,340 (அரை புட்டிகள்) | 9,052 (அரை புட்டிகள்) | 1,258 (அரை புட்டிகள்) | 779 (அரை புட்டிகள்) |
| | 43,933 (கால் புட்டிகள்) | 14,971 (கால் புட்டிகள்) | 4,986 (கால் புட்டிகள்) | 3,847 (கால் புட்டிகள்) |



| | 1982 | 1983 | 1984 | 1985 (ஏப்ரல்வரை) |
|---|---|---|---|---|
| (உ) கைப்பற்றப்பட்ட வண்டிகள் : | | | | |
| கார் .. .. | 98 | 26 | 51 | 17 |
| ஜீப்பு .. .. | 4 | 1 | 1 | .. |
| வேன் .. .. | 6 | 7 | 26 | 5 |
| ஆட்டோ ரிக்ஷா | 11 | 21 | 14 | 20 |
| லாரி .. .. | 9 | 3 | 4 | 9 |
| மோட்டார் சைக்கிள் | 7 | 5 | 7 | 3 |
| ஸ்கூட்டர் .. | 2 | 1 | 1 | 1 |
| படகு .. .. | 1 | .. | .. | .. |

58. கடந்த 5 ஆண்டுகளில் மதுவிலக்குச் செயல்முறைப் பிரிவு கண்டறிந்த வழக்குகளின் விவரங்கள் வருமாறு :

| தொடர் எண்ணும் விவரங்களும். (1) | 1—9—1980 முதல் 31—12—80 வரை. (2) | 1981. (3) | 1982. (4) | 1983. (5) | 1984. (6) | 1985 (ஏப்ரல் வரை) (7) | மொத்தம். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 20,845 | 59,293 | 76,735 | 93,645 | 71,260 | 29,775 | 3,51,553 |
| 2. குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 18,375 | 43,181 | 40,645 | 19,792 | 19,750 | 1,775 | 1,43,518 |
| 3. தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 1,523 | 1,888 | 2,355 | 2,763 | 1,560 | 304 | 10,393 |
| 4. விடுதலை அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 3,018 | 4,533 | 3,817 | 1,309 | 566 | 9 | 13,252 |
| 5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 11,277 | 27,967 | 17,285 | 8,080 | 295 | .. | 64,904 |
| 6. நீதி மன்ற விசாரணையிலுள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 2,557 | 8,793 | 17,188 | 7,640 | 17,329 | 1,462 | 54,969 |
| 7. ஓ. என். என்று கருதப்பட்டு, கைவிடப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 3,421 | 14,156 | 31,554 | 58,994 | 12,293 | 3,592 | 1,23,010 |
| 8. புலன் விசாரணையின்கீழ் உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 49 | 1,956 | 4,536 | 14,859 | 39,217 | 24,408 | 85,025 |



1985 ஜூலை 2]

**கள்ளச் சாராயக்காரர்கள் முதலியோரைத் தடுப்புக் காவலில் வைத்தல் :**

59. தமிழ்நாடு அரசு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரம் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறர் நிலத்தில் குடிசை போடுபவர்கள் ஆகியோர் பொது அமைதிக்கு கேடு விளைவிக்கும் கொடிய செயல்கள் புரிவதைத் தடுக்கும் சட்டம், கள்ளச் சாராயக்காரர்கள் மற்றும் மதுவிலக்குக் குற்றம் புரிபவர்களின் நடவடிக்கைகளைத் திறம்பட ஒடுக்குவதற்காக இயற்றப் பட்டது. இச் சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி கள்ளச் சாராயக்காரர்கள் 1982-ஆம் ஆண்டு 62 பேரும், 1983-ஆம் ஆண்டு 45 பேரும், 1984-ஆம் ஆண்டு 87 பேரும், 1985-ஆம் ஆண்டு (மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரையில்) 43 பேரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி 1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் நிலவரப்படி, இச் சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள குற்றங்களின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| கள்ளச் சாராயக்காரர்கள் | .. | 237 |
| மருந்து சரக்கு குற்றவாளிகள் | .. | 3 |
| குண்டர்கள் | .. | 802 |
| விபசாரம் செய்தவர்கள் | .. | 4 |
| மொத்தம் | .. | 1,046 |

**ஆயத்தீர்வை வீதம்.**

60. பல்வேறு வகையான மதுவகைகளின்மீது தற்போது நடைமுறையில் உள்ள ஆயத் தீர்வை விற்பனைக் கட்டண வீதங்கள் பற்றிய விவரம் வருமாறு :—

**ஆயத் தீர்வை வீதங்களைக் காட்டும் விவர அட்டவணை.**

| தொடர் எண்ணும் விவரங்களும். (1) | ஆயத் தீர்வை. (2) ரூ. பை. | விற்பனைக் கட்டணம். (3) ரூ. பை. |
| --- | --- | --- |
| 1. எரிசாராயம் :— | | |
| (அ) சாதாரண விலை வீதம் .. .. | 8.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) எரிசாராயம் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள், சாராவி இல்லாமலிருந்தால் .. .. | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| 2. வீரியம் குறைந்த சாராயம் :— | | |
| (அ) சாதாரண விலை வீதம் .. .. | இல்லை | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) வீரியம் குறைந்த சாராவி பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் (சாராவி குணம் இல்லாமலிருந்தால்) .. | இல்லை | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |



| | | |
| --- | --- | --- |
| 3. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகள் :— | | |
| (1) மாநிலத்திற்குள்ளேயே தயாரித்து விற்பனை செய்தல் :— | | |
| (அ) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள் .. | 25.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) பீர் ... .. — .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (2) மொத்த விற்பனை உரிமைதாரரின் இறக்குமதி மற்றும் விற்பனைக்கு :— | | |
| (அ) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள் .. .. | 25.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) பீர் — .. .. .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |

| (1) | (2) ரூ. பை. | (3) ரூ. பை. |
|---|---|---|
| (3) கேண்டீன் ஸ்டோர் துறையின் இறக்கு மதிக்காக :— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு (ரம் தவிர) மதுவகைகள் | 25.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (அ) ரம் .. .. .. .. | 2.75 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (அ) பீர் .. .. .. .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (4) சென்னை ஒருங்கிணைந்த உணவு சோதனை கூடத்தால் (ஏ.எஸ்.சி.) இறக்குமதி செய்து கொள்வதற்காக :— | | |
| (அ) ரம் மட்டும் .. .. .. | 6.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (5) மொத்த விற்பனையாளர் செலுத்தக் கூடிய கூடுதல் விற்பனைக் கட்டணம் :— | | |
| (அ) ஆணையரால் வகைப்படுத்தப் பட்ட சாராவி, மதுவகை, திராட்சை மதுவகை 42 சதவிதம் புரூப் சாராவி அடங்கிய ஏனைய மதுவகைகள் .. .. .. | .. | 5.50 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| (ஆ) ஒயின் மற்றும் ஏனைய மதுவகைகள் ... | ... | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (இ) பீர் மற்றும் ஏனைய புளிக்கவைக்கப் பட்ட மதுவகைகள் .. .. .. | ... | 2.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (6) வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற் கான ஆயத்தீர்வை விதம் :— | | |
| (அ) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள் (ஒயின் உட்பட) .. | 0.45 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ஆ) பீர் .. .. .. .. .. | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.05 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| 4. சாராயம் :— சாராயக் கலவை ஆலைகள் விற்பனை .. | 6.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | .. |
| மொத்த விற்பனைவாளர்கள்—விற்பனை .. | .. | 0.50 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |

61. "ஆயத் தீர்வை வருவாய்" என்ற தலைப்பின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில், கிடைத்த வருவாய் வரவு பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன :—

| (1) | 1982–83 (2) | 1983–84 (3) | 1984–85 (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. நாட்டுச் சாராவி (சாராயம்) .. .. | 10,605.31 | 14,640.37 | 13,519.83 |
| 2. புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) .. | 2,728.47 | 2,351.09 | 2,270.93 |
| 3. மால்ட் மது (பீர்) .. .. .. .. | 156.82 | 153.05 | 346.29 |
| 4. அயல்நாட்டு மதுவும் சாராவியும் .. .. | 1,370.86 | 2,014.29 | 3,356.87 |
| 5. வணிக மற்றும் வீரியம் குறைந்த சாராவி மற்றும் மருந்து கலந்த திராட்சை ரசங்கள். | 142.90 | 110.75 | 84.02 |
| 6. அபின், சாராவி முதலியவை அடங்கிய மருந்து மற்றும் ஒப்பனைத் தயாரிப்புப் பொருள்கள் .. .. .. .. | 245.55 | 215.22 | 180.10 |
| 7. அபின் மருந்து செடியும் ஏனைய மருந்துகளும். | 0.46 | 0.35 | 0.57 |
| 8. அபராதத் தொகைகள் மற்றும் பறிமுதல்கள். | 9.78 | 11.36 | 6.33 |
| 9. ஏனைய வருவாய்கள் .. .. .. | 90.67 | 2,632.34 | 399.56 |
| 10. பணியும் பணிக் கட்டணங்களும் .. .. | 1.07 | 1.11 | 16.89 |
| (அ) திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை [கழிக்கவும் (—)] .. .. .. | 147.94 | 142.57 | 152.50 |
| (ஆ) மொத்த விற்பனை வியாபாரத் தொகையினைக் கழிக்கவும் .. .. | .. | 2,506.69 | 228.18 |
| மொத்தம் .. | 15,212.95 | 19,480.87 | 19,800.71 |



நிர்வாக அமைப்பு :

62. மாநில மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைத் தலைவரான, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்படியும், அதன்படி இயற்றப்பட்ட பல விதிகளின்படியும், அவற்றின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளின்படியும் அவரிடம் நிலை பெற்றுள்ள பல்வேறு அதிகாரங்களைச் செலுத்துகிறார்.

63. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரின் நிர்வாக அலுவல்களில் சென்னையிலுள்ள தலைமையிடத்தில் ஐந்து இணை ஆணையாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு இம்மாநிலம் முழுவதும் அதிகார வரம்பு உள்ளது. கணக்குப் பிரிவில், நிதித்துறையில், அரசுத் துணைச் செயலர் பதவித் தரத்தில் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும் உள்ளார். இணை ஆணையாளர் ஒருவர் இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்தவராவார். இவர் முதுநிலைக் காலமுறை சம்பள விகிதத்தைப் பெறுகிறார். ஏனையோர் மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் வடிசாலைகள், சாராயக்கலவை ஆலைகள், சாராய மொத்த விற்பனை நிலையங்கள், ஆயத் தீர்வையைப் பின்பு செலுத்தும் தொழிற்சாலைகள், ஆல்கஹாலை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் நிலையங்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு, ஆய்வு செய்கின்றனர்.

64. மாவட்ட அளவில், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. மாவட்டங்களில் ஆயத்தீர்வை உதவி ஆணையாளர்கள் 28 பேர் உள்ளனர். அதாவது 16 மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவரும், சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், சேலம், பெரியார் ஆகிய 12 பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் கூடுதலாக ஓர் உதவி ஆணையாளரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர். அத்துடன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளருக்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

65. வட்டாட்சியர் பதவித் தரத்தில் வட்ட ஆயத்தீர்வை அதிகாரி ஒருவரும், ஆயத்தீர்வை ஆய்வாளர்கள் இருவரும், துணைப் பணியாளர்களும் வட்ட அளவில் அமர்ந்து ஆயத்தீர்வைத் துறையின் பணிகளைச் செய்துவருகின்றனர்.

66. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் பொதுவான மேற்பார்வை, நிர்வாகப் பணிக்காகவும், கள்ளத்தனமாக சாராயத்தைக் கொண்டு செல்லும் நடைமுறையைத் தடுக்கும் பொருட்டும், பறக்கும் படைப் பிரிவைச் சேர்ந்த எட்டு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் ஒருவர், இரு வட்டாட்சியர்கள், இரு இளநிலை உதவியாளர்கள், வேன் ஓட்டுநர் ஒருவர் ஆகிய பணியாளர்கள் உள்ளனர். உரிமதாரர்களை அடிக்கடி மேற்பார்வையிடவும், கட்டுப்பாட்டின்கீழ் வைக்கும் நோக்குடனும் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

. 67. இணை ஆணையாளர்களுக்கு, வடிசாலை அதிகாரிகளும், தொழிற்சாலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகளும், ஆயத்தீர்வையைப் பின்பு செலுத்தும் தொழிற்சாலை அதிகாரிகளும், சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகளும்—ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகளும் உதவி அலுவலர்களாக உள்ளனர். வடிசாலை அதிகாரிகள், இந்தியாவில் தயாரிக்ப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் நிலையங்களின் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்திலுள்ள அதிகாரிகளாவர். வருவாய் ஆய்வாளர்களின் பதவித் தரத்திலுள்ள ஆயத்தீர்வை போக்குவரத்து ஆய்வாளர்களின் துணையோடு, கலவை ஆலைகளுக்கு எரிசாராயம் எடுத்துச் செல்லப்படுகிறது.



# இணைப்பு II.

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக்காண்க.)

## முன்னுரை :

வங்கிகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கிய
மான பங்கு வகிக்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்கான
பல்வேறு திட்டங்களில், அரசுத் துறைகளுக்கான செலவுடன்
வங்கிக் கடனுதவி இணைந்ததாகும். அரசுக்கும் வங்கிகளுக்கு
மிடையே சிறந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குத் தலைமைச்
செயலகத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவன
நிதிவளச் சீர்மைத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை,
மாவட்டங்களுக்கும் மாநிலம் முழுவதற்கும் நீண்டகாலக் கடன்,
ஆண்டுக் கடன் வழங்கும் திட்டங்களைத் தயாரித்துச் செயற்
படுத்தும் பணியைக் கண்காணிக்கின்றது. சமுதாயத்தின் நலிந்த
பிரிவினருக்கு உதவுவதற்தகாக வங்கிக் கடன்களைத் திரட்டுவதில்
இத்துறை உறுதுணையாக உள்ளது.

## வங்கிக் கிளைகளை ஏற்படுத்தல் :

வங்கிக் கடனுதவியுடன் வளர்ச்சித் திட்டங்களை உரிய
முறையில் செயற்படுத்துவதற்கு மாநில முழுவதும் வங்கி வசதிகள்
கிடைக்கச் செய்வது அவசியமாகும். வங்கிகளில்லாத பகுதிகளில்
கிளைகளைத் தொடங்குவதன் அவசியம் பற்றி துறை ஆய்ந்து,
வங்கிக் கிளைகளைப் புதிதாகத் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கி,
வணிக வங்கிகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கின்றது. நம்
மாநிலத்தில், ஒவ்வொரு 14,000 மக்களுக்கும் வங்கிக் கிளை
உள்ளது. இம் மாநிலத்தில் 1983 ஆம் ஆண்டில் 3,386 வணிக
வங்கிகள் இருந்தன. 1984 டிசம்பரில் இவ் வங்கிகளின் எண்
ணிக்கை 3,750 ஆக உயர்ந்தது. இத்துடன் 433 கூட்டுறவு
வங்கிக் கிளைகளும், 130 கிராமப்புற வட்டார வங்கிக் கிளைகளும்
உள்ளன.

## வட்டார கிராம வங்கி : -

கிராமப் பகுதிகளில் வேளாண்மை, வர்த்தகம், தொழில்;
ஏனைய உற்பத்தி நடவடிக்கைகளில் குறிப்பாக சிறு உழவர்
களுக்கும், சொற்பநில உழவர்களுக்கும், உழவுத் தொழிலாளர்
களுக்கும், கைத்தறித் தொழிலாளர்களுக்கும், சிறு தொழில்
முனைவோருக்கும் கடன் வசதிகளையும், ஏனைய வசதிகளையும்
செய்து கொடுக்க நாட்டில் வட்டார கிராம வங்கிகள் ஏற்
படுத்தப்பட்டு வருகின்றன. இந்த கிராம வங்கிகள், கூட்டுறவு
கடன் வழங்கு நிறுவனங்கள், வணிக வங்கிகள் ஆகியவற்றின்
அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளன. அவை சாதாரணமாக
அரசுத் துறை வணிக வங்கிகள் ஆதரவு பெற்றவையாகும்.

சாத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தமிழ் நாட்டில் தற்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஆதரவு பெற்ற பாண்டியன் கிராம வங்கி என்ற ஒரே ஒரு வட்டார கிராம வங்கி உள்ளது. திருநெல்வேலி, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அது செயற்பட்டு வருகிறது. இந்த மாவட்டங்களில் இந்த வங்கிக்கு 130 கிளைகள் இருக்கின்றன. 1984 இறுதியில் உள்ளவாறு இந்த வங்கியில் 1.51 இலட்சத்திற்கும் மேற்பட்ட கணக்குகளுடன் ரூ. 25.25 கோடி இந்த வங்கியில் முன்பணம் நிலுவையாக இருந்தது.

தற்போது செயற்பட்டு வரும் வட்டார கிராம வங்கி பயனுள்ள வகையில் உதவி வருவதைக் கருத்திற்கொண்டு, தருமபுரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்படவிருக்கிற மற்றுமொரு கிராம வங்கிக்கு ஆதரவளிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. இம்மாவட்டத்தில் முதன்மை வங்கியாகவுள்ள அதாவது இந்தியன் வங்கி, இந்த வங்கிக்கு ஆதரவு அளித்து வருகிறது. இந்த கிராமப்புற வங்கியின் மொத்தப் பங்கு மூலதனம் ரூ. 25 இலட்சமாக இருக்கும். இதில் மத்திய அரசின் பங்கு ரூ. 12.50 இலட்சமாக இருக்கும். ஆதரவளிக்கும் வங்கியின் பங்குத் தொகை ரூ. 8.75 இலட்சம். மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 3.75 இலட்சமாகும். மத்திய அரசின் இசைவைப் பெற்ற பின்னர் தருமபுரி மாவட்டத்திலுள்ள கிராம வங்கி செயற்படத் தொடங்கும். தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் கிராம வங்கிகளைத் தொடங்க கருதப்பட்டுள்ளது.

வைப்புத் தொகைகளும், முன்பணங்களும் :

1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் உள்ளவாறு வணிக வங்கிகளின் மொத்த வைப்புத் தொகை ரூ. 4,065.75 கோடியாகும். மொத்த முன்பணத் தொகை ரூ. 3,583.10 கோடியாகும், 1983ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்த தொகையுடன் ஒப்பிடுகையில், வங்கியின் வைப்புத் தொகை ரூ. 6,14.32 கோடியாக அல்லது 17.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1983ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் மாநிலத்திலுள்ள முன்னுரிமைத் துறைகளுக்கு வணிக வங்கிகள் கொடுத்த கடன் தொகையில் வர வேண்டிய தொகை ரூ. 11,79.65 கோடியாக இருக்க 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் இது ரூ. 14.37.10 கோடியாக உயர்ந்தது. இவ்வாறு அதிகாரித்துள்ள தொகை ரூ. 2,57.45 கோடி (21.8 சதவீதம்) ஆகும். மொத்தக் கடன் தொகையில் முன்னுரிமைத் துறைகளுக்கு கொடுக்கப்பட்ட முன்பணங்களின் விகிதாச்சாரம் 38.1 சதவீதத்திலிருந்து 40.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1983ஆம் ஆண்டு ஜூன் திங்களில், வட்டி வித்தியாச முன்பணத் திட்டத்தின்கீழ் ரூ. 24.87 கோடி முன்பணம் நிலுவையாக இருந்தது. இதில் பயனடைந்தவர்கள் 23.37 இலட்சம் பேர்





ஆவர். ஆனால் 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் 33.27 கோடி ரூபாய் முன்பணம் நிலுவையாக உயர்ந்தது. இதில் 3.37 இலட்சம் பேர் பயனடைந்தார்கள். வணிக வங்கிகளுக்கான மொத்த முன்பணங்களுக்கு அளிக்கப்படும் வட்டி வித்தியாச முன் பணங்களின் சதவீதம் முதன் முறையாக இந்திய ரிசர்வ் வங்கி வரையறுத்துள்ள ஒரு சதவீதம் என்ற குறைந்த அளவைக் கடந்து விட்டது.

முதன்மை வங்கித் திட்டம் :

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கக் கூடிய வங்கிக் கடன் வசதியை ஒருங்கிணைப்பதற்காக, முதன்மை வங்கித் திட்டம் 1978-ல் தொடங்கப்பட்டது. நம் மாநிலத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி ஆகியவை அந்தந்த வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களைப் பொறுத்த வரையில் முதன்மை வங்கிகளாகும். மாநில அளவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் முதன்மை வங்கியாகச் செயற்படுகிறது.

மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களும், ஆண்டுச் செயல் திட்டங்களும் :

வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வணிக கூட்டுறவு வங்கிகள் அனைத்தின் திட்டங்களைப் பிரதிபலிக்கக் கூடிய மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களைத் தயாரிக்கும் திட்டப் பணி, 1978ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்பட்டு வருகிறது. கடன் வழங்குத் திட்டம் நீண்ட காலத்திற்குத் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டம் ஒவ்வொராண்டும் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் செயல் திறன் பாராட்டத்தக்க வகையிலுள்ளது. நிதி ஒதுக்கீடுகள் ஆண்டிற்காண்டு அதிகரித்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| துறை. | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|
| | ஆண்டுத் திட்ட ஒதுக்கீடுகள். (ரூபாய் கோடியில்). | | |
| வேளாண்மைத் துறை .. | 3,94.78 | 4,00.16 | 4,81.92 |
| தொழில் துறை .. | 80.68 | 91.29 | 1,37.95 |
| பணிகள் துறை .. .. | 67.17 | 71.49 | 1,12.88 |
| மொத்தம் .. | 5,42.63 | 5,62.94 | 7,32.75 |

1985ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டம் 1984ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தைவிட அதிகமாக உள்ளது. 1985ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தின் திட்ட வாரியான-மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

[1985 ஜூலை 2

ஒவ்வொரு மாவட்டத்திற்கான கடன் வழங்கு திட்டம்— ஆண்டுச் செயல் திட்டம் ஆகியவை முடிவு செய்யப்பட்டு, அம் மாவட்டத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் கண் காணிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் இக் குழுவின் தலைவர் ஆவார். இக் குழுவில் அம் மாவட்டத்திலுள்ள பெரிய வங்கிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வங்கிக் கடன் தொடர்பான திட்டங்களைச் செயற்படுத்தும் மாவட்ட அதிகாரியும் உள்ளனர். இப் பணியில், மாவட்ட ஆட்சியாளருக்கு, நேர்முக உதவியாளரும் (நிதி-நிறுவனங்கள்) மாவட்டத்தின் முதன்மை வங்கி மேலாளரும் உதவி புரிகின்றனர். மாநிலச் செயல் திட்டத்தை தலைமைச் செயலாளரின் தலைமையின்கீழ் இயங்கும் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு செய்கிறது. பல்வேறு வளர்ச்சி துறைகளுக்குக் கடன் வழங்குவதை உன்னிப்பாக கண்காணிப்பதற் காக வேளாண்மை, வேளாண்மை தொடர்பான பணிகள், தொழில், பணிகள் ஏனையவற்றைத் தனியாக கவனிப்பதற்காக நான்கு நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் கடன் வழங்கு திட்டங் களும் ஆண்டுச் செயல் திட்டங்களும் செயற்படுவதை நிதி நிறுவனச் சீர்மைத் துறை உன்னிப்பாகக் கண்காணிக்கிறது.

முன்னுரிமைத் துறைகளுக்கு வங்கிகள் வழங்கும் முன்பணங் கள் அவை வழங்கும் மொத்த முன்பணத்தில் குறைந்தது 40 சத விதமாவது இருக்க வேண்டுமென்று, இந்திய ரிசர்வ் வங்கி, வங்கி களுக்கு விதிமுறை நியதிகளை வகுத்தது. இந்த விதிமுறை நியதி மாநிலத்தைப் பொறுத்தமட்டில் முழுவதுமாக எய்தப்பட்டுள்ளது. அதிக அளவில் நகர்ப்புற மக்கள் தொகையை கொண்ட சென்னை, கோயம்புத்தூர் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

**சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன்கள் :**

குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் சமுதா யத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குவதன் மூலம் அவர் களுக்கு உதவும் பொறுப்பு வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வங்கி வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 10 சதவீதமாவது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப் பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறை நியதியினை வகுத்துள்ளது. வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 1 சதவீதக் கடன் தொகையாவது குறைந்த வட்டி வீதத் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கும் கிராமப் பகுதிகளில் ஆண்டு வருமானம் 2,000 ரூபாய்க்கும் நகர்ப் பகுதிகளில் 3,000 ரூபாய்க்கும் குறைவான வருமானம் பெறும் ஏனைய நலிந்த பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது



1985 ஜூலை 2]

மற்றொரு விதிமுறை நியதியாகும். அவ்விதம் ஒதுக்கப்பட்ட கடன் தொகை பொருத்தமானவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய கடன் தேவைப்படும் நபர்கள் யார் என்று கண்டறிந்து, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு உதவ வேண்டியது அவசிய மாகும். இது நிதிநிறுவனங்கள் துறையின் முக்கியப் பணியாகும். பொருத்தமான பொருளாதார நடவடிக்கைகள் மூலம் சமுதாயத் தில் நலிந்த பிரிவினர் வாழ்க்கையில் முன்னேற இயலும் வகையில் அவர்கள் வங்கிக் கடன்களைப் பெறுவதில் இத்துறை உதவி வரு கிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் மக்கள் தொகைக் கணக்கு, வங்கி வசதிகள், ஆகியவற்றிற்கேற்ப, இத் திட்டத்தின்கீழ் ஒவ் வொரு மாவட்டத்திற்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தகுதி வாய்ந்த நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வணிக வங்கி களின் மூலம் கடன் வழங்க மாவட்ட ஆட்சியர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், உழவர்களுக்கான பெருந்திட்டம், சமூக நலன், ஆதி திராவிடர் நலன், பின்தங்கிய வகுப்பினர் நலன் முதலிய துறைகளின் திட்டங்கள் போன்ற பல் வேறு அரசுத் திட்டங்களின்கீழ் நிதியுதவி பெறும் கடன் திட்டங் களும் இதில் அடங்கும். இத்துடன் நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்கும் வங்கித் திட்டத்தின்கீழ் மேற்சொன்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்ற பகுதிக்கு வெளியேயுள்ள நபர்களுக்கும் கடன்தொகை வழங்கப்படுகின்றது. 1983–84, 1984–85 ஆண்டு களில், இத்துறை கடன் வழங்க எண்ணற்ற விரைவுத் திட்டங் களைச் செயற்படுத்தியது. 1983–84 சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த சுமார் ஐந்து இலட்சம் பேர் கடன் உதவி பெற்றுள்ளனர். 1984-85 ஆம் ஆண்டில் ஆறு இலட்சம் பேருக்குக் கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்குச் சாதனை 1984 டிசம்பர் திங்களிலேயே எய்தப் பெற்றது. 1985-86 ஆம் ஆண்டில் எட்டு இலட்சம் பேருக்குக் கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மாவட்ட வாரியான திட்ட இலக்கு விவரங்கள் பற்றிய தகவல் மாவட்ட ஆட்சியர்களுக்குத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளும், வங்கிகளும் ஒருங்கிணைந்து செயல் பட்டதன் காரணமாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்க இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்த இலக்குகளை விட அதிக அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய முன்பணம் 1984 ஜூன் திங்களில் வழங்கிய மொத்த முன்பணத் தொகையில் 13.3 சதவீதமாக கணக்கிடப் பட்டுள்ளது. சலுகை வட்டி வீதத்திலான கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் கடன் வழங்குவதற்காக சென்னை, கோயம்புத்தூர் மாவட்டங்கள் நீங்கலாக தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பின்பற்றப்பட்ட கோட்பாடுகளின்

[1985 ஜூலை 2

மூலம் (1 சதவீதம்) இலக்கு எய்தப்பட்டது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்காக வழங்கப்பட்ட கடன்களின் மூலம் பயனடைந்தோரில் சுமார் 16 சதவீதத்தினர் ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

**சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல் குறித்து மதிப்பாய்வு :**

கடன் வழங்குவதற்காகப் பின்பற்றப்படும் நடைமுறைகளில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்காக, கடன் வழங்கும் திட்டம் செயல்படுவதைச் சோதனையிட வேண்டியது அவசியமாகும். கடன் வழங்கும் திட்டத்தில் ஏற்படக் கூடிய இடர்பாடுகளைக் கண்டறியவும் அவற்றைக் களையவும் தேவையான நடவடிக்கைகளை நிறுவன நிதித்துறை மேற்கொண்டுள்ளது. இத்துறையின் மூன்று அரசுத் துணைச் செயலாளர்களிடம் மேற்சொன்ன மதிப்பாய்வு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துணைச் செயலாளரிடமும் (மதிப்பாய்வு) 5 அல்லது 6 மாவட்டங்களை மதிப்பாய்வு செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணைச் செயலாளர்கள் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, இடர்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைக் கள அளவிலேயே கண்டறிந்து, அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் மாவட்ட ஆலோசனைக் குழுவில் பங்கேற்றுக் கொள்வதோடு மாவட்ட அளவில் நடைபெறும் மறு ஆய்வுக் கூட்டங்களிலும் கலந்து கொள்கின்றனர். ஆண்டுச் செயல்திட்டத்தின் மூலம் பல்வேறு துறைகளில் எய்தப் பட்ட சாதனைகளை குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை அவர்கள் ஆய்வு செய்வதோடு குறைபாடுகளைக் கண்டறிந்து அத்தகைய குறைபாடுகளைக் களைந்து திட்டத்தை மேம்படுத்துவதற்காக, முதன்மை வங்கிகள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மேலும், பயனடைந்தோர் ஒவ்வொருவரையும் பேட்டி காணுதல், கடன் பெற்றதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களைச் சரிபார்த்தல், கடன் பெற்றதன்மூலம் பயனடைந்தோரின் வருவாயில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து ஆராய்தல் போன்ற பணிகளைத் துணைச் செயலாளர்கள் மேற்கொள்ளுகின்றனர். மேற்சொன்ன தகவல்கள் பொருந்தமான திட்டத்தைத் தயாரிப்பதற்கு பயனுள்ளதாக உள்ளன.

மாவட்டங்களுக்கு வருகை தரும் துணைச் செயலாளர்கள் (மதிப்பாய்வு) பின்தங்கிய பகுதிகளில் முதன்மை வங்கிகள் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் உதவியுடன் புதிய கிளைகளைத் தொடங்குவதற்கான தேவைகளைக் கண்டறிந்து உரிய தொடர் நடவடிக்கையை எடுத்துள்ளனர்.



1985 ஜூலை 2]

**கடன் வசூல் முகாம்கள் :**

கடன் கொடுப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல அத்தொகையைத் திருப்பி வசூல் செய்வதும் முக்கியமாகும். கடன் பெற்றவர்கள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தினாலொழிய பெரும்பான்மையான மக்களுக்கு வங்கிகளால் நிதி உதவி அளிக்க இயலாது. உரிய காலத்தில் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொறுப்பினை கடன் பெற்றோர் அறியும்படிச் செய்ய வேண்டும். மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்காக மாவட்ட ஆட்சியர்கள் வங்கிகளுடன் ஒருங்கிணைந்து மாவட்டங்களில் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கடன் வசூல் முகாம்களை நடத்துகின்றனர்.

**பொருட்காட்சி :**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் பெரும்பான்மையானவர்களுக்கு உதவி செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். வங்கிகளில் கிடைக்கக் கூடிய வசதிகள் பற்றி விளக்கவும், வங்கி நிதி உதவி பெற மேற்கொள்ள வேண்டிய நடைமுறை பற்றி நலிந்த பிரிவினர் அறிந்து கொள்ளவும் இத்துறை, 1985 ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய சுற்றுலா வர்த்தக தொழிற் பொருட்காட்சியில் அரங்குகளை ஏற்படுத்தியது. வேளாண்மை, அதனைச் சார்ந்த நடவடிக்கைகள், சிறு தொழில்கள்-பணிகள் துறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அளிக்கப்படுகின்ற வங்கிக் கடன் மிகவும் முக்கியமானதாகும். இது சமுதாயத்தின் நலிந்த பிரிவுகளுக்கு உதவுவதில் ஒரு மிகப் பெரிய சாதனமாகவும் இருக்கிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவுகளுக்கு உதவுவதிலும் முன்னுரிமைப் பிரிவுகளை மேம்படுத்துவதிலும் அரசு துறைகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் இடையில் ஒரு முழுமையான ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நிறுவன-நிதிவள சீரமைத் துறை முயற்சித்து வருகிறது.

சென்னை-600 008
13640